ஸ்ரீ அரவிந்தர் அருளிய

அக்நி ஸூக்தங்கள்

(36 ரிக்வேத ஸூக்தங்கள்)

தேவநாகரி மூலமும் - தமிழ் மொழியாக்கமும்



மொழி பெயர்த்தோர்

தி. வி. கபாலி சாஸ்திரிகள்

அக்நி ஸூக்தங்கள்

(36 ரிக்வேத ஸூக்தங்கள்)

தேவநாகரி மூலமும் - தமிழ் மொழியாக்கமும்

ஸ்ரீ அரவிந்தர்

மொழி பெயர்த்தோர்

தி. வி. கபாலி சாஸ்திரிகள்

ஸ்ரீ அரவிந்தோ கபாலி சாஸ்த்ரி இன்ஸ்ட்யூட் ஆஃப் வேதிக் கல்சர்

AGNI SUKTANGAL - Tamil translation of 36 Rig Veda Suktas and three essays on Veda based on **'Hymns to the Mystic Fire' by Sri Aurobindo**. A brief life-sketch of Sri T.V.Kapali Sastry by Sri M. P. Pandit.

Published by
Sri Aurobindo Kapāli Sāstri Institute of Vedic Culture
No.63, 13th Main, 4th Block East, Jayanagar
Bangalore - 560 011
080-57688292, (mobile) (0)9341233221
e-mail : infor@vedah.com
web : www.vedah.org

First Published in	- 1947
3rd Edition (Revised and Enlarged)	- 2001
Reprint	- 2004

Pages : xx + 224

Price : Rs.55/-

ISBN 81-900979-4-6

Cover Design : T. V. Shankar

Typeset : Advika, Pondicherry
SAKSI, Bangalore

Printed at : Sreeranga Printing and Publishing House,
Bangalore - 560 019.

பொருளடக்கம்

பக்கம்

(i). ஓதுகரின் கவனத்திற்கு
- ஆர். எல். காஷ்யப் iv
(Note to Readers by R. L. Kashyap)

(ii). ஸ்ரீ அன்னை
- திரு. தி.வி. கபாலி சாஸ்திரிகள் xi
(On The Mother by Sri T. V. Kapali Sastry)

(iii). ஸம்பத்தி ஸப்தகம்
- திரு. தி.வி. கபாலி சாஸ்திரிகள் xii
(Fulfilment by Sri T. V. Kapali Sastry)

(iv). வேதம் - ஸ்ரீ அரவிந்தர் xiii
(Sri Aurobindo on Vedas)

(v). ஸ்ரீ கபாலி சாஸ்திரியார்
- திரு. எம். பி. பண்டிட் xv
(Sri Kapali Sastry by Sri M. P. Pandit)

1. மொழிபெயர்ப்பு வரலாறு - சில குறிப்புக்கள் 1
(History of Translation - Some Points)

2. ஸ்ரீ அரவிந்தர் அருளிய முன்னுரை 8
(Foreword by Sri Aurobindo)

3. கூடவாதிகளின் கோட்பாடு 40
(Foreword by Sri Aurobindo - written to Hymns of Atris)

4. க்ருத்ஸமதரின் ஸூக்தங்கள்
இரண்டாவது மண்டலம் - 10 ஸூக்தங்கள் 52
(Maṇḍala Two ; Ten Sūktas)

5. பரத்வாஜரின் ஸூக்தங்கள்
ஆறாவது மண்டலம் - 16 ஸூக்தங்கள் 97
(Maṇḍala Six ; Sixteen Sūktas)

6. பராசரரின் ஸூக்தங்கள்
முதலாவது மண்டலம் 65 - 73 ஸூக்தங்கள் 180
(Maṇḍala One ; Nine Sūktas)

7. பருச்சேபரின் ஸூக்தங்கள்
முதலாவது மண்டலம் - 127 ஆவது ஸூக்தம் 211
(Maṇḍala One ; One Sūkta)

ஓதுகரின் கவனத்திற்கு

திரு. தி.வி. கபாலி சாஸ்திரியார் நவீன பாரதத்தின் ஆன்மிகப் பேரொளிகளாய்த் திகழ்ந்த ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ ரமண மகரிஷி, ஸ்ரீ வாசிஷ்டகணபதி முனி என்ற முப்பேரறிஞர்க்கும் சீடராய் விளங்கிய வரப்பிரசாதத்தைப் பெற்றவர். கபாலி சாஸ்திரியாரின் மேதக்க சீடர் ஸ்ரீ மாதவ பண்டிதர். அவர் சாஸ்திரியாரை உள்ளவாறு உணர்ந்தவர். சாஸ்திரியார் பலதுறைகளிலும் வல்லுநர். மொழிகள், இலக்கியம், யோகம், சோதிடம், வானசாத்திரம், ஆயுர்வேதம், சித்த மருத்துவம் முதலிய பல துறைகளிலும் ஈடுபட்டு உழைத்த சாஸ்திரியார் தாம் முயன்ற துறை ஒவ்வொன்றிலும் மற்றவரை விஞ்சிய ஆற்றலுடன் விளங்கினார். அவர் வரைந்துள்ள செய்திகள் மிகப் பழங்காலத்து எண்ணங்களையும், படிமுறையில் வளர்ச்சி பெற்ற கருத்துக்களை உடைய இக்கால எண்ணங்களையும் இணைக்கும் வலிமையுடைய பாலமாக எல்லோர் உள்ளங்களிலும் ஒளிவீசி முன் நிற்கும் இயல்புடையன என்று ஸ்ரீ மாதவ பண்டிதர் குறிப்பிடுகின்றார்.

*3-9-1886*இல் இந்நிலவுலகில் ஸ்ரீ விசுவேசுவர சாஸ்திரியாரின் மகனாராகத் தோன்றிய ஸ்ரீ கபாலி சாஸ்திரியார் தம் தந்தையாரால் சாமவேதத்தை அத்தியயனம் செய்வதிலும், ஸ்ரீவித்யா வழிபாட்டிலும் ஊக்குவிக்கப்பட்டார்; தம் குருநாதர் வாசிஷ்டகணபதி முனிவரால் ரிக்வேத சூக்தங்களின் அழகிலும் அவை வழங்கும் ஞானத்திலும் ஈடுபடுத்தப்பட்டார்; *1914*இல் ஸ்ரீ அரவிந்தர் தம் இதழாகிய ஆர்யாவில் வேதங்கள் தொடர்பான செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டுவந்தார். அவற்றைக் கண்ட அளவில் ஸ்ரீ அரவிந்தர் வேதங்களின் மறைபொருள்களை வெளிப்படுத்தும் ஆற்றல் சான்ற தீர்க்கதரிசி என்பதனைச் சாஸ்திரியார் உணர்ந்து அவர் வெளியிட்ட மாதஇதழ்களைப் பலகாலும் தொடர்ந்து வாசித்து ஸ்ரீ அரவிந்தரிடம் ஈடுபாடு கொண்டார்; தம்மை அன்போடு சின்னநாயனா என்று அழைத்து வந்த தம் குருநாதராகிய ஸ்ரீ ரமண மகரிஷியின் நல்லாசி பெற்று ஏறத்தாழ *1930*இல் ஸ்ரீ அரவிந்தரின் ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்து அதனோடு இணைந்தார். ஸ்ரீ அரவிந்தர்ஆசிரமத்தில் இருந்தபொழுதே சாஸ்திரியார் ஸ்ரீ ரமண மகரிஷி ஆன்மீகத் திறவுகோல்களாக

இயற்றிய சத் தரிசனம், ரமணகீதை போன்ற நூல்களுக்கு விளக்கவுரைகள் வரைந்து, அவ்வுரை நூல்களைத் திருவண்ணாமலையிலிருந்த ஸ்ரீ ரமண மகரிஷிகளின் திருவடிகளில் காணிக்கையாகச் சமர்ப்பித்தார்.

ஸ்ரீ அரவிந்தர் வழங்கும் விரிவுரைகளை வெளியிடுவதற்காக அமைந்த இதழ்களில், சாஸ்திரியார் தாம் வேதத்தையும் உபநிடதங்களையும் தந்திரங்களையும் பயின்று கண்ட உண்மைகளைப் பல கட்டுரைகளாக வெளியிட்டார்.

சாஸ்திரியார் ஆராய்ச்சியின் நுண்பொருட்கோவையாக அமைந்த தனிப்பெருநூல் சித்தாஞ்சனம் என்பதாம். அந்நூலில் அவர் ரிக்வேத சம்கிதையின் முதல் அஷ்டகத்திற்கு விரிவான முன்னுரையுடன் விளக்கவுரையை வடமொழியில் வரைந்துள்ளார். அந்நூல் வேதத்திலுள்ள ஆன்மிக, உளவியல் தொடர்புடைய குறியீட்டு விளக்கங்கள் பற்றிய செய்திகளை விரித்துரைக்கிறது. இந்தக் கோணத்தில் பாரததேசத்தில் வெளிவந்துள்ள முதல்நூல் இதுவே என்னலாம். அவர் இப்பெருஞ்செயலைத் தொடங்கியபொழுது தம் அறுபது வயதை நெருங்கிக்கொண்டு இருந்தார். ஸ்ரீ அரவிந்தர் காட்டிய வழியில், வேதத்தின் மறைபொருள்களை உணர ஸ்ரீ அரவிந்தர் வழங்கிய தெளிவான வழிமுறைகளைப் பயன்படுத்திச் சாஸ்திரியார் தம் சித்தாஞ்சனப் பெருநூலை அமைத்துள்ளார். முழுநூலையும் ஸ்ரீ அரவிந்தர் வாசித்து அதனை வெளியிடுவதில் தமக்கிருந்த மனநிறைவான இசைவைக் குறிப்பிட்டுள்ளார். சில ஆண்டுகளுக்குப் பின் சாஸ்திரியார் வடமொழியில் சித்தாஞ்சனத்துக்கு வரைந்த விரிவான முன்னுரையைத் தாமே ஆங்கிலத்திலும் வரைந்துள்ளார்; அவ்வுரைநூலின் முக்கியமான சில பகுதிகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். சாஸ்திரியார் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் வரைந்தன யாவும், அவர் விரிவாக வரைந்த முகவுரை உட்பட, அவருடைய நூல்களின் தொகுப்பின் *1, 4, 5, 10* என்ற தொகுதிகளில் காணலாம். சாஸ்திரியாரின் தலைமாணாக்கரான ஸ்ரீ மாதவ பண்டிதர், சாஸ்திரியாரின் நூல்களின் தொகுப்பு முழுவதையும் பன்னிரண்டு தொகுதிகளாகச் சாஸ்திரியாரின் நூற்றாண்டு ஜயந்திவிழாக் கொண்டாட்டங்களின்போது பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

வேதத்தைப் பற்றி ஆங்கிலத்தில் சாஸ்திரியார் வரைந்த எல்லாக் கட்டுரைகளின் தொகுப்பும் 'வேதஒளியின் மறைதிரை நீக்கம்' என்ற பெயரோடு அண்மையில் எளியேனால் சேகரிக்கப்பெற்று, தில்லியில் உள்ள 'இந்தியப் புத்தக மத்திய நிலையத்தின் ஒரு பகுதியாகிய 'சத்குரு வெளியீட்டை'ச் சார்ந்தவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

*1946*இல் அக்நி சூக்தங்களின் முதற்பதிப்பு ஸ்ரீ அரவிந்தர் அவர்களால் வெளியிடப்பட்டது. அந்நூலில் ஸ்ரீ அரவிந்தர் இருபது பக்கங்களின் அளவிற்கு ஒரு நீண்ட முகவுரை எழுதியுள்ளார். ஆன்மிகவழியில் வேதத்திற்குப் பொருள்செய்ய வேண்டிய வழிகள் அதன்கண் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அம்முகவுரையை அடுத்து ரிக்வேதத்தின் *1, 2, 6* ஆம் மண்டலங்களிலுள்ள அக்நி சூக்தச் சுலோகங்களுக்கு ஸ்ரீ அரவிந்தர் ஆங்கிலத்தில் விளக்கவுரை வரைந்துள்ளார். *1946*இல் வெளியிடப்பட்ட ஆங்கிலவிளக்கத்தின் தமிழாக்கமாக *1947*இல் கபாலி சாஸ்திரியாரால் வெளியிடப்பட்ட நூலின் புதுப்பதிப்பே இந்நூலாகும். மந்திரங்களின் ஒவ்வொரு சுலோகமும் தேவநாகரி எழுத்திலும் தமிழ் எழுத்திலும் வரையப்பட்டபின், அதன் ஆங்கிலவிளக்கத்தின் தமிழாக்கம் இப்பதிப்பில் இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீ அரவிந்தர் ஆங்கிலத்தில் வரைந்துள்ள முன்னுரையின் தமிழாக்கத்தைக் கூர்ந்து வாசித்து உணர்தல் மிகவும் அவசியமானது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. முதற்கண் ஸ்ரீ அரவிந்தர் வேதமே அதன்கண் செய்திகள் மறைபொருளாகவே கூறப்பட்டுள்ளன என்று குறிப்பிடுவதனை விளக்க, விரிவான மேற்கொள்களை எடுத்துக்காட்டியுள்ளார்; அடுத்து, வேதத்தில் வழங்கும் கோ, அச்வ, க்ருத முதலிய சொற்களுக்கு உலகவழக்கிலுள்ள சாதாரணப் பொருள்களைக் கொண்டு நோக்கினால் வேதத்திலுள்ள சுலோகங்களின் உண்மைப்பொருள்களை விளங்கிக்கொள்ளமுடியாது என்பதனைத் தெரிவிக்கிறார்; இச்சொற்கள் முறையே ஒளி அல்லது ஞானத்தின் கீற்று, உயிர்ச்சக்தி, தெளிவு முதலியவற்றை வெளிப்படுத்தும் குறியீட்டுச்சொற்களே என்பதனை விளக்கியுள்ளார்; இந்தச் சொற்களில் வெளிப்படையான பொருள்களை விடுத்து உள்ளார்ந்த

உண்மைப்பொருள்களை உணர்ந்தால் வேதசூக்தங்கள் தம் உண்மையான பொருள்களை வெளிப்படுத்தி நம் உள்ளத்தில் ஒளிவிடும் என்கிறார்; மூன்றாவதாக, வேதகால யோகமார்க்கத்தில் பழக நால்வகைத் திறவுகோல்களாக உதவும் படிக்கட்டுக்கள் போன்ற கருத்துக்களின் சுருக்கமான விளக்கங்களை வழங்கியுள்ளார். இந்தத் திறவுகோல்கள் போன்ற கருத்துக்களை நினைவிற் கொள்ளுதலால் வேதத்தைப் பயின்று அவற்றின் உண்மைப்பொருளை அறிதற்கண் உள்ள சிக்கல்களின் பெரும்பகுதி எளிமையாகிவிடும்.

இந்த நூல், இரண்டாம் மண்டலத்திலுள்ள அக்நி பற்றிய பத்துச் சூக்தங்களோடு தொடங்குகிறது. இவை க்ருத்ஸமதர், பார்க்கவர் என்ற அறிவர்களுக்கும் அவர்கள் வகுத்த நெறியில் நின்றோருக்கும் வெளியிடப்பட்ட மறைபொருளான மந்திரங்கள் பற்றியன. க்ருத்ஸமதர் என்ற அந்த ஞானியின் பெயருக்கு ஏற்ப அந்த அக்நி சூக்தங்கள் தெளிவும் சமநோக்கும் கொண்டு விளங்குகின்றன. அவற்றில் பக்தி, ஞானம், கருமம் ஆகிய கருத்துக்களின் மகிழ்ச்சிதரும் நயமான இணைப்புக் காணப்படுகிறது. முதல் சூக்தத்திலுள்ள முதல் எட்டுச் சுலோகங்கள் அக்நியை, வேதம் குறிப்பிடும் இந்திரன், வருணன், மித்திரன், பிரிக்க முடியாத அன்னையாகிய அதிதி முதலியவர்களோடு இணைத்து அடையாளம் காண்கின்றன. அதே சூக்தத்தின் ஒன்பதாவது சுலோகம், "அக்நி! மக்கள் உன்னைத் தந்தையைப் போல வேள்விகளால் தொழுகின்றனர். உன் ஒளியினால் உடல் விளக்கமுறும்போது, நீ உடன்பிறந்தோனாக இருத்தற்பொருட்டு உன்னைத் தொழுகின்றனர். உன்னைத் தொழுபவனுக்கு நீ ஒரு நண்பன் ஆகின்றாய். அவனுடைய இனிய நண்பன் நீ. அவனைப் பகைவனிடமிருந்து காக்கின்றாய்" என்று குறிப்பிடுகிறது.

மூன்றாம் சூக்தத்தின் முதல் சுலோகம், பூமியின் உட்புறமாய் இடப்பட்ட அக்நி பற்றிக்கொண்டு வெளிக்கிளம்பி எல்லா உலகங்களையும் நோக்கி நிற்கின்றனன் என்பதனை விளக்கமாகக் குறிப்பிடுகிறது. இதே சூக்தத்தின் ஐந்தாவது சுலோகம், "நாங்கள் அடைக்கலம் புகுவதாலும் வழிபடுவதாலும் சுலபமாக அடையக்கூடிய தெய்விக வாயில்கள் எங்கள் அழைப்புக்கு இசைந்து

விரிவாய்த் திறக்கக்கடவன ஆகுக! புகழ்பெற்று வீரம் வாய்ந்த இனத்தைப் புனிதப்படுத்திக்கொண்டு என்றும் அழிவில்லாத அந்த வாயில்கள் அண்டப்பெரும்பரப்பின் வெளிப்புறமாக நன்கு அகலமாகத் திறக்கப்படுவன ஆகுக!'' என்று குறிப்பிடும் செய்தி, வேதத்தின் பிற்பட்ட காலத்தில் தந்திரங்களில் குறிப்பிடப்படும் சக்கரங்களைப் பற்றி அறிவதற்கு வேதம் குறிப்பிடும் பழஞ்செய்திகளை நினைப்பூட்டுகிறது.

ஐந்தாம் சூக்தத்தின் மூன்றாம் சுலோகம், ''ஒருவன் இந்த அக்நியை உறுதியாக நிறுவும்போது அவன் மந்திரங்களை எதிரொலியாகக் கூறி அதனை அணுகுகிறான். சக்கரத்தை விளிம்பு சுற்றியிருந்து பாதுகாப்பது போல, உண்மையைக் காண்போரின் காட்சி எல்லாவற்றையும் அவன் சூழ்ந்துகொண்டு பாதுகாக்கிறான்'' என்று கூறுகிறது. எல்லா உபநிடதங்களிலும் சென்று சேரத்தக்க இடமாகக் குறிப்பிடப்பட்ட 'அது' இந்தச் சுலோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறுதியாக, பத்தாவது சூக்தம் எந்தக் குறைபாடும் இல்லாத அக்நி இனிமையின் ஸ்பரிசத்தை நமக்கு வழங்கி, நம்மை மதுரசத்தால் நிரப்புகின்றான் என்பதனைத் தெரிவிக்கிறது.

அடுத்து ஆறாம் மண்டலத்திலுள்ள அடுத்த தொகுதியாகிய அக்நி சூக்தங்கள் பதினாறும் எல்லாப் பொருள்வளங்களும் நிறைந்த பரத்துவாசர் என்ற அறிவருக்கு வெளியிடப்பட்ட மறைபொருளான மந்திரங்கள் பற்றியன. முதல் சூக்தமே, ''ஆற்றல் மிக்க அக்நியே! இந்த எண்ணத்தை முதன்முதலாக எண்ணியவன் நீ'' என்று அக்கினிதேவனை முதல் சிந்தனையாளனாக அறிமுகப்படுத்தும் கருத்தோடு தொடங்குகிறது. இம்முதல் சூக்தத்தின் நான்காம் சுலோகம், ''உன்னை அடைக்கலம் புகுந்து தெய்விகஉலகிற்குப் பயணம்செய்ய ஆயத்தம் ஆனவர்கள் அருளாவேச ஞானத்தை நாடிப் பழுதிலா அருள்ஞானத்தைப் பாதுகாத்து உன் மங்கலமான காட்சியில் களித்தனர்'' என்று கூறுவதுகொண்டு, தீர்க்க சரணாகதி என்பது பழங்காலம்தொட்டு நிலவிவரும் கருத்து என்பது புலப்படுகிறது. மீண்டும் பதின்மூன்றாம் சுலோகத்தில் ''ஓ அரசே! ஓ அக்நி! உன்னால் நுகரப்படும் நான், உன் செல்வத்து

அரசுரிமையில் செல்வங்கள் பலவற்றைப் பலவகைகளிலும் நுகர்வேன் ஆகுக!" என்று கூறப்பட்டுள்ளது. "அடியேனாகிய யான் ஆண்டவனாகிய உனக்கு நுகர்பொருள் ஆகுக!" என்ற இக்கருத்தே பிற்பட்ட காலத்துப் பாகவதர்களால் குறிப்பிடப்பட்ட செய்தியாக அறியப்படுகிறது. நாம் எல்லோரும் ஆனந்தத்தை வேண்டுகிறோம். ஆனால் இறைவனுடைய மகிழ்ச்சிக்குப் பாத்திரமாகி அவ்விறைவன் அடையும் மகிழ்ச்சியைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைவதே பக்தியின் மகோந்நத நிலையாகும். 'தனக்கேயாக என்னைக் கொள்ளும் ஈதே, எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே' என்று ஆழ்வார் 'ப்ராப்ய நிஷ்கர்ஷம்' பண்ணுவதைத் திருவாய்மொழி குறிப்பிடக் காண்கிறோம்.

இரண்டாவது சூக்தத்தின் இரண்டாம் சுலோகம், "ஓ அக்நி! ஓநாயினால் கிழிக்க முடியாததும், மத்தியஉலகைத் தாண்டி வருவதும், எல்லாவற்றையும் காணக்கூடியதுமாகிய அசுவம் உன்னை அண்டி வருகின்றது" என்று குறிப்பிடுகிறது. இந்தச் சுலோகத்தில் கூறப்படும் அசுவம் சாதாரணமாக நாம் குறிப்பிடும் குதிரையாக இருக்கமுடியாது. மீண்டும் ஏழாவது சூக்தம், எல்லா அண்டங்களுக்கும் இறைவனான வைச்வாநரனைப் பற்றித் தன் ஆறாம் சுலோகத்தில், விண்ணுலகச் சிகரங்கள் இவ்வைசுவாநரனுடைய பார்வையால் அளக்கப்பட்டு வடிவெடுத்தன என்று குறிப்பிட்டுள்ளது. இவைபோல ஊகித்து அறிய வேண்டிய மறைபொருளுடைய சுலோகங்கள் பல உள்ளன. அவற்றின் குறியீடுகளை நன்கு விளங்கிக்கொண்டால், அவற்றின் உண்மைப்பொருள் நமக்குச் சுலபமாகப் புலப்படும்.

பதினாறாம் சூக்தத்தின் முப்பத்தைந்தாம் சுலோகம், "தாயின் கர்ப்பத்தில் அவன் தந்தைக்குத் தந்தை ஆகுவானாக! அவன் அழிவில்லாத பொருளாகிய அக்ஷரத்தில் மின்னல்களாக மின்னுவானாக! சத்தியம் பிறந்த இடத்தில் விரும்பித் தங்குவானாக!" என்று குறிப்பிடுகிறது. இவை போன்று சுலோகங்களுள்ளே மறைபொருளாகக் கூறப்பட்டிருக்கும் செய்திகள் எளிதில் விளங்கிக்கொள்ள இயலாதனவாக உள்ளன.

மூன்றாவது தொகுப்பில், முதல் மண்டலத்திலிருந்து பெரிய கவியும் ஞானியுமான பராசரருக்கு வெளிப்பட்ட மந்திரங்களான, அக்நிதேவனைப் பற்றிய ஒன்பது சூக்தங்கள் உள்ளன.

ரிக்வேதத்திலேயே இந்தச் சுலோகங்களே உணர்ச்சிப் பெருக்குடையனவும் கவிதைவளம் நிரம்பியனவும் ஆகிய சுலோகங்களாம். 65ஆம் சூக்தத்தில் ஒன்றும், 69ஆம் சூக்தத்தில் ஒன்றுமாக இரண்டு சுலோகங்கள் குறிப்பிடும் செய்திகளைக் காண்போம்.

"அக்நி நீர்நிலைகளில் அமர்ந்துள்ள அன்னங்களைப் போல மூச்சுவிடுகிறான். விடியற்காலையில் கண்விழிக்கும் அவன் தன் செயலாலும் விருப்பத்தாலும் மக்களுக்கு ஞானம் அளிக்கின்றான். தேவன் ஸோமனைப் போல அவன் சத்தியத்திலிருந்து பிறந்தவன்; மற்றவர்களைப் படைப்பவன்; புதிதாகப் பிறந்த கன்றுடன் கூடிய பசுவைப் போன்றவன். அவன் விரிவாகப் பரவுகின்றவன். அவன் ஒளி வெகுதூரத்தில் காணப்படுகின்றது." *(1-65-5)*

"அக்நியே! நீ அதிகாலைப்பொழுதின் காதலனாய்ப் பிரகாசத்துடன் எரிந்துகொண்டு ஆகாயத்தில் உள்ள ஜோதியைப் போல எம் விருப்பத்தால் பிறக்கின்றாய்." *(1-69-1)*

முடிவாக, முதல் மண்டலத்தில் பருச்சேபருக்கு வெளியிடப்பட்ட 9 சுலோகங்களைக் கொண்டுள்ள அக்நி சூக்தமும் இந்நூலுள் இடம் பெற்றுள்ளது.

இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் வேதபுருஷனுடையவும் வேதமந்திரங்களைக் கண்ட ஞானிகளுடையவுமான வாழ்த்துக்களைப் பெறல்வேண்டும் என்பதே நம்முடைய பிரார்த்தனையாகும்.

— ஆர். எல். காஷ்யப்

மார்ச்சு 25 2001
(யுகாதி.)

* * *

ஸ்ரீ அன்னை

நான் பல பிறப்புக்கள் முயன்றாலும் என்சொந்த முயற்சியால் அடையமுடியாத பல பேறுகளை ஸ்ரீ அன்னை என்ற திருநாமமே எனக்கு வழங்கியுள்ளது; ஒவ்வொரு வாரமும் புதுப்புதுக் காட்சிவரிசையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒரே கணநேரத்தில் மனிதனைச் சேற்றிலிருந்து எடுத்துத் தெய்விகத்துடன் உயர்ந்த மன எழுச்சிகளுக்கு உயர்த்தும் அத்தகைய யோகம் ஒன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

எனக்கு ஸ்ரீ அன்னை என்ற ஒரேநினைவுதான் உள்ளது!

– **தி.வி. கபாலி சாஸ்திரி**

ஸம்பத்தி ஸப்தகம்

நம: ஸந்நிதயே தஸ்மை மஹஸாம் நிதயே நம :
நமோ ஸ்மத் ஜீவ ஜீவாய தேவாய குரவே நம :
நிஜ பாதாப்ஜ நித்யேஷு நிக்ஷிப்த நிஜ தேஜஸே
அரவிந்த ப்ருஹந் நாம பிப்ரதே பரமௌஜஸே
வீக்ஷயா தததே தீக்ஷாம் ரக்ஷாம் ஸங்கல்பமாத்ரத :
சக்தேர் மாது: ப்ரஸாதேன சிக்ஷாம் விதரதேத்புதாம்
ஹிரண்யஜ்யோதிஷோ லக்ஷ்ம ஸாக்ஷ்யாய தரணீதலே
நிதாய பார்த்திவே தேஹே மஹோதேஹேன ஜீவதே
அபிதோ ஸ்மான் ஸமாத்ருத்ய புவமாவ்ருத்ய பச்யதே
ஆதிவ்யஸம்பதோ ஜ்யோதி ரத்வநிர்மாண வேதஸே
தாத்ருசாய புராணாய புருஷாய நமோஸ்துதே
சாதி ந: சாதிநோ யாவத் பவத்கார்யஸமாபனம்
ராஜஸ்வ தைவ ஸாம்ராஜ்ய ப்ரதிஷ்டாயை தராதலே
நமோஸ்து பவதே ராஜன் ஸம்பந்நாய நமோ நம:ணி

– தி.வி. கபாலி சாஸ்திரி

வணக்கம், அந்த சாந்நித்யத்திற்கு. பேரொளிகளின் களஞ்சியத்திற்கு வணக்கம். எம் உயிருக்குயிரான தேவனுக்கு வணக்கம். குருவுக்கும் வணக்கம். தன்னடிமலர்களில் நிலைத்தோரிடம் உன் ஒளியை வைத்தாய். அரவிந்தன் என்ற பெரும்பெயர் பூண்டாய். பெருவீரியம் மிக்காய். பார்வையால் மந்திரதீட்சை அளிக்கிறாய். வெறும் சங்கல்பத்தால் பாதுகாப்பு அளிக்கிறாய். சக்தியாம் அன்னையின் அருளால் விந்தை மிக்க சிட்சையைப் போதிக்கிறாய். உலகில் சாட்சிக்காகப் பொன்னொளியின் அடையாளத்தை உன் பூத உடலில் வைத்துவிட்டு ஒளிஉடலுடன் உயிர் தரிக்கிறாய். எமக்கு எல்லாவிதத்திலும் ஆதரவு காட்டிப் புவியைச் சூழ்ந்துகொண்டு கவனிக்கிறாய். திவ்வியச்செல்வம் கிட்டும்வரை சோதிப்பாதை வகுக்கும் பிரமன் ஆனாய். அத்தகைய பழம்பெரும்புருடனான உனக்கு வணக்கம். எம்மீது செங்கோல் செலுத்துவாய். உன் காரியம் ஈடேறும்வரை எம்மீது செங்கோல் செலுத்துவாய். பூதலத்தில் இறையரசு நிலைக்கவேண்டி ஒளிர்வாய். ஒளிமிகு செம்மலே, உனக்கு வணக்கம். பூரணனே, உனக்கு வணக்கம். இதோ வணக்கம்!

வேதம்

ஸ்ரீ அரவிந்தர்

மிகப் பழமையான நம் பாரததேசத்தின் தர்மத்துக்கு அடிப்படை வேதங்களே. இந்துதர்மத்தின் மறைபொருளாக உள்ள இறைமை இயலைக் கூறுவன அவ்வேதங்களே. வேதக்கருத்துக்களைச் சான்றோர் மறைபொருளாகவே வெளியிட்டுள்ளனர். அக்கருத்துக்களை மறைபொருளாக வைத்திருக்கும் முகமூடியை விலக்கினால், அவற்றை மறைத்துக்கொண்டு முன்புறம் தொங்கிக்கொண்டிருக்கும் திரையை உயர்த்தினால், அவை குறிப்பிடும் உட்பொருள்கள் எல்லாம் வெளிப்படும். அம்மறைபொருளைக் கண்டுபிடித்து அறிவதற்கு வாய்ப்பு உள்ளது. பாரததேசத்தின் எதிர்காலம் அம்மறைபொருளைக் கண்டுபிடித்து அதில் கூறப்பட்டுள்ள முறையிலே செயற்படுவதிலேயே உள்ளது. அக்கருத்துக்களைக் கொண்டு, பற்றற்ற துறவுவாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வதற்கு மாத்திரம் முயலாது, ஏனைய மக்களோடு கூடிவாழும் உலகியல்வாழ்க்கைக்கும் அதனைப் பயன்படுத்தும் காலம் நிச்சயமாக வரும் என்பதே என் நம்பிக்கை.

நான் இச்செய்திகளைப் பழைய சமயச்சார்புடைய சான்றோருக்காகவோ, பழைய சமயத்தின் அடிப்படையில் புதிய சமயத்தைக் கண்டுபிடித்து அதனைப் பரப்ப ஸமாஜங்களை நிறுவியுள்ள சான்றோருக்காகவோ, தெய்வநம்பிக்கையே இல்லாதவர்களுக்காகவோ கூற முற்படவில்லை; பகுத்தறிவு என்பதனை ஏற்றுக்கொண்டு, அந்தப் பகுத்தறிவு மேலைநாட்டார் குறிப்பிடும் 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்பதாகிய உலோகாயதம் அன்று என்பதனைத் தம் மனத்தில் உறுதியாகக்கொண்டு வாழும் மக்களுக்கேயாம். அவர்கள் வேதத்தில் நம்பிக்கை அற்றவர்அல்லர். ஆனால் அவர்கள் வேதக்கருத்துக்களை உறுதியாக நம்பாமல் அக்கருத்துக்களில் சந்தேகம் கொண்டவர்கள்

ஆவர். நவீன எண்ணங்களை ஏற்றுக்கொள்வதோடு பாரததேசத்தின் சமயப்பரப்புத்துறை, நல்வாழ்க்கைக் கோட்பாடு, மரணமிலாப் பெருவாழ்வு, என்றும் தொடர்ந்துவரும் மறுபிறப்பு என்பனவற்றை நம்புபவர்களுக்கே நான் இச்செய்திகளைக் கூறுகின்றேன்.

மிகப்பழங்காலம்தொட்டு வேதமே நம் சமயக்கோட்பாடுகளின் அடிநிலைப் பாறையாக இருந்துவந்துள்ளது. நம் தத்துவதரிசனங்கள், தந்திரங்கள், புராணங்கள், நம்முடைய சைவம், சாக்தம், வைணவம், நம் சமயச்சார்புடைமை, மாறுபட்ட சமயக்கருத்துக்கள், புறச்சமயக் கண்டனங்கள் ஆகியவை யாவும் வேதம் கூறும் உண்மைக் கருத்துக்களை அரைகுறையாக அறிந்தமையால் ஏற்பட்டனவே ஆகும்.

நம் ஆன்மீகஅறிவின் தொடக்கமும் முடிவும் வேதமேயாம். பிற்காலத்து நிறுவப்பட்ட சமயங்களில் பல நாளடைவில் நலிந்து போனதையும் அழிந்துபோனதையும் காண்கிறோம்; சில சமயங்கள் உருமாறியோ புதிய வடிவெடுத்தோ நாட்டில் நிலவுவதையும் காண்கிறோம். சமயத்தின் வீரியம் அளிக்கும் உண்மைப்பகுதியாகிய சமயஅறிவின் ஸாரம், யோகத்தை முறையாகப் பயின்ற நம் சான்றோர்களுடைய அனுபவத்தால் அரண் செய்யப்பட்டுள்ளது. வேதம் கூறும் நிறைவான உண்மையே அடிப்படை உண்மையாகும். அந்த அறிவை அடிப்படையாகக் கொண்டே மக்கள்இனத்துக்குப் பயன்படும் ஏனைய அறிவுகள் ஆற்றுப்படுத்தப்படும் பயிற்சி பெறுவனவாகும். வேதத்தில் மறைவாக உள்ள உண்மைப்பொருள் முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அந்தக் கண்டுபிடிப்பே, மனிதஇனம் வேறு வழியில்லாமல் திரும்பிவர வேண்டிய தெய்விகவாழ்வினைப் பழகுவதற்கு உரிய அறிவினை முறைப்படுத்தி வழங்கி, மனிதஇனத்தை உய்விக்கும் என்பது உறுதி.

❊ ❊ ❊

ஸ்ரீ கபாலி சாஸ்திரியார்

– எம். பி. பண்டிட்

ஸ்ரீ கபாலி சாஸ்திரியாரின் நூற்றாண்டுவிழா ஜயந்தி *1986* ஆம் ஆண்டு செப்டம்பர்மாதம் *3*ஆம் நாள் கொண்டாடப்பட்டது. அவர் *1953*இல் இவ்வுலகவாழ்வை நீத்த பின்னரே அவர் நாளுக்கு நாள் பிரபலமாகிக்கொண்டிருக்கிறார். தாம் வாழ்ந்த காலத்தில் தம்மைப் பற்றிப் பலரும் சிறப்பாக அறியுமாறு பிரபலமாவதை அவர் என்றும் விரும்பவில்லை. தாம் போற்றி வளர்த்த குறிக்கோள்களுக்கே தம்மை முழுமையாக அர்ப்பணித்து அடக்கமாக வாழும் வாழ்க்கையையே அவர் மேற்கொண்டு வாழ்ந்தார். மனிதஇனத்தின் மிக மேம்பட்ட பெருமை வாய்ந்த பேரார்வமாக ஆரியன் மேற்கொண்ட பழைய மரபை ஒட்டி, முழுதும் தன்முனைப்பு அற்று வாழ்ந்தவர்களுக்கு அவர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார்.

சாஸ்திரியார் பல துறைகளிலும் வல்லுநர். அவர் எத்துறையில் ஈடுபட்டாலும் அத்துறையில் தன்னிகரற்று விளங்கினார். பாரத தேசத்தின் மரபுஉரிமைக்கு அவர் செய்துள்ள தொண்டுகள் பல. பழமைக்கும், பழமையை அலட்சியம் செய்துகொண்டிருக்கும் புதுமைக்கும் உறுதியான இணைப்புப் பாலமாக அவர் எழுதியுள்ள செய்திகள் பலராலும் போற்றப்படும் மேம்பட்ட தொண்டாகத் திகழ்கின்றன. தம் குருமார்களாக முதலில் வாசிஷ்டகணபதி முனி, பிறகு ஸ்ரீ அரவிந்தர் - இவர்களுடைய தெய்வஒளி சென்ற தடத்தைப் பின்பற்றி, வேதத்தில் புதைபொருளாக அமைந்த பல செய்திகளை அவர் வெளிக்கொணர்ந்துள்ளார். தாம் கண்ட ஆராய்ச்சிகளுக்கு அவர் அசைக்க முடியாத தம் பன்மொழிப் புலமையைக் கருவியாகக் கொள்ளவில்லை; தம்முடைய உள்ஆர்ந்த அகக்கண்களால் தாம் பின்பற்றிய யோகமார்க்கத்தில் முழுமையாக ஈடுபட்டுத் தாம் மூழ்கிக் கண்ட அனுபவங்களை உலகுக்கு அறிவிக்கத் தம் அறுபதாவது வயதில் முற்பட்டார். அவர் ரிக்வேதத்தின் முதல் அஷ்டகத்திற்குத் தம் ஆண்மைமிக்க வடமொழிநடையில், புலமை நலம் சான்ற 'உள்ளொளியை எழுப்பும் மை' என்ற பொருளுடைய 'சித்தாஞ்சனம்' என்ற பேருரையைச் சிறப்பான முன்னுரையுடன் ஆயிரம்பக்க அளவினதாக வரைந்துள்ளார். அந்நூலில் அவர் வேத சூக்தங்களுக்குச் சந்தர்ப்பத்தை நோக்கி அளித்திருக்கும் பொருள்விளக்கங்கள்,

பாரததேசத்திலும் ஏனைய நாடுகளிலும் வாழ்ந்து வேதம் பற்றிய உண்மைச்செய்திகளை நாடுபவர்களுக்குப் பெரிதும் உதவி வருகின்றன.

சாஸ்திரியார் பயன்படுத்தும் வடமொழிநடைஅமைப்பு எளிமை யானது; ஆனால் ஆற்றல் மிக்கது. அவர் வடமொழியைக் கையாளும் திறம் போற்றத்தக்கது. அவர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, வடமொழி என்ற நான்கு மொழிகளிலும் புலமை மிக்கவர்; நான்கு மொழிகளிலும் தம் கருத்துக்களை வரைந்துள்ளார். எனினும் தேவபாஷை என்று போற்றப்படும் வடமொழியைக் கையாளும் திறம் அவருக்குப் பிறவியிலேயே இயற்கையாக அமைந்தது. அவர் குழந்தையாய் இருந்த காலத்திலே, பேசத் தொடங்கியபோதே முதலில் ஒலித்த எழுத்து வடமொழி எழுத்தே ஆகும். வால்மீகி இராமாயணம் முழுவதும் அவர் தம் ஏழாவது வயதிலேயே பாராயணம் செய்தவர். வேத சூக்தங்களுக்குத் தாம் வரைந்துள்ள விரிவான விளக்கவுரையில், வேதகாலத்து எண்ணங்களும் பாரதமக்களின் உள்ளத்து அனுபவங்களும் ஆன்மஅனுபவங்களும், அடிக்கடித் தொடர்பு அற்றுப்போய், அவ்வப்போது உபநிடதம், தந்திரம், இதிகாசம், புராணங்கள் வாயிலாக இன்றுவரை தொடர்பு புதுப்பிக்கப்பட்டு வந்த செய்தியை அவர் தேடிக் கண்டுபிடித்துக் குறிப்பிட்டுள்ளார்; புராணங்களில் வரும் கதைகளுக்கு அடிப்படையான உண்மையின் விதைகள் பழைய நூல்களாகிய வேதங்களில் உள்ளன என்பதனையும் விளக்கிக் கூறியுள்ளார்.

உபநிடதங்களில் பலவகைப்பட்ட வித்தைகள், ஒழுக்கநெறிகள் முதலியவை மூலநூல்களில் போதிய அளவு விளக்கம் இல்லாது குறிப்பாகவே சொல்லப்பட்டனவற்றை அவருடைய விளக்கவுரைகள், புதைபொருள்களை அறிய விரும்புவர்களுக்குப் பெருநிதி போல உதவுவன.

'உபநிடதங்களின் ஒளி' என்ற பெயரில் சாஸ்திரியார் எழுதியுள்ள நூல் சாதகர்களுக்குக் கையேடு போல உதவுவது. அதில் அவர் உபாசனை செய்யும்போது உணர்வுநிலையின் உள்ளார்தலில் ஈடுபட்டு இதயக்குகையில் மூழ்கி, உலகத்து உயிர்ஆற்றலில் கலந்து, மனத்தாலும் அறிய முடியாத உயரத்துக்கு ஆன்மா சென்று பேரானந்தம் அடையும் செய்தி போல்வனவற்றை

விரிவாக விளக்கியுள்ளார். குரு சிஷ்யருக்கு உபதேசிக்கக் கூடியன என்ற புனிதமரபை ஒட்டி அவர் சில செய்திகளைத் தம் எழுத்துக்களில் கூறாது விடுத்துள்ளார் எனினும், அவர் விளக்கியுள்ள பல செய்திகள் பிறருக்கு அறிவுறுத்தி வழிகாட்டி உள்ளொளியை வெளிப்படுத்த முயலும் ஓர் உண்மையான உள்ளத்தின் செயல்களாக அமைந்துள்ளன.

சாஸ்திரியார் தொடக்கமுதல் இறுதிவரை தம்மை ஒரு தாந்திரிகராகவே கருதியிருந்தார். தெய்விகத்தாயின் மிகத் தூய வழிபாடாகிய ஸ்ரீவித்யாஉபாசனை நிகழ்ந்த சூழ்நிலையில், வேதமரபுக்கு ஏற்பக் கடமைஉணர்ச்சியோடு செயற்படும் குடும்பத்தில் சாஸ்திரியார் பிள்ளைப்பிராயம்தொட்டு வளர்க்கப்பட்டவர். வேதநெறியும் தந்திரநெறியும் ஒரே மூலத்திலிருந்து தோன்றித் தனித்தனியே வளர்ந்த இரு மரபுகள் என்று தாம் கருதிய செய்தியை அவர் மெய்ப்பித்துக்காட்டி, அவை பாராட்டத்தக்க வகையில் வளர்ந்துள்ள திறத்தையும் விளக்கியுள்ளார்; இக்கால மக்களின் உள்ளத்துக்குப் பொருந்தும் வகையில் பலவகைப்பட்ட தந்திரநெறிகளும் பகுத்தறிவிற்கு ஏற்புடையனவே என்பதனைப் பல காரணங்கள் காட்டி விளக்கியுள்ளார்; புதைபொருளாக அமைந்த செய்திகள் பலவற்றையும் பலரும் அறியுமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

ஒருசிலருக்கு மாத்திரம் குருசிஷ்யமுறையில் கற்பிக்கத்தக்க யோகமுறையின் சில அடிப்படைக் கூறுகளைத் தம் இளமைப் பருவத்திலேயே சாஸ்திரியார் பயின்றிருந்தார்; அக்காலத்தில் திருவண்ணாமலையில் குகைகளில் வாழ்ந்துவந்த ரமண மகரிஷியை வழிபட்டு, அந்த மகரிஷி கற்பித்த வழியிலே ஆன்மா தன்னை உணரும் கடுமையான உளவியல் ஒழுங்குமுறையை, அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பயின்று, அவருடைய அச்சு வார்ப்படமாக விளங்கிச் சில அடிப்படை உண்மைகளை அறிந்து, பின்னர் ஸ்ரீ அரவிந்தரைக் குருவாக அடைந்தார்; தம் வாழ்க்கையின் இறுதி இருபத்தைந்து ஆண்டுகளை ஸ்ரீ அரவிந்தரும் அன்னையாரும் இருந்த அந்த ஆசிரமத்தில் முழுமையான யோகநினைவிலும் யோகப்பயிற்சியிலும் ஈடுபட்டுக் கழித்தார். பூரணயோகத்தின் நுட்பமான - சிக்கலான - நிலைகள் பற்றி அவர் விரிவாக எழுதியுள்ளார்; தம் அனுபவத்தில் கண்டு

கற்பித்த நுட்பமான செய்திகளை வடமொழி, தமிழ், தெலுங்கு என்ற மும்மொழிகளிலும் விளக்கி எழுதியுள்ளார். ஸ்ரீ அரவிந்தர் பெருங்கவிஞர். அவர் சாவித்திரி என்னும் பெயருடைய பெருங்காப்பியத்தை வரைந்துள்ளார். மிகக் கடுமையான ஆங்கில நடையில் அமைந்த அக்காப்பியத்தின் முதற்காண்டத்தை வடமொழியில் சுலோகங்களாக மொழிபெயர்த்து இயற்றிய சாஸ்திரியாரின் கவிதை இயற்றும் ஆற்றலை ஸ்ரீஅரவிந்தரே பாராட்டியுள்ளார்.

சாஸ்திரியார் தம் பயன்செறிந்த வாழ்க்கையில் ஆன்மத்தேடுதலின் பல வழிகளையும் பின்பற்றித் தம் ஆன்மாவின் ஆழத்தில், ஒவ்வொரு வழியிலிருந்தும் தாம் தேர்ந்தெடுத்த செய்திகளை இணைத்து உருவாக்குவதில் முன்னேற்றம் கண்டவர். தம் இளமையிலேயே ஞானமார்க்கத்தில் ஈடுபட்ட அவர் உள்உணர்வு, கடுமையாகத் தோன்றும் வெளிஉலகின் பின்புறத்திலேயே துடித்துக் கொண்டிருந்தது. கீதை குறிப்பிடும் ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம் இம்மூன்றும் ஒருங்குஇணைந்த செயலாளர்களுக்கு அவர் எடுத்துக்காட்டாக விளங்கினார். இயற்கையைப் பற்றி நன்கு அறிந்திருந்த அவர் மனிதஇனத்தின் சிக்கல்களையும் நன்கு அறிந்திருந்தார்; தம் உதவியை நாடிவந்த அனைவருக்கும் தம்மால் இயன்ற அளவு உதவினார். சான்றோர் போற்றும் நேரிய முறையில் அவர் ஆன்மிகத்தில் பிடிவாதமாகத் தன்முனைப்பு உடையவராக வாழ்ந்தார் எனலாம்.

சாஸ்திரியார் சிறந்த பூஜனையாளர்; மந்திரசாஸ்திரம் கைவரப்பெற்றவர். அவருடைய மந்திரஜபங்களால் பலருடைய வாழ்க்கைத்துயரங்கள் போக்கப்பட்டன. "சாஸ்திரியார் தம்முடைய தியானத்தின்போது வழிபாட்டுத் தொடக்கப்பாடலைக் கூறும்போது, அவர் குறிப்பிட்ட தெய்வம் நேரே வெளிப்பட்டு நேரிடையாக உதவி செய்வதனைக் காணலாம்" என்ற செய்தியை ஸ்ரீ அன்னையாரே உறுதிசெய்துள்ளார்.

சாஸ்திரியார் சோதிடம், கிரகசாஸ்திரம், ஆயுர்வேதம் முதலிய பல கலைகளிலும் வல்லவர். அவ்வத் துறைகளில் வல்லவர்கள் சாஸ்திரியாரை அணுகித் தமக்கு அவ்வத்துறையில் உள்ள ஐயங்களைப் போக்கிக்கொள்ள வரும்போது, அவர்களிடம் எந்த

ஒளிவுமறைவுமின்றித் தம் தெளிவான ஞானத்தால் அவர்களின் ஐயங்கள் பலவற்றைப் போக்கியுள்ள தாராள மனமுடையவர் அவர். அவருடைய ஆன்மிகஅறிவு ஆழமாக இருந்தது போலவே, வாழ்க்கையின் மறைவியலான செய்திகளைப் பற்றிய அவர் அறிவும் ஆழமாக இருந்தது. தாம்ஒருவர் மாத்திரம் வீடுபேறு அடையும் தன்னலத்தை அவர் விரும்பவில்லை.

அவர் பல துறைகளிலும் செயற்பட்டுள்ளார். அவர் ஒரு சிறந்த தேசபக்தர்; பாரததேசத்தின் விடுதலைக்குப் புரட்சிகரமான செயல்களில் தம் குருநாதர் கணபதிமுனியின் அடிச்சுவட்டில் இரகசியமாக ஈடுபட்டவர். அவருடைய நண்பர் குழாத்தில் சுப்பிரமணிய பாரதியார், வ.வே.சு.ஐயர் போன்றவர்கள் இடம் பெற்றிருந்தனர்.

சாஸ்திரியார் பாரததேசத்தின் மேம்பட்ட தவப்புதல்வர்களுள் ஒருவர்; உலகநிலையில் கணக்கிடப்படும் தலைசிறந்த சிந்தனையாளருள் ஒருவர்; தம் உயரிய குறிக்கோள்நிலையை எய்த முயன்றவர். இப்பாரததேசம் ஆன்மிக உள்ளுணர்வின் வற்றாத ஊற்றாக அமைய உதவிய பெரியவர்களில் இவரும் ஒருவராய்த் திகழ்ந்தார் என்பதனை நன்மக்கள் நினைவுகூர்வார்களாக!

* * *

வேத சூக்தங்களின் பெருமிதமான நடையையும் ஸ்ரீ அரவிந்தரின் கம்பீரமான ஆங்கில மொழிபெயர்ப்பையும் மனம்கொண்டு ஸ்ரீ கபாலி சாஸ்திரியார் அருமையான தமிழில் செய்த தமிழாக்கம் கற்போர் நலம் கருதிப் பெரிதும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மொழிபெயர்ப்பு வரலாறு - சில குறிப்புக்கள்

இந்நூலை ஓதும் பெருமக்களுக்கு மொழிபெயர்ப்பில் நான் கையாண்ட முறையையும் மற்றும் சில குறிப்புக்களையும் தெரிவிக்க முற்படுதல் இன்றியமையாதது. துவக்கத்தில் இப்பணியை நான் ஏற்றுக் கொண்ட நிமித்தம் இன்னதெனச் சுருங்கக் கூறல் அவசியம். படிப்போர்க்கு அதுவும் உதவும்.

சிறுவயதில் அத்தியயனம் செய்துவந்தபோது வேதம் எனின் வேதபுருஷன், வேதசப்தமே ஈசுவரஸ்வரூபம் என்ற ஆன்றோர் கூற்றில் சிரத்தை கொண்டேன். பின்னர், பாஷையில் சிறிது விற்பத்தி வாய்க்குங்கால், எளிய நடையில் தெளிவாய் அமைந்துள்ள ஸாயண பாஷ்யம் துணைநிற்க, இருக்குகளில் சில பாகத்தைப் படித்து வரும்போது சிற்சில இடங்களில் உரையாசிரியர் கூறுவதிலும் சிறந்து ஆன்ற கருத்துக்கள் மந்திரங்களில் பொதிந்துள்ளன என்ற எண்ணம் உதித்ததே ஆயினும், அது நன்கு விளங்காது, ஆய்ந்து கண்டறியும் கண் திறவாது நின்றது. அதனை ஒருவாறு முதல்முதலாகத் திறந்து வைத்த மகாநுபாவர் என் ஆசார்யபுருஷர் வாஸிஷ்டகணபதி முனிவர் (எங்களால் தைவம் எனப் பாராட்டப்பட்டு அன்பார்ந்து 'அப்பனே' 'நாயனா' என்று அழைக்கப்பட்டு வந்த காவியகண்ட கணபதிசாஸ்திரிகள்) அவர்களே ஆவர். *1907-'8*-ஆம் ஆண்டு முதல் என்னைத் தன்னவனாக்கி ஆட்கொண்டும், சில கலைகளிலும் சாத்திரத்துறைகளிலும் இன்றியமையாத உதவிபுரிந்தும், ஆத்துமார்த்த விஷயங்களில் நான் பிற்காலத்தில் முற்றிலும் ஈடுபடுதற்கு அப்போதே அடிகோலியாய் நின்ற முனிவர்தாம், முதல்முதலாக *1910*-ஆம் ஆண்டில் ரிக்வேதத்தின் மர்மங்கள் சிலவற்றை எனக்கு வெளியிட்டருளினார்கள். நான்கு ஆண்டுகள் சென்ற பின்னர், *1914*-ஆம் ஆண்டில் 'ஆர்யா' ஸஞ்சிகைத் துவக்கத்திலே வேதரஹஸ்யம் பற்றி ஸ்ரீ அரவிந்தர் இயற்றியருள முற்பட்டது முதல் இதுகாறும் அன்னார்தம் வேதவிளக்க முறையில் முற்றிலும் பற்றுக்கொண்டு வந்துள்ளேன். முனிவர் அவர்களது

முறையை ஏற்காது இங்ஙனம் ஸ்ரீ அரவிந்தரது விளக்கவழியில் புகுந்தேனென்று எண்ணற்க. முனிவர்வழியைப் பற்றுதற்கு இடம் இலது. அவர்கள் ஓர் அநுவாகத்திற்காவது பூரண வியாக்கியானம் இயற்றினார்கள் அல்லர். பெரும்பாலும் ரிக்வேதம் முழுவதும் மனப்பாடமாகுமாறு பன்முறை வேதம் ஓதி ஆங்காங்கு மந்திரங்களின் பொருளை ஆய்ந்தறிந்து ஆநந்தித்துத் தாம் கண்ட மர்மங்களை அடுத்தோர் சிலருக்கு அருளினார்களேயன்றி, கொள்கைகளைச் சீர்படுத்தி விளக்கமாக நிற்கக்கூடிய வியாக்கியானம் சிறுபகுதிக்காவது வரைந்தாரிலர். ஸ்ரீ நாயனாவும் ஸ்ரீ அரவிந்தரும் ஒருவரை ஒருவர் கண்டறியாத காலத்தில் இருவரும் தத்தம் தனிவழியிலே வேதத்தைக் குறித்த மர்மங்களைக் கண்டார்கள் என்பது வியக்கத்தக்கதே. ஆயினும் இருவர்வழியும் ஒன்று என்று கொள்ளற்க. முனிவர்க்கு வேதத்தால் ஆவது பற்றிய நோக்கும் பொருளுரைப்போக்கும் வேறு. இந்நூலின் முன்னுரை இறுதியில் ஸ்ரீ அரவிந்தர் கூறியுள்ளது போல் வேதத்தில் மற்றும் யாதுளதோ அது இன்னும் கண்டுபிடித்தற்கு எஞ்சியுள்ளது என்று எண்ணியவாறே முனிவர் தமது ஆராய்ச்சியின் பலனை நூலுருவாக்காது அமரவாழ்வு எய்தினர். கவிஞர் பிரானாய்ப் பெயர்பெற்ற முனிவருடைய நூல்களில் முக்கியமான சிலவற்றிற்கு வியாக்கியானங்களும் அவரது சரித்திரமும் என்னால் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டு வெளியாகியிருத்தலின், அவற்றில் உரிய இடங்களில் குறிப்பாக அவரது வேதப்பற்றும், வேதத்தைக் குறித்த கொள்கைகளும் கூறப்பட்டிருத்தலாலும், எனக்கு அந்நூல்களிலும், இந்நூலைப் போன்ற ஸ்ரீ அரவிந்தர் நூல்களிலும் தொடர்புடைமையாலும், பலருக்குச் சில சந்தேகங்கள் தட்டக்கூடும் என்றெண்ணி உண்மைநிலையை இங்குச் சுருக்கிச் சொல்வது அவசியமாயிற்று. வேதவிளக்க விஷயத்தில் இருவர் போக்குகளுக்கும் விரோதம் இலதாயினும், வேதப்பெருமையைக் குறித்து உடன்பாடிருப்பினும், வழிகள் வேறுபட்டன என்றறிதல் வேண்டும்.

ஸ்ரீ அரவிந்தர் நூற்றுக்கணக்கில் ரிக்வேத ஸூக்தங்களுக்குப் பொருளையும் பொருள்விளக்க முறையையும் ஆங்கிலத்தில் இயற்றத் துவக்கி முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'ஆர்யா' வில் வெளியிட்டு வந்தார்கள். "இந்த வழியைத் தழுவி ரிக்வேதத்திற்கு

ஸம்ஸ்கிருதத்தில் வியாக்கியானம் எழுதி அமைத்தால் வேதபதங்களுக்கு நேரான ஸம்ஸ்கிருத பதங்களைக் கூறிக் கருத்துரை காட்டுவதும் இயல்பாக அமையும்; பின்னர் நமது நாட்டுப் பாஷைகளுக்கும் உதவக்கூடும்; எங்ஙனமாயினும் வேத கூடார்த்தத்தை விளக்க ஸம்ஸ்கிருதத்தில் பாஷ்ய மிருப்பின் பரதகண்டத்திற்கு எந்நாளும் உரியதாய், பழம் பண்டிதர்களும் ஆராய்ச்சியில் புக உதவும்'' என்று எண்ணிச் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ அரவிந்தரது ஆசி பெற்றுப் பாஷ்யத்தைத் துவக்கினேன். பல சூக்தங்களுக்கு வியாக்கியானம் முடிந்தது. இடையே பொருள்விளக்க முறை நியாயமான தென்று வேதசம்பந்தமுடைய பண்டை நூல்களின் ஆதாரத்தாலும் யுக்திகளாலும் நிரூபித்தற்கு ஒரு முன்னுரை முடித்தாலன்றி வெறும் வியாக்கியானம் பயன்படாதென்று, 'ரிக் பாஷ்ய பூமிகை' சிறிது விரிவாக இயற்றி ஸ்ரீ அரவிந்தருக்கு அர்ப்பித்துள்ளேன். அத்துடன் வியாக்கியானமாகியுள்ள மந்திர பாகங்களில் சில முதற்பாகமாக வெளிவரக்கூடும்.

இங்ஙனம் வேதப்பணியில் ஈடுபட்டுவரும் நான், ஸ்ரீ அரவிந்தர் இயற்றி அண்மையில் வெளியாகிய (Hymns to the Mystic Fire) ''அக்னி ஸூக்த'' ங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்று, இத்தகைய வெளியீட்டில் ஊன்றிநிற்கும் ஸ்ரீ அரவிந்த லைப்ரெரி காரியநிருவாகிகள் கோரினார்கள். ஸ்ரீ அரவிந்தரது சரித்திரம், ஞானம், யோகம் முதலியவற்றைக் குறித்த தனிநூல்களும் மொழிபெயர்ப்புக்களும் வெளிவந்துள்ளன. அன்னார் காட்டிய வழியில் வேதத்தைப் பற்றிய தனிநூலாவது மொழிபெயர்ப்பு நூலாவது இதுகாறும் தமிழில் வெளியாகாமை ஒரு குறை, வருந்தத்தக்கது. இக்காரணத்தால், இதுவரை தமிழ்ப்பணியில் ஈடுபடாத எனக்கு இப்போது இப்பணி உரித்தாயிற்று.

இனி, சில குறித்தற்பாலன: நூலினுள் கண்டிருக்கும் விஷயங்கள் ஆசிரியர் அருளியுள்ள முன்னுரையில் விளங்குமாதலின் இங்கு அவை சொல்லப்படா. எடுத்தவுடன் மந்திரங்களைப் படித்தால் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் ஆகும். முன்னுரையை உன்னிப்புடன் படித்துத் தெளிந்த பின்னர் மந்திரங்களின்

பொருள்களை நோக்கின் விளக்கம் எளிதாம். வேதம் என்னும் வடசொல்லை மறையென்ற தமிழ்ப்பதத்தால் வழங்கல் எவ்வளவு பொருத்தமான தென்பதும் தெளிவாம். ரிஷிகள், கூடவாதிகள் - மிஸ்டிக்ஸ் (Mystics), மறையோர் - மறை மரபினர் - என்று முன்னுரையில் வழங்கப்பட்டுள்ளனர். காரணம் அங்கு நன்கு விளங்கும்.

ஸங்கேதம்: ரிஷிகள் ஸங்கேதமரபினர் என்றும் கூறப்பட்டுள்ளது. ஸங்கேதம் என்பது வடசொல்; ஆங்கிலத்தில் 'ஸிம்பல்' (Symbol). இதனை ஒருவாறு அறிகுறி எனலாம். ஆனால் எல்லா விடங்களிலும் இது பொருந்துமா என்பது சந்தேகம். ஸங்கேதம் என்பது மர்மம் அறியாதார்க்கு உட்பொருளை மறைத்துக்காட்டும்; அறிந்தோர்க்கு உண்மைப்பொருளை விளக்கும் குறியாய் நிற்கும். இத்தகைய ஸங்கேதமரபு தொன்றுதொட்டு இதுகாறும் வேறுவேறு வேஷத்தில் வந்துள்ளது. ரகசிய வித்தைகளில் ஸங்கேதமரபைத் தழுவிப் பாஷைகளைப் பிரயோகித்துவந்துள்ளார்கள். யோகம், ஞானம், மந்திரம், தந்திரம், வாதம் முதலிய விஷயங்களைக் கூறுகின்ற வடமொழித் தந்திரசாத்திரங்களிலும், தென்மொழிச் சித்தர் சாத்திரங்களிலும், இந்நாளும் மறைமுகமான பாஷையைக் காணலாம். இதனை இங்கு விரித்துரைக்க இடமிலது; அவசியமுமாகாது. ஆயினும் உதாரணம் கூறிக்காட்டின் போதும். வடநூலில் 'கோமாமிசத்தை உண்பான், கள்ளைக் குடிப்பான் யோகி' என்றபோது, மறைமுகச் சொல்லில் அமுதபானம் நடைபெறும் ஒரு யோகவித்தை குறிக்கப்பட்டுள்ளது. தமிழ்ச் சித்தர்மரபில் 'சாகாத்தலை, வேகாக்கால், போகாப் புனல்' என்றபோது, ஆகாயம் வாயு அக்கினி – இவற்றை அண்டத்திலும் பிண்டத்திலும் கூறி, அம்மூன்று தத்துவங்களாலான ரசவாதச் சரக்குகளையும் குறிக்கின்றார்கள், மறைமுகப் பேச்சாளர்களான சித்தர்கள். இங்ஙனம் வேதத்தில் ஸங்கேதமரபினரான ரிஷிகள் மறைமுகமாகப் பாஷையைக் கையாண்டுள்ளார்கள்.

பூமிகை: சாமானியமாய் நாம் விழித்திருக்குங்கால் நம்மில் நிலை பெற்றுள்ள உணர்வுக்குப் புலனாகி ஓரளவு திடம் பெற்றுள்ளது நாம் வாழும் பூவுலகு, பருவுலகு. இதனை ஸ்தூலம் என்ப. சிருட்டியில்,

இதற்குமேல் நமது உணர்வின் நிலைகளும், அவற்றிற்குப் புலனாகி அங்கு வாழ்வுக்கு இடமாகியுள்ள உலகுகளும், கோபுரத்தில் நிலைகள் ஒன்றன்மேல் ஒன்றாக இருப்பதுபோல் உள்ளன. அவை யோகஞானத்தின் ஆற்றலால் பெறத்தக்கவை. பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் முதலியவற்றைக் கூறும்போது மேலே உள்ள உணர்வு நிலைகளுக்குப் புலனாம் உலகஅமைப்புக்களைக் கூறுகின்றார்கள் வேத மரபினர்; பெரிய மலைமீது சமபூமிகள், அஃதாவது, மட்டநிலங்கள் பல ஒன்றன்மேல் ஒன்று ஏறஏறக் காணப்படுவன போன்று, இவ்வுலக நிலைகள் உள்ளன என்று வருணிக்கின்றார்கள். ரிஷிகள் 'ஸாநோ: ஸாநும் ஆருஹத்' என்றவாறு, சிலபோது, விடுதிகள், பயணத்தில் தங்குமிடங்கள், 'தாமாநி' படிகள், அடிகள் 'பதாநி' என்றும் கூறுகின்றனர். இச் 'சமபூமி'யை ஆங்கிலத்தில் 'ப்ளேன்' (Plane) என்று வழங்கியுள்ளார் ஸ்ரீ அரவிந்தர். நமது பாஷையில் பூமிகை என்போம்.

இனி மொழிபெயர்ப்பில் கையாண்ட முறை: சாதாரணமாக எந்த பாஷையில் இருப்பினும் கவிதை மொழிபெயர்ப்புக்கு இசைவதரிது. அதனினும் அருள்வாக்குகள், அநுபவத்தினின்று எழுந்த மொழிகள், மந்திரங்கள் - இவை பெரும்பாலும் மொழிபெயர்ப்பில் உயிரில்லாத உடல்போல் ஆகும்; சப்தசக்தி அவற்றின் உயிராக நிற்றலால், மந்திர மகிமையை உணர்த்தல் மொழிபெயர்ப்பில் இயலாது. இவ்வுண்மையை நன்கறிந்தும் அறிவித்தும் உள்ள பேராசிரியர் ஸ்ரீ அரவிந்தரவர்கள் தமது ஆங்கிலமொழிபெயர்ப்பில் அவர்களுக்கே உரிய தனிப்பெருமை வாய்ந்த உரைநடையில் செய்யுள்நடை இசையும் பொலிவும் அமையும் வண்ணம் சாதித்துள்ளார்கள்; இருக்குகளை மொழிபெயர்த்தல் எளிதில் இயலாததேயாயினும், தாம் கைப்பற்றிய முறையையும் மேற்கொண்ட முயற்சியையும் முன்னுரையில் கூறியுள்ளார்கள். அங்குக் காண்க. ரிக்வேதம் போன்ற மாபெருங்கவிதை ஒருபுறம் நிற்க. நான் இவர்களது ஆங்கிலத்தை ஒட்டி இருக்குகளுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பு முடிக்கத் துணிந்தது ஒரு துணிச்சலே ஆகும். ஆயினும், மொழிபெயர்ப்பு வெறும் அகராதி வேலைப்பாடாகிச் சீவனற்றது ஆகாதிருத்தற்கு முயன்றுள்ளேன். பெரும்பாலும் நற்றமிழ்ச் சொற்களைக் கையாண்டதோடு உரைநடையில் சிறிது

பழந்தமிழ் ஓசை ஒலிக்குமாறு சொல்முடிபுகளைக் கையாண்டேன். ஆனால் வடசொற்களைச் சிலவிடங்களில் நிறுத்தியுள்ளேன். தற்போது வடமொழியிலும் தென்மொழியிலும் வழக்கிலுள்ள பதங்கள் 'வநம்' 'தரு' போன்றவை இருக்குகளில் காணுங்கால் அவற்றைத் தனித் தமிழாக்காது பிரயோகித்துள்ளேன். இது இருக்குகளைப் படிக்கக் கூடியவர்க்குச் சிறிதளவு உதவும். தேவதைகள், 'யாகத் தொடர்புற்ற பதங்கள்' ஸம்ஸ்கிருத ரூபத்திலே நிறுத்தப்பட்டன. வேதவாஸனையும் வடமொழிப்பழக்கமும் இல்லாதார்க்கு நேரான உச்சரிப்பு விளங்கவேண்டும் என்பது என் நோக்கம். ஆதலின் அக்கினி என்று இராமல் 'அக்னி' என்று ககரஒற்றோடு நிறுத்தப்பட்டது. 'அங்கு' 'சங்கு' என்ற இடங்களிலே ககரத்திற்குரிய உச்சரிப்புத்தான் அது. அக்னி என்ற பதத்திலுள்ள அகரத்திற்கு ஸோமன், உஷஸ், ஸத்தியம், இவை போன்ற சொற்களை வேண்டுமென்றே வடசொல்லுருவத்தில் கையாண்டுள்ளேன். தற்பவமாகப் பிரயோகித்தல் நற்றமிழிலக்கியத்திற்கு ஏற்குமே ஆயினும், இதுபோன்ற விஷயத்தில் வேண்டிய பயன் கொடாது.

அன்றியும், சில மந்திரங்கள் வாக்கியமுடிவு பெறாமல் நிற்கும். மொழிபெயர்ப்பில் ஆங்கிலத்தில் போல் தமிழிலும் அங்ஙனமே அமைந்துள்ளது. இது ரிஷிவாக்குகளின் போக்கும் கவிதைநடையின் சாயலும் ஒருவாறு வெளியாதற்பொருட்டு இங்ஙனம் நிறுத்தப்பட்டது. ஆயினும் படிப்போர் வாக்கியத்தைப் பூர்த்திசெய்து கொள்ளல் எளிது. மந்திரங்கள் பல விடுகதைகள் போல் காணப்படுதலினின்றே சொற்பொருள்கள் ஸங்கேதமரபின்படி அமைந்துள்ளன என்பது விளங்கும்.

'சிவஞானம்' 'திருஞானம்' என்பன போல் 'அஞானம்' 'விஞானம்' என்று ஞகரஒற்று இராது வரையப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பிலுள்ள பெரும்பான்மையான நற்றமிழ்ச்சொற்கள் இலக்கியப்பயிற்சி விசேடமாக இல்லாதாரும் எளிதில் தெரிந்துகொள்ளத் தக்கவை. சிலருக்கு நூலினுட் செல்லுங்கால் நடை தடைபடக் கூடும். அதனை விலக்கச் சில குறிப்புக்கள் உதவும். ஆல் என்னும் வேற்றுமைஉருபு வருமிடங்களில் பெரும்பான்மையாக 'ஆன்' என்று பிரயோகிக்கப்பட்டுள்ளது. இப்படியே ஆம் - ஆகும்,

ஆய - ஆகிய, அவர்கள்தம் அவர்களுடைய - இவை போன்ற பிரயோகத்தை நினைவிருத்தல் உதவும்.

எந்நூல் வெளியாயினும் அதனைத் தூற்றலும் போற்றலும் உலக இயல்பு. ஒருநூல் சில பகுதிகளிலாவது இவ்விரண்டிற்கும் இலக்காவதும் உரித்தாவதும் அதிசயம் அன்று. பலவகை மனப்பான்மையுற்ற படிப்போர் அனைவருக்கும் திருப்தியளித்தல் அரிது. இந்நிலைமை மொழிபெயர்ப்புநூல்களில் சிறப்பாகக் காணப்படும். இதனை நன்கறிந்தும் இப்பணியை நான் மேற்கொண்ட நோக்கம் இது: வேதம் என்றால், பொருள் வேண்டாது சொல்லளவே கேட்டு ஓதவேண்டிய நூல் என்று கருதாமல், அருஞானம் பொதியப்பெற்ற பெரிய அருள்வாக்கு என்று மதிப்போர்க்கும், வேதாபிமானத்துடன் தமிழ்ப்பற்றுள்ளோர்க்கும், வேதத்தில் மேல்வாரியான பொருள் நீங்க உட்பொருள் இருப்பின் அதனை அறிய விரும்புவோர்க்கும், இந்நூல் உதவவேண்டு மென்பதே எனது எண்ணம். அங்ஙனம் சிறிதளவேனும் பயன்படுமாயின், இம்முயற்சி ஒருவாறு பலித்ததாகவே கருதுவேன்.

ஸ்ரீ அரவிந்தபகவன் வேதவழி வாழ்க!

புதுவை,
ஸ்ரீ அரவிந்தாசிரமம் தி. வி. கபாலி சாஸ்திரி
17 - 2 - 47.

* * *

ஸ்ரீ அரவிந்தர் அருளிய
முன்னுரை

பண்டை நாள்களில் புனிதமாயதொரு ஞானநூல் என்று போற்றப்பட்டது வேதமெனும் மறை. அஃது ஆவேசக்கவிதையின் பெரியதொரு குவியல்; உண்மை காண்போரும் முனிவருமாகிய ரிஷிகளின் பனுவல். அவர்கள் எங்கும் பொதுவாய் நித்தியமாய் நிராகாரமாயுள்ள ஸத்தியத்தைச் சிந்தனையில் கட்டாது, விளக்கம்பெற்ற தம் சித்தங்களில் ஏற்று, 'மந்த்ரங்' களான் அதற்கு உடலளித்தனர். அவை அருள்வெளிப்பாட்டான் வீரியமுற்று உதித்த பாக்கள். அவற்றின் உற்பத்தியும் ஆவேசமும் தெய்வத்தன்மை வாய்ந்தவை, சாமானியமல்ல. இந்த ரிஷிகளுக்கு இட்ட பெயர் 'கவி'. அது பிற்காலத்தில் எப்பாவலனையும் குறிப்பதாயிற்று. ஆயினும், அம்முற்காலத்தில் 'உண்மை காண்போன்' என்பதே அதன் கருத்து. வேதமே அவர்களைக் 'கவய: ஸத்ய ச்ருத:' - 'உண்மை காண்போர் ஸத்தியம் கேட்போர்' - என்று வருணிக்கின்றது. வேதத்திற்கே சுருதி (ச்ருதி) என்று பெயர்; அருட்பிரகாசமாம் அறநூல் என்று அதற்குப் பொருள் ஏற்பட்டது. உபநிடத ரிஷிகளும் வேதத்தைக் குறித்து இங்ஙனமே கருதினர்; தாமே தீர்மானமாய்த் தெரிந்து கூறிய ஸத்தியங்களுக்கு வேதத்தை மேற்கோளாகக் கொண்டனர். பின்னர் இவ்வுபநிடதங்களே அருள்வாக்காம் அறநூலாய்ச் 'சுருதி' என்று மதிக்கப்பட்டுத் தூய பிரமாணநூலில் இடங்கொண்டது.

இந்த ஐதிகம் 'பிராஹ்மண' கிரந்தங்களில் பிடிவிடாது நிலைத்ததுமன்றி எவ்வளவோ சங்கடங்களினின்று மீண்டு உறுதியாய்த் தொடர்ந்துவந்தது. 'மந்த்ரங்'களில் எதனைக் கண்டபோதிலும் அது கருமவிதி பற்றி வந்தது, அது ஒரு புராணக்கதை பற்றி வந்தது என்பர் 'யாஜ்ஞிகர்' என்னும் வேள்வியர். இக்கருமவாதி உரையாசிரியர்கள்தம் முயற்சி ஒருபுறம் நிற்க. பண்டிதர்கள் 'கர்மகாண்டம்' என்றும் 'ஞாநகாண்டம்' என்றும் வகுத்து, 'மந்த்ரங்'களைக் கர்மகாண்டமாகவும், உபநிடதங்களை 'ஞாநகாண்ட' மாகவும் நிச்சயித்துப் பாகுபாடு செய்தனர். இங்ஙனம்

ஞாநபாகங்கள் கருமவிதிகளில் முழுகிப்போவதை ஓர் உபநிடதமும் 'கீதை'யும் கண்டிக்கின்றன. ஆயினும் கீதை உபநிடதம் இரண்டும் வேதத்தை 'ஞாநநூல்' என்றே நோக்குகின்றன. அன்றியும், வேதமும் உபநிடதமும் அடங்கிய 'சுருதி' அகவாழ்வறிவுக்குச் சிறந்த பிரமாணமென்றும் பிழைபடாததென்றும் பாராட்டப்பட்டது.

இஃதெல்லாம் கட்டுக்கதையா, வெறும் மாயையா, அல்லது நிராதாரமாய்ப் பொருளற்ற கேவலம் ஐதிகம்தானா? இன்றேல், இவ்வாதத்தைக் கிளப்பியனவான பின்தோன்றிய சில 'ஸூக்தங்' களில் மட்டுமே உயர்ந்த கருத்துக்கள் சிறிதோரளவு காணலாம் என்பது உண்மையா? உபநிடதங்களை ஆக்கியோர் 'இருக்கு'களில் (ரிக்வேதம்) இல்லாத பொருளை அவற்றில் ஏற்றித் தமது பாவனையாலும் கற்பனை உரையாலும் அவ்வாறு பொருள் கூறினார்களா? தற்போதைய ஐரோப்பியப் புலமை அங்ஙனம்தான் பிடிவாதம் கொள்கிறது; தற்கால இந்தியர்மனத்தையும் இசையச் செய்துள்ளது. இந்நோக்கத்திற்கு அநுகூலமான விஷயம் ஒன்றுள்ளது: வேதரிஷிகள் தத்துவதரிசிகள் மட்டுமல்லர்; அவர்கள் பாவலர்கள்; வேள்வி நடாத்துவிக்கும் புரோகிதர்கள். அவர்கள்தம் 'மந்த்ரங்கள்', வேள்வித் திருவிழாக்களில் பாராயணத்தின்பொருட்டு ஆக்கப்பட்டவை; வழக்கமாயுள்ள கருமவிதிகளை இடையறாது குறிக்கின்றன; இந்தக் கருமங்களுக்கு வேண்டிய வெளிப்பொருள்களாகிய செல்வம், நல்வாழ்வு, பகைவர்மேல் வெற்றி முதலாயவற்றை வேண்டுவனவாகத் தோன்றுகின்றன. பேர் உரையாசிரியர் ஸாயணர் 'இருக்கு'களுக்குக் கருமபரமாகவே பொருள்உரைக்கின்றனர்; அவசியமானவிடத்து, தற்சமயம் பயன்படுமாறு புராணக்கதையையோ அல்லது வரலாற்றையோ சார்ந்த பொருளைக் கூறுகின்றனர்; ஏதோ அரிதாய்ச் சிற்சில சமயங்களில் உயர்ந்த பொருளும் வெளியாதலை விடுக்கின்றனர்; அதனையும் விகற்பமாய்க் கொள்ளுதற்கே குறிக்கின்றனர்; இன்றேல், கருமவிதி பற்றியதாகவோ வரலாற்றைப் பற்றியதாகவோ விளக்குதல் இயலாது, வேறு கதியின்மையாற்றானோ என்று எண்ணுமாறு அங்ஙனம் ஏற்றுக்கொள்ள ஏவுகின்றனர். இங்ஙனமாயினும், ஆத்துமசம்பந்தமான விஷயங்களில் வேதப்பிரமாணத்தைப்

புறக்கணிக்கின்றாரிலர்; உயரிய உண்மை இருக்குகளில் அடங்கியுள்ளதென்பதையும் மறுக்கின்றாரிலர். கடைசியில் கூறிய இம்மறுப்புக்கொள்கையின் வளர்ச்சி நமது காலத்திற்குரியதாகி மேனாட்டுப் புலவர்களால் பரவச்செய்யப்பட்டது. ஐரோப்பியப் பண்டிதர்கள் கருமவிதிபரமான ஐதிகத்தை ஏற்றுக்கொண்டு மற்ற விஷயங்களில் ஸாயணரை உதறிக் குப்புறத் தள்ளிவிட்டனர்; தமது சொல்லிலக்கண விளக்கத்தால் பதங்களுக்குப் பொருள்விளக்கத் தொடங்கினர்; வேதத்துப் பாக்களுக்குச் சொந்த கற்பனைப்பொருள் கட்டினர்; தம்மிட்டப்படி காரணமின்றிப் பாவனையால் கற்பித்த புதியதொரு கருத்தினைக் காண்பித்தனர். அவர்கள் வேதத்தில் காணவேண்டித் தேடியதென்ன? இந்தியநாட்டின் பழைய வரலாறு, அதன் சமூகம், வழக்கங்கள், அக்காலத்திய நாகரிகச் சித்திரம் - இவற்றைக் காண்டற்பொருட்டே வேதவிசாரம் செய்தனர். பாஷைகளின் பேதத்தை ஆதாரமாய்க் கொண்டு ஒரு வாதத்தைப் புதியதாகக் கண்டுபிடித்தனர். அது வடதிசையினின்று கிளம்பிய ஆரியர் படையெடுப்பு, திராவிடர்தம் இந்தியநாட்டின்மீது படையெடுப்பு. ஆனால் இந்த விஷயம் இந்தியமக்களின் புராதன நூல்களிலோ பிரமாணமாய் நின்ற இலக்கியங்களிலோ பதிவு பெறவில்லை; அவர்கள்தம் நினைவிலும் இல்லை; ஐதிகத்திலும் இலது. இக்கூற்றின்படி, வேதசமயம் என்பது இயற்கைத் தெய்வங்களைத் தொழுதல் என்பதே. அவை கதிரவன் தொடர்புற்ற கட்டுக்கதைகள் நிரம்பியன; மலர்ச்சி பெறாமல் மூடமாய் நின்ற ஆதிகாலத்துக் கருத்துக்களும் விஷயங்களும் அடங்கிய வேள்விவழிபாட்டாலும் வேள்விகளாலும் புனிதமாக்கப்பட்டவை. இத்தகைய அநாகரிகமான 'ஸ்துதி'கள்தாம் மிகப் பெரியவெனப் பாராட்டப்பட்டு ஒளிவீச்சுடன் தெய்வத்தன்மை வாய்ந்த வேதம் என்ப.

ஐயமற்ற விஷயம் ஒன்றுண்டு. அதாவது, சூரியன் சந்திரன் விண்ணுலகு மண்ணுலகு காற்று மழை புயல் புனிதநதிகள் முதலாகிய 'பௌதிக' உலகத்தில் தொண்டாற்றும் சக்திகளையும் இயற்கைத் தொழில்களில் அதிகாரம் செலுத்தும் தேவதைகளையும் ஆதியில் மக்கள் தொழுவாராயினர். கிரீக்நாட்டிலும், ரோமாபுரியிலும், இந்தியநாட்டிலும், இன்னும் ஏனைய பண்டைக்காலத்து

மக்களிடையேயும் வழங்கி வந்த தெய்வவழிபாட்டின் பொதுவானதோர் அம்சம் இதுவே. ஆனால் இந்நாடுகள் அனைத்திலும் இத்தெய்வங்கள் மேன்மை தாங்கிய அகக்கருவித்தொழிலை ஏற்றுக்கொண்டன. தொடக்கத்தில் 'பல்லஸ் அதினி' எனும் தெய்வம், வேதத்தில் 'த்யௌஸ்' என்றும் (கிரீக்கில்) ஜூஸ் என்றும் வழங்கும் வானதேவதையின் சிரத்தினின்று சுடர்விட்டுப் பாயும் 'உஷோதேவி'யாக ஆதியில் இருந்திருக்கலாம். ஆனால் பிரமாணமாய்ச் சிறப்புற்ற கிரீக்நாட்டில் அத்தெய்வத்திற்கு உயர்ந்த விருத்தி அமைந்தது. 'ரோமியர்கள்' தம் கல்வியறிவுத் தெய்வமாகிய 'மினர்வா'வைப் 'பல்லஸ் அதினி' என்று இரண்டையும் ஒன்றாகவே நிச்சயமாய்ப் பாவித்தனர். அங்ஙனமே இந்தியாவில் ஒரு நதித் தெய்வமாய 'ஸரஸ்வதி' அறிவு கல்வி கலைகள் தொழில் தந்திரங்கள் - ஆகிய இவற்றின் தேவதையாயுள்ளனள். இவ்வழியே 'கிரீக்கு' தெய்வங்களெல்லாம் மாற்றம் அடைந்துள்ளன. 'அபொல்லோ' சூரியதேவன் கவிதைக்கும் தீர்க்க தரிசனத்திற்கும் அதிதேவதை ஆயினன்; 'ஹெபிஸ்டஸ்' அக்னிதேவன் தெய்வக்கருமானாகவும் தொழிலுக்கு அதிதேவதையாகவும் மாறினான். இந்தியாவில் இத்தகைய மாறுதலின் போக்கு பாதிவழியில் தடைபட்டது. வைதிகத் தேவதைகள் தம் அகக்கருவிக் காரியங்களை விரிவுறச் செய்தன; வெளிச்சொரூபத்தை மாத்திரம் திரமாய் நிறுத்திக்கொண்டன; (இங்ஙனம்) உயர்ந்த உத்தேசத்துடன் புதிய தெய்வகோஷ்டிக்கு இடம் அளித்தன. ஆதலால் அவை பூர்வசங்கத்தினின்று விருத்திபெற்றனவும் உலகனைத்தினிலும் பெருந்தொழில் ஏற்றுக்கொண்டனவும் ஆகிய புராணத்தெய்வங்களுக்கு முதல்இடம் கொடுக்கவேண்டியதாயிற்று. 'விஷ்ணு' 'ருத்திரன்' 'பிரஹ்மா' வேதத்தில் 'பிருஹஸ்பதி' அல்லது 'பிரஹ்மணஸ்பதி'யினின்று மலர்ந்த 'பிரஹ்மா'- 'சிவன்' 'லக்ஷ்மி' 'துர்க்கா' - இவ்வாறு இந்தியாவில் தேவதைகளின் மாற்றம் முற்றுப் பெறாமல் குறைபட்டது. பண்டைத் தெய்வங்கள் பௌராணிக தேவ கோஷ்டியில் தாழ்ந்த தெய்வங்களாயின. இதற்குப் பெரும்பான்மைக் காரணம் யாதெனின், பிற்காலத்திலும் 'ரிக்வேதம்' தப்பிப் பிழைத்ததே எனல் வேண்டும். ஏனெனில் அதனில் தேவதைகளுக்கு அகத்தொழில்களும்,

புறத்தொழில்களும், ஏககாலத்தில் இருவகைத் தொழில்களும் அமைந்திருத்தலுடன் வலியுறுத்தப்பட்டுள்ளன. இவ்விதமாகக் 'கிரீக்' 'ரோமாபுரித்' தெய்வங்களுடைய ஆதிச் சாயலைக் காத்துப் பதித்த பழைய இலக்கியஆதாரம் யாதும் இருந்திலது.

தெய்வங்களின் இம்மாறுபாடு பண்டைக்காலத்திய இம்மக்களின் பயிற்சிச்சிறப்பான் (பண்பாட்டு மலர்ச்சியான்) ஏற்பட்டதென்பது தெளிவாம். அவர்கள் நாகரிகத்தில் விர்த்தியடையுங்கால், மேன்மேலும் மனவாழ்வு மிகுந்து உடல்வாழ்வில் அமிழ்தல் குன்றியதாதலால், தம் சமயத்தின்பாலும் தெய்வங்கள்பாலும் மேன்மையான நுண்ணிய அம்சங்களைக் காண்டல் அவசியமாயிற்று. அங்ஙனம் நுண்ணிய உந்நத அம்சங்களைக் காண்டல், அவர்தம் மேம்பட்ட மதிநிலைக்கேற்ற கருத்துக்களையும் அக்கறைகளையும் ஆதரித்து அவற்றிற்கு உண்மையான சித்துப்பொருளையோ (அசரீர ஆவிப்பொருளையோ) அல்லது ஒரு திவ்யரூபத்தையோ (விண்ணுலக வடிவத்தையோ) ஆதரவாகவும் ஆதாரமாகவும் கண்டு சாதிப்பது ஆம். ஆனால் இவ்வகமுகத் திருப்பத்தைத் தீர்மானித்து ஆழ்த்தும் வேலை பெரும்பான்மையாகக் கூடவாதிகளான மறையோருடையது எனல் வேண்டும். யாங்ஙனமெனின், பழைய நாகரிகங்களின்பால் அவர்தம் செல்வாக்கு ஏராளமாயிருந்தது. உண்மையில், பெரும்பாலும் எங்கும் ஒரு ரகசியயுகம் இருந்துளது. அப்போது ஆழ்ந்த அறிவும் ஆத்தும ஞானமும் பெற்றவர்கள், ஆதியில் சிறிதும் முதிர்ச்சி பெறாது புறம்பாயுள்ள சமயவழிபாட்டில், அதனை ஒட்டியோ அதன் அகத்திலேயோ தம்முடைய அனுஷ்டானங்களையும் கருத்துக் கவ்விய கருமங்களையும் ஸங்கேதங் (குறி) களையும் கூடவித்தையையும் நிலைநாட்டினார்கள். இது பற்பல நாடுகளில் பற்பல வடிவங்கள் கொண்டது. 'கிரீக்' நாட்டில் 'ஆர்பிக், எலியூஸினியன்' ரகசியங்கள் இருந்துவந்தன. ஈஜிப்திலும் சால்டியாவிலும் குருமாரும் அவர்கள்தம் மர்மவித்தையும் தந்திரக்கலையும் இருந்துவந்தன. பாரஸீக நாட்டில் 'மாகி'யும், பாரதபூமியில் ரிஷிகளும் இருந்துவந்தனர். கூடவேதிகளான இம்மறையோர் முற்பட்டு ஈடுபட்ட விஷயம் ஆத்துமஞானமும், கம்பீரமான உலகஞானமும் ஆம். புறத்திற் காணும் பூதவுடலுற்ற மனிதன் தன் புறம்பாய தோற்றத்திற்குப் பின்

அவனில் ஆழ்ந்த தான் என்னும் ஓர் அகப்பொருள் உளதை அவர்கள் கண்டறிந்தனர். அதனைக் கண்டறிந்து கொள்ளலே மனிதன்தன் மிகச்சிறந்த காரியம். எங்ஙனம் பரதகண்டத்தில் தன்னைத் தான் அறிதல் - ஆத்துமனை அறிதல் - என்பது சிறந்த அகத்தேவையாயும் மனிதன் பெறவேண்டிய உத்தமப்பொருளாயும் (பரம புருஷார்த்தம்) வாய்த்ததோ, அங்ஙனமே (பிறநாடுகளிலும் ஆதிகாலத்தில்) 'உன்னை அறி' என்பது 'மறையோர்'தம் உபதேசம். அன்றியும், அவர்கள் உலகத்தின் வெளித்தோற்றங்களுக்குப் பின்புறம் உள்ளபடி நின்ற ஒரு பொருளை, ஒரு ஸத்தியத்தைக் கண்டனர். அந்த ஸத்தியத்தைக் கண்டுகொண்டு கடைப்பிடித்தல், அகப்படுத்தி அநுபவித்தல், அவர்தம் பேரவாவாயின. 'இயற்கை'யின் ரகசியங்களையும் ஆற்றல்களையும் கண்டுகொண்டனர். அவை பௌதிகஉலகின்பாலும் பௌதிகப் பொருள்களின்பாலும் கூடமான வெற்றியைத் தந்து அளிப்பன. ரகசியமான இந்த ஞானத்தையும் சக்தியையும் ஒழுங்குபடுத்தல் அவர்கள் திடமாய் முற்பட்ட காரியங்களில் ஒன்று. இவையனைத்தையும் உன்னிப்புடன் கடினமான சிக்ஷையாலும், பயிற்சியாலும், சுபாவம் தூய்மை பெறுதலாலுமே அபாயமின்றிச் சாதிக்க இயலும். சாமானிய மனிதன் இதனைச் சாதிக்க வல்லோன் அல்லன். கடுஞ்சோதனையும் சிக்ஷையுமின்றி மனிதர் இவ்விஷயங்களில் தலையிட்டால் அவர்களுக்கும் பிறருக்கும் அவை அபாயம் விளைவிக்கும்; இந்த ஞானத்தையும் சக்திகளையும் துர்விநியோகம் செய்யக்கூடும்; தப்பாக விளக்கக்கூடும்; உண்மையினின்று பொய்மைக்கும் நன்மையினின்று தீமைக்கும் திருப்பிவிடக் கூடும். ஆதலான் ஒரு திட்டமான மறைப்பு (ஒளிப்பு) நிறுவப்பட்டது; திரைமறைவாய்க் குருவினின்று சிஷ்யனுக்குக் கிட்டியது. ஒரு 'ஸங்கேதத்' திரை (மர்மங்களைத் தம்முட்கொண்ட அறிகுறி) ஏற்படுத்தப்பட்டது. அதன் மறைவில் இந்த ரகசியங்கள் பாதுகாக்கப்பட்டுத் தங்குதற்கு இடங்கொண்டன. அங்ஙனமே சொற்களை, பாஷையை, மர்மப்பொருள் தருமாறு கையாளுதற்கு விதிகள் நியமிக்கப்பட்டன. அவற்றை அந்தரங்கதீக்ஷை பெற்றவர்கள்தாம் அறியக்கூடும், பிறர் அறியார். அறிந்தாராயின், ரகசியத்தையும் உட்கருத்தையும் மறைத்துப் போர்த்துநிற்கின்ற

புறப்பொருளைத்தான் அறிந்தாராவர். இதுவே எங்கும் கூடவாதிகளின் சித்தாந்தத்தின் சாராம்சம்.

வேதரிஷிகள் (மந்த்ர த்ரஷ்டா, கவி) இவ்வகையோர் என்பது பரதகண்டத்தில் பண்டைக்காலம்தொட்டு இதுகாறும் வந்து நிற்கும் ஐதிகம். இம்மரபின்படி ரிஷிகள் சாமாநிய மனிதர் பங்குகொள்ள இயலாத பெரியதோர் அகத்தறிவும் மர்மஞாநமும் பெற்றவர். அவர்கள் தம்முடைய சந்ததிக்கும் தாம் வரித்தெடுத்த சிஷ்யர்களுக்கும் அந்தரங்கதீக்ஷையால் இந்த ஞாநத்தையும் 'ஸித்தி'களையும் அளித்தனர். "இந்த ஐதிகத்திற்கு மூலம் யாதும் இலது. சூநியநிலை (ஒன்றுமின்மை)யினின்று தெற்றெனவோ மெதுவாகவோ கிளம்பிய மூடநம்பிக்கை இது. இதனை ஏற்பதற்கு ஆதாரம் ஒன்றும் இலது" என்று நினைத்தல் அகாரணமான ஊகை. இம்மரபு பல நூற்றாண்டுகளில் எவ்வளவு பெருகியிருப்பினும், புராணக்கதைகளால் எம்மட்டு வளர்ந்திருப்பினும், இதற்கு ஆதாரம் சிறிதளவேனும் இருந்திருத்தல் வேண்டும். அங்ஙனம் இது உண்மையாயின் மந்திர தரிசிகளாய வேதரிஷிகள் மந்திரப்பாக்களில் தம் மர்மவித்தையை, தம் ரகசியஞாநத்தை, எம்மட்டாயினும் வெளியிட்டிருத்தல் வேண்டும். கூடபாஷையிலும் 'ஸங்கேத'த் தந்திரத்தின் திரைமறைவிலும் எவ்வளவு நன்கு மறைக்கப்பட்டிருப்பினும் அத்தகைய அம்சம் ஒன்று இருத்தல் வேண்டும். அவ்வாறாயின் அஃது ஓரளவு காண இயன்றதேயாம். ஒரு புராதநமான பாஷை, பிரயோகத்தினின்று அகன்று விட்ட பதங்கள், – 'யாஸ்கர்' என்பார் தாம் பொருள் அறியாச் சொற்களை நானூற்றிற்குமேல் கணக்கிடுகின்றார் – சாமாநியமாய்க் கடினமானதும் காலத்திற் கேற்காததுமான வாசகநடை, இவை எல்லாம் கூடி அவற்றின் அர்த்தத்தை மங்கச்செய்ய உதவி புரிந்தன. ஸங்கேதங்களின் மறைபொருள் காணாது சென்றது. அவற்றின் விளக்கவுரையை அவர்கள் தாமே வைத்துக்கொண்டனர். ஆதலான் பின்னர்த் தோன்றிய தலைமுறைகளுக்கு இம்மந்திரங்கள் ஒன்றும் விளங்காது மூடுமந்திரங்களாகவே நின்றன. உபநிடதக் காலத்திலேகூட ரகசியஞாநத்தினுட் புகுதற்கு அகவழிச்செல்வோர் தியாநத்தையும் தீக்ஷையையும் நாடவேண்டியதாயிற்று. பின்னர்ப்

புலவர்கள் செய்வது இன்னது எனத் தெரியாது கலங்கினர்; ஊகித்தலையே உபாயமாய் அடுத்தனர்; மனத்தைக்கொண்டு பொருள் விளக்கத்தின்பொருட்டுத் தீவிரத் தியாநத்தில் ஆழ்ந்தனர்; புராணக் கதைகளைக்கொண்டும் 'ப்ராஹ்மண' கிரந்தங்களில் காணும் கதைகளையடுத்தும் பொருள்விளக்கம் தேடினர்; 'ப்ராஹ்மண'ங்களிலுள்ள கதைகளே கூடப்பொருள் தாங்கிய ஸங்கேதங்களின் தொடர்புற்று மங்கி நிற்பன. இங்ஙனமெல்லாம் இருப்பினும் இதனைக் கண்டுபிடித்தல் ஒன்றே வேதத்தின் உண்மைக் கருத்தினையும் உண்மை மதிப்பையும் அறிதற்கு வழி. நாம் 'யாஸ்கர்' குறிக்கும் சூசனையை ஊக்கத்துடன் பிடித்துக்கொள்ள வேண்டும்; வேதத்துப் பொருளடக்கத்தைக் குறித்து 'மந்திர திருஷ்டி'கள், 'தரிசன ஞாநங்கள்' ('கவிக்ரது:, காவ்யா நிவசநாநி') என்றும், 'தரிசந வசநங்கள்' என்றும் ரிஷி வருணிப்பதையும் ஏற்கவேண்டும்; இப்புராதந ஞாநத்திற்கு வழிகாட்டியாம் உபாயம் யாதாயிருப்பினும், அதனைத் தேடிப் பார்க்க வேண்டும். இன்றேல், வேதம் முத்திரையிட்டு மூடித் திறக்கக் கூடாத நூலாய் எப்போதும் நின்றுபோம். இலக்கண வித்துவான்கள், சொல்லிலக்கணப் புலவர்கள் இவர்கள்தம் புலமையான் ஆய ஊகங்கள் எல்லாம் பூட்டித் தாளிட்ட அறையைத் திறக்கா.

மறைபொருளும் மறையோர்அறிவும் 'வேத ரிக்கு'களில் பொதிந்துளவெனும் ஐதிகம், வேதம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையான தென்பது உண்மை. மேலே ஒளிந்துள்ள உயர் ஞான(சித்து) நிலைகளினின்று 'மந்த்ர'ங்கள் அருளாவேசத்தால் பெறப்பட்டனவென்றும், அவற்றில் இந்தக் 'கூடஞாநம்' அடங்கியுள்ளதென்றும் வேதரிஷிகள் விசுவஸித்தனர். வேதபதங்களின் உண்மைப்பொருளை அறியக்கூடியவன்தானே தத்துவதரிசி (ரிஷி)யாகவோ, கூடவேதியனாகவோ இருத்தல் வேண்டும். இருக்கு வேதத்தில் நான்காம் மண்டலத்தில் 'வாமதேவ ஸூக்தங்'களொன்றில் வழிகாட்டும் உபதேசவாக்குகளை மனமொழி வாயிலாய் வெளிப்படுத்தும் பிரகாசம் பெற்றவராக ரிஷி தம்மைக் கூறிக்கொள்கிறார். அவை கூடமான வாக்குகள். 'நிண்யா வசாம்ஸி' - காண்போனாகிய கவிக்குத் தம் உட்கருத்தினைக் கூறும் தரிசன

ஞாநங்கள், 'காவ்யாநி கவயே நிவசநா' - தேவர்கள் அனைவரும் அமர்ந்துள்ள அக்ஷரமாம் அழிவிலாப் பரமாகாசத்தில் வேத 'மந்த்ர'ங்களாய ரிக்குகளின் இருப்பிடம் என்று ரிஷி 'தீர்க்கதமஸ்' என்பார் பகர்ந்துள்ளார். அன்றியும், அதனை அறியாதான் 'இருக்கை' வைத்துக்கொண்டு செய்வது என்ன? என்கின்றார் அவ்விருடி (I. 164, 39). மற்றொன்றும் குறித்துள்ளார் அவர். நான்கு நிலைகளினின்று வாக்கு உதித்து வெளியாகின்றது. அவற்றுள் மூன்று ரகசியத்தில் மறைந்துள. நான்காம் நிலையைச் சார்ந்ததே மானிடவாக்கு. அதனினின்று வெளியாவதே சாமாநிய மொழி. ஆனால் வேதத்தில் கருத்தும் சொல்லும் மேல்நிலைகளை (பூமிகைகளை)ச் சார்ந்தவை (I. 164.46.) ரிக்வேதத்தில் மற்றோரிடத்தில் (X.71) வேதவாக்கு பரமமாய்த் தலைசிறந்த மொழி என்றும், மேன்மை தாங்கிய வழுவில்லாத உத்தமவாக்கென்றும் வருணிக்கப்பட்டுள்ளது. அஃது இன்னதெனச் சொல்ல இயலாது, மறைவில் ஒளிந்திருந்து, அங்கிருந்து புறம்வந்து வெளிப்பாடு பெறுகின்றது. அது ஸத்தியதரிசிகளாய ரிஷிகளினுட் புகுந்தது. அவர்களுடைய மொழிவழியை அடுத்துச் செல்வதால் அதனைக் கண்டுகொள்ளலாம். ஆனால் எல்லோரும் அதன் கூடார்த்தத்தினுட் புக வல்லோரல்லர். அதன் உட்கருத்தினை அறியாதார் கண்டும் காணாதார்; கேட்டும் கேளாதார். அழகிய ஆடை பூண்ட மனைவி தன்னுடலைக் கணவனுக்கு ஒப்புவிப்பது போல், அவ்வாக்கு எங்காவது ஒருவனை விரும்பி அவனுக்குத் தன் கருத்தின் அகத்தை வெளியாய்க் காட்டிக்கொடுக்கும். வேதத்தில் 'கோ' என்று வழங்கும் இவ் 'வாக்கு' ஆகிய ஆவின் அமுதத்தைப் பருக இயலாதவர்கள் பால்கொடாத ஆவின்பின் செல்வதுபோல் அவனுடன் அசைவர். அத்தகையோருக்கு (வேத) வாக்கு என்பது மலரும் கனியும் இன்றிய மரம் போன்றதென்க. இவ்வுண்மை முற்றிலும் தெளிவாயது, திட்டமாகியது. இதனினின்று தேறியது என்னை? இருக்குவேதம் ஓத எழுதும்போதே இருக்குகள் அனைவருக்கும் வெள்ளிடையாகாக் கூடக்கருத்துடையன எனப் பாராட்டப்பட்டது என்பது ஐயமற்ற விஷயம். பாவனமான 'ஸூக்தங்'களில் கூடவித்தையும் அகத்தறிவும் உள்ளன. இவ்வறிவாற்றான் ஒருவன் உண்மையறிந்து உயர்ந்த நிலைக்கு எழக்கூடும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த நம்பிக்கை

பிற்பட்டுவந்த ஐதிகமன்று; ஒருகால் அனைவரும் இந்நம்பிக்கையுடையோராய் இருந்திருக்கலாம். 'தீர்க்கதமஸ் வாமதேவர்' போன்ற சில மிகப்பெரிய ரிஷிகள் இந்நம்பிக்கையுடையோரென்பது மட்டும் வெள்ளிடை.

ஆகையால், ஐதிகம் இருந்தது, வேதகாலத்திற்குப் பின்னரும் தொடர்ந்து வந்தது. வேதவிளக்கம் பற்றி எழுந்த பல பக்ஷங்களை 'யாஸ்கர்' குறிப்பிடுகிறார். வேள்வி விதிக்கேற்ப, வேதத்தை விளக்க முற்பட்டோர் வேள்வியர் (யாஜ்ஞிகர்); இதிஹாஸமெனும் புராணக் கதை வரலாறுகளான் வேதவுரை கூறுவர் ஒருசாரார் (ஐதிஹாஸிகர்); இலக்கணிகளும் சொல்லிலக்கணத்து ஈடுபட்டோரும் சொல்லமைப்பைக் கொண்டு வேதவிளக்கம் தேடுவோராவர் (நைருக்தர்); அகமுகமாய் நின்ற யுக்திவாதிகள் ஆத்துமபக்ஷமாய் வேதவிளக்கம் நாடுவர் (அத்தியாத்தும வாதிகள்). ஞாநம் மூவகைத்தென்றும், 'வேத ஸூக்தங்'களின் பொருளும் மூவகைத்தென்றும், அது 'யஜ்ஞ' பரமான ஞாநம் - 'தேவதா'பரமான ஞாநம் - 'ஆத்ம'பரமான ஞாநம் - என்றும் 'யாஸ்கரே' கூறுகின்றனர். ஆனால் கடைசியில் கூறியதுதான் உண்மைக் கருத்து. அது கிட்டுங்கால் ஏனைய கருத்துக்கள் நழுவிவிடும்; இன்றேல், வெட்டுண்டுபோம். இந்த அகமுக (அத்தியாத்தும)மான கருத்துத்தான் காக்கும். மற்றவை புறத்தவை, தாழ்ந்தவை. அன்றியும் கூறுகிறார் 'யாஸ்கர்': "ரிஷிகள் ஸத்தியத்தைக் கண்டனர்; வஸ்துக்களின் ஸத்திய தருமத்தைக் கண்டனர்; உட்பார்வையால் நேரில் பார்த்தனர்." பின்னர் வேதத்தின் உட்கருத்தும் ஞாநமும் பெரும்பாலும் நட்டமாயின. அவ்வாறான பின்னரும் உண்மையறிந்திருந்த ரிஷிகள் சிஷ்யர்களுக்குத் தீக்ஷையளித்து அதன் மூலமாய்க் காக்கவேண்டியதாயிற்று; கடைசியான தசையில் மனத்தைக் கருவியாய்க் கொண்டு 'நிருக்தம் வேதாங்கங்கள்' போன்ற புறச்சாதநங்களை உபயோகிக்க வேண்டியதாயிற்று. அப்போதும்கூட "வேதத்தின் உண்மைக்கருத்தினை நேராய்த் திரும்பப்பெறல் தவத்தாலும் தியாநத்தாலுமே இயலும்" என்கிறார் அந்நிருக்த நூலாசிரியர் 'யாஸ்கர்.' இவ்வரிய சாதநங்களை (தவம்தியானங்களை)க் கையாள இயன்றோர்க்கும் புறம்பாயுள்ள

உதவிகள் தேவையில்லை. இவ்விஷயமும் திண்ணம்; வேண்டிய அளவு வெள்ளிடையே.

பரதகண்டத்தின் நாகரிகம், அதன் சமயம் (தருமம்), தரிசந சாத்திரம் (தத்துவநூல்), பண்பாடு - இவற்றிற்கெல்லாம் மூலமாயுள்ளது வேதத்தில் கூடமாயுள்ள ரகசியாம்சம். இந்த ஐதிகம் 'வரலாற்'றுண்மையுடன்(சரித்திரத்தோடு) ஒத்துள்ளது. இதனைப் பழிக்கும் ஐரோப்பியக் கருத்தோடு அங்ஙனம் ஒவ்வாது. பதிதொன்பதாம் நூற்றாண்டைய ஐரோப்பியப்புலமை எழுத்தில் வெளிவந்த காலம், 'லோகாயதம் பௌதிகவிஞாநம்' இவற்றின் தொடர்புற்ற 'பிரத்தியக்ஷ' வாதமானது ஓங்கிவளர்ந்த காலம். அது மானிடவர்க்கத்தின் வரலாற்றைப் பாராட்டிய விதம் யாதெனின், அறிக: ஒரு மலர்ச்சியுமில்லாத ஆதிகாலம் என்பது நாகரிகம் இல்லாதது, அல்லது அரைகுறையானது; காட்டுமிராண்டித்தனமும், ஒழுங்கின்றி முரட்டுத்தனமான சமூகவாழ்வும் சமயதருமமும் மூடநம்பிக்கைகளின் குவியலும் ஆம். இந்நிலையினின்று காலப்போக்கில், புத்தி, ஆய்ந்துபார்க்கும் யுக்தி, கலை, தத்துவம், சாத்திரம் (பௌதிகம் விஞாநம்), தெளிவாயும் நேர்த்தியாயுமுள்ள யதார்த்த (கண்ட பொருளைக் கண்டபடி கொள்ளும்) புத்தி - இவையெல்லாம் வளர்ந்தன. இவ்வளர்ச்சியான் ஏற்பட்டவை புறவாழ்க்கையில் நாகரிக ஸ்தாபனங்கள், பழக்கவழக்கங்கள் ஆம். இவற்றின் வாயிலாகப் பக்குவமாயது, மானிடவர்க்கம். வேதத்தைப் பற்றிய பண்டைக் கொள்கை மேற்கண்ட சித்திரத்துடன் ஒவ்வாது. அது (வேதத்தைக் குறித்த நம் பண்டைக் கொள்கை) பழைய மூடத்தனமான அபிப்பிராயங்களின் ஒரு பகுதி. அங்ஙனம் கொள்ளல் (ஞான சூனியமான) ஆதிகாலத்திய தப்பிதம். இதுவே மேனாட்டுக் கலைஞர்களின் அக்காலக் கொள்கை. ஆனால், தற்போது நாம் மானிடவர்க்க வளர்ச்சியைப் பற்றி இன்னமும் திட்டமான அபிப்பிராயம் கொள்ளக்கூடும். மிகவும் ஆதிகாலத்திய பழைய நாகரிகங்கள் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சிக்கு வேண்டிய அம்சங்களைத் தம்முள் தாங்கப்பெற்றிருந்தன. ஆனால் அவற்றில் முதற்றோன்றிய அறிஞர்கள் பௌதிகவிஞ்ஞானிகளல்லர்; தத்துவக்கலைஞரும் அல்லர்; உயர்ந்த புத்திக்கூர்மையானாய அறிவாளருமல்லர்; ஆனால்,

'மறையோர்' - மர்மமனிதர் எனலாம். ரகசியக் கலையுடையோர், சமயதருமம் தேடிப் பேணுவோர், பொருள்களுக்கப்பால் பின்னர் மறைந்துள்ள ஸத்தியத்தை நாடுவோர் எனுமிவர்கள் புறத்தில் ஞாநத்தினைத் தேடினாரல்லர். பௌதிகவிஞ்ஞானிகளும் தத்துவவிசாரிகளும் பின்னர்த் தோன்றினர். அவர்களுக்கு முன்னர் இருந்தோர் 'மறையோர்' - ரகசிய ஞாநிகள். பின்னர்த் தோன்றிய தத்துவக்கலைஞரும்கூட, 'பைதாகொரஸ்' 'ப்ளேடோ' இவர்களைப் போல் பெரும்பாலும் தாமும் ஓரளவு ரகசியஞானிகளே ஆவர், அல்லது அவர்கள்தம் கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்களே ஆவார். பரதகண்டத்தில் தத்துவசாத்திரம் 'மறையோரின்' நாட்டத்தினின்று விளைந்தது. அஃது அவர்தம் ஆத்துமார்த்த லக்ஷியங்களை வைத்துக்கொண்டுதான், அவர்தம் வழிமுறைகளில் ஓரளவு பிற்றைக்காலத்து யோகசாதனையிலும் ஆத்துமார்த்தப் பயிற்சியிலும் வளர்ச்சி காணக்கூடியதாகக் காத்து வைத்தது. வேதத்தைப் பற்றிய ஐதிகம், வேதத்தில் மறைபொருள் உளதெனும் உண்மை, இச்சரித்திரவுண்மையோடு முற்றிலும் ஒத்து, பாரதபூமியின் 'பண்பாட்டு' வரலாற்றில் தனக்குரியதோரிடம் பெற்றுள்ளது. வேதம் கேவலம் அநாகரிகமான வேள்விநூலாக இல்லாது, இந்தியநாகரிகத்திற்கே அடிகோலியது எனும் ஐதிகம் வெறும் ஐதிகமன்று; அதனினும் மிகுந்தது. அது சரித்திரத்தில் நடந்த உண்மை.

ஆனால், உயர்ந்த ஆத்துமசம்பந்தமான ஞாநாம்சமோ உயர்ந்த கருத்துக்களடங்கிய வாக்கியங்களோ சில 'ஸூக்தங்'களில் காணப்பட்டாலும், அவை ஒருகால் சிறிதளவேயாம் என்று எண்ணக் கூடும். ஏனெனில், ஏனைய 'ஸூக்தங்'கள் அனைத்தும் வேள்விநூல், பிரார்த்தனை முறைகள்; வேள்வி நடத்தி முடிப்போருக்கு ஏராளமான இம்மைச்செல்வங்களைப் பொழிதற்பொருட்டுத் தேவர்களைத் தூண்டும் துதிகள்; ஆக்கள் (கோ), குதிரைகள் (அச்வம்), வீரர்கள், பிரஜை (சந்ததி), அன்னம், பல்வகைச் செல்வம், காப்பு, போரில் வெற்றி முதலியவற்றைப் பெறுவதற்கான ஸ்துதிகள்; இன்றேல், வானுலகினின்று மழை வருவிக்கவும், மேகங்களினின்றோ இரவின் பிடியினின்றோ சூரியனை மீட்டுப்பெறவும், ஏழு ஆறுகள் (ஸப்த

ஸிந்து) தங்குதடையின்றிப் பாய்ந்தோடுதற்காகவும், 'தஸ்யுக்' களினின்று அல்லது திராவிடர்களினின்று பசுக்களை மீண்டும் பெறுதற் பொருட்டும், மற்றும் ஏனைய பேறுகளின் பொருட்டும் ஆக்கப்பட்ட துதிகளாம். இவையெல்லாம்தாம் மேல்வாரியாய்ப் பார்க்குங்கால் 'கரும' வழிபாட்டின் நோக்கம் எனக் காணும். அவ்வாறாயின், ரிஷிகள் ஓரளவு அகவறிவும் மறைப்பொருள்ஞாநமும் உடையோராயிருந்திருப்பினும், அக்காலத்திற்கு ஏற்ற மக்களின் சாமானியக் கொள்கைகளின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாகவே இருந்திருத்தல் வேண்டும். இவ்விரண்டு அம்சங்களையும் வேத 'ஸூக்தங்' களில் நெருங்கச் சேர்த்திருத்தல் வேண்டும். சிறிதளவேனும் இதனால்தான் சம்பிரதாயப்படி வந்த வேதவிளக்கவுரை நமக்களிக்கும் விந்தையும், விபரீதமும், குழப்பமும், மங்கலும் ஏற்பட்டன எனலாம். ஆனால், அவ்வாறின்றி, வேதத்தில் உன்னதமான விசாரம் பேரளவில் தெளிவாய்க் காணுமாயின், ரகசியத்தன்மையையும் ரகசியக்கருத்தையும் தவிர்த்து வேறு எவ்வண்ணமும் பொருள்படா 'ஸூக்தங்'களும் மந்திரங்களும் பெருவாரியாக இருக்குமாயின், அன்றியும் இறுதியாகக் கருமவிதிகளைச் சேர்ந்த புறம்பாயுள்ள விவரமான அம்சங்கள் 'மறையோர்' கையாளும் உட்பொருள் கொண்ட 'ஸங்கேதங்'களாய் அடிக்கடி காணுமாயின், அன்றியும் அத்தகைய ரகசியக்கருத்தைக் குறித்துத் தெளிவாய்ப் பிரபல குறிப்புக்களும் வெளிப்படையாகச் சில கூற்றுக்களும் 'ஸூக்தங்'களிலே இருக்குமாயின், அப்போது (மேற்கூறிய விகற்பங்கள்) அனைத்தும் மாறிப்போம் (மாறுங்கால்) 'மறைஞானி' களின் இரட்டைப்பொருள் கொண்ட மாபேர்அறநூலின் ஸந்நிதியில் நிற்போம். அதன்கண் ஒன்று புறப்பொருள், ஏனையது மர்மப்பொருள். ரகசிய போதனையிலும் கூடமான ஞாநத்திலும் 'ஸங்கேதங்'களுக்கு அமைந்த பொருளே உட்கருத்துக் குறிப்பின் ஒரு பகுதி. இருக்குவேதம் முழுதும், ஒருகால் சில 'ஸூக்தங்' களைத் தவிர்த்து உட்பொருள் கொண்டதாம் அத்தகைய அறநூல். இஃது இங்ஙனம் இருப்பினும், புறப்பொருள் மறைத்தற்கேற்ற வெறும் போர்வையாகவே இருத்தல்வேண்டும் என்பதில்லை. இருக்குகளைக் கண்டுரைத்தோராகிய அவ்வாசிரியர்கள் அவற்றைச் சக்தியுடைய

சொற்களாகவும் அகவிஷயங்களில் மட்டுமன்றிப் புறவிஷயங்களிலும் ஆற்றல் வாய்ந்தனவாகவும் கருதியிருக்கலாம். கேவலம் ஆத்துமார்த்தமாம் அறநூல் அகத்தே அறப்பொருள்களில் மட்டும் ஈடுபடும். ஆனால் பண்டைக்காலத்து மறைமரபினர் நாம் தற்போது கூறும் ரகசியதந்திரிகளும் (தாந்திரிகர், சித்தர்) ஆவர். அதாவது, அவர்கள் உட்சாதனத்தைக் கொண்டு அகத்தேயும் புறத்தேயும் காரியங்களைச் சாதிக்க இயலுமென்றும், வேதத்தில் சாதாரணமாய்க் குறிக்கப்படும் தைவம் மானுஷம் எனும் இருவகைப் பொருளும் எவ்வகையாலும் சித்திக்குமாறு மனமொழிகளைப் பிரயோகிக்கக் கூடுமென்றும் துணிபு கொண்டனர்.

இஃது இங்ஙனமாக. வேதத்தில் இவ்வுட்பொருள் கொண்ட சரக்கு யாண்டுளது? ரிஷிகள் கையாண்ட முறைகளுக்கும் பதங்களுக்கும் மாறுதலில்லாமல் நிரந்தரமாய் நேர்மையான பொருள்களைக் கண்டு கூறுவோமாயின், சிறப்பாக அவர்கள்தம் கோட்பாடாம் கட்டிடத்திற்கு மையக்கல் போன்றுள்ளனவும் மறைப்பூட்டுத் திறவுகோல் போன்றனவுமாய சொற்களுக்கு நேர்பொருளை ஒரேவகையில் கையாளுவோமாயின், அந்த உட்பொருட் சாமக்கிரியையினை கண்டு பிடிக்கலாம். அத்தகையதொரு சொல் 'ரிதம்' (உண்மை) எனும் மாபெரும்பதம். அம் 'மறையோர்' நாடிய முக்கியப்பொருள் உண்மை, நம்மைப் பற்றிய உண்மை, பொருள்களின் (வஸ்துக்களின்) உண்மை, உலகத்தின் உண்மை, தேவர்களின் உண்மை, நம்மிருப்பு அனைத்திற்கும் பொருள்கள் அனைத்திற்கும் பின்புறம் தங்கிநிற்கும் உண்மை. கருமபரமான வேதப்பொருள் விளக்கப்படி வேதவித்தையிலே தலைசிறந்த சொல்லாகிய இது (ரிதம்) பல்வகைப் பொருள்பட்டு விளங்கியுள்ளது. உரையாசிரியர் மனோபாவப்படி வாட்டமாயிருப்பின் இந்த 'ரிதம்' என்ற ஒரு பதம் 'உண்மை' 'வேள்வி' 'நீர்' 'சென்றுள்ளவன்' 'அன்னம்' என்றுகூடப் பொருள்படும்; இன்னும் பல பொருள்கள் கொள்ளுமெனச் சொல்வது அவசியமில்லை. இவ்வாறு வேதத்தைக் கையாளுவோமாயின் நிச்சயம் ஏதும் ஏற்பட்டு நில்லாது. ஆனால் நாம் ஒரே ரீதியாய் ஒப்புரவு இருக்குமாறு அவ்வொரு தலைசிறந்த பொருளையே கூறுவோமாயின் என்ன

ஆகின்றது? ஒரு விசித்திரமான பலன், அதனிலும் தெளிவாம் முடிபு தேறுகின்றது. வேதத்தில் நிலையாய் நின்றுள்ள முக்கியமான சொற்களை ஓராற்றான் ஆதரிப்போமாயின், அவற்றிற்குச் சாதாரணமானவையும் இயல்பானவையும் நேர்மையானவையுமாயின பொருள்களைக் கூறுவோமாயின், பொருள்கூறுமிடத்து விகடக்குறும்பு செய்யாமல் இடைவிடாது ஒத்திருக்கும் வகையில் வெறும் கருமபரமாகச் சொற்களைத் திரிக்காமல் இருப்பின், 'ச்ரவஸ்' 'க்ரது' இவை போன்ற பதங்களுக்கு அகக்கருவித் தொடர்புற்ற (அந்தக்கரண சம்பந்தமான) பொருள்களை ஏற்போமாயின், மேற்கூறிய பலன் மிக விரிவாயும் தெளிவாயும் வியாபகமாயும் விளங்கும். ஏனெனில், அந்தக்கரணத் தொடர்புற்ற பொருளை ஏற்க இயன்றனவே அச்சொற்கள். வேதம் 'அக்னியை' 'க்ரதுர் ஹ்ருதி' (இதயத்தில் அறிவு) என்று வருணிக்கும்போது, இத்தகைய வாக்கியம் ஐயமற உட்பொருளையே ஏற்கும் என்க. இத்துடன் ஏராளமாய்க் காணும் குறிப்புக்களை நாம் அடுத்து நோக்கின், ரிஷிகள் சிலபோது ஸங்கேதங்களின் உட்பொருளை வெளிப்படையாய்க் கூறும் கூற்றைக் கவனிப்பின், அவர்கள் அடிக்கடி கையாளுகின்ற உட்பொருளுடைய கதைகளையும் உருவகங்களையும் அகக்கருத்தின்படியே நாம் விளக்கின், விருத்திரர்களுடன் போர், விருத்திரன்மீது வெற்றி, அவன்தன் ஆற்றல்கள், கதிரவன் - நீர் - கோக்கள் - இவற்றைப் பணிகளினின்றோ தஸ்யுக்களினின்றோ மீண்டும் பெறுதல், இவற்றையெல்லாம் உட்கருத்தின்படி விளக்கின், ரிக்வேதம் முற்றிலுமே அந்தரங்கமாயும் ரகசியமாயும் ஆத்துமார்த்தமாயுமுள்ள அனுஷ்டான ஸித்தாந்தங்களின் ராசியாக வெளியாம். இவை போன்ற மறைக்கோட்பாடுகளையும் சாதனைகளையும் பண்டை நாடுகளில் எங்காயினும்கூட வேதியர் அளித்திருக்கலாம். ஆனால் இந்தியநாட்டில் மட்டுமே அவை வேதத்தில் இதுகாறும் மீண்டு கண்கூடாக நீடித்து வந்துள்ளன. அவை திரைமறைவில் வேண்டுமென்று கருதியே ஒளிக்கப்பட்டுள்ளன. ஆனால் அத்திரைமட்டும் நாம் எண்ணுவது போல் அவ்வளவு கனமானதன்று. நாம் கண்களை உபயோகித்தல்தான் வேண்டும்; திரை மாயமாகிப் போம். வாக்கினுடைய சரீரமாயுள்ள ஸத்தியம் நம் முன்னிலையில் நிற்கும்.

வேதத்தில் பல வாக்கியங்கள், பல முழு 'ஸூக்தங்' களுமே கூடப்பொருளுடையனவாக முகப்பிலேயே காண்கின்றன. அவையனைத்தும் கூடவடிவங்கொண்ட மொழி; உட்கருத்துடையன. இது வெள்ளிடை. ரிஷி அக்னியைக் குறித்துச் "சோதியனாய் ஸத்தியத்தைக் காப்போன்தன் இல்லத்தில் ஒளிர்கின்றவன்" என்றுரைக்கும்போதும், மித்திரனையும் வருணனையும் ஏனைய தேவர்களையும் குறித்து 'ஸத்தியத்தின் பரிசமுற்று ஸத்தியத்தை வளர்த்துபவர்' அல்லது 'ஸத்தியத்தில் பிறந்தோர்' என்று கூறும்போதும், இச்சொற்கள் மர்மக்கவியின் வாக்குகள். ரிஷி வஸ்துக்களின் பின்புறம் மறைந்துநிற்கும் உண்மையைத் தியானிக்கின்றார். அதனையே நாடினர் பண்டைக்கால ரிஷிகள். இங்ஙனம் ரிஷி கூறுங்கால், அக்னி என்றால் பஞ்சபூதங்களில் ஒன்றாம் அனலைக் காக்கும் இயற்கைஆற்றலையோ வேள்வியில் வளர்த்தும் அக்னியையோ கருதினார்அல்லர். அல்லது, "ஸரஸ்வதி ஸத்திய வாக்குகளை ஏவுபவள்; நேரான சிந்தனைகளில் விழிப்புறுபவள்; புத்திச்செல்வம் மிக்கவள். ஸரஸ்வதி உணர்வினில் (சித்து) விழிப்புற்று நாம் மகத்தான ஸமுத்திரத்தை உணருமாறு சாதிப்பவள்; நம் சிந்தனைகள் அனைத்தினையும் விளக்கம் பெறச் செய்பவள்" என்று ரிஷி மொழிகிறார். இங்கு அவர் ஸரஸ்வதிநதியை இங்ஙனம் துதிக்கின்றார்அல்லர்; திண்ணம்; ஓர் ஆவேசஆற்றலை - சம்மதமாயின் ஆவேசப்பெருக்கு, நதி என்க - ஸத்தியத்தின் வாக்கினை, நம் மதிகளுக்குத் தன் ஒளியளிப்பதும் நம்மில் அவ்வுண்மையையும் ஓர் உள்ளறிவையும் நிர்மாணிப்பதுமான ஸத்தியவாக்கினைத் துதிக்கின்றார். (ரிஷிகளின் மந்த்ரங்களில்) தேவர்கள் இடைவிடாது அகக்கருவி (அந்தக்கரண)த்தொழில் புரிவோராய் விளங்குகின்றனர். உள்வேலைக்குப் புறத்தே ஸங்கேதமாய் நின்றது வேள்வி. மானவருக்கும் வானவருக்கும் இடையே அகத்தே நடைபெறும் கொடுக்கல் வாங்கல் அது - மனிதன் தன்னிடம் உள்ளதை தேவர்க்களித்தல், தேவர்களும் மனிதனுக்குத் திருப்பிக் கொடுத்தல். சக்திவேகக்குறியான 'அசுவங்'கள், ஒளிக்குவியற் குறியான 'கோ'க்கள், மனிதனுக்குக் காப்பாயுள்ள வீரியக்குறியான பரிவார வீரர்கள், பேரிருளாம் 'விருத்திரர்'களையும் 'தஸ்யுக்'களையும் 'பணி'களையும் போர்முனையில் தாக்கி அவர்மீது

வெற்றி - இவற்றை யளிப்போர் தேவர். "மனிதர்க்கு அதீதமானதொரு வலியுடைய வாக்கினாலாவது, போர்க்குதிரையினாலாவது நாம் உணர்வுறுவோமாக" என்று ரிஷி கூறுங்கால், அவர்தம் இச்சொற்களுக்குக் மறைமுகக்கருத்து இருத்தல்வேண்டும்; இன்றேல், பொருத்தமுடைய பொருள் யாதும் இலதேயாம். இந்நூலில் மொழிபெயர்த்துள்ள பாகங்களில் கூடார்த்தமுள்ள பாக்கள் பல உள; அவ்வாறே முழு 'ஸூக்த'ங்களும் உள. அவை எவ்வளவு கூடமாயிருப்பினும், வேதத்தின் உண்மைக்கருத்தினை மறைக்கும் வெளிவேள்வி உருவகத்திரையைப் பீறித் தள்ளுகின்றன. ரிஷி கூறுகிறார்: "மாபெரு வானுலகில் அமரர்களினிடத்தே மானிடப்பொருள்களை நம்பொருட்டாகப் போஷிக்கின்றது மதி. அதுவே பல்லுருவங்கொண்ட செல்வத்தைத் தானே கறக்கும் கறவைப்பசு." செல்வம் பலவகைத்து – ஆக்கள், குதிரைகள், வேள்விபுரிவோன் வேண்டும் மற்றவை. இது வெள்ளிடை. இது இம்மைச் செல்வம் அன்று; வேறு யாதோ ஒன்று. 'மந்த்ர' சரீரத்தில் அடங்கி மிளிரும் மதி அதனைக் கொணர்ந்தளிக்க வல்லது. மாபெரு விண்ணுலகில் அமரர்களிடத்தே மானிடப்பொருள்களை நம்பொருட்டுப் போஷிப்பதாய மதியின் விளைவே அது. தைவிக வுருவாக்கும் ஒரு(சாதனை) முறை – ஒளிவீசும் பெருஞ்செல்வங்களை, வேள்வியெனும் உட்சாதனையால் தேவரிடமிருந்து வரப்பெற்ற நிதிகளை, இங்கு இறக்கிக்கொணர்ந்து அளித்தற்கு ஏற்ற முறை – மேற்கூறிய உதாரணச்சொற்களில் சூசனையாகக் காட்டப்பட்டுள்ளது. இவை கூடமாக இருத்தல் இன்றிமையாதது ஆயினும், இம்மறைச்சொற்கள் 'நிண்யா வசாம்ஸி' (ரகசியமான வசனங்கள்) படித்தறிவோனுக்குப் போதுமான அளவு விளக்க முற்றனவாம். 'கவயே நிவசநா'. அன்றியும், இரவும் விடியற்காலமும் (ராத்ரி, உஷஸ்) நித்திய சகோதரிகள் "நாம் சாதித்து முடித்த கருமங்களாம் தார்நூலை வேள்விவடிவமாய் நெசவுசெய்து மகிழ்வுறும் நெசவுக்காரப் பெண்டிர் போன்றவர்கள்." மறுபடியும் கூடமான வடிவமும் கருத்தும் கொண்ட சொற்கள்! வேள்வியின் தன்மை அகக்கருவித்தொடர்பு உற்றது (அகத்தே நடைபெறுவது) என்பதற்கு இதனினும் உறுதியான கூற்றைக் காண்டல் அரிது. அவ்வண்ணமே 'கோ' (ஆ)வின் உண்மைப்பொருள், நாடுகின்ற செல்வங்களாம் மாபெருநிதி விரிவுகளின் உட்கருத்தும் என்க.

ரகசியத்தைக் காக்கவேண்டியிருந்தமையின், பொருளை ஸங்கேதங்களாலும் ஸங்கேதச் சொற்களாலும் மூடிவைக்கத் தேவையிருந்தது, நெருக்கடியால். ரிஷிகள் இரட்டைப்பொருள்களை (சொற்களில்) நிலைநிறுத்த முற்பட்டனர். இந்த உபாயத்தை வடமொழியில் கையாளுதல் எளிது. யாங்கனமெனின், அதனில் ஒரு பதம் சாதாரணமாய்ப் பல்வேறு பொருள்களை ஏற்கும். அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் எளிதன்று; பல இடங்களில் இயலாது. இவ்வாற்றானே 'ஆ' வென்னும் சொல்லுக்கு வடசொல் 'கோ' என்பது. அதற்கு ஒளி அல்லது ஒளிக்கதிர் என்றும் பொருள். இது சில ரிஷிகளின் பெயர்களில் காணும்: 'கோதமர்' - சிறந்தொளிர்வோன், 'கவிஷ்டிரன்' ஒளியில் திரமாய் நிற்போன். வேதத்துக் 'கோ'க்கள் சூரியன்தன் கிரணக்குவியல் (கதிர்மந்தை). இங்ஙனம் ஆமந்தை என்பது 'கிரீக்க'வர்களின் புராதநக் கதைகளிலும் ரகசியங்களிலும் சாமாநியமாய் வழங்கும். அவை சோதியும் ஞானமும் ஸத்தியமுமாய சூரியன்தன் கிரணங்கள் ஆம். சில வாக்கியங்களில் தேறுகின்ற இப்பொருளை எல்லா இடங்களிலும் கருத்துப்பொருத்தம் பெறுமாறு உபயோகிக்கலாம். 'கிருதம்' என்னும் சொல்லுக்கு நெய் என்பது பொருள். அது வேள்விக்கருமத்திற்கு வேண்டிய முக்கியமான ஸாமக்கிரியைகளில் ஒன்று. ஆனால் 'கிருதம்' என்றால் பிரகாசம் என்றும் பொருள்படக்கூடும். 'க்ரு'(ஒளிர்தல்) எனும் பகுதியின் நின்றெழுந்த சொல் அது. அப்பொருள்கொண்டு பல வாக்கியங்களில் அதற்குப் பிரயோகம் உளது. விண்ணுலகத் தலைவனாம் இந்திரன்தன் குதிரைகள்(அசுவங்கள்) சோதியைச் சொட்டவிட்டுக்கொண்டிருப்பனவாக ('க்ருதஸ்நு') வருணிக்கப்பட்டுள்ளன.* இதற்குப் பொருள் அக்குதிரைகள் நெய்யைச் சொட்டவிடுவன என்று ஆகாது என்பது

---

* 'ஸாயணர்' பலவிடங்களில் 'க்ருத' பதத்திற்கு வெளிச்சம் என்று பொருள் உரைத்துள்ளாராயினும், இங்கு 'நீர்' என்று உரைத்தார். அந்த தைவக்குதிரைகள் மிகவும் களைத்துப் போய் ஏராளமாய் வியர்த்தன என்று அவர் நினைக்கின்றார் போலும். இயற்கை வாதத்திற்கேற்ப வியாக்கியானம் செய்பவன் ஒருவன் இங்ஙனம் வாதிக்கக்கூடும்: "இந்திரன் வானத் தெய்வம். ஆதலால் ஆதிகாலத்தில் யாதுமறியாத அந்தக் கவி மழை இந்திரன் குதிரைகளின் வியர்வை என்று நம்பியிருத்தல் வேண்டும்."

திண்ணம். ஆனால், வேள்விக்கு அசுவங்கள் வரும்போது தாநியத்தில் பங்குகொள்ள அழைக்கப்படுகின்றன. அவ்விடத்தில் 'க்ருதஸ்து' என்னும் இவ்வடைமொழி பொருந்துமாறு தோன்றும். சந்தேகமின்றிக் கேள்விச் சங்கேதமரபில் நெய் என்றும் பிரகாசம் என்றும் பொருள் இரட்டித்து 'க்ரு' தம் என்னும் ஒரு சொல்லில் அமைந்துள்ளது. மதியோ மதியை வெளிப்படுத்தும் மொழியோ உருக்கிய தூய வெண்ணெயோடு உவமிக்கப்பட்டுள்ளது. விளக்கம் பெற்ற மதி அல்லது அறிவு 'தியம் க்ருதாசீம்'. இது போன்ற மொழிகள் வழங்கியுள்ளன. இந்நூலில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள 'ஸூக்தங்'கள் ஒன்றில் ஒரு விந்தையான வாக்கியம் உளது. அதனில் வேள்விப் புரோகிதனாய அக்னிக்கு ஒரு காரியம் செய்தற்பொருட்டு அழைப்பு உளது. எதன்பொருட்டாக? நிவேதனமாம் 'ஹவிர்ப்பாகத்தை' க்ருதத்தை ஊற்றிக்கொண்டுள்ள மனத்தால் பெருக்கெடுத்துப் பாய்ச்சுதற்கும், அங்ஙனமே மூன்று 'ஸ்வர்க்கங்'களாம் ஸ்தாநங்கள் (இடங்கள் அல்லது பூமிகைகள்) ஒவ்வொன்றையும் வெளியாக்கித் தேவர்களையும் எழுந்தருளச் செய்தற் பொருட்டுமாம்+. ஆனால் நெய்யினை ஊற்றும் மநம் யாது? யாங்கனம் நெய்யூற்றுவதால் ஒரு புரோகிதன் தேவர்களையும் மூவகைச் சொர்க்கங்களையும் வெளிப்படுத்தல் இயலும்? ஆயினும், உள்ளடைவில் மறைந்துள்ள பொருள்களை ஏற்பின், கருத்து தெற்றெனத் தெளிவாகும். ரிஷி கருதுவது யாதெனின், 'ஒளியை ஊற்றுகின்ற' (பாய்ச்சுகின்ற) மனம் (நெய்யை அன்று), வெளிச்சமுற்றது அல்லது விளக்கேறியதான மநத்தெளிவானாய உழைப்பு என்றறிக. அவன் மானிடப்புரோகிதன் அல்லன்; அது வேள்வித்தீயும் அன்று. அது அகச்சுடர், மறையோனாய் உண்மைகண்டோன்தன் இச்சை, 'கவிக்ரது'. அத்தகையது இம் முறையான் தேவர்களையும் உலகங்களையும் ஆள்இருப்புக் கொண்ட நிலையங்களை(பூமிகைகளை)யும் வெளிப்பாடுறுமாறு செய்ய வல்லதேயாம். ஒரு விஷயம் நினைப்பில் இருத்தல் வேண்டும். ரிஷிகள் உண்மை காண்போர் மட்டுமல்லர்; முனிவர்களும் ஆவர். 'திருஷ்டி' (உட்பார்வை)யுடையோர், தியானத்தில் விஷயங்களை

+இந்த வாக்கியத்திற்கு 'ஸாயணர்' விளக்கும் உரை இது; நேராய்ப் பதங்களினின்று வெளியாவது.

(கருத்துக்களையும், உண்மைகளையும்) உருவகங்களில் கண்டனர். அங்ஙனம் காணும் உருவங்கள் உட்பொருள் பொதிந்த 'ஸங்கேத' வடிவங்கள். அவை அநுபவத்திற்கு முன்னரும் அல்லது அநுபவத்துடனும் காணலாம். அவர்கள் அதற்கு ஒரு கனத்த வடிவம் கொடுக்கலாம்; அது கிட்டுதற்கு முன்னரே அதனை எதிர்பார்க்கலாம்; அல்லது அதற்கு ஒரு கூடமான உடலையும் அளிக்கலாம். ஆனது பற்றியே, ரிஷி ஏககாலத்தில் இவ்வனைத்தினையும் காண இயன்றவர். உள்அநுபவத்தினையும், ஸங்கேதவடிவங்களில் அதன் நிகழ்ச்சியினையும், தெளிவுறுத்தும் ஒளிப் பெருக்கினையும், அநுபவத்தினைக் கொணர்ந்த உட்புறமான ஆத்துமநிவேதநத்தின்மீது நெய்யை (தெளிவாக்கும் ஒளியை) ஊற்றுகின்ற தேவபுரோகிதனையும், தெற்றெனத் தெரிந்துகொள்ளல் ரிஷிக்கு முற்றிலும் இயலும். இது மேனாட்டார் புத்திக்கு விந்தையாய்த் தோன்றும்; ஆயினும் இந்தியமரபில் பழகியதும், அல்லது தியானத்திலும் கூடதரிசனத்திலும் வல்லமை பெற்றதுமான இந்தியர்புத்திக்கு முற்றிலும் தெளிவாம். மறையோர் எப்போதும் வழக்கமாய் ஸங்கேத மரபினராயிருந்தவர், இருப்பவர். அவர்கள் பௌதிகவஸ்துக்கள் அனைத்தையும் நிகழ்ச்சிகளையும் உள்புறமான உண்மைகளுக்கும் உள்ளபடி உள்ளனவற்றிற்கும் 'ஸங்கே'தங்களாக (அறிகுறிகளாக)க் கூடப் பார்க்க வல்லவர்கள்; அங்ஙனமே தம்முடைய வெளிமுகமான ஆன்மாக்களையும் வாழ்க்கைப் புறநிகழ்ச்சிகளையும் தம்மைச் சூழ்ந்துள்ள அனைத்தையும் 'ஸங்கேத' ங்களாகக் காணக் கூடியவர்கள். ஆதலான் இது இன்னதென்று அறிந்து நிச்சயித்தலும் அல்லது ஒரு விஷயத்தை அதன் ஸங்கேதத்துடன் சம்பந்தப்படுத்தலும் அவர்களுக்கு எளிது ஆம்; அப்பழக்கமும் இயலும்.

வேதத்தில் நிலையாய் நின்ற மற்ற சொற்களுக்கும் சங்கேதங்களுக்கும் இவ்வாற்றானே கருத்துவிளக்கம் செய்தல் வேண்டும். வேதத்துக்'கோ' (ஆ) என்பது ஒளியின் ஸங்கேதம்; அங்ஙனமே 'அச்வம்' (குதிரை) அகப்புறமான பலம், தவசக்தி, ஆற்றல் - இவற்றுக்கு அறிகுறி. 'குதிரைவடிவம் கொண்டதும் பசு முன்புறமுள்ளதுமான கொடை'யை அருளுமாறு ரிஷி அக்னிபகவானை வேண்டும்போது, சில பசுக்களை முன்புறம் நடக்கவிட்டுச் செல்லும் குதிரையைத் தனக்குக் கொடுத்தருளுமாறு

வேண்டினார்அல்லர்; நிச்சயம் சோதியினால் நடத்தப்பட்டுச் செல்லும் பெரியதோர் அவசிய ஆற்றலைக் கோருகின்றார். இன்றேல், முன்பாகச் செல்லும் 'கிரணப்பசு' என்று நாம் மொழிபெயர்க்கலாம். *ஒரு ஸூக்தம் 'பணி' களினின்று கதிர்க்கூட்டங்களை (கோக்கள்-ஒளிரும் மந்தைகள்-கவ்யம்) மீட்டுப் பெறுதலை வருணிக்கின்றது. அவ்வாறே மற்றொரு ஸூக்தம் ஏராளமான குதிரைபலத்தை (அச்வ்யம்) அருளுமாறு அக்னியை வேண்டுகின்றது. இவ்விதமாகவே சிலபோது வீரர்களையோ போராட்களையோ கொடுக்குமாறு பிரார்த்திக்கின்றார் ரிஷி; சிலவேளை சங்கேதச்சொல்லின்றிப் பண்புப்பெயர் மொழியை நன்கு உபயோகித்து, நல்ல வீரபலத்தை 'ஸுவீர்யம்' என்றே கூறுகிறார்; சிலபோது ஸங்கேதத்தையும் அதன் பொருள்களையும் கூட்டிவிடுகிறார். அவ்வாறே ரிஷிகள் தாம் விரும்பும் செல்வத்தின் ஓர் அம்சமாகப் புதல்வனையோ புதல்வர்களையோ சந்தானத்தையோ (அபத்யம்) வேண்டித் தேவர்களைப் பிரார்த்திக்கின்றார்கள். ஆனால் இங்கும் ஓர் உட்கருத்தினைக் காணலாம். யாங்கனமெனின், சில வாக்கியங்களில் நமக்குப் பிறந்த புத்திரன் யாதோ ஓர் 'உட்பிறப்பின் உருவம்' என்று தெளிவாகிறது. அக்னிபகவானே நமது புத்திரன், நம் கருமங்களான் ஆய குழவி. உலகனைத்திலும் உள்ளுறையாம் (வைசுவாநரன்) இக்குழந்தை தந்தையர்க்கு எல்லாம் தந்தை. செவ்விய சந்ததியுடைய வஸ்துக்களில் படிகளைப் பதிய அமைத்தலால்தான் உயர்ந்த ஸத்தியவுலகிற்கு நாம் பாதையை உண்டுபண்ணக்கூடும் அல்லது கண்டுபிடிக்கக்கூடும். அன்றியும், வேதத்தில் 'அப்' (அப்பு, நீர்) என்பது ஸங்கேதமாய் வழங்கும் 'அசித்' (உணர்வின்மை)ஆம். சமுத்திரம் ('அப்ரகேதம் ஸலிலம்') என்று வேதம் கூறி, அதனில் தைவம் அமிழ்ந்துள்ளதாகவும், அதனின்று தானே தன் மகிமையால் பிறந்தான் என்றும் ஓதுகின்றது. மகாஸமுத்திரத்தைக் (மஹோ அர்ண:) குறித்தும் பேசுகிறது. அது மேலே உள்ள 'அப்புகள்' (நீர்கள்). அவற்றை நம்பொருட்டு உணர்வுற்றனவாகவோ, அவற்றை நாம்

---

* சோதியால் நடத்தப்பட்ட உயர்பெருமக்களான 'ஆர்ய'ரை விளக்கும் சொல்லுடன் இதனை ஒத்திட்டுக் காண்க. ஜ்யோதிர் அக்ரா .

உணருமாறோ ஸரஸ்வதி பண்ணுகிறாள் என்று ஒரு ஸூக்தம் சொல்லுகின்றது . இங்ஙனம் பண்ணுவதற்குச் சாதநமாயுள்ளது 'சுயபோதக்கதிர்' ('ப்ரசே தயதி கேதுநா'). 'ஸப்தஸிந்து' (ஏழு ஆறுகள்) வடநாட்டிலுள்ளனவாய்த்தோன்றுகின்றன. ஆனால் 'ஸ்வர்க்க' த்தினின்று பெருக்கெடுத்துப் பாயும் பெரிய எழுவர் ஸ்வர்க்கத்தியர் என்று வேதம் ஓதும். அவை 'அப்புகள்' (நீர்); அறிவுடையன; ஸத்திய ஞாநம் உடையன - 'ரிதஜ்ஞா'. அவை விடுதலை பெறுங்கால் நமக்கு மாபெரும் சொர்க்கத்திற்கு வழிகாட்டிக் கொடுக்கின்றனவாம். இவ்வாறே பராசரர், ஞானமும் எல்லா ஆயுளும் 'அப்பு' களின் இல்லத்தில் உள்ளனவென்று கூறுகின்றார். இந்திரன் விருத்திரனைக் கொன்று மழைக்கு விடுதலையளிக்கின்றான். ஆனால் இம்மழையும் 'ஸ்வர்க்க'த்து மழையாய், ஆறுகளைப் பாய்ந்தோடச் செய்கின்றது. இவ்வண்ணம் வேதத்தில் விரிவாய் இடம்பெற்றுள்ள 'அப்பு'களின் விடுதலைக்கதை 'ஸங்கேத' மரபினை ஒட்டிய புராணக்கதையாகவே காண்கிறது. இத்துடன் மற்றொரு கட்டுக்கதை ஸங்கேதப்பொருளுடைத்தாய் உள்ளது. மலையின் இருண்ட குகையினின்று தேவர்களும் ஆங்கிரஸ ரிஷிகளும், சூரியனையோ பசுக்களையோ சூரியன்தன் கதிர்க்கூட்டங்களையோ சூரியவுலகையோ- 'ஸ்வர்'- கண்டுபிடித்து மீட்கிறார்கள். சூரியனாம் ஸங்கேதம் எப்போதும் தவறாது பரஞ்சோதியோடும் ஸத்தியத்தோடும் சேர்ந்துள்ளது என்றறிக. தாழ்ந்த, ஸத்தியத்தால் ஒளிக்கப்பட்ட அந்த ஸத்தியத்தில்தான் சூரியன்தன் குதிரைகள் அவிழ்த்து விடப்படுகின்றன. நமது புத்திவிருத்திகளை (திய:) நன்கு தூண்டற் பொருட்டுக் 'காயத்திரி' மஹாமந்திரத்தில் பிரார்த்திக்கப்படுவோன் பரஞ்சோதியாம் இச்சூரியனே. இவ்விதமாகவே வேதத்தில் பகைவர்கள், ஆக்களைத் திருடும் கொள்ளைக்காரர்கள், 'தஸ்யுக்கள்' என்றும் அல்லது 'விருத்திரர்கள்' என்றும் கூறப்பட்டுள்ளனர். சொற்பொருள் பிரகாரம் இவர்கள் மானிடப்பகைவர் என்று சாதாரணமாய் விளக்கம் கொள்வர். ஆனால் விருத்திரன் ஓர் அசுரன்; சோதியையும் நீரையும் (அப்) ஆவரித்துக் கொண்டு பின் தங்குமாறு இட்டுக் கொள்கிறான். 'விருத்திரர்'கள் கொள்ளையடிப்போர் அல்லது பாழ்பண்ணுவோர். இருட்சக்திகள்,

சோதியையும் ஸத்தியத்தையும் நாடுவோர்க்கு எதிரிகள். வெளிப்படையாய்ப் புறம்பாயுள்ள பொருளினின்று உட்கருத்திற்கு நம்மை நடத்திச்செலுத்தும் குறிப்புக்கள் எப்போதும் காண்கின்றன.

'சூரிய சங்கேத'த்தைக் குறித்து ஐந்தாம் மண்டலத்து 'ஸூக்தம்' ஒன்றில் ஒரு 'ரிக்' உளது. மிகவும் குறிப்பிடற்பாற்று அது; குறிப்புப்பொருளுடைத்து. ஈண்டு அதனை எடுத்துக்காட்டுவோம். அது வேதக்கவிகளின் கம்பீரமும் கூடமுமான 'ஸங்கேத' மரபினைக் காட்டுவதோடு நில்லாமல், உபநிடதங்கள் கூறினோர் ரிக்வேதத்தை யாங்கனம் அறிந்துகொண்டனர், தம் முன்னோரின் அருளாவேச ஞாநத்தில் அவர்தம் நம்பிக்கை எங்ஙனம் நியாயமானது என்பதையும் நன்கு தெரிவித்து வேதவாக்கியம் கூறுகின்றது: "ஒரு ஸத்தியத்தான் மூடப்பட்ட ஸத்தியம் ஒன்றுளது. அங்குச் சூரியனுடைய அசுவங்களை அவிழ்க்கின்றனர். பத்துநூறுகள் ஒன்றாய் நின்றன. அவண் இருந்தது அவ்வொன்று.* உடல் ஏற்றுக்கொண்ட தேவர்களுள் மிகப்பெரிய (சிறந்த, மாட்சிமை பெற்ற)வனை நான் கண்டேன்." +வேதத்தினின்று" பெறப்பட்ட இக்கருத்தினை அல்லது இந்த ரகசியஅநுபவத்தினைப் பிற்கால நடையில் கருத்தை ஒளிக்காமல் நடுநாயகமான சூரியஸங்கேதத்தை விடாது நிறுத்திக்கொண்டே உபநிடதரிஷி எவ்வாறு எடுத்து ஓதுகின்றனர், அதனைக் குறிப்பாய்க் காண்க. அவ்வுபநிடத வாக்கியம் இது: "ஸத்தியத்தின் முகம் தங்கக்கலயத்தால் மூடப்பட்டுள்ளது, அதனை (மூடியை) ஸத்தியத்தின் தருமத்தை ++ தரிசிப்பதற்காக, ஓ 'பூஷனே' (போஷிப்பவன்), அகற்றிவிடு. அகற்றிவிடு. ஓ 'பூஷனே', 'ஏகனாம்' 'ரிஷியே' (பார்ப்போன்), 'யமனே' (அடக்கி நிறுத்துவோன்), 'சூரியனே', ப்ரஜாபதியின் (எல்லா உயிருக்கும் தந்தையின்) குழந்தையே, நின்னுடைய கிரணங்களை அணிவகுத்துக் குவிப்பாயாக. நினது மங்களம் சிறந்த (கல்யாணதமம்) யாதொரு சோதியுருவம் உளதோ, அதனை நான் காண்கின்றேன். இப்புருஷன் எவன் ஆவனோ

---

* அல்லது, அது (பரமஸத்தியம்) ஒன்று.

+அல்லது, தேவர்கள் சரீரங்களுள் மிகப்பெரியதை (சிறந்ததை)க் கண்டேன்.

++அல்லது, ஸத்தியத்தின் தருமத்திற்காக, தரிசனத்திற்காக,

அவனே நான்.'' ஈண்டுச் சொல்லப்பட்ட தங்கமூடியே வேதமந்த்ரத்திற் கூறிய ஸத்தியத்தை மறைக்கும் தாழ்ந்த ஸத்தியம்; வேதத்தில் கூறிய 'ரிதம்'. வேதத்தில் தேவர்களின் உடல்களுள் சிறந்தது என்பது, உபநிடதத்தில் 'கல்யாணதமம்' ஆயின சூரியன்தன் 'ரூபம்'. அது பரஞ்சோதி, புறம்பாயுள்ள சோதியினும் வேறு, மிகச் சிறந்தது. உபநிடதத்தில் 'ஸூத்திரம்' போன்ற மாபெருமொழி 'அவனே நான்' (ஸோஹம்) என்பது. அதற்கு ஈடான 'ரிக்வேத' வாக்கு 'அது ஒன்று' (தத் ஏகம்). வேதத்தில் 'பத்துநூறுகள் ஒன்றாய் நிற்றல்' (சூரியகிரணங்கள் என்னும் 'ஸாயணர்' உரை அதுதான்; பொருள் வெள்ளிடை) என்பது உபநிடதத்துச் சூரியபிரார்த்தனையில் 'அணிவகுத்துக் குவிப்பாய்' என்பதோடு ஒக்கும். அங்ஙனம் செய்வதால் அவன்தன் சிறந்த வடிவத்தைக் காணலாம். வேதம் உபநிடதம் இரண்டு வாக்குகளிலும் — வேதத்தில் எப்போதும் உபநிடதத்தில் அடிக்கடி — சூரியன் பரமஸத்திய ஞானக்கடவுள் என்றும், அவன்தன் கிரணங்கள் அச்சத்தியத்தினின்றும் ஞானத்தினின்றும் வெளிவந்து பாயும் ஒளியே என்றும் தெளிவாம். இவ்வுதாரணத்தினின்று - இங்ஙனம் பல உள — உபநிடத ரிஷிக்கு வேதத்தின் உண்மைக்கருத்துணர்ச்சி, மலை போன்ற கல்வி பெற்ற மத்தியகால 'யாஜ்ஞிக' உரையாசிரியரினும், நம் காலத்து மிகவும் வேறுபட்ட மனப்பான்மையுடைய ஐரோப்பியப் பண்டிதர்களினும் உண்மையிற் சிறந்ததென வெளிப்படையாய் விளங்கும்.

அகக்கருவித் தொடர்புற்ற மொழிகள் சில உள. அவற்றின் உட்பொருளை — கூடப்பொருளைக் காணவேண்டுமாயின், அவற்றினை ஏகரீதியாய் எல்லாவிடங்களிலும் கொண்டு உண்மைக்கருத்தை ஏற்கவேண்டும். 'ரிதம்' (உண்மை) எனும் பதம் நிற்க. 'தீ' என்னும் சொல் 'ஸூக்தங்' களில் அடிக்கடி வழங்குவது. புத்தி என்றே அதற்கு நாம் பொருள்கொள்ளல் வேண்டும். இதுவே அதற்கு இயற்கையான பொருள். பிற்காலத்தில் புத்தியென்னும் பதத்திற்கு ஈடானது அது. எண்ணம், அறிந்துகொள்ளல், அறிவு என்று அதன் பொருள். பன்மையில் 'தீய' எண்ணங்கள் புத்தியின் விருத்திகள் என்று ஆம். இப்பதத்திற்குச் சாதாரண விளக்கவுரையில் பல்வகைப் பொருள் கூறுகின்றனர். 'நீர்' 'வேலை' 'கேள்வி' 'அந்தம்' முதலிய பொருள்களில் 'புத்தி'யும் ஒன்று ஆம். ஆனால் நமது நாட்டத்தில் பொருத்தத்துடன் ஒருவிதமாகவே சாதாரணமாய்

அதற்கு இயற்கையான பொருளையே ஏற்றுப் பலன் யாதென்று பார்த்தல் வேண்டும். வேதத்தில் 'கேது' என்றால் சாதாரணமாய்க் 'கிரணம்' ஆயினும், அதற்குப் புத்தி விவேகம், புத்தியான் கண்டது என்றும் பொருள் உண்டு. வேதத்தில் இச்சொல் உள்ள வாக்கியங்களை ஒத்திட்டுப் பார்க்கின், 'காண்டலாம் கதிர்' 'சுயபோதமாம் கிரணம்' என்பது அதன் பொருள் என்ற முடிவுக்கு வரக்கூடும். உதாரணமாக, ஸரஸ்வதி தற்போதக் கிரணத்தான் ('கேதுநா') மாபெரு 'நீரை' நாம் உணருமாறு செய்கிறாள். மேலுள்ள மூலமாம் ஆதாரத்தினின்று கீழ்ப்புறமாய்ச் செலுத்தப்படும் 'கிரணங்கள்' என்றவிடத்தும் இதுவே பொருள் ஆதல் வேண்டும். இவை ஞாநத்தின் சகச போதங்கள்; 'ஸத்திய ஜ்யோதி'யாம் சூரியன்தன் கதிர்கள். 'க்ரது' என்றால், வேதத்தில் சாமாநியமாய்க் கருமம் அல்லது வேள்வி என்பது பொருள்; ஆனால் அறிவு, உறுதியான முடிவு, சிறப்பாய்க் காரியத்தை நிருணயிக்கும் அறிவாற்றல், இச்சை உறுதி – என்றும் பொருளுறும். கடைசியில் கூறிய பொருளையே வேதத்தின் உட்பொருள் விளக்கத்தில் 'க்ரது' என்னும் பதத்திற்கு விளக்கியுரைத்தல் வேண்டும். 'அக்னி' 'கவிக்ரது' வாம்; காண்போன்தன் இட்டவுறுதி என்று பொருள். ('கவி' – காண்போன், 'க்ரது' – இச்சை உறுதி); அவன் இதயத்தில் உள்ள 'இட்டவுறுதி' (க்ரதுர்ஹ்ருதி). இறுதியாக, 'ச்ரவஸ்' என்பது எப்போதும் வேதத்தில் வழங்கும் சொல்; புகழ் என்று பொருள்உடைத்து. உரையாசிரியர்கள் அதனை உணவு என்று பொருளுடைத்தாகவும் கொண்டுள்ளார்கள். ஆனால் இப்பொருள்களெல்லாம் எல்லாவிடத்தும் பொருந்துவன ஆகா. 'ச்ரு' கேட்டல் எனும் பொருளுற்ற பகுதியினின்று பெறப்பட்ட பதம் 'ச்ரவஸ்' என்பது. ஸ்துதி ஸூக்தம் அல்லது செவி என்னும் பொருளிலும் அது வழங்கும். ஸாயணரும் இப்பொருளை ஒப்புக்கொள்கிறார். இதனினின்று, கேட்கப்பட்ட விஷயம் அல்லது அதன் பலனாய்க் கேள்வியான் கிட்டிய ஞாநம் எனும் பொருள்ஆதலை நாம் ஊகிக்கக்கூடும். ரிஷிகளே தம்மை ஸத்யம் கேட்போர் 'ஸத்யச்ருத' என்றும், இக்கேட்டலான் பெற்ற ஞாநத்தை 'ச்ருதி' என்றும் கூறுகின்றனர். ஆதலான் வேதத்து உட்பொருள் உரையில் இச்சொல்லை அருளாவேசம் என்றோ, அருளாவேச ஞாநம் என்றோ பொருளுடையதாகக் கொள்ளலாம். அங்ஙனமாயின், அது முற்றிலும்

யுக்தமானதாய் எல்லாவிடத்திலும் பொருந்துகின்றது. இவ்வாறாக ரிஷி 'ச்ரவஸு'களை (ச்ரவாம்ஸிகளை)ப் பற்றிக் கூறும்போது, அவை மேற்புறமாய்க் கொண்டுபோகப்படுவன, கீழ்ப்புறமாய்க் கொண்டுவரப் படுவன என்கிறார். இது உணவுக்கும் புகழுக்கும் பொருந்தாது. ஆவேசங்கள் (அருளாவேச ஆற்றல்கள்) ஸத்தியத்தை நோக்கி மேற்புறம் சென்று அச்சத்தியத்தை நம்பொருட்டுக் கீழ்ப்புறம் இறக்குகின்றன என்று ரிஷி கூறுவதானால், முற்றிலும் தக்கதாய்க் கருத்துடையதாய் விளங்கும். இம்முறையை நாம் எல்லாவிடங்களிலும் கைப்பற்றலாம். ஆனால் இதனைத் தொடர்ந்து இன்னமும் இங்கு விளக்க இயலாது. இம்முன்னுரையில் சுருக்கமான மட்டில் இச்சொற்பக் குறிப்புக்கள் சாலும். வேதத்தின் ரகசியப்பொருளுரையின் மார்க்கத்தில் படிப்போர்க்குத் துவக்கத்தில் வேண்டிய உட்பார்வை யளித்தலைக் கருதியே இவை காட்டப்பட்டன.

அங்ஙனமாயின், வேதத்தினை இவ்வகையில் அறிதலினின்று வெளியாம் மர்மப்பொருள்தான் என்னை? உட்கருத்துத்தான் என்னை? அது எங்கும் மறைமரபினர் விசாரத்தின் இயல்பை அறிந்துகொண்டு நாம் எதிர்பார்க்கக்கூடியதே — இந்தியப் பண்பாட்டுமலர்ச்சி மேற்கொண்ட போக்கினின்று நாம் எதிர்நோக்க வேண்டியதும் அதுதான் — உபநிடதங்களில் முடிவுகண்ட ஆத்துமார்த்த ஸத்தியத்தின் பண்டை வடிவம் என்றறிக. வேதத்தின் ரகசிய ஞாநமாம் வித்து வளர்ச்சி பெற்றுப் பின்னர் வேதாந்தத்தில் விரிந்து வெளியாயதாம். எல்லாவற்றிற்கும் மையமாய் நின்ற கருத்து யாதெனின், உண்மை ஒளி சாகாமை ('ஸத்யம் ஜ்யோதிஸ் அம்ருதம்') இவற்றின் நாட்டமே என்க. புறத்தே உள்ளதன் உண்மையினும் ஆழ்ந்தும் உயர்ந்துமுள்ள உண்மை ஒன்றுளது; மானிடன்தன் அறிவொளியினும் பெரியதும் உயரியதும் அருள்வெளிப்பாட்டானும் அருளாவேசத்தானும் கிட்டுவதுமான 'ஒளி' ஒன்றுளது. எதனை நோக்கி உயிர் (ஜீவன், ஆத்துமா) எழல்வேண்டுமோ, அச்சாகாமையாம் 'அமிர்தம்' ஒன்றுளது. அச் சத்தியத்துடன், அவ்வமிர்தத்துடன், நாம் பரிசயம்பெற வழிதேடல் வேண்டும்; 'ஸபந்த ரிதம் அம்ருதம்' * அச்சத்தியத்தில்

---

* *1.68.2*

பிறவியெடுத்து அதனின் வளரல் வேண்டும்; ஆத்துமாவினில் ஏற்றம் உற்றுச் சத்தியவுலகிற் புகுந்து அதனில் வாழ்தல் வேண்டும். அவ்வாறு செய்தல் தைவத்துடன் நாம் ஒன்றுபட்டுச் சாவினின்று சாகாமைக்குச் செல்வது ஆம். இதுதான் வேதரகசியவாதிகளின் முதலாம் முக்கிய போதனை. 'ப்லேடோ' மரபினர் தமக்கு முந்திய ரகசியமரபினர்பால் தாம் அறிந்துகொண்ட கோட்பாட்டினை விர்த்திசெய்து, "ஈருலகங்களில் சம்பந்தமுற்று நாம் வாழ்கிறோம்" என்று கருதினர். பரமஸத்திய உலகு ஒன்று. இதனை 'ஆத்துமீய உலகு' எனலாம். மற்றொன்று, நாம் வாழும் உலகு; உடலெடுத்து உயிர்வாழும் உலகு. இது மேற்கூறிய பரமஸத்தியத்தினின்று உற்பத்தியாயினும், தாழ்ந்த உண்மையையும் தாழ்ந்த உணர்வையும் தழுவி அவற்றில் ஈனநிலை அடைந்துள்ளது. இக்கோட்பாட்டினை வேதரகஸ்ய வாதிகள் இன்னும் கனவடிவம் கொண்டதாய் அநுஷ்டாநவழக்கில் ஏற்கத் தக்கதாய்க் கையாண்டனர். காரணம் யாதெனின், அவர்களுக்கு இவ்வீருலகங்களின் அநுபவம் இருந்ததேயாம். இங்கு இவ்வுலகத்திய தாழ்ந்த உண்மை, மிகவும் பொய்ப்பிழை கலப்புற்றது. 'அந்ருதஸ்ய பூரே:' *1* அங்கு ஸத்தியத்தின் அகமாம் உலகு 'ஸதநம் ரிதஸ்ய'. *2* அது 'ஸத்யம் ரிதம் ப்ருஹத்' *3* (உண்மை, நேர்மை, விஸ்தாரம்). அங்கு எல்லாம் உண்மை யுணர்வுடையன. 'ரிதசித்' *4* இவ்வீருலகங்களுக்கிடையே — மூன்று ஸ்வர்க்கங்கள் வரையிலும் அவற்றின் ஒளிகள் வரையிலும் – பலவுலகங்கள் உள. ஆனால் அதுதான் பரஞ்சோதியுலகு; ஸத்திய ஸூரியனுலகு; 'ஸ்வர்' மாபெரும் சொர்க்கம். இம்மாபெரு வானுலகிற்குப் பாதையை நாம் கண்டுகொள்ளல் வேண்டும், 'ரிதஸ்ய பந்தா' *5* இதனைச் சிலபோது தேவர்வழி யென்ப. இதுதான் இரண்டாவது ரகசியக் கோட்பாடு. மூன்றாவது இது: நமது வாழ்க்கை அமரராம் தேவர்களாய உண்மையொளி சக்திகளுக்கும் இருட்சக்திகளுக்கும் நடைபெறும் போர் ஆம். இவ்விருட்சக்திகள் பல பெயர்களால் வழங்குறுவன - 'விருத்திரன்' அல்லது

---

(1) ரிக்வேதம் VII. *60.5; (2)* I. *164.47;* IV. *21.3;*
(3) அதர்வவேதம் XII. *1.1; (4)* ரிக்வேதம் IV. *3.4;*
(5) III. *12.7;* VII. *66.3;*
(1) V. *12.2;* VII. *43.4.*

'விருத்திரர்கள்', வலன், பணிகள், தஸ்யுக்களும் அவர்தம் அரசர்களும் என்றவாறு. இவ்விருட்சக்திகள் நம்மில் சோதியை ஒளிக்கின்றன; கொள்ளை அடிக்கின்றன; சத்தியநதிகளின் ஓட்டத்தைத் தடைப்படுத்துகின்றன 'ரிதஸ்ய தாரா:' 1; எவ்வகையிலும் உயிரின் மேலேற்றத்தினைத் தடுக்கின்றன. ஆதலின் இவற்றை ஒழித்தற்பொருட்டுத் தேவர்களின் உதவியைப் பெற வேண்டுவது அவசியம். அகத்துவேள்வியான் தேவர்களைப் பிரார்த்தித்து, அவர்கள் நம்மில் எழுந்தருளுமாறு வாக்கினால் அழைத்தல் வேண்டும். அதுதான் 'மந்த்ரத்' திற்கே உரிய தனியதோர் ஆற்றல். அன்றியும், வேள்விக் கொடைகளை நாம் அவர்களுக்கு அர்ப்பித்தல் வேண்டும். நம் கொடையினால் அவர்கள் நமக்கருளும் அளிப்புக்களை நாம் பத்திரமா யிட்டுக்கொள்ள இயலும்; இவ்வாற்றான் கைப்பற்றிய முறையான் நாம் ஏறிச் செல்லவேண்டிய முடிவாம் இடத்திற்கு மார்க்கத்தை நிருமாணிக்கக்கூடும். வேதத்தில் புறவேள்வியின் அம்சங்கள் எல்லாம் அகத்துவேள்விக்கும் ஆத்துமார்ப்பணத்திற்கும் (அறிகுறிகளான) 'ஸங்கேத' ங்களாய் வழங்குவனவாம். யாதாயிருப்பினும் நாம் உள்ளபடி நம்மையும் நமக்கு உள்ளதையும் அளிப்போம். அதனால் திவ்யமாய 'ஸத்திய ஜ்யோதி'ச் செல்வங்கள் நம் வாழ்வில் இறங்கி ஸத்தியத்தில் நம் அகப்பிறப்பின் அம்சங்களாக ஆதல் கூடும். அதாவது, நேர்மையான சிந்தனை, நேர்மையாய் அறிதல், நேர்மையாய்ச் செயல்புரிதல் — இவையெல்லாம் நம்மில் பக்குவமாதல் வேண்டும். அவை அவ்வுயரிய ஸத்தியத்தின் சிந்தனையும் ஏவலும் திருவினையுமே என்க. 'ரிதஸ்ய ப்ரேஷா ரிதஸ்ய தீதி'[2] இவ்வாறாய் அந்த ஸத்தியத்தில் நம்மை நிருமாணித்துக் கொள்ளல் வேண்டும். நமது வேள்வி ஒரு பிரயாணம், ஒரு யாத்திரை, ஒரு போர், தேவர்களை நோக்கிச் செல்லும் பிரயாணம். அன்றியும், அகச்'சுடர்' ஆகிய அக்னிபகவானை வழிகாட்டியாகவும் துணைவனாகவும் கொண்டு நாம் இப்பிரயாணம் செய்கிறோம். நம் மானிடப்பொருள்கள் அனைத்தும் மர்மமான

---

(2) I. *68.3;*

அக்னியான் எழுப்பப்பட்டு மாபெரு விண்ணுலகில் அமிர்தப்பொருளின்பால் செலுத்தப்படுகின்றன. அங்கிருந்து திவ்யப்பொருள்களும் நம்பால் சேர்கின்றன. ரிக்வேதத்தின் கோட்பாடு வேதாந்தபோதனைக்கு வித்தாக நிற்பதுபோல், அதன் அகப்பயிற்சியும் சாதனைநியமமும் பிற்காலத்திய யோகப்பயிற்சிக்கும் சாதநநியமத்திற்கும் வித்து என்றறிக.

இறுதியாக, வேதரகசிய மரபினர்தம் போதனைக்குச் சிகரமாய் விளங்குவது உள்ள பொருள் ஒன்றன் ரகசியம். 'ஏகம் ஸத்' *1* 'தத் ஏகம்' *2* ('ஒன்று உள்ளது') 'அது ஒன்று': இதுவே உபநிடதங்களுக்கு நடுநாயகமாம் வாக்கு. சோதியின் சக்திகளும் ஸத்தியத்தின் சக்திகளாம். தேவர்கள் அவ்வொன்றன் பெயர்களும் சக்திகளுமே ஆவர். ஒவ்வொரு தேவனும் தானே தேவரனைவரும் ஆவன், அல்லது அனைவரையும் தன்னகத்துட்கொண்டு செல்வன். உள்ளது ஒரு ஸத்தியம் 'தத் ஸத்யம்'*, 'ஓர் இன்பம்'. அதன்வழியே நாம் எழவேண்டும். ஆனால், வேதத்தில் இது இன்னும் பெரும்பாலும் திரை மறைவினின்றே காண்கின்றது. வேறு விசேஷமும் மிக உளது. ஆயினும் இதுவே அக்கோட்பாட்டின் சத்து.

ஈண்டு நான் கூறியுள்ள வேதவிளக்கமுறை, ஒருமுப்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'ஆர்யா' என்னும் தத்துவவிசாரபரமாய்த் திங்கள்தோறும் வெளிவந்த மலரில் கட்டுரைகளில் வரிசையாய் விவரமாய் வரையப்பட்டது. இந்த ஸித்தாந்தம் விசாரத்தில் முற்றிலும் பூர்த்தி பெறாமல் விவரிப்புநிலையில் வரிசையாக எழுதப்பட்டது; ஒழுங்கானதோர் ஏற்பாட்டின்படி முன்னதாகக் கருத்திலிட்டு எழுதப்பட்டதன்று; ஆதலின் புத்தகவடிவில் வெளியீடு ஆகவில்லை. இக்காரணத்தான் அது வாசகராம் மக்களுக்குக் கிடைத்தற்கு இயலாததாம். அத்துடன் அப்போது 'ரிக்வேத' ஸூக்த மொழிபெயர்ப்புக்கள் பல தொடர்ந்து வெளிவந்தன. அவற்றை மொழிபெயர்ப்பு என்னாது விளக்கமொழி யெனல் வேண்டும்.

---

(1) I, *164.46; (2)* X. *129,2.*

*III. *39.5;* IV. *54.4;* VII. *45.27.*

இவற்றிற்கு ஒரு முகவுரை 'மறை மரபினர் கோட்பாட்டி'னை விரித்துரைப்பது வரையப்பட்டது. பின்னர், 'ரிக்வேத'த்துப் பத்து மண்டலங்களிலுமுள்ள 'அக்நிஸூக்தங்' கள் அனைத்திற்கும் மூலத்தை ஒட்டி ஒத்திருக்குமாறு பூரண மொழிபெயர்ப்பு ஏற்பாடாயிற்று. அவற்றுள் இரண்டாம் மண்டலத்திலும் ஆறாம் மண்டலத்திலும் உள்ள 'ஸூக்தங்'களின் மொழி பெயர்ப்பு இப்புத்தகத்தில் முதன்முதலாக வெளியிடப்பட்டுள்ளது; அவற்றுடன் முதல் மண்டலத்தினின்று சிலவும் ஆம். ஆனால், இங்கு மேற்கொண்ட பக்ஷத்தைப் பாண்டித்திய ஆதாரம் கொண்டு நிலை நாட்டுதற்கு ரிக்வேதத்தை — பெரும்பான்மையான பாகத்தையாவது — சீர்படுத்திப் பிரசுரிக்கச் சித்தம்செய்தல் அவசியம்; அத்துடன் ஒவ்வொரு பதத்திற்கும் ஸம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் பொருள் அமையுமாறு உணர்த்தல் வேண்டும். மூலத்தில் முக்கியமான விடங்களில் விளக்கத்தின்பொருட்டும், தனிப்பதங்களையும் முழுப்பாக்களையும் விவரிக்கும் உரை நியாயம் என்று நிரூபித்தற்பொருட்டும் குறிப்புக்கள் வேண்டும். மர்மப்பொருளுரைக்கு முக்கியமான, 'ரிதம்' 'ச்ரவஸ்' 'க்ரது' 'கேது' இவை போன்ற திறவுகோலாயுள்ள பதங்களின் பொருளுரையைத் திடமாய் உறுத்தி நிறுத்தற்பொருட்டு மிகவும் பாடுபட்டாக வேண்டிய 'அநுபந்த அகராதி'யும் வேண்டும். இதனையும் செய்வதற்கு ஏற்பாடாயிற்று. ஆனால், இதனினும் முக்கியமாயினவும் நிலைத்துநிற்பனவும் முன்னரே ஈடுபட்டிருந்தனவும் ஆயின சில இடையில் நின்றன. இவ்வளவு விரிவான பெருங்காரியத்தை மேற்கொண்டு செல்லக் காலம் எஞ்சவில்லை. இம்மொழிபெயர்ப்பினைப் படிப்போருக்கு உதவியாம் பொருட்டு இம்முன்னுரை எழுதப்பட்டது. இன்றேல் அவர்கள் ஒன்றும் தோன்றாமல் நிற்றல் கூடும். இத்துடன் இதுவரை வெளியிடப்படாத 'கூடவாதிகளின் கோட்பாடு' என்பதினின்று சில வாக்கியவரிசைகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஈண்டுக் கொள்ளப்பட்ட பக்ஷத்தை (பிரதிஜ்ஞை) நியாயம் என்று நிரூபித்தற்கும் புலமைத்திறத்தான் ஆய நூல் என்று இம்மொழிபெயர்ப்பினைக் கருதவில்லை. மேல்வாரியாய்க் காணும் வேதம் பாராயணகிரந்தம் அல்லது யாகமந்திரங்கள் என்பதோடு நில்லாமல், அதனினும் விசேஷத்தை அதனில் காண மனம் சாய்ந்தோருக்கும், இப்பழைய

அறநூலின் கூடப்பொருள்தான் யாதென்று அறிதற்கு அக்கறையுள்ளோர்க்கும் சிஷ்யர்களுக்கும் இவற்றை நிலையான வடிவத்தில் அளித்தலே இவ்வெளியீட்டின் உத்தேசம்.

இஃது இலக்கியமுறையில் ஆக்கிய மொழிபெயர்ப்பு; திட்டமாய்ச் சொற்பொருளுருவாயது அன்று. ஆனால் பொருளிலும், பதங்களின் கருத்திலும், அபிப்பிராயத்தின் அமைப்பிலும், பற்றுடன் நம்பக்கூடிய நேர்மை நிறுவப்பட்டுள்ளது. உள்ளபடி சொல்லின், வேதபாஷையை உள்ளபடியெடுத்துக்கொண்டு கூர்ந்து திட்டமாய் நேரான வெறும் மொழிபெயர்ப்புடன் துவக்கி, அதனையே இவ்விளக்கத்திற்கு ஆதாரமாய்க் கொள்ளல்தான் இங்குக் கையாளும் முறை. ஏனெனில், அவ்வாற்றானே இப்பழைய காலத்திய ரகசியவாதிகளின் கருத்துக்களை நாம் கண்டுகொள்ளல் இயலும். ஆனால், சாயலிலும் உருவகங்களிலும் மகிமை வாய்ந்தனவும், சந்தத்தின் மாத்திரைலயத்தில் உதாரமாய் எழில் செறிந்தனவும், நடையின் போக்கில் நிறைவு பெற்றனவுமான 'ரிக்வேத ஸூக்த'ங்களைப் போன்ற மாபெருங்கவிதை, மொழி பெயர்ப்பில் வெறும் புலமைவேலைப்பாடாகிச் சீவனற்றதாய் இல்லாதிருக்க வேண்டுமாயின், குறைந்த பக்ஷம் அங்கும் அக்கவிதைவீரியத்தின் களைத்துப்போன எதிரொலியையாவது கொணர்தல் அவசியம். இதற்கும் அதிகமாய் ஓர் உரைநடை மொழிபெயர்ப்பில், அதனிலும் இவ்வளவு வேறுபட்ட (ஆங்கிலம் போன்ற) பாஷையில் இயலாது. வைதிக ஸம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் வாசகப்போக்கும் வாக்கிய அமைப்பும், வடக்குதெற்காய் வேறுபட்டு ஒதுங்கி நிற்பன. ஒருவாறு நடையின் உணர்ச்சியையும் இயற்கையாய் எழுவதையும் சாதிப்பதின்பொருட்டு, கனமாயும் ஒன்றுபட்டு முனைந்துள்ளதாயும் இருக்கின்ற வேதவாக்கினைத் தளர்த்திப் பலவீனமான ஆங்கிலவுருவத்தில் எப்போதும் மாற்றல் வேண்டுவதாகும். எங்கும் காணக்கிடக்கும் இரட்டைப்பொருட்சொல் மொழிபெயர்ப்போன் தவறி விழுவதற்கு மற்றொரு காரணம். ஒரே சொல் 'ஸங்கேதச்' சொற்பொருளையும் அதனால் குறிப்பிடப்பட்ட உட்பொருளையும் குறிக்கும். கிரணமும் கோவும், தெளிவாம் மனத்துஒளியும் உருக்கிய வெண்ணெயும் (க்ருதம்); 'அச்வம்' குதிரைகளும் அகத்துவலியும். இத்தகையவற்றிற்கு வாசகங்களைப் புதியனவாகக் கண்டெடுத்துக்

கையாளல் அவசியமாகின்றது, ஒளிமந்தைகள் அல்லது ஒளிர்கின்ற மந்தைகள் என்றவாறு. இன்றேல், வேறு உபாயங்களை உபயோகித்தல் வேண்டுவது ஆம். 'அச்வம்' குதிரை என்றவிடத்து அது சாதாரண விலங்காம் குதிரையன்று, உட்பொருள் கொண்ட ஸங்கேதக்குதிரை என்று அறிவித்தற்பொருட்டு 'அச்வம்' என்று கொட்டைஎழுத்தில் வரைவதாம். ஆனால், அடிக்கடி ஸங்கேதத்தை நழுவவிட வேண்டியிருக்கிறது. இன்றேல், 'ஸங்கேத'த்தை வைத்துக்கொண்டு உட்பொருளைக் கூறாமல் (படிப்போர்) அறிந்துகொள்ளலுக்கு விடவேண்டியதாகின்றது.* ஒரே கருத்தினை இட்டுக்கொள்ளினும் ஒரே வாசகத்தை வழங்காது, வாக்கியங்களின் தேவைக்கு ஏற்றவாறு மொழிப்பெயர்ப்பினை மாற்றியுள்ளேன். அடிக்கடி, மூலத்திலுள்ள சொல்லின் முழுக்கருத்தினையும் சாயலையும் வெளியிடுதற்குச் சாலுமான ஆங்கிலச்சொல்லைக் காணக்கூடவில்லை. ஒரு பதத்திற்கு ஈடாக இரண்டு பதங்களை அல்லது ஒரு வாசகத்தை வழங்கியுள்ளேன்; அல்லது நேராயும் பூரணமாயும் பொருள்கூற வேறு உபாயம் எதனையேனும் நாடியுள்ளேன். அன்றியும், அடிக்கடிப் பண்டைப்பதங்களின் பிரயோகமும் பாஷைப்போக்கில் வளைவுகளும் காண்கின்றன. அவற்றின் கருத்து உள்ளபடி தெரியாது ஊகிக்க வேண்டியனவாயுள்ளன. இன்றேல், வேறுபட்ட மொழிபெயர்ப்புக்கள் சமமாய் உரியனவாகவே இயலும் பலவிடங்களில் தற்கால மொழிபெயர்ப்பாக இருக்கவிட்டேன். இன்னமும் ஏராளமான 'ஸூக்தங்' கள் மொழிபெயர்ப்பாகி வெளியீட்டுக்குச் சித்தமாகும் வரை (அத்தகைய இடங்களில்) முடிவாம் தீர்மானத்தை நிறுத்தி வைத்தல்தான் உத்தேசம். ஆனால் அக்காலம் இன்னமும் வந்திலது.

---

* ரிஷிகள் சிலபோது இரண்டு வேறு பொருள்களை ஒரு சொல்லில் சேர்த்திடுவதாகக் காண்கின்றது. சில சமயங்களில் நான் இவ்விரட்டைப்பொருளை மொழிபெயர்ப்பினில் வைத்திட முயன்றுள்ளேன்.

---

* * *

கூடவாதிகளின் கோட்பாடு

(‘ஆர்யா’ ஸஞ்சிகையில் ‘அத்ரி’ மண்டல ஸூக்தங்களின் முன்னுரையினின்று எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு பாகம்)

‘யாகம்’, ‘யஜ்ஞம்’ எனும் இவ்வேள்வியின் உருவகம் சிலபோது பிரயாணம் அல்லது நீர்ப்பயணமாக இருக்கும். அது பயணம் பண்ணும்; ஆரோகணம் (ஏறுதல்) செய்யும். அது சேரவேண்டிய முடிவான இடம் ஒன்றுளது. பெருவளாகம், உண்மையிருப்பு, ஒளி, இன்பம் வேள்வியான் ஆதல் என்னை? நலத்தைக் கண்டுகொண்டு அதன்வழியே நிற்றல்; அதாவது, பெறவேண்டிய லக்ஷியத்திற்கு நேர்மையும் மங்களகரமுமான பாதையைக் கடினமாயினும் உல்லாசகரமாயுள்ள சத்தியத்து வழியைக் கண்டு அதன் சார்பில் நிற்றல் என்க. அது (வேள்வி) ஒரு மலையின் மேல் மட்டநிலத்தினின்று (சமபூமியினின்று) மேல்மட்ட நிலத்திற்குச் செல்வது போல் தைவஇட்டம் சுடர்விடும் வன்மையால் நடத்தப்பட்டு மேல்ஏறல் வேண்டும்; ‘ஸத்’ (உள்ளது) என்னும் நீரைக் கப்பலால் கடப்பது போலக் கடக்க வேண்டும்; அதன் ஆறுகளைத் தாண்டிச் செல்ல வேண்டும்; ஆழ்ந்த பள்ளங்களையும் விரைந்து போம் நீரோட்டங்களையும் கீழடக்கி மிஞ்சிச் செல்ல வேண்டும். வெகு தூரத்திற்கு அப்பாலுள்ள அகண்ட சோதிக்கடலை அடைவதே அதன் இலக்கு.

இஃது எளிதான பயணமன்று; அமைதியானதுமன்று. இது நீண்ட காலம் பல பருவங்கள் நடைபெறும் கோரமானதோர் இரக்கமற்ற போர். எப்போதும் ஆரியனாய மனிதன் உழைத்துப் போரிட்டு வெற்றி பெறல் வேண்டும்; களைப்பின்றி உழைப்போனும் வழிநடப்போனும் சலியாப் போர்வீரனுமாக இருத்தல் வேண்டும்; நகர்நகராய் ஒவ்வொன்றையும் தகர்த்து முற்றுகையிட்டுச் சூறையாடி அரசின்மேல் அரசை வென்று பகைவன்மேல் பகைவனைக் கருணையின்றிக் கீழே தள்ளி மிதிக்க வேண்டும். ‘தேவரும்’ ‘தாநவரும்’, ‘தேவரும்’ ‘தைத்தியரும்’, ‘இந்திரனும்’ ‘அஹி-விருத்திரனும்’, ‘ஆரியனும் தஸ்யுவும்’ - இவ்விரட்டைகளின் போராட்டமே அவன் முற்போக்கு முழுவதும் என்ப. அவன் ஆரிய

விரோதிகளையும்கூட வெட்டவெளி நிலத்திலே எதிர்த்தல் வேண்டும். ஏனெனில் பழைய நண்பர்களும் சகாயர்களும் பகைவராய் மாறுவர். அவன் வென்று செல்ல விரும்பும் ஆரிய ஆட்சிகளின் அரசர்கள் 'தஸ்யுக்' களுடன் தாமே சேர்ந்துகொண்டு அவன் தன் இட்டப்படி போகவிடாது தடுக்கப் பெரும்போரில் அவனை எதிர்ப்பார்கள்.

ஆயினும் 'தஸ்யு'வே இயற்கைப் பகைவன். இவர்கள் வகுப்பவர், கொள்ளையடிப்போர், தீங்கு செய்யும் சக்திகள். இவர்கள் 'தாநவர்'கள்; வகுத்தலை விதிப்பவளான 'திதி' யின் புதல்வர். இங்ஙனம் பல அடைமொழிப் பெயர்களான் ரிஷிகள் இவர்களைக் குறிக்கின்றனர். ராக்ஷஸர்கள் உளர்; தின்றுவிடுவோர், விழுங்கி விடுவோர், ஓநாய்கள், கிழித்தெறிவோர், வதைப்பவர், பகைப்பவரும் உளர்; இரட்டையாய்ப் பிரிப்போரும் உளர்; அங்ஙனமே பந்திப்போரும் நிந்திப்போரும் உண்டு. அன்றியும், சிறப்பாய்த் தனிப்பெயர்களும் பல கொடுக்கப்பட்டுள்ளன. 'விருத்திரன்' என்பான் ஓர் அரவம், பெரும்பகைவன், எதிர்ப்போன், தைவத்தின் இருப்பும் தைவத்தின் செயலும் இயலாத வண்ணம் தன் இருளின் சுருளைகளான் தடைபோடுகின்றவன். ஒளியால் 'விருத்திரன்' அழிக்கப்படினும், இன்னமும் கோரமான பகைவர்கள் அவனினின்று கிளம்புகின்றனர். 'சுக்ஷணன்' என்பான் தனது களங்கமுற்றதும் வீரியமுற்றதுமான வன்மையால் நம்மை வருத்துவன். தன் பலவீனங்களால் மனிதனைத் தாக்குவன் 'நமுசி'. பிறர் ஒவ்வொருவரும் தமக்குரிய தீங்குகளால் தாக்குவர். அன்றியும் வலனும் 'பணிகளும்' உள்ளனர். புலன்வாழ்க்கையிலே உலோபிகளாய வர்த்தகர்கள், கள்வர் எனுமிவர்கள் உயரொளியை ஒளிப்போர். அன்னோர் அவ்வெளிச்சங்களை இருளச்செய்து துர்விநியோகம்தான் செய்யக்கூடும். இவைகள் அனைத்தும் தம் நிதிகளை அநுமானத்துடன் காக்கும் பக்தியற்ற கூட்டம். இவை தேவர்களுக்கு வேள்வியளியா. இவையெல்லாம் கற்பனை உருவங்களல்ல; அவற்றிலும் மிகப்பட்டவை. அஞாநம், தீமை, பலவீனம், சிறுமைக்குறிகளாம் வரம்புகள் பல. இவற்றின் மூர்த்திகளாய் இவையெல்லாம் மனிதன்மீது இடைவிடாது படையெடுக்கின்றன; அருகில் நின்று அவனைச் சூழ்ந்து கொள்கின்றன; அல்லது தொலையிலிருந்து அவனை அம்பினால் தாக்குகின்றன; இன்றேல்,

துவாரம் அமைந்த அவன்தன் அகத்தில் தேவர்கள் இருக்கவேண்டிய இடத்தில் தாமே வந்து வசிக்கவும் தொடங்குகின்றன; உருப்படாத் தெற்றுவாயாலும் வேண்டுமளவு சாலாத சக்திவேகத்தாலும் அவனகத்தினின்று வெளியாம் (முகக்)கலையை விகாரப்படுத்துவன. மகிமை வாய்ந்து உதவிபுரியும் தைவங்களின் துணைகொண்டு அவற்றினை வெளியே துரத்தி வென்று கொன்று அதலபாதாளமாம் அந்தகாரத்தில் குத்தித் தள்ளல் வேண்டும்.

வேதத்துத் தேவதைகள் உலகனைத்திற்கும் ஏகமான தைவத்தின் திருநாமங்கள், சக்திகள், மூர்த்திகள். அவற்றில் ஒவ்வொன்றும் அந்த ஏகம் பொருளாம் 'தைவத்' தின் சாரமான பேர்ஆற்றலை ஓரளவு தெரியக் காட்டுவதாம். அவை ஜகத்தினை வெளியிடுவன; ஜகத்தினில் தாமும் வெளியாவன; சோதியின் குழவிகள்; அகண்டப் பொருளின் புதல்வர்கள். அவர்கள் மனிதன்தன் ஆன்மா(ஜீவன், உயிர்) என்பதனைத் தம் உடன்பிறந்தானென்றும் நேயனென்றும் கண்டு அவனுக்கு உதவிபுரிந்து அவனிடம் தாம் வளர்தலால் அவனையும் வளர்க்க விரும்புகின்றனர். அங்ஙனம் செய்தலால் அவன்தன் உலகினைத் தம் ஒளியானும் வன்மையானும் வனப்பானும் ஆட்கொள்ளல் ஆம். தைவிகத் தோழமைக்கும் தைவிகமாய உறவிற்கும் மனிதனை அழைக்கின்றனர் தேவர்; ஒளிவீசும் தம் சகோதரசங்கத்திற்கு அவனை ஈர்த்து உயர்த்தி, 'விருத்திர'ர்களுக்கும் 'தைத்தியர்'களுக்கும் (இருளின் புதல்வரும், திதியின் புத்திரரும் ஆகியோருக்கு) விரோதமாக அவனுடைய உதவியைக் கோரித் தம் உதவியையும் அளிக்கின்றனர். மனிதனும் தேவர்களை வேள்விக்கு அழைத்து, (தன்பாலுள்ளனவான) விரைவாற்றல்களையும் வன்மைகளையும் விளக்கமுற்ற மனத்தெளிவுகளையும் இனிமைகளையும் அவர்கட்குப் பதிலாக அளிக்கின்றான்; ஒளிர்கின்ற 'ஆவின்' பாலும், வெண்ணெயும், தெளிந்த 'உல்லாஸ'மாம் 'ஓஷதி'ச்சாறும், வேள்விக் 'குதிரை'யும், 'ஆபூப'மும் (அப்பம்) 'ஸோம'மும், தைவமனமாம் இந்திரன்தன் பொலிவுற்ற குதிரைகட்குத் தானியமும் - இவற்றை யெல்லாம் அளிக்கின்றான். அவன் அவர்களைத் தன்னில் ஏற்று, அவர்கள்தம் கொடைகளையும் தன் வாழ்வில் ஏற்றுக் கொண்டு, 'மந்த்ர' ஸூக்தங்களானும் 'ஸோமரஸ'த்தானும் - ("கருமான் இரும்பினைக்

காய்ச்சி உருக்கி அடிப்பது போல்'' என்று வேதம் மொழிகின்றது) - விர்த்திசெய்து அவர்கள்தம் திகழும் தைவத்தன்மை பூரணவடிவு எடுக்குமாறு பண்ணுவன்.

வேதத்தில் காணும் இவ்வுருவகமனைத்தும் நம்பால் திறவுகோல் இருப்பின் எளிதில் அறிதற்கியலும். ஆனால் இது வெறும்உருவகமே என்று தப்பாகக் கொள்ளல் தகாதது ஆம். தேவர்கள் என்பார், தனித்து நின்ற கருத்துக்கள் என்றோ, அந்தக்கரண விருத்திகள் என்றோ, சடவுலகில் நடைபெறும் இயற்கையின் செயல்கள் என்றோ எண்ணி, அவற்றிற்கு வடிவம் கவிக்கற்பனையானாய மூர்த்திகளென்று எண்ணற்க. தேவரிஷிகளுக்குத் தேவர்கள் எனின், உயிர் வாழ்ந்துள்ள உண்மைப் பொருள்கள். மானிட 'ஜீவன்'தன் இன்பதுன்ப மாறுதல்கள் பிரம்மாண்டத்தில் நடைபெறும் போரைத் தெரியச் செய்கின்றன. அப்போர் உலகநியமங்களை விதிக்கின்ற தத்துவங்களுக்கும் உலகப்போக்குகளுக்கும் இடையே நடைபெறும் போர் மாத்திரமன்று; அவற்றிற்கு ஆதாரமாய் நின்று உடலளிக்கும் பிரம்மாண்டத்தில் இயங்கும் சக்திகளுக்கிடையே நடக்கும் போர் என்றறிக. இவைதாம் தேவர்களும் அசுரர்களும். உலகஅரங்கின்கண், தனியதோர் உயிரின்கண்ணும், இவ்வுண்மை நாடகமே இந்நாடகபாத்ரங்களுடன் நடிக்கப்படுகின்றது.

* * *

எந்தத் தேவர்களுக்கு வேள்வியளித்தல் வேண்டும்? மனிதனுள் வளர்ந்துவரும் தைவத்தைக் காத்து வெளியிடுவதற்கு எத்தேவதையை வேண்டியழைத்தல் வேண்டும்?

'அக்னி' தேவன்தான் முதலவன். அவனின்றி வேள்வித்தீ ஆத்துமவேதி (உயிராம் வேதி)யினில் சுடர்விட்டெரியாதுபோம். அக்னியின் அச்சுடர், ஞானம் இயற்கையாய் அமைந்த கடவுட்சக்தி, ஏழு நாக்குற்ற கடவுளிட்டத்தின் ஆற்றல் ஆம். அறிவும் ஆற்றலும் உற்ற இந்த 'இட்டம்' தான், சாவுடைய நம்மில் சாகா விருந்தினன் ('அதிதி'), நின்மலனாய புரோகிதன், தைவத்தொழில் ஆற்றுவோன்; மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் மத்தியஸ்தனும் ஆவன். இவ்'வக்னியே' உயரிய சக்திகளாய தேவர்களுக்கு நாம் அளிப்பதைச்

சேர்ப்பித்து, அவர்கள்தம் வன்மையையும் ஒளியினையும் களிப்பையும் திரும்பப் பெற்று நம் மானிடவர்க்கத்திற்குக் கொணர்கின்றவன்.

அடுத்தபடியாக, பலமிக்கவனாய இந்திரன், சுத்த'ஸத்து' (உள்ளது) தானே தைவமநஸாய் வெளிப்பாடுற்ற சக்தி என்க. கீழ்க்கோடியாம் இப்புவியில், அக்னிபகவான், இயற்கையாய் ஞானம் உள்ளடங்கிய சக்திமுனை; புவியினின்று மேலே விண்ணுலகிற்குத் தன் ஆற்றலின் போக்கினைச் செலுத்துவன். இந்திரனோ வெனில், மற்றொரு கோடி; இயற்கையில் சக்தி உள்ளடங்கிய சோதிமுனை. விண்ணுலகினின்று மண்ணுலகிற்கு அவன்தன் ஆற்றலாம் சோதி இறங்குவதாம். திகழ்கின்ற அசுவங்களுடன் நம்முலகிற்கு இறங்கிவரும் வீரன் அவன்; தன்னுடைய மின்னல்களான் இருளினையும் வகுப்பினையும் ஒழித்து, உயிரூட்டும் வானவாரியைப் பொழிகின்றவன்; சகசபோதமாம் வேட்டைநாயின் அடிச்சுவட்டால் ஒளிந்தோ காணாதோ போன பிரகாசங்களைக் கண்டுபிடிப்பவன்; நமது உயர்மனமாம் 'ஸ்வர்' லோகத்திற்கு 'ஸத்தியமாம்' சூரியன் ஏறுமாறு செய்பவன்.

சூரியன் தலைசிறந்த அச்சத்தியத்தின் தலைவன். அந்த ஸத்தியம், உள்ள பொருளின் ஸத்தியம், ஞானத்தின் ஸத்தியம், நடத்தல் – செய்தல் – இயங்கல் – செயல்புரிதல் – ஆகிய இவற்றின் ஸத்தியம். ஆதலின் பொருள்களத்தனையும் சிருட்டிப்பவன் அவன். வெளிப்படுத்துவோன் எனல் தகும்; ஏனெனில், வெளிக்கொணர்தலே சிருட்டி; ஸத்தியத்தானும் இச்சாபலத்தானும் வெளியாதலே சிருட்டி என்க. அவன் தந்தை, போஷகன், நம் உயிர்களை ஒளிபடச் செய்வோன். நாம் நாடுகின்ற வெளிச்சங்கள்தாம் இச்சூரியன்தன் 'மந்தைகள்'. 'உஷோதேவி'யின் (விடியற்காலம்) கால்வழியே அவன் எழுந்தருளி, இரவில் மறைந்த உலகங்களை ஒன்றன்பின் ஒன்றாக விடுத்து, நம்மில் பரமானந்த உலகம்வரை வெளியிடுகின்றான்.

அவ்வாநந்தத்திற்குப் பிரிதிநிதியான தேவதை 'ஸோமன்'. பரவசமாக்கும் அவன்தன் களிப்பாம் ஸோமரசம் பூமியினின்று

முளைத்து வளரும் செடிகொடிகளிலும், ஸத் (உள்ளது) ஆம் 'அப்பி'னிலும் ஒளிந்திருக்கும். இங்கு நம் பூதஉடல்களிலும் அமரத்துவம் அளிக்கும் 'ஸோமன்'தன் ரஸங்கள் உள்ளன. அவற்றைப் பிழிந்தெடுத்து அமரர்களுக்கு அளித்தல் வேண்டும். அதன் பலத்தான் அவர்கள் வளர்ந்து வெல்வோர் ஆவர்.

முதன்மையான இத்தேவதைகள் ஒவ்வொருவருடன் கூடிப் பல தேவர்களுளர். அவர்கள் தத்தம் முக்கிய தேவதைக்குரிய தொழிலினின்று உதித்த விருத்திகளை நிறைவேற்றுகின்றனர். யாங்ஙனமெனின்: மரிக்கும் தன்மை வாய்ந்த நம் பிரகிருதியில் சூரியன்தன் ஸத்தியம் திடமாய் நாட்டம்பெற வேண்டுமாயின், அதற்கு முன்னர்ச் சில திட்டங்கள் (அல்லது நியமங்கள்) இன்றியமையாதன. பாதகமனைத்தினையும், நேர்மையற்றுக் கோணலாம் பொய்மை யனைத்தினையும் ஒழித்தற்கு ஏற்றதோர் அகண்ட தூய்மையும் தெளிவானதொரு விரிவும் தேவை. இதுவே 'வருணன்'. நம் எண்ணங்கள், செயல்கள், தூண்டல்கள், இவற்றின் இணக்கமாம் ஒற்றுமையை உருப்படுத்தி அதன்வழியே நடாத்துவிக்கும் அகலமான அறிவும் அன்பும் ததும்பி விளங்குகின்றதோர் ஆற்றல் (தேவை). இது 'மித்திரன்'. தெளிவான விவேகமுற்ற பேரவாவும் முயற்சியும் ஆகும் அமரப் பெருவன்மை. இது ('அர்யமா') 'அரியமன்'. பாவமும் பிழையும் துன்பமுமாம் தீமைக்கனவினைக் காணாதபடி அடித்தொழிக்குமது நேர்மையான போகம். அஃதாவது, அநாயாசமாய்ச் சுகமாய்ச் சகல வஸ்துக்களிலும் போகம் கொள்ளல் ஆம். இது 'பகன்'. இந்நான்கும் சூரியன்தன் ஸத்தியத்தின் ஆற்றல்கள், தேவதாமூர்த்திகள்.

நமது பிரகிருதியில் ஸோமனது ஆநந்தம் பூரணமாய் நிலைநாட்டம் பெறுதற்கு மனம், உயிர், உடல் இவற்றின் நிலைமை இன்புற்று விளக்கத்தோடு உருக்கேடு இல்லாது நிற்றல் அவசியம். இந்நிலைமையை நமக்களிப்பவர் 'அசுவினர்' என்பார் ஆம் இரட்டைத் தேவதைகள். ஒளியின் மகளை மணந்தோர், மதுவுண்போர், பூரண

அமைவினைத் தந்தருள்வோர், உருவவிகாரத்தினை அகற்றி நோய்தீர்ப்போர் ஆய அவர்கள் நம் அறிவாற்றல்களையும் செயலாற்றல்களையும் கைப்பற்றி அங்கு இடம்பெற்று நாம் எளிதில் வெற்றியுடன் ஆரோகணம் (ஏறுதல்) செய்தற்காக நம் மனவுடலுயிர்களைச் சித்தப்படுத்துவர்.

இந்திரன் தைவமனம்; மனவடிவங்களை உருப்படுத்துவோன். அவனுக்கு உதவியாக உழைப்பவர் ஆம் சிற்பிகள் 'ரிபு'க்கள் என்பார்; இவர்கள் மானிடர்களாயிருந்து தமது வேள்விக்கருமத்தாலும் சூரியன் இருப்பிடமாம் உத்தமபதத்திற்கு ஆரோகணித்ததாலும் அமரத்துவம் பெற்றவர்கள்; தாம் பெற்ற பேறு மறுபடியும் மானிடவர்க்கத்திற்குக் கிட்டுமாறு உதவி புரிபவர்; இந்திரன்தன் அசுவங்கள் அசுவினர்களின் ரதங்கள், தேவர்கள்தம் ஆயுதங்கள், போருக்கும் பயணத்திற்கும் வேண்டிய கருவிகள், இவை அனைத்தினையும் மனத்தான் உருப்படுத்துவோர் ஆவர். ஆனால், ஸத்தியமாம் சோதியினை அளிப்போனும், விருந்திரனைக் கொல்வோனுமாகிய இந்திரன் 'மருத்து'க்களின் உதவியைப் பெறுகிறான். அவர்கள் இச்சாபலம், நாடிபலம் அல்லது பிராணபலம் ஆகிய இவற்றின் தேவதைகள்; சிந்தனை ஒளியினை அடைந்தவர்கள்; தம் அகவெளிப்பாடாம் வாக்கினையும் எட்டிப் பெற்றவர்கள். அன்னோர் மனவாக்கனைத்திற்கும் பின்புறம் நின்று அவற்றினைத் தூண்டுவோராய், 'சோதி, ஸத்தியம், பேரின்பம்', பரமமான 'சித்து' இவற்றைப் பெற, அவ்வழியே போர் புரிவர்.

பெண்வகைச் சக்திகளும் உள. யாங்ஙனமெனின், தைவம் ஆணாகவும் பெண்ணாகவும் உளது. தேவர்களும் செயல் நடாத்துவிக்கும் ஆன்மாக்களாகவோ, செயல்களை ஏற்றுக்கொண்டு ஒழுங்குபடுத்தி நிருவகிக்கின்ற சக்திகளாகவோ இருக்கின்றனர். 'அதிதி' தேவர்களின் தாய்; அகண்டமானவள்; முதலவள். அன்றியும் 'ஸத்திய'ச் 'சித்து' என்னும் உண்மையுணர்வுக்கு ஐந்து ஆற்றல்கள் உள. அவை சக்திகள், தேவிகள்: 'மஹி' அல்லது 'பாரதி' – இவள் தைவமூலத்தினின்று பொருள்களனைத்தினையும் கொணர்ந்தருளும்

அகண்ட 'வாக்கு'; 'இளா' (இலா) - ஸத்தியத்தின் வல்லமையுடைய 'ஆதி வாக்கு' ஆகும் அதன்பால் சுறுசுறுப்பான 'திருஷ்டி'யை (காண்டல்) நமக்களிப்பவள்; 'ஸரஸ்வதி' - ஸத்தியத்தின் பெருக்குற்ற பாய்ச்சலும், அதன் ஆவேசவாக்கும் ஆவள்; 'ஸரமா' – சகச போதம் (முயற்சியின்றித் தன்னிலே உதயமாம் அறிவு); இதனை 'ஸ்வர்க்க'த்து வேட்டைநாய் என்ப. இது கீழே முழுகி அமிழ்ந்துள்ள உணர்வாம் குகையினில் இறங்கிப் புகுந்து அங்கு ஒளிக்கப்பட்டுள்ள அறிவொளிகளைக் கண்டுபிடிக்கும்; 'தஷிணா' - கருமத்தையும் கொடையினையும் நேர்மையாய்ப் பகுத்தறிந்து வேள்வியில் தேவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்தம் பங்குகளை விநியோகிப்பவள். ஒவ்வொரு தேவருக்கும் அவரவர்க்குரிய பெண்சக்தி உண்டு.

இச்செயல், போர்ஆரோகணம் ஆகிய இவ்வனைத்தினையும் ஆதரிப்பவர்கள் நம் தந்தையாம் (ஸ்வர்க்கம்) விண்ணுலகும், தாயாம் (பூமி) மண்ணுலகும் ஆம். இவர்கள் தேவர்கட்கும்கூடத் தந்தையும் தாயும் ஆவர். இவ்விருவரும் முறையே நின்மல மனோமயமான உள்ஆவியுணர்வினையும் பருவுலகத்திய பௌதிகவுணர்வினையும் வகித்துக் காக்கின்றனர். அவை விசாலமாயும் சுதந்திரமாயும் ஆதல் நாம் சாதிப்பதற்கு அவசியமான நிபந்தனை. 'வாயுபகவன்' பிராணனுக்கு ஈசன்; (மேலே விண்ணுலகு, மனோமயவுணர்வு; கீழே பூவுலகு, பூதவுடலுணர்வு) இவ்விரண்டினையும் பிராணசக்தி நிலமாம் மத்திமலோகத்தான் (அந்தரிக்ஷம்) சேர்த்துவிப்பன். அன்றியும், வேறு தேவர்களுளர்: 'பர்ஜந்யன்' விண்மாரி பொழிவோன்; 'ததிக்ராவா' தைவிகமான போர்ப்புரவி, அக்னிதேவன்தன் ஓர் ஆற்றல்; அஹிர்புத்தினியன் மேலே உள்ள கடைக்காலினைக் காக்கும் கூடமான 'ஸர்ப்பம்' – 'அஹி'; 'திரிதன்' 'ஆப்தியன்' (த்ரிதன் ஆப்த்யன்) – இவன் இச்சிருட்டி மூன்றாம் மட்டநிலையத்தில் (பூமிகை) முப்புரி கொண்ட நம்மிருப்பினைப் பூர்த்தி செய்பவன். இன்னும் பலர் உளர்.

இத்தேவதைகள் அனைவரும் நம்மில் அலர்ந்து விரிதல் நம் ஸித்திக்கு அவசியம் வேண்டியது ஆம். அந்த ஸித்தியை நிலைமட்டங்கள் (பூமிகை) அனைத்திலும் நாம் பெறல் வேண்டும்; புவியின் பரப்பிலும், பூதவுடலிலும், உணர்விலும், பிராணவேகத்தின் முழுவன்மையிலும் செயலிலும், போகத்திலும், நாடித்துடிப்பினிலும் அந்த ஸித்தியைப் பெறல் வேண்டும். இப்பிராணனை 'அசுவம்' என்று உருவகத்தான் எடுத்துக் காட்டியுள்ளார்கள். நம் முயற்சியைத் தன்மேல் தாங்கிச் செல்வதற்காக இதனைக் கொணர்ந்து முன்பாக நிறுத்தல் வேண்டும்; உணர்ச்சி ததும்பும் இதயத்துப் பூரணசந்தோஷத்திலும், நம் புத்தியினையும் உள்ளாவிப் பொருளினையும் ஊடுருவியதொரு திவ்யமான மனவெழுச்சியிலும், மனத்தெளிவிலும், நம்மிருப்பு அனைத்தினையும் மாற்றுதற்காக நிற்கும் 'உஷஸ்' 'சூரியன்' 'கோசமூகம்' ஆகிய இவற்றின் வருதலிலும், விஞ்ஞாநசோதியின் (விஜ்ஞாந ஜ்யோதிஸ்) வருதலிலும் (இங்ஙனம் எல்லாப் பூமிகைகளிலும்) அப்பூரணமாம் ஸித்தியை அடைதல் வேண்டும். இவ்வாற்றான் ஸத்தியப்பேறு உண்டாம். ஸத்தியந்தான் அலைகொண்ட அற்புத ஆநந்தப்பேறு; ஆநந்தப்பேற்றில் இரண்டற்ற கேவலப்பொருளின் அகண்ட சைதந்யம் எனும் பேருணர்வு.

பெருந்தேவர் மூவர், புராண மும்மூர்த்திகட்கு மூலமானவர், பரம்பொருளாம் முழுமுதற்கடவுளின் மாபெருமகிமைகளே ஆவர். அவர்கள் மேற்கூறிய மலர்ச்சியையும் முற்போக்கான வளர்ச்சியையும் இயலுமாறு செய்வர். இச்சிருட்டியின் எல்லாச் சிக்கல்களையும் இதன் கம்பீரமான வழிகளையும், ஆதாரமான மூலசக்திகளையும் ஆதரிப்போர் அவர். 'ப்ரஹ்மணஸ்பதி'யே (பிரமன்) சிருட்டிப்பவர்; வாக்கினான், கூவுதலான், சிருட்டிக்கின்றார்; அதாவது, வெளிப்படுத்துகிறார்; அசேதனமாம் இருளினின்று உள்ளதனைத்தினையும் புத்திபூர்வமாகப் பிராணத்தின் இயக்கத்தையும் ஞாநத்தையும் முடிவாக ஏற்படும் வடிவங்களையும் வெளிக்கொணர்கின்றார். 'ருத்ரன்' (உருத்திரன்) உக்கிரனும் தயாளனும் பலவானும் ஆய ஏகன்; பிராணன் உறுதியாய்

நிற்றலுக்காக நடைபெறும் வாழ்க்கைப்போருக்கு நாயகன்; ஆயுதபாணி; சினங் கொண்டவன்; சிருட்டியை வலிந்து மேல்தூக்கிவிடுதற்கான நலஞ் செய்யும் கடவுளாற்றல்; எதிர்ப்பது அதனைத்தினையும் அறைவான்; தப்புவதும் தடுப்பதுமாய அனைத்தினையும் சாட்டையால் சிக்ஷிப்பான்; காயப்பட்டுத் துன்புறுவதும், முறையிட்டுக் கீழ்ப்படிவதுமான அனைத்தினையும் தேற்றுவான். விசாலமாய் எங்கும் பரவிய இயக்கத்திற்கு இறை 'விஷ்ணு'; இவ்வெல்லா உலகங்களையும் தன் மூன்று கால்அடிகளான் அடக்கிப் பிடித்திருப்பவன். அளவுபட்டுச் சாகின்ற நம்மில் இந்திரன் செயல்புரிதற்கு ஏராளமாய் இடம் அளிப்பவன் அவ்விஷ்ணுவே. அவனால்தான் அவனுடனே அவன்தன் உத்தமபதங்களுக்கு நாம் எழுந்து சென்று, ஆங்கு நம் நண்பனும் அன்பனும் ஆநந்த ரூபியுமாய கடவுள் நம்பொருட்டுக் காத்திருத்தலைக் காண்போம்.

இருண்ட அசேதனக்கடலாய் உள்ள பொருளினின்று உருவாக்கப்பட்டது நமது மாநிலம் (பூமி). அது தன் உத்தமமான உருவப்பாடுகளையும், மேல் கிளம்பி எழுகின்ற சிகரங்களையும் விண்ணுலக ('ஸ்வர்') வழியே தூக்கிவிடுகின்றது. மனோமயமாம் விண்ணுலகிற்குரிய உருவப்பாடுகளும் உள. அவை மின்னல்களை வீசிவிடுகின்றனவும், உயிர் வாழ் நீர் அளிப்பனவுமான மேகங்கள். வெளிப்படாமல் கீழே அமிழ்ந்துள்ள சேதனக்கடலினின்று மதுவும் மனத்தெளிவும் பெருகிக் கிளம்பி மேல்நின்ற உத்தமமாம் சேதனக்கடலினை நாடும். மேலேயுள்ள அக்கடலும் சோதியையும் ஸத்தியத்தையும் ஆனந்தத்தையும் ஆறுகளாகக் கீழே நம் பூதவுடலுக்கும்கூட அனுப்பும். இவ்வண்ணம், வெளியே பருவுலக இயற்கையின் உருவங்களிலே ஆத்துமசம்பந்தமான ஆரோகண ஸூக்தத்தை வேதக்கவிகள் பாடுகின்றனர்.

அவ்வாரோகணத்தைப் புராதனர்களான நம்தம் முன்னோராய மனிதர்கள் சாதித்துள்ளனர். மகான்களான இம்மூதாதையோரின் பிரபாவம் இன்னமும் அவர்தம் சந்ததியாருக்கு ஒத்தாசை புரிகின்றது. புதிய 'உஷஸு'கள் (விடியற்காலம்) பழையனவற்றைத் திரும்பச்

செய்து வருங்கால 'உஷஸு'களுடன் கலப்பதற்குச் சாய்கின்றன. கண்வன் - குத்ஸன் - அத்ரி - கக்ஷீவான் - கோதமன் - சுநச்சேபன் - ஆகிய இவர்கள் ஆத்துமசம்பந்தமான வெற்றிகளை எடுத்துக்காட்டும் உதாரணமான அச்சுக்கள் ஆம். அவ்வெற்றிகள் மானிடவர்க்கத்தின் அனுபவத்தில் எப்போதும் திரும்பப்பெற இசைகின்றவை. 'ஸப்தரிஷிகள்', 'ஆங்கிரஸர்கள்' இன்னும் காத்திருக்கின்றனர்; வாக்கினால் (மந்திரத்தால்) கானம் செய்தற்கும், குகையினைத் தகர்த்தற்கும், காணாது சென்ற மந்தைகளைக் கண்டுபிடித்தற்கும், மறைந்து ஒளிந்த சூரியனை மீண்டும் பெறுதற்கும், எப்போதும் ஸித்தமாயிருக்கின்றனர். இங்ஙனம் உயிர் (ஜீவன்தன் ஆத்துமா) ஒரு போர்க்களமாம். அதனில் உதவுவோரும் வருத்துவோரும், இன்னாரும், இனியோரும் உளர். இவையனைத்தும் ஜீவியத்துள்ளன, நிரம்பியுள்ளன, ஆள் உள்ளன, உணர்வுள்ளன, சுறுசுறுப்பாயுள்ளன என்றறிக. நாம் நம் வாக்கினாலும் வேள்வியாலும், நமக்காகப் போர்புரிதற்குத் 'திவ்ய த்ருஷ்டி'யுள்ளோரையும் வீரர்களையும் சிருட்டிக்கின்றோம். அவர்கள் நம் கருமங்களானாய குழவிகளே. ரிஷிகளும் தேவர்களும் ஒளிர் மந்தைகளை நம்பொருட்டுக் கண்டுபிடிக்கிறார்கள். 'ரிபு'க்கள் தேவர்களின் தேர்களையும் புரவிகளையும் திவ்யமான ஆயுதங்களையும் மனத்தான் உருப்படுத்துகின்றனர். நமது பிராணன் ஓர் 'அசுவம்' (குதிரை). அது கனைத்துக்கொண்டு நாற்கால் பாய்ச்சலுடன் நம்மைச் சுமந்து, மேற்போக்காகவும் முற்போக்காகவும் கொண்டுபோம். பிராணனுடைய ஆற்றல்களே விரைந்து செல்லும் குளம்புடைய குதிரைகள். விடுதலை பெற்ற மனச்சக்திகளெல்லாம் விரிந்த சிறகுள்ள பறவைகள். மனோமயனாம் புருஷன், அல்லது இந்த ஆத்துமா மேலோங்கிப் பறக்கும் அன்னப்பறவை அல்லது ராஜாளி. அது இருப்பு மதிற்சுவர்கள் நூற்றினை உடைத்துக் கொண்டு வெளியேறி, ஆனந்தத்தை ஜயத்தோடு காப்பவரினின்று 'ஸோம'னாம் மதுவைப் பறித்துக்கொண்டு போம். இதயத்துள் ரகசியமான ஆழங்களினின்று எழுந்து கடவுள்வழியே விளங்கும் சிந்தனை ஒவ்வொன்றும் ஒரு புரோகிதன்; ஒரு சிருட்டிகர்த்தா; விளக்கமுற்றுக் கண்கூடான அனுபவத்தையும் மாட்சிமை தாங்கிய

பூர்த்தியையும் ஓதுவது ஆகும். பொலிவுற்ற பசும்பொன்னாம் சத்தியத்தை நாம் நாடுகின்றோம்; ஒரு விண்ணுலகநிதியைக் கோருகின்றோம்.

மனிதன்தன் உயிர் பல ஆன்மாக்கள் நிரம்பியதோர் உலகு, ஓரரசு. அதனில் சிறந்ததொரு வெற்றிக்கு உதவியாகவோ தடையாகவோ படைகள் ஒன்றன்மீதொன்று மோதுகின்றன. அது ஓர் இல்லம். அங்கு அமரர் நம் விருந்தினர். அசுரர்கள் அதனைக் கைப்பற்ற முயல்வர். அதன் அகலமான இடமும் சக்திகளின் நிறைவும், தேவர் சபை கூடுதற்காக வேள்வியிடத்தைப் பரப்பி ஒழுங்குபடுத்தித் தூய்மை ஆக்குவன.

இத்தகையன வேதத்தில் முக்கியமான சில உருவகங்கள். இக்குறிப்பு நம் மூதாதையோர் போதனையின் உருவக்குறிப்பு, சுருக்கமானது, சாலாதது. இங்ஙனம் அறிந்துகொள்வோமாயின், 'ரிக்வேதம்' என்பது இருண்டு மங்கிக் குழப்பமுற்றதோர் அநாகரிகத் துதிக்கோவையாய் நில்லாது, மானிடசமூகம் பேரவாக் கொண்டு மேல்செல்லுவதற்கு ஓதும் கானமாய்ப் புலனாம். அவ்வோத்துக்கள் எல்லாம் அமரத்தன்மைக்கு ஏற்ற ஆரோகணத்தில் ஈடுபடும் ஆன்மாவின் மகாகாவிய கானத்தின் உபாக்கியானங்கள் என்க.

இது குறைத்துரைப்பின் (இதனைச் சுருங்கச்சொல்லின்), இப்பழைய சாத்திரத்தில், இந்த நட்டமான ஞானத்தில், உள்ளுடலுயிர்ச் சம்பந்தமான ஐதிகம் உடைய இந்த வேதத்தில், மற்றும் யாதுளதோ, அது இன்னும் கண்டுபிடித்தற்கு எஞ்சியுள்ளது என்றறிக.

* * *

க்ருத்ஸமதர்

மண்டலம் - 2

ஸூக்தம் 1

त्वम॑ग्ने द्युभि॒स्त्वमा॑शुशु॒क्षणि॒स्त्वम॒द्भ्यस्त्वमश्म॑न॒स्परि॑ ।
त्वं वने॑भ्य॒स्त्वमोष॑धीभ्य॒स्त्वं नृ॒णां नृ॑पते जायसे॒ शुचिः॑ ॥ १

த்வமக்நே த்யுபிஸ்த்வமாஶுஶுக்ஷணிஸ்த்வமத்ப்யஸ்த்வமஶ்மநஸ்பரி ।
த்வம் வநேப்யஸ்த்வமோஷதீப்யஸ்த்வம் ந்ருணாம் ந்ருபதே ஜாயஸே
ஶுசி: ॥ 1॥

ஓ அக்நீ! எங்கள்மீது ஒளியைப் பாய்ச்சிக்கொண்டு, நீ ஒளி கலந்த உன் பிரகாசங்களுடனே பிறக்கின்றாய். நீ நீர்களிலிருந்தும் பிறக்கின்றாய்; கற்பாறைகளைச் சுற்றிலும் பிறக்கின்றாய். நீ காடுகளிலிருந்தும் பிறக்கின்றாய். இவ்வுலகில் வளரும் மருந்துச் செடிகளிலிருந்தும் நீ பிறக்கின்றாய். நீ மனிதனுக்கும் மனித குலத்துக்கும் தலைவன் ஆவாய். நீ பிறப்பிலே தூயவன் ஆவாய்.

तवा॑ग्ने हो॒त्रं तव॑ पो॒त्रमृ॒त्वियं॒ तव॑ ने॒ष्ट्रं त्वम॒ग्निद॑तायतः ।
तव॑ प्रशा॒स्त्रं त्वम॑ध्वरीयसि ब्र॒ह्मा चासि॑ गृ॒हप॑तिश्च नो॒ दमे॑ ॥ २

தவாக்நே ஹோத்ரம் தவ போத்ரம்ருத்வியம் தவ நேஷ்ட்ரம்
த்வமக்நித்ருதாயத:
தவ ப்ரஶாஸ்த்ரம் த்வமத்வரீயஸி ப்ரஹ்மா சாஸி க்ருஹபதிஶ்ச
நோ தமே ॥ 2 ॥

ஶ சிவன், தேசம் முதலிய சொற்களில் உள்ள 'ச' என்ற எழுத்தைப் போலப் படிக்கவும்.

ஓ அக்நீ! தேவர் முதலியவர்களைக் கூப்பிடுதலும், அவர்களுக்கு வழங்குதலும் உன்னுடைய செயல்களே. வேள்வியைத் தூய்மை உடையதாகச் செய்தலும், ஒழுங்குமுறைப்படி அமைத்தலும் உன்னுடைய செயல்களே. வேள்வியைக் களங்கம் அற்று ஒளி வீசச் செய்யும் செயலும் உன்னுடையதே. மெய்ப்பொருளை விரும்பு பவனுக்குத் தீயினைக் கொணர்ந்து வழங்குபவனும் நீயே. விளம்பரப்படுத்துதல் உன்னுடைய செயலே. நீயே வேள்வியின் செயல்களாகவும் ஆகின்றாய். மந்திரச் சொற்களை வழங்கும் புரோகிதனும் நீயே. எம் வீட்டின் தலைவனும் நீயே.

त्वम॑ग्न॒ इन्द्रो॑ वृष॒भः स॒तामसि॒ त्वं विष्णु॑रुरुगा॒यो न॑म॒स्यः॑ ।
त्वं ब्र॒ह्मा र॑यि॒विद्ब्र॑ह्मणस्पते॒ त्वं वि॑धर्तः॒ सच॑से॒ पुर॑न्ध्या ॥ ३

த்வமக்ந இந்த்ரோ வ்ருஷப: ஸதாமஸி த்வம் விஷ்ணுருருகாயோ நமஸ்ய: ।
த்வம் ப்ரஹ்மா ரயிவித் ப்ரஹ்மணஸ்பதே த்வம் விதர்த: ஸசஸே புரந்த்யா ॥ 3 ॥

ஓ அக்நீ! நீ இவ்வுலகில் உள்ள பொருள்கள் எல்லாவற்றிற்கும், அவைகளுக்குத் தேவையானவற்றை எல்லாம் நிறைய வழங்குதலால் இந்திரனாக உள்ளாய். எல்லாரும் வணங்கித் தொழுவதற்கு உரியவனாய், எங்கும் வியாபித்து இருக்கும் விஷ்ணுவும் நீயே. ஓ சொற்களின் தெய்வமே! செல்வங்களைக் கண்டறியும் ப்ரம்மாவும் நீயே. தனித்தனியே ஒவ்வொன்றாக எல்லாப் பொருள்களையும் பாதுகாப்பவனும் நீயே. பல நல்ல எண்ணங்களைத் தன்னிடத்தே கொண்டுள்ள தேவியுடன் நீ நெருங்கிச் சேர்ந்துள்ளாய்.

त्वम॑ग्ने॒ राजा॒ वरु॑णो धृ॒तव्र॑त॒स्त्वं मि॒त्रो भ॑वसि द॒स्म ईड्यः॑ ।
त्वम॑र्य॒मा सत्प॑ति॒र्यस्य॑ सं॒भुजं॒ त्वमंशो॑ वि॒दथे॑ देव भाज॒युः ॥ ४

த்வமக்நே ராஜா வருணோ த்ருதவ்ரதஸ்த்வம் மித்ரோ பவஸி தஸ்ம ஈட்ய: ।
த்வமர்யமா ஸத்பதிர்யஸ்ய ஸம்புஜம் த்வமம்ஶோ விததே தேவ பாஜயு: ॥ 4 ॥

ஓ அக்நீ! எல்லாச் செயல்களையும் நிகழ்த்தும் நெறிமுறைகளைக் கைவசம் கொண்டுள்ள அரசனாகிய வருணனும் நீயே. பேராற்றல் உடையவனும், எல்லோராலும் விரும்புதற்கு ஏற்றவனும் ஆகிய மித்திரனும் நீயே. அரியமனும் நீயே. எல்லாப் பொருள்களுக்கும் உடைமையாளனும் நீயே. இன்பம் முழுதும் உன்னிடத்தில் உள்ளது. ஓ தெய்வமே! ஞானத்தை வழங்கும்போது எங்களுக்கு ஞானத்தில் உள்ள பங்கினை அளிக்கும் அம்சனும் நீயே.

त्वम॑ग्ने॒ त्वष्टा॑ विध॒ते सु॒वीर्यं॑ तव॒ ग्नावो॑ मित्रमहः सजा॒त्य॑म् ।
त्वमा॑शु॒हेमा॑ ररिषे॒ स्वश्व्यं॒ त्वं न॒रां शर्धो॑ असि पुरू॒वसुः॑ ॥ ५

த்வமக்நே த்வஷ்டா விததே ஸுவீர்யம் தவ க்நாவோ மித்ரமஹ: ஸஜாத்யம் ।
த்வமாஶுஹேமா ரரிஷே ஸ்வஶ்வ்யம் த்வம் நராம் ஶர்தோ அஸி புரூவஸு: ॥ 5 ॥

ஓ அக்நீ! நீ த்வஷ்டா ஆகி, உன்னை வழிபடுகின்றவனுக்கு நிறைந்த ஆற்றலை உண்டாக்குகிறாய். எங்களிடம் நட்போடு பழகுகின்ற ஜோதியே! உன்னாலேயே இயற்கைப் பொருள்களிடையே ஒருமைப்பாடு உள்ளது. பெண்தெய்வங்களின் ஆற்றல்களும் உன்னுடைய ஆற்றல்களே. நீ வேகமாகப் பாய்கின்றாய். நீ குதிரைக்கு நல்ல வலிமையை மிகுதியாக வழங்குகின்றாய். நீ தேவர்களின் படையாக உள்ளாய். உன்னுடைய செல்வக்குவியல் பெரியதாக உள்ளது.

त्वम॑ग्ने रु॒द्रो असु॑रो म॒हो दि॒वस्त्वं शर्धो॒ मारु॑तं पृ॒क्ष ई॑शिषे ।
त्वं वातै॑ररु॒णैर्या॑सि शंग॒यस्त्वं पू॒षा वि॑ध॒तः पा॑सि॒ नु त्मना॑ ॥ ६

த்வமக்நே ருத்ரோ அஸுரோ மஹோ திவஸ்த்வம் ஶர்தோ மாருதம்
ப்ருக்ஷ ஈஶிஷே ।
த்வம் வாதைரருணைர்யாஸி ஶம்கயஸ்த்வம் பூஷா விதத: பாஸி நு
த்மநா ॥ 6 ॥

ஓ அக்நீ! நீயே உருத்திரன்; மிக்க வலிமை உடையாய்; மேம்பட்ட தேவர்உலகத்தவன் ஆவாய்; பிராணதேவதைகளின் படையாக உள்ளாய்; விருப்பத்தை நிறைவாக அளிக்கும் எல்லாப் பொருள்களையும், உன் விருப்பப்படி செயற்பட வைத்துள்ளாய். விடியற்காலத்துச் சிவந்த காற்றுக்களை உதவியாகக்கொண்டு நீ பிரயாணம் செய்கிறாய். உன் இருப்பிடம் இன்பமயமானது. பூஷனும் நீயே. உன்னைத் தொழுவோரை நீயே காப்பாற்றுகிறாய்.

त्वम॑ग्ने द्रविणो॒दा अ॑र॒कृते॒ त्वं दे॒वः स॑वि॒ता र॑त्न॒धा अ॑सि ।
त्वं भगो॑ नृपते॒ वस्व॑ ईशिषे॒ त्वं पा॒युर्दमे॒ यस्तेऽवि॑धत् ॥ ७

த்வமக்நே த்ரவிணோதா அரம்க்ருதே த்வம் தேவ: ஸவிதா ரத்நதா
அஸி ।
த்வம் பகோ ந்ருபதே வஸ்வ ஈஶிஷே த்வம் பாயுர்தமே
யஸ்தேऽவிதத் ॥ 7 ॥

ஓ அக்நீ! முழுவதும் ஆயத்தமாய்ச் செயல்களை முடிப்போனுக்கு நீ செல்வத்தை அளிக்கிறாய். நீ ஸவிதா என்ற தேவனாகவும் பகன் என்ற தேவனாகவும் உள்ளாய். நீ மகிழ்ச்சியைப் படைக்கிறாய்; மனிதர்களுக்குத் தலைவனாக உள்ளாய்; செல்வங்களில் உன்னுடைய ஆற்றலைச் செலுத்துகிறாய். மக்கள் தத்தம் செயல்களால் உன்னைத் தொழுகிறார்கள். அவர்கள் வீடுகளை நீ காக்கின்றாய்.

त्वाम॑ग्ने॒ दम॒ आ वि॒श्पतिं॒ विश॒स्त्वां राजा॑नं सुवि॒दत्र॑मृञ्जते ।
त्वं विश्वा॑नि स्वनीक पत्यसे॒ त्वं स॒हस्रा॑णि श॒ता दश॒ प्रति॑ ॥ ८

த்வாமக்நே தம ஆ விஶ்பதிம் விஶஸ்த்வாம் ராஜாநம் ஸுவிதத்ரம்ருஞ்ஜதே ।
த்வம் விஶ்வாநி ஸ்வநீக பத்யஸே த்வம் ஸஹஸ்ராணி ஶதா தஶப்ரதி ॥ 8 ॥

ஓ அக்நீ! மனிதனுடைய வீட்டிலே நீ அவனுக்குத் தலைவனாக உள்ளாய். உன் பக்கமே மக்கள் நோக்குகிறார்கள். நீ அறிவு நிறைந்த அரசனாக உள்ளாய். உனக்கு மக்கள் முடிசூட்டுகின்றனர். நீ ஆற்றல் மிக்கவன்; உன் கதிர்களை உனக்கு வலிமையாகக் கொண்டிருக்கிறாய். எல்லாப்பொருள்களுக்கும் நீ தலைவனாக உள்ளாய். ஆயிரக்கணக்கான, நூற்றுக்கணக்கான, பத்துக் கணக்கான தொகுதியாக உள்ள பொருள்களை நோக்கி நீ சென்றுகொண்டிருக்கிறாய்.

त्वाम॑ग्ने पि॒तर॑मि॒ष्टिभि॒र्नर॒स्त्वां भ्रात्राय॒ शम्या॑ तनू॒रुच॑म् ।
त्वं पु॒त्रो भ॑वसि॒ यस्तेऽवि॑ध॒त्त्वं सखा॑ सु॒शेवः॑ पास्या॒धृषः॑ ॥ ९

த்வாமக்நே பிதரமிஷ்டிபிர்நரஸ்த்வாம் ப்ராத்ராய ஶம்யா தநூருசம் ।
த்வம் புத்ரோ பவஸி யஸ்தேऽவிதத் த்வம் ஸகா ஸுஶேவ: பாஸ்யாத்ருஷ: ॥ 9 ॥

மக்கள் தங்கள் வேள்விகளால் உன்னைத் தந்தையைத் தொழுவது போலத் தொழுகிறார்கள். அவர்களுடைய செயல்களை நீ நன்கு முடித்துவைக்கிறாய். உன் ஒளியினாலே உன் உடல் பிரகாசமாக உள்ளது. அத்தகைய உன்னைத் தொழுது, மக்கள் தம் சகோதரனாய் இருக்குமாறு வேண்டுகின்றனர். உன்னை வழிபடுகின்றவனுக்கு நீ மகனாகவும் உள்ளாய். நீ அவனுக்கு இனிய நண்பனாகவும் இருந்து, அவனைப் பகைவனுடைய கொடுமையிலிருந்து காப்பாற்றுகிறாய்.

त्वम॑ग्न ऋ॒भुरा॒के न॑म॒स्य१॒॑स्त्वं वाज॑स्य क्षु॒मतो॑ रा॒य ई॑शिषे ।
त्वं वि भा॒स्यनु॑ दक्षि दा॒वने॒ त्वं वि॒शिक्षु॑रसि य॒ज्ञमा॒तनिः॑ ॥ १०

த்வமக்ந ருபுராகே நமஸ்யஸ்த்வம் வாஜஸ்ய க்ஷுமதோ ராய ஈஶிஷே ।
த்வம் வி பாஸ்யநு தக்ஷி தாவநே த்வம் விஶிக்ஷுரஸி யக்ஞமாதநி: ॥*10* ॥

ஓ அக்நீ! நீ சிற்பியாகிய ரிபுவாகி எம் பக்கத்தில் உள்ளாய். அடைக்கலம் புகுவதற்கும், வணக்கத்தோடு வழிபடுவதற்கும் நீ ஏற்றவனாய் உள்ளாய். பலவகைப்பட்ட செல்வக் குவியல்களையும் உன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறாய். உன்னுடைய பிரகாசம் மிகுந்த அழகு, எங்களுக்குச் செல்வத்தை வழங்குதற்பொருட்டே உள்ளது. நீயே எங்களுக்கு அறிவினை வழங்குகின்றாய். வேள்விகளை நீயே ஆயத்தம் செய்கிறாய்.

त्वम॑ग्ने॒ अदि॑तिर्देव दा॒शुषे॒ त्वं होत्रा॒ भार॑ती वर्धसे गि॒रा ।
त्वमिळा॑ श॒तहि॑मासि॒ दक्ष॑से॒ त्वं वृ॑त्र॒हा व॑सुपते॒ सर॑स्वती ॥ ११

த்வமக்நே அதிதிர்தேவ தாஶுஷே த்வம் ஹோத்ரா பாரதீ வர்த்தஸே கிரா ।
த்வமிளா ஶதஹிமாஸி தக்ஷஸே த்வம் வ்ருத்ரஹா வஸுபதே ஸரஸ்வதீ ॥*11* ॥

ஓ அக்நிதேவனே! வேள்விசெய்து தேவர்களுக்கு உணவு வழங்குபவனுக்குப் பிரிக்கமுடியாத அன்னை அதிதியாகவும் நீ உள்ளாய். எல்லாத் தேவர்களுக்கும் வழங்கப்படும் மந்திர வார்த்தைகளின் வடிவாகிய பாரதியும் நீயே. உன்னைப் போற்றிப் புகழ்தலால் நீ வளருகின்றாய். எதனையும் கூர்மையான புத்தியினால் உள்ளவாறு அறியும் ஆற்றல் வாய்ந்தவளும், நூறு வயது ஆகி மூத்தவளும் ஆகிய இளாவும் நீயே. செல்வத்துக்கு உரிமை உடையோனே! விருத்திரன் என்னும் பகைவனை அழிக்கும் சரஸ்வதிதேவியும் நீயே.

त्वमग्ने सुभृत उत्तमं वयस्तव स्पार्हे वर्ण आ संदृशि श्रियः ।
त्वं वाजः प्रतरणो बृहन्नसि त्वं रयिर्बहुलो विश्वतस्पृथुः ॥ १२

த்வமக்நே ஸுப்ருத உத்தமம் வயஸ்தவ ஸ்பார்ஹே வர்ண ஆ ஸம்த்ருஶி ஶ்ரிய: ।
த்வம் வாஜ: ப்ரதரணோ ப்ருஹந்நஸி த்வம் ரயிர்பஹுளோ விஶ்வதஸ்ப்ருது: ॥12 ॥

ஓ அக்நீ! உன்னை நாங்கள் வேள்விகளில் நன்கு வளர்க்கும் போது, நீயே எங்கள் வாழ்க்கையின் உயர்ந்த வளர்ச்சி ஆகின்றாய். உன் முழுமையான பார்வையில் எல்லா அழகுகளும் சிறப்புக்களும் உள்ளன. உள்ளத்தைக் கவரும் உன் நிறத்திலும், அழகும் சிறப்பும் உள்ளன. அளவு கடந்த பெரியோனே! நீ எங்கள் பாதையின் கடைசி எல்லை வரை, எங்களை வழிகாட்டி அழைத்துச்செல்லும் பூரணப்பொருளாய் உள்ளாய். எல்லாப் பக்கங்களிலும் பரவியுள்ள செல்வங்களின் குவியலாகவும் நீ உள்ளாய்.

त्वामग्न आदित्यास आस्यं१त्वां जिह्वां शुचयश्चक्रिरे कवे ।
त्वां रातिषाचो अध्वरेषु सश्चिरे त्वे देवा हविरदन्त्याहुतम् ॥ १३

த்வாமக்ந ஆதித்யாஸ ஆஸ்யம் த்வாம் ஜிஹ்வாம் ஶுசயஶ்சக்ரிரே கவே ।
த்வாம் ராதிஷாசோ அத்வரேஷு ஸஶ்சிரே த்வே தேவா ஹவிரதந்த்யாஹுதம் ॥13 ॥

ஓ அக்நீ! பிரிக்கமுடியாத அன்னை அதிதியின் புதல்வர்களாகிய தேவர்கள் உன்னைத் தங்கள் வாயாக வைத்துக் கொண்டுள்ளார்கள். பரிசுத்தராகிய அத்தேவர்கள் உன்னைத் தங்கள் நாக்காகவும் கொண்டுள்ளார்கள். உண்மையைக் காண்போனே! நாங்கள் வழங்கும் கொடையை எப்பொழுதும் எதிர்பார்த்து இருப்பவர்கள், வேள்விச்செயல்களில் உன்னிடத்தும் நீங்காத பற்றுடன் உள்ளனர். தேவர்கள் தம் முன்பு அளிக்கப்பட்ட ஹவிஸை உன் வழியாக உண்கின்றனர்.

त्वे अग्ने॒ विश्वे॑ अ॒मृता॑सो अ॒द्रुहः॑ आ॒सा दे॒वा ह॒विर॑द॒न्त्याहु॑तम् ।
त्वया॒ मर्ता॑सः स्वदन्त आसु॒तिं त्वं गर्भो॑ वी॒रुधां॑ जज्ञिषे॒ शुचिः॑ ॥ १४

த்வே அக்நே விஶ்வே அம்ருதாஸோ அத்ருஹ ஆஸா தேவா ஹவிரதந்த்யாஹுதம் ।
த்வயா மர்தாஸ: ஸ்வதந்த ஆஸுதிம் த்வம் கர்போ வீருதாம் ஜக்ஞிஷே ஶுசி: ॥14॥

ஓ அக்நீ! அழிவு அற்றவர்களான தேவர்கள் மனிதனுக்குத் தீங்கு செய்யாதவர்கள். அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட ஹவிஸை உன்னிடத்திலேயே உன் வாயாலேயே உட்கொள்வார்கள். இறந்துபோகக்கூடிய மனிதன், உன்னாலேயே ஸோமரஸத்தின் சுவையை அறிவான். உலக வளர்ச்சிகளின் குழந்தை ஆகிய நீ தூயவனாகப் பிறக்கின்றாய்.

त्वं तान् त्सं च॒ प्रति॑ चासि म॒ज्मनाऽग्ने॑ सुजात॒ प्र च॑ देव रिच्यसे ।
पृ॒क्षो यदत्र महि॒ना वि ते॒ भुव॒दनु॒ द्यावा॑पृथि॒वी रोद॑सी उ॒भे ॥ १५

த்வம் தாந்த்ஸம் ச ப்ரதி சாஸி மஜ்மநாऽக்நே ஸுஜாத ப்ர ச தேவ ரிச்யஸே ।
ப்ருக்ஷோ யதத்ர மஹிநா வி தே புவதநு த்யாவாப்ருதிவீ ரோதஸீ உபே ॥15॥

ஓ அக்நீ! நீ முழுமையான பிறவியைப் பெற்றிருக்கிறாய். தேவருடன் இருக்கின்றாய்; உன்னுடைய வலிமையினாலே அவர்களுடைய முன்னணியிலும் நிற்கிறாய். ஓ தேவனே! உன் நிறைவு எல்லோருக்கும் திருப்தி அளிக்கிறது. உன் நிறைவு, தன் பெருமையால் நிலவுலகிலும் வான்உலகிலும் எங்கும் பரவும்போது, நீ மற்ற தேவர்களைக் காட்டிலும் மேம்பட்டவனாக உள்ளாய்.

ये स्तोतृभ्यो गोअग्रामश्वपेशसमग्ने रातिमुपसृजन्ति सूरयः ।
अस्माञ्च तांश्च प्र हि नेषि वस्य आ बृहद्वदेम विदथे सुवीराः ॥ १६

யே ஸ்தோத்ருப்யோ கோஅக்ராமஶ்வபேஶஸமக்நே ராதிமுபஸ்ருஜந்தி ஸூரய: ।
அஸ்மாஞ்ச தாம்ஶ்ச ப்ர ஹி நேஷி வஸ்ய ஆ ப்ருஹத் வதேம விததே ஸுவீரா: ॥16 ॥

நன்கு விளக்கமுற்ற அறிவுடையோர்கள், உன் கிரணங்களாகிய பசுவை முன்னிட்டுக் குதிரைவடிவம் கொண்ட உன் செல்வத்தை, உன்னைப் போற்றிப் புகழ்கின்றவர்களுக்கு வழங்குகின்றனர். அப்போது, நீ எங்களையும் அவர்களையும் மேம்பட்ட செல்வ உலகிற்குச் செலுத்துகின்றாய். நாங்கள் வீரர்களுக்குள் ஆற்றல் பெற்ற வல்லவர்களாகி, ஞானம் தோன்றுதலால், பரந்த பரப்புடைய பெருவெளியை எங்கள் சொற்களால் போற்றிப் பேசுவோமாக.

ஸூக்தம் 2

यज्ञेन वर्धत जातवेदसमग्निं यजध्वं हविषा तना गिरा ।
समिधानं सुप्रयसं स्वर्णरं द्युक्षं होतारं वृजनेषु धूर्षदम् ॥ १

யக்ஞேந வர்த்தத ஜாதவேதஸமக்நிம் யஜத்வம் ஹவிஷா தநா கிரா ।
ஸமிதாநம் ஸுப்ரயஸம் ஸ்வர்ணரம் த்யுக்ஷம் ஹோதாரம் வ்ருஜநேஷு தூர்ஷதம் ॥1 ॥

பிறவி எடுத்த எல்லாப் பொருள்களையும் அறிந்தவன் அக்நி. அவனை வேள்வி செய்தலால் வளரச்செய்வோமாக. வேள்வியில் அவிசு முதலி யவற்றை வழங்குதலாலும், மந்திர வார்த்தைகளை ஒலிப்பதாலும் அவனை வழிபடுக. அக்நி மிகுந்த மகிழ்ச்சி உடையவன். அவன் சூரியஉலகில் உள்ள ஆண்மகன். தேவர்களை எல்லாம் வேள்விகளுக்கு அழைக்கும் புரோகிதன் ஆகிய ஹோதா அவனே. சண்டைகள் நடக்கும்போது தேர்களின் நுகமாகிய முன்னிடத்தில் அமர்ந்து தேரைச்

செலுத்துகின்றவனாய்த் தேவர் உலகில் வசிப்பவன் அவனே. இத்தகையவனாய், தூண்டப்பட்டு ஒளிவீசும் அக்நிபகவானைத் தொழுக.

अभि त्वा नक्तीरुषसो ववाशिरेऽग्ने वत्सं न स्वसरेषु धेनवः ।
दिव इवेदरतिर्मानुषा युगा क्षपो भासि पुरुवार संयतः ॥ २

அபி த்வா நக்தீருஷஸோ வவாஶிரேऽக்நே வத்ஸம் ந ஸ்வஸரேஷு தேநவ: ।
திவஇவேதரதிர்மாநுஷா யுகா க்ஷபோ பாஸி புருவார ஸம்யத: ॥ 2 ॥

ஓ அக்நியே! பசுக்கள் கொட்டில்களில் தம் கன்றுகளை விருப்பத்தோடு அணைத்துக்கொள்வதைப் போல, இரவுப் பொழுதுகளும் விடியற்காலப் பொழுதுகளும் உன்னை அணைத்துக்கொள்கின்றன. பலவகை வாழ்த்துக்களுக்கும் நீ ஏற்றவனாய் உள்ளாய். மனிதஇனத்தின் வாழ்நாள்கள் முழுவதும், நீ வான்உலகத்தில் பிரயாணம் செய்கிறாய். மனிதனுடைய இரவுப்பொழுதுகள் முழுவதும் நீ உனக்குள் அடங்கியிருந்து, அவனுடைய இரவுப்பொழுதுகளைக் காப்பாற்றுகின்றாய்.

तं देवा बुध्ने रजसः सुदंससं दिवस्पृथिव्योररतिं न्येरिरे ।
रथमिव वेद्यं शुक्रशोचिषमग्निं मित्रं न क्षितिषु प्रशस्यम् ॥ ३

தம் தேவா புத்நே ரஜஸ: ஸுதம்ஸஸம் திவஸ்ப்ருதிவ்யோரரதிம் ந்யேரிரே ।
ரதமிவ வேத்யம் ஶுக்ரஶோசிஷமக்நிம் மித்ரம் ந க்ஷிதிஷு ப்ரஶஸ்யம் ॥ 3 ॥

தேவர்கள், நிலஉலகம் வான்உலகம் ஆகிய இரண்டு உலகங்களிலும் பிரயாணம் செய்பவனும், பெரிய காரியங்களை நிறைவேற்றும் தகுதி உடையவனும் ஆகிய அக்நியை, நடுஉலகை உண்டாக்க அஸ்திவாரம் அமைக்குமாறு அனுப்பினர். அக்நியை,நாம் வெண்மையாகக் கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கும் நம் தேரினைப் போல உணரவேண்டும். மக்களிடத்தில் நண்பனைப் போலப் பழகும் அந்த அக்நியை நாம் போற்றி வழிபடுதலால் வணங்கவேண்டும்.

तमुक्षमा॑णं॒ रज॑सि॒ स्व आ दमे॑ च॒न्द्रमि॑व सु॒रुचं॑ ह्वा॒र आ द॑धुः ।
पृश्न्याः॑ पत॒रं चि॒तय॑न्तम॒क्षभिः॑ पा॒थो न पा॒युं जन॑सी उ॒भे अनु॑ ॥ ४

தமுக்ஷமாணம் ரஜஸி ஸ்வ ஆ தமே சந்த்ரமிவ ஸுருசம் ஹ்வார ஆ தது:।
ப்ருஶ்ந்யா: பதரம் சிதயந்தமக்ஷபி: பாதோ ந பாயும் ஜநஸீ உபே அநு ॥ 4 ॥

அக்நி இருவகைப் பிறப்பிலும் நம் பாதையைக் காப்பாற்றுபவன்; எதனையும் காணும் ஆற்றல் பொருந்திய தன்னுடைய கண்களால் நம் அறிவுக்கண்களைத் திறந்துவைப்பவன்; பல நிறங்களை உடைய தாயைக் காப்பாற்றுபவன். அவன் தன்னுடைய பிரகாசத்தின் அழகில் பசும்பொன் போன்ற மழையைப் பெய்கிறான். அவனை நடுஉலகிலே அவனுடைய வீட்டிலே கோணல்களாக உள்ள எல்லையிலே நிலைபெறச் செய்தனர்.

स होता॒ विश्वं॒ परि॑ भूत्वध्व॒रं तमु॑ ह॒व्यैर्मनु॑ष ऋञ्जते गि॒रा ।
हि॒रि॒शि॒प्रो वृ॑धसा॒नासु॒ जर्भु॑रद्द्यौर्न स्तृ॒भिश्चि॑तय॒द्रोद॑सी॒ अनु॑ ॥ ५

ஸ ஹோதா விஶ்வம் பரி பூத்வத்வரம் தமு ஹவ்யைர்மநுஷ ருஞ்ஜதே கிரா।
ஹிரிஶிப்ரோ வ்ருதஸாநாஸு ஜர்புரத் த்யௌர்ந ஸ்த்ருபிஶ் சிதயத்ரோதஸீ அநு ॥ 5 ॥

அக்நிபகவான் உனக்காகத் தேவர்களை அழைக்கும் புரோகிதனாகி (ஹோதா) இருப்பானாகுக. வேள்விச்செயல்கள் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு அவன் எங்கும் எழுந்தருளுவான் ஆகுக. மக்கள் மந்திரச் சொற்களாலும், வேள்வியில் உணவு அளிப்பதாலும் அவனுக்கு வேள்வியில் முடிசூட்டுகின்றனர். அவன் பொன் போல ஒளிவீசும் முடியைச் சூடிக்கொண்டு, ஒளிவீசும் தீப்பிழம்புகளிடையே விளையாடுவான். வானம் நட்சத்திரங்களால் நிரம்பி இருப்பது போல, இவ்வுலகம் பல பொருள்களாலும் நிரம்பியிருக்கிறது. பூமி, வானம் என்ற இரண்டு உலகங்களிலும் நாம் அடிவைத்து நடப்பதற்கு வேண்டிய அறிவை அவன் நமக்கு வழங்குபவன் ஆகுக.

स नो॑ रे॒वत्स॑मिधा॒नः स्वस्तये॑ संद॒स्वान् र॒यिम॒स्मासु॑ दीदिहि ।
आ नः॑ कृणुष्व सुवि॒ताय॒ रोद॑सी॒ अग्ने॑ ह॒व्या मनु॑षो देव वी॒तये॑ ॥ ६

ஸ நோ ரேவத்ஸமிதாந: ஸ்வஸ்தயே ஸம்ததஸ்வாந் ரயிமஸ்மாஸு தீதிஹி।
ஆ ந: க்ருணுஷ்வ ஸுவிதாய ரோதஸீ அக்நே ஹவ்யா மநுஷோ தேவ வீதயே ॥ 6 ॥

ஓ அக்நீ! உன் ஒளி தூண்டிவிடப்பட்டு, எங்கள் மனஅமைதிக்காக எங்கள் உள்ளத்தில் எழுந்து, நீ வழங்கும் செல்வமாகிய கொடையை எங்களுக்குக் கொண்டுவந்து வழங்குவது ஆகுக. நீ எங்கள் மகிழ்ச்சி தரும் பிரயாணத்திற்காக, இவ்வுலகையும் வான்உலகையும் வழிசெய்து கொடுப்பாயாக. மனிதன் வேள்வியில் வழங்கும் பொருள்களை, தேவர்கள் அவனை நோக்கி வருவதற்கு உரிய வழிகளாக ஆக்குவாயாக.

दा नो॑ अग्ने बृह॒तो दाः स॑ह॒स्रिणो॑ दु॒रो न वाज॒ं श्रुत्या॒ अपा॑ वृधि ।
प्राची॒ द्यावा॑पृथि॒वी ब्रह्म॑णा कृधि॒ स्व१॒॑र्ण शु॒क्रमु॒षसो॒ वि दि॑द्युतुः ॥ ७

தா நோ அக்நே ப்ருஹதோ தா: ஸஹஸ்ரிணோ துரோ ந வாஜம் ஶ்ருத்யா அபா வ்ருதி।
ப்ராசீ த்யாவாப்ருதிவீ ப்ரஹ்மணா க்ருதி ஸ்வர்ண ஶுக்ரமுஷஸோ வி தித்யுத: ॥ 7 ॥

ஓ அக்நீ! பல வகையாகப் பரவியுள்ள ஆயிரக்கணக்கான செல்வங்களை எங்களுக்கு அளிப்பாயாக. வாயிற்படிகளின் கதவுகளைத் திறப்பது போல, உன்னுடைய அருள் எங்களிடம் உட்புகுதல் (ஆவேசம்) பொருட்டு, நிறைந்த பொருள்களை எங்களுக்குத் திறந்து அருளுவாயாக. மந்திரச்சொற்களால், பூமியும் வான்உலகும் எல்லாம் கடந்த திசையை நோக்கித் திரும்புமாறு செய்தருள்வாயாக. விடியற்காலத் தெய்வங்கள், சூரியனுடைய பொன்உலகம் ஒளிவீசுவது போலப் பிரகாசத்துடன் விளங்குகின்றன.

स इ॑धा॒न उ॒षसो॒ राम्या॒ अनु॒ स्वर्ण॑ दीदेदरु॒षेण॑ भा॒नुना॑ ।
होत्रा॑भिर॒ग्निर्मनु॑षः स्वध्व॒रो राजा॑ वि॒शामति॑थि॒श्चारु॑रा॒यवे॑ ॥ ८

ஸ இதாந உஷஸோ ராம்யா அநு ஸ்வர்ண தீதேதருஷேண பாநுநா ।
ஹோத்ராபிரக்நிர்மநுஷ: ஸ்வத்வரோ ராஜா விஶாமதிதிஶ்
சாருராயவே ॥ 8 ॥

அழகு மிகுந்த விடியற்காலத் தேவதைகளின் உலாவரும் செயலிலே, அக்நி தூண்டிவிடப்பட்டு ஸுவர்லோகம் போலச் சிவந்த ஒளியுடன் விளங்குவான். ஓ அக்நீ! மனிதன் மந்திரச்சொற்களோடு பொருள்களை வழங்குவதால், வேள்வியை நீ பயன்உடையதாய்ச் செய்துகொண்டு, மக்களுக்கு அரசனாகவும், அவர்களுக்கு மகிழ்ச்சி தரும் விருந்தினன் ஆகவும் விளங்குகிறாய்.

ए॒वा नो॑ अग्ने अ॒मृते॑षु पूर्व्य॒ धीष्पा॑पाय बृ॒हद् दिवे॑षु मानु॑षा ।
दु॒हा॑ना धे॒नुर्वृ॒जने॑षु का॒रवे॒ त्मना॑ श॒तिनं॑ पुरु॒रूप॑मि॒षणि॑ ॥ ९

ஏவா நோ அக்நே அம்ருதேஷு பூர்வ்ய தீஷ்பீபாய ப்ருஹத்திவேஷு
மாநுஷா ।
துஹாநா தேநுர்வ்ருஜநேஷு காரவே த்மநா ஶதிநம் புருரூபமிஷணி ॥ 9 ॥

பழங்காலப் பண்பு கெடாத அக்நீ! இவ்வண்ணமே, எங்கள் எண்ணங்கள், எங்கள் மனிதரோடு தொடர்புடைய பொருள்களை, அழிவில்லாத தேவர்களிடத்தில் அவர்களுடைய தெய்வஉலகுகளில் வளம்பெறச் செய்துள்ளன. அச்சிந்தனையே, எங்களுக்குப் பால் பொழியும் பசுவாகும். அப்பசு, செயல்களை நன்கு முடிப்பவனுக்கு, அவனுடைய போர்களின்போது, தானே பாலினைக் கறந்து அளிக்கிறாள்; அவனுடைய பிரயாணத்தின் விரைவில் பல வடிவங்களை உடைய நூற்றுக்கணக்கான செல்வங்களை அளிக்கிறாள்.

व॒यम॑ग्ने॒ अर्व॑ता वा सु॒वीर्यं॒ ब्रह्म॑णा वा चितयेमा॒ जना॒ँ अति॑ ।
अ॒स्माकं॑ द्यु॒म्नमधि॒ पञ्च॑ कृ॒ष्टिषू॒च्चा स्व॑र्ण शु॑शुचीत दु॒ष्टर॑म् ॥ १०

வயமக்நே அர்வதா வா ஸுவீர்யம் ப்ரஹ்மணா வா சிதயேமா ஜநாந் அதி।
அஸ்மாகம் த்யும்நமதி பஞ்ச க்ருஷ்டிஷூச்சா ஸ்வர்ண ஶுஶுசீத துஷ்டரம் ॥10॥

ஓ அக்நீ! போர்க்குதிரையால் நாங்கள் வீரர்களுடைய வலிமையைப் பெறுவோமாக. அஃது இல்லை எனில், நாங்கள் மந்திரச் சொற்களால் மனிதநிலைக்கு அப்பாற்பட்ட ஞானத்தைப் பெறுவோமாக. எங்கள் ஞானஒளி, சூரியனுடைய உலகம் போல உயர்ந்து, யாராலும் கெடுக்கமுடியாத ஐவகை மக்களிடத்தில் விளங்குவதாகுக.

स नो॑ बोधि सहस्य प्र॒शंस्यो॒ यस्मि॑न्त्सु॒जाता॒ इष॑यन्त सू॒रयः॑ ।
यम॑ग्ने य॒ज्ञमु॑प॒यन्ति॑ वा॒जिनो॒ नित्ये॑ तो॒के दी॑दि॒वांसं॒ स्वे दमे॑ ॥ ११

ஸ நோ போதி ஸஹஸ்ய ப்ரஶம்ஸ்யோ யஸ்மிந்த்ஸுஜாதா இஷயந்த ஸூரய:।
யமக்நே யக்ஞமுபயந்தி வாஜிநோ நித்யே தோகே தீதிவாம்ஸம் ஸ்வே தமே ॥11॥

ஓ அக்நீ! நீ விழித்துக்கொள். பேராற்றல் உடையோனே! எங்கள் வழிபாட்டுக்கு உரியவனே! உன்னிடத்தில் விளக்கம் பெற்ற சான்றோர்கள் நம் வழியிலே விரைவாகச் செல்கின்றனர்; நிறைவான பிறப்பைப் பெறுகின்றனர். ஓ அக்நீ! நீயே வேள்வி ஆவாய். உன் சொந்த வீட்டிலே, என்றும் அழிவில்லாதவனாகிய மகனிடத்திலே, நீ ஒளியுடன் விளங்கும் இடத்திலே, உன்னை நோக்கிக் குதிரைகள் விரைவாக வருகின்றன.

उ॒भया॑सो जातवेदः स्याम ते स्तो॒तारो॑ अग्ने सू॒रय॑श्च॒ शर्म॑णि ।
वस्वो॑ रा॒यः पु॑रुश्च॒न्द्रस्य॒ भूय॑सः प्र॒जाव॑तः स्वप॒त्यस्य॑ शग्धि नः ॥ १२

உபயாஸோ ஜாதவேத: ஸ்யாம தே ஸ்தோதாரோ அக்நே ஸூரயஶ்ச ஶர்மணி ।
வஸ்வோ ராய: புருஶ்சந்த்ரஸ்ய பூயஸ: ப்ரஜாவத: ஸ்வபத்யஸ்ய ஶக்தி ந: ॥12॥

ஓ அக்நீ! தோன்றும் பொருள்கள் எல்லாவற்றையும் அறிந்தவனே! உன்னைப் போற்றி நாங்கள் வழிபடுகிறோம். நாங்களும் அறிஞர்களும் ஆகிய இருவரும் உன்னால் வழங்கப்படும் அமைதியில் இருப்போமாக. நீ பேராற்றல் உடையவனாய் இருத்தல்வேண்டும். அதனால் செல்வக்குவியல்கள் அடங்கிய வளம் பெருகவேண்டும். அவைகள் பலவாக மகிழவேண்டும்.

ये स्तो॒तृभ्यो॒ गोअ॑ग्रा॒मश्व॑पेशस॒मग्ने॑ रा॒तिमु॑पसृ॒जन्ति॑ सू॒रयः॑ ।
अ॒स्माञ्च॒ तांश्च॒ प्र हि नेषि॒ वस्य॒ आ बृ॒हद्व॑देम वि॒दथे॑ सुवी॒राः ॥ १३

யே ஸ்தோத்ருப்யோ கோஅக்ராமஶ்வபேஶஸமக்நே ராதிமுபஸ்ருஜந்தி ஸூரய: ।
அஸ்மாஞ்ச தாம்ஶ்ச ப்ர ஹி நேஷி வஸ்ய ஆ ப்ருஹத் வதேம விததே ஸுவீரா: ॥13॥

நன்கு விளக்கம்பெற்ற அறிவுடையோர்கள், உன் கிரணங்களாகிய பசுவை முன்னிட்டு, குதிரைவடிவம் கொண்ட உன் செல்வத்தை, உன்னைப் போற்றிப் புகழ்பவருக்கு வழங்குகின்றனர். அப்பொழுது நீ எங்களையும் அவர்களையும் மேம்பட்ட செல்வஉலகிற்குச் செலுத்துகின்றாய். நாங்கள் வீரர்களில் ஆற்றல் பெற்ற வல்லவர்களாகி, ஞானம் தோன்றுதலால், பரந்த பரப்புடைய பிரிக்கமுடியாத பெருவெளியை எங்கள் மந்திரச்சொற்களால் போற்றிப் பேசுவோமாக.

ஸூக்தம் 3

समिद्धो अग्निर्निहितः पृथिव्यां प्रत्यङ् विश्वानि भुवनान्यस्थात् ।
होता पावकः प्रदिवः सुमेधा देवो देवान्यजत्वग्निरर्हन् ॥ १

ஸமித்தோ அக்நிர் நிஹித: ப்ருதிவ்யாம் ப்ரத்யங் விஶ்வாநி புவநாந்யஸ்தாத் ।
ஹோதா பாவக: ப்ரதிவ: ஸுமேதா தேவோ தேவாந் யஜத்வக்-நிரர்ஹந் ॥ *1* ॥

பூமியின் உள்பக்கமாய் இடப்பட்ட அக்நி நன்கு தூண்டப்பட்டு, வெளியே புறப்பட்டு, எல்லா உலகங்களையும் நோக்கி நிற்கிறான். அவன் தேவர்களை அழைக்கும் செயலைச் செய்யும் புரோகிதனும், தூய்மை தரும் பிரகாசம் உடையவனும், பழைமையானவனும், நல்ல அறிவுடையவனுமாக எழுந்தருளியுள்ளான். ஆற்றல் நிறைந்த தேவனாகிய அக்நி இன்று தேவர்களுக்கு வேள்வியை அளிப்பான் ஆகுக.

नराशंसः प्रति धामान्यञ्जन् तिस्रो दिवः प्रति मह्ना स्वर्चिः ।
घृतप्रुषा मनसा हव्यमुन्दन्मूर्धन्यज्ञस्य समनक्तु देवान् ॥ २

நராஶம்ஸ: ப்ரதி தாமாந்யஞ்ஜந் திஸ்ரோ திவ: ப்ரதி மஹ்நா ஸ்வர்சி: ।
க்ருதப்ருஷா மநஸா ஹவ்யமுந்தந்மூர்தந்யக்ஞஸ்ய ஸமநக்து தேவாந் ॥ *2* ॥

தேவர்களைப் புகழ்ந்து பேசும் அக்நி உலகங்களை ஒவ்வொன்றாக வெளிப்படுத்திக்கொண்டு இருக்கிறான். அவன் தன் ஒளிக்கதிர்களால் மேம்பட்டு, தன் பெருமையால், தேவர் உலகங்கள் மூன்றையும் ஒவ்வொன்றாக வெளிப்படுத்திக் காட்டுகிறான். தன் ஒளியினை நாற்புறமும் பரவச்செய்யும் மனத்தினால், நாம் அளிப்பனவற்றை முழுமையாகப் பெற்றுக்கொண்டு, வேள்வியின் தலைப்பக்கத்திலே தேவர்களை அவன் வெளிப்படுத்துவானாக.

ई॒ळि॒तो अ॑ग्ने॒ मन॑सा नो॒ अर्ह॑न्दे॒वान्य॑क्षि॒ मानु॑षा॒त्पूर्वो॑ अ॒द्य ।
स आ व॑ह म॒रुतां॒ शर्धो॒ अच्यु॑त॒मिन्द्रं॑ नरो बर्हि॒षदं॑ यजध्वम् ॥ ३

ஈளிதோ அக்நே மநஸா நோ அர்ஹந் தேவாந் யக்ஷி மாநுஷாத் பூர்வோ அத்ய।
ஸ ஆ வஹ மருதாம் ஶர்த்தோ அச்யுதமிந்த்ரம் நரோ பர்ஹிஷதம் யஜத்வம் ॥ 3 ॥

ஓ அக்நீ! எங்கள் உள்ளத்தால் நீ சிறப்பாக விரும்பப்படுகிறாய். அத்தகைய நீ உன் ஆற்றலை முன்னிட்டுக்கொண்டு, தேவர்களுக்கு இன்று வேள்வியை அளிப்பாயாக. நீ மனிதத் தொடர்புடைய எல்லாப் பொருள்களுக்கும் முற்பட்டு இருக்கின்றாய். நீ எங்களிடமிருந்து நழுவி விழாத பிராண தேவதைகளை எங்களுக்குக் கொண்டுவந்து அருளுவாயாக. மேலும், ஆற்றல் மிக்கவர்களே! எங்கள் வேள்விக்குண்டமாம் இருக்கையில் (ஆசனத்தில்) அமர்ந்திருக்கும் இந்திரனுக்கு அங்கே வேள்விப்பொருள்களை அளிப்பீர்களாக.

देव॑ बर्हि॒र्वर्ध॑मानं सु॒वीरं॑ स्ती॒र्णं रा॒ये सु॒भरं॒ वेद्य॒स्याम् ।
घृ॒तेनाक्तं॑ व॑सवः सीदते॒दं विश्वे॑ देवा आदित्या य॒ज्ञिया॑सः ॥ ४

தேவ பர்ஹிர்வர்தமாநம் ஸுவீரம் ஸ்தீர்ணம் ராயே ஸுபரம் வேத்யஸ்யாம்।
க்ருதேநாக்தம் வஸவ: ஸிததேதம் விஶ்வே தேவா ஆதித்யா யக்ஞியாஸ: ॥ 4 ॥

ஓ தெய்வமே! இந்த வேள்விமேடையில் ஆசனம் பரப்பப்பட்டுள்ளது. இஃது எப்போதும் வளர்கிறது. ஒளி பொருந்திய செல்வத்தைத் தாங்குவதற்குத் தகுந்தபடி அஃது உறுதியாக அமைக்கப்பட்டுள்ளது. ஓ விசுவதேவர்களே! பிரிக்க முடியாத அதிதியின் புதல்வர்களே! செல்வத்தின் தலைவர்களே! வேள்வியைக் காக்கும் அரசர்களே! இந்த வேள்விமேடையில் உள்ள ஆசனத்தில் அமர்வீர்களாக.

वि श्र॑यन्तामुर्वि॒या ह्यू॑यमा॑ना॒ द्वारो॑ दे॒वीः सु॑प्राय॒णा नमो॑भिः ।
व्यच॑स्वती॒र्वि प्र॑थन्तामजु॒र्या वर्णं॑ पुना॒ना य॒शसं॑ सु॒वीर॑म् ॥ ५

வி ஶ்ரயந்தாமுர்வியா ஹ்யூயமாநா த்வாரோ தேவீ: ஸுப்ராயணா நமோபி: ।
வ்யசஸ்வதீர்வி ப்ரதந்தாமஜுர்யா வர்ணம் புநாநா யஶஸம் ஸுவீரம் ॥ 5 ॥

நாங்கள் அடைக்கலம் புகுந்து வணங்குவதால், சுலபமாக அடைவதற்கு ஏற்ற தெய்வத்தன்மை பொருந்திய வாசற்படிக் கதவுகள், எங்கள் அழைப்புக்கு இசைந்து விரைவாய்த் திறந்து கொள்வன ஆகுக. புகழ்பெற்று வீரம் பொருந்திய இனத்தைத் தூய்மை செய்துகொண்டு, அந்த அழிவில்லாத வாசற்படிக் கதவுகள், பெரிய அண்டப்பரப்பின் வெளிப்பக்கமாக அகலமாகத் திறக்கப்படுவன ஆகுக.

सा॒ध्वपां॑सि स॒नता॑ न उक्षि॒ते उ॒षासा॒नक्ता॑ व॒य्ये॑व रण्वि॒ते ।
तन्तुं॑ त॒तं स॑वय॑न्ती समी॒ची य॒ज्ञस्य॒ पेशः॑ सु॒दुघे॒ पय॑स्वती ॥ ६

ஸாத்வபாம்ஸி ஸநதா ந உக்ஷிதே உஷாஸாநக்தா வய்யேவ ரண்விதே ।
தந்தும் ததம் ஸம்வயந்தீ ஸமீசீ யக்ஞஸ்ய பேஶ: ஸுதுகே பயஸ்வதீ ॥ 6 ॥

என்றும் உள்ளவரும், தமக்குத் தாமே ஒப்பானவரும், உடன் பிறந்தோரும் ஆகிய இரவும் விடியற்காலமும் ஆகிய தெய்வங்கள், எங்களிடத்தில் அமுதைப் பொழிந்துகொண்டு, நன்கு பால் தரும் பசுக்களாக உதவுவன ஆகுக. நன்கு நூற்கப்பட்ட குறுக்குநூலை நீளநூலில் நெய்வதில் ஈடுபட்டு, நன்கு நிறைவேற்றப்பட்ட எங்கள் செயல்களாகிய குறுக்குநூலை வேள்வியின் வடிவமாக ஆக்கிக்கொண்டு, நிறைந்த மகிழ்ச்சியோடு, நெய்வதில் ஈடுபடும் இரண்டு பெண்களைப் போல அவர்கள் வருவார்கள் ஆகுக.

दैव्या होतारा प्रथमा विदुष्टर ऋजु यक्षतः समृचा वपुष्टरा ।
देवान् यजन्तावृतुथा समञ्जतो नाभा पृथिव्या अधि सानुषु त्रिषु ॥ ७

தைவ்யா ஹோதார ப்ரதமா விதுஷ்டர ருஜு யக்ஷத: ஸம்ருசா வபுஷ்டரா ।
தேவாந்யஜந்தாவ்ருதுதா ஸமஞ்ஜதோ நாபா ப்ருதிவ்யா அதி ஸாநுஷு த்ரிஷு ॥ 7 ॥

வேள்விக்குத் தெய்வங்களை அழைக்கும் தெய்வப்புரோகிதர் இருவரும் முதன்மையானவர்கள். அறிவிலும் உருவத்திலும் உயர்ந்து நிறைந்தவர்கள். அவர்கள் பிரகாசம் பொருந்திய மந்திரச்சொற்களால் (ரிக்) எம்மிடம் நேர்மையான பொருள்களை அளிக்கிறார்கள். அவர்கள், தேவர்களுக்கு, உரிய காலங்களில் வேள்வியை அளித்துக்கொண்டு, அவர்களை இந்த உலகத்தின் நடுவிலும், தேவர்உலகச் சிகரங்கள் மூன்றிலும் பிரகாசமாக வெளிப்படுத்துகின்றனர்.

सरस्वती साधयन्ती धियं न इळा देवी भारती विश्वतूर्तिः ।
तिस्रो देवीः स्वधया बर्हिरेदमच्छिद्रं पान्तु शरणं निषद्य ॥ ८

ஸரஸ்வதீ ஸாதயந்தீ தியம் ந இளா தேவீ பாரதீ விஶ்வதூர்தி: ।
திஸ்ரோ தேவீ: ஸ்வதயா பர்ஹிரேதமச்சித்ரம் பாந்து ஶரணம் நிஷத்ய ॥ 8 ॥

எம் எண்ணங்களை நிறைவேற்றும் சரஸ்வதியும், இளாதேவியும், எல்லாப் பொருள்களையும் அவைஅவை. செல்லவேண்டும் இடங்களுக்குச் செலுத்துகின்ற பாரதியும் ஆகிய இத்தேவியர் மூவரும், எம்முடைய வேள்விமேடையின் ஆசனத்தில் அமர்ந்து, இடைவெளி இல்லாமல் தொடர்ச்சியாக, நாங்கள் அடைக்கலம் புகுந்த வீட்டினை அப்பொருள்களின் இயற்கைத் தன்மையால் காப்பாற்றுவார் ஆகுக.

पिशङ्गरूपः सुभरो वयोधाः श्रुष्टी वीरो जायते देवकामः ।
प्रजां त्वष्टा वि ष्यतु नाभिमस्मे अथा देवानामप्येतु पाथः ॥ ९

பிஶங்கரூப: ஸுபரோ வயோதா: ஶ்ருஷ்டீ வீரோ ஜாயதே தேவகாம: ।
ப்ரஜாம் த்வஷ்டா வி ஷ்யது நாபிமஸ்மே அதா தேவாநாமப்யேது பாத: ॥ 9 ॥

பொன்நிறமுடைய வீரன்ஒருவன் விரைவில் பிறக்கின்றான். அவன் தேவர்களை அடைய விருப்பம் கொண்டவன்; செல்வங்களை நம்மிடம் கொண்டுவந்து கொடுக்கும் ஆற்றல் உடையவன்; விரிவான பரப்பில் எங்கள் வளர்ச்சியை நிறுவியுள்ளவன். உருவங்களைச் செதுக்கும் தெய்வத்தச்சன் துவஷ்டா, எம்முடைய நடுமைய முடிச்சினை(தொப்புளை)த் தளர்த்துவான் ஆகுக. தேவர்களுடைய பாதையில் நாங்கள் செல்லும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டுவது ஆகுக.

वनस्पतिरवसृजन्नुप स्थादग्निर्हविः सूदयाति प्र धीभिः ।
त्रिधा समक्तं नयतु प्रजानन् देवेभ्यो दैव्यः शमितोप हव्यम् ॥ १०

வநஸ்பதிரவஸ்ருஜந்நுப ஸ்தாதக்நிர்ஹவி: ஸூதயாதி ப்ர தீபி: ।
த்ரிதா ஸமக்தம் நயது ப்ரஜாநந்தேவேப்யோ தைவ்ய: ஶமிதோப ஹவ்யம் ॥ 10 ॥

வனஸ்பதி ஆகிய ஸோமன் ஸோமரஸத்தைப் பாய்ச்சிக் கொண்டு நம்மோடு இருக்கிறான். அக்நிதேவன் நம் எண்ணங்களால் வேள்வியில் அளிக்கப்படும் உணவினை விரைவாகச் செலுத்துகிறான். அவன் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவன். அவன் செயல்களை நன்முறையில் நிறைவேற்றி வைக்கும் தேவன் ஆவான். அவன் வேள்வியில் அளிக்கப்படும் பொருள்களைத் தன் பிரகாசத்தில் மூன்றுமுறை குளிப்பாட்டுகிறான். அங்ஙனம் குளிப்பாட்டப்பட்ட பொருள்களைத் தன் ஒளி வழியே தேவர்களுக்கு அவன் சேர்ப்பிப்பான் ஆகுக.

घृतं मिमिक्षे घृतमस्य योनिर्घृते श्रितो घृतम्वस्य धाम ।
अनुष्वधमा वह मादयस्व स्वाहाकृतं वृषभ वक्षि हव्यम् ॥ ११

க்ருதம் மிமிக்ஷே க்ருதமஸ்ய யோநிர்க்ருதே ஶ்ரிதோ க்ருதம்வஸ்ய தாம ।
அநுஷ்வதமா வஹ மாதயஸ்வ ஸ்வாஹாக்ருதம் வ்ருஷப வக்ஷி ஹவ்யம் ॥ 11 ॥

எங்கும் பரவிச் செல்லும் ஒளியினை அவனிடத்தில் ஊற்றுகிறேன். ஒளியே அவன் தோன்றும் இடமும், வசிக்கும் இடமும், அவனுடைய உலகமும் ஆகும். அக்நியே! உன்னுடைய இயல்பான பண்புக்கு ஏற்பத் தேவர்களைக் கொண்டுவந்து, அவர்களை உன் மகிழ்ச்சியால் நிரப்புவாய் ஆகுக. பசுமந்தையின் நடுவில் உள்ள காளை போன்ற ஆண்மகனே! 'ஸ்வாஹா' என்ற வாழ்த்துடன், நாங்கள் வழங்கும் வேள்விப் பொருள்களை நீ அவர்களிடம் செலுத்துவாயாக.

ஸூக்தம் 4

हुवे वः सुद्योत्मानं सुवृक्तिं विशामग्निमतिथिं सुप्रयसम् ।
मित्र इव यो दिधिषाय्यो भूद् देव आदेवे जने जातवेदाः ॥ १

ஹுவே வ: ஸுத்யோத்மாநம் ஸுவ்ருக்திம் விஶாமக்நிமதிதிம் ஸுப்ரயஸம் ।
மித்ர இவ யோ திதிஷாய்யோ பூத்தேவ ஆதேவே ஜநே ஜாதவேதா: ॥ 1 ॥

அக்நிபகவான் நம்மிடத்தில் உள்ள குற்றங்களை எல்லாம் நீக்குபவன். அவன் மக்கள்இனத்தின் விருந்தாளியாக உள்ளான்; மேம்பட்ட இன்பங்களோடும், தெய்வத்தன்மையோடும் விளங்குகின்றான். அவனை உங்களுக்காக நான் அழைக்கிறேன். அவன் நம்மை விரும்பிப் பாதுகாக்கும் நண்பனைப் போல ஆகின்றான். அவன் மனிதன் முதல் தேவர்கள் வரையில், எல்லாரிடத்தும் தோன்றிய எல்லாப் பொருள்களையும் அறியும் தேவன் ஆகின்றான்.

इमं वि॒धन्तो॑ अ॒पां स॒धस्थे॑ द्वि॒ताद॑धु॒र्भृग॑वो वि॒क्ष्वा३॒॑योः ।
ए॒ष विश्वा॑न्य॒भ्य॑स्तु॒ भूमा॑ दे॒वाना॑म॒ग्निर॑र॒तिर्जी॒राश्वः॑ ॥ २

இமம் விதந்தோ அபாம் ஸதஸ்தே த்விதாததுர்ப்ருகவோ விக்ஷ்வாயோ:।
ஏஷ விஶ்வாந்யப்யஸ்து பூமா தேவாநாமக்நிரரதிர்ஜீராஶ்வ: ॥ 2 ॥

பிருகுக்கள் நீர்களின் சபையிலே அவனைப் பணிந்து, மனிதர்களிடையே இருவகை ஒளியை அமைத்துள்ளார்கள். பெரும்பரப்புடன் எங்கும் பரவியுள்ள உலகங்கள் அனைத்தினையும் அக்நிபகவான் அடக்கி ஆள்வானாக. அவன் தேவர்களின் பிரயாணி; விரைந்து ஓடும் குதிரைகளை உடையவன்.

अ॒ग्निं दे॒वासो॒ मानु॑षीषु वि॒क्षु प्रि॒यं धु॑ः क्षे॒ष्यन्तो॒ न मि॒त्रम् ।
स दी॑दयदुश॒तीरू॒र्म्या आ द॒क्षाय्यो॒ यो दास्व॑ते॒ दम॒ आ ॥ ३

அக்நிம் தேவாஸோ மாநுஷீஷு விக்ஷு ப்ரியம் து: க்ஷேஷ்யந்தோ ந மித்ரம்।
ஸ தீதயதுஶதீரூர்ம்யா ஆ தக்ஷாய்யோ யோ தாஸ்வதே தம ஆ ॥ 3 ॥

ஒரு வீட்டின் நிலையாகக் குடிபுகச் செல்பவன், தன் அன்புக்கு உரிய நண்பன் ஒருவனை அழைத்துக்கொண்டு வருவதைப் போல, தேவர்கள் இம்மனிதர்களின் விருப்பத்திற்கு உரிய நண்பனாக. அக்நிபகவானை அமைத்துள்ளனர். அலைகளைப் போல இங்கும் அங்கும் அலையும் இரவுகளின் விருப்பத்தை அவன் விளக்கமுறச் செய்வான் ஆகுக. அவன் வேள்விகளை அளிப்பவனுடைய வீட்டில் அறிவு நிரம்பிய மனத்தோடு நிலையாக இருப்பானாக.

अस्य रण्वा स्वस्येव पुष्टिः संदृष्टिरस्य हियानस्य दक्षोः ।
वि यो भरिभ्रदोषधीषु जिह्वामत्यो न रथ्यो दोधवीति वारान् ॥ ४

அஸ்ய ரண்வா ஸ்வஸ்யேவ புஷ்டி: ஸம்த்ருஷ்டிரஸ்ய ஹியாநஸ்ய தக்ஷோ:।
வி யோ பரிப்ரதோஷதீஷு ஜிஹ்வாமத்யோ ந ரத்யோ தோதவீதி வாராந் ॥4॥

அக்நியினுடைய வளர்ச்சி ஒருவனுடைய வளம் நிரம்பிய வாழ்க்கை போல இனிமையானது. பாதைகளிலே தூண்டப்பட்டு, எரிந்துகொண்டு அவன் விரைந்து ஓடும் காட்சி மகிழ்ச்சியைத் தருவதாகும். காடுகளின் வளர்ச்சியில் அக்நி தன் நாவினை விரைந்து எரிவது போல நீட்டுகிறான். மேலும் தேரில் பூட்டிய குதிரையைப் போல அவன் தன் பிடரியைக் குலுக்குகிறான்.

आ यन्मे अम्बं वनदः पनन्तोशिग्भ्यो नामिमीत वर्णम् ।
स चित्रेण चिकिते रंसु भासा जुजुर्वाँ यो मुहुरा युवा भूत् ॥ ५

ஆ யந்மே அப்வம் வநத: பநந்தோஶிக்ப்யோ நாமிமீத வர்ணம்।
ஸ சித்ரேண சிகிதே ரம்ஸு பாஸா ஜுஜுர்வாந் யோ முஹுரா யுவா பூத் ॥5॥

என் எண்ணங்கள் அக்நியிடம் இன்புற்று அவன் பெருமையைப் போற்றுகின்றன. அவன் நம்முடைய விருப்பத்திற்கு உடன்பட்டுச் செயற்படுவது போல, ஒரு நிறத்தை உண்டாக்குகிறான். பலவகையாக வேறுபட்ட தன் ஒளியைக் கண்டு மகிழ்வுறும் மக்களிடத்தில் அவன் ஞானவடிவில் வெளிப்படுகின்றான்; மூப்பினால் சிதைந்துபோனாலும் மீண்டும் மீண்டும் இளமை பெறுகிறான்.

आ यो वना॑ तातृषा॒णो न भाति॒ वार्ण प॒था रथ्ये॑व स्वानीत् ।
कृ॒ष्णाध्वा॒ तपू॑ र॒ण्वश्चि॑केत॒ द्यौरि॑व॒ स्मय॑मानो॒ नभो॑भिः ॥ ६

ஆ யோ வநா தாத்ருஷாணோ ந பாதி வார்ண பதா ரத்யேவ ஸ்வாநீத்।
க்ருஷ்ணாத்வா தபூ ரண்வஶ்சிகேத த்யௌரிவ ஸ்மயமாநோ
நபோபி: ॥6 ॥

அவன் உடல் உலர்ந்து தாகம் உற்றவனைப் போல, காடுகளில் தன் பிரகாசம் மேம்படுமாறு தன் ஒளியை அதிகரிக்கிறான். அவன் போகும் பாதையில் அவன் முழங்கும் ஒலி, நீரோட்டத்தின் ஓசையைப் போல உள்ளது. அவன் செல்லும் வழியில் வெப்பம் பரவுவதால், அந்த வழி கறுப்பாக உள்ளது. அவன் எப்பொழுதும் மகிழ்ச்சி நிரம்பியவன். அவன் அறிவில் வெளிப்படுபவன். அவன் தேவர்உலகத் தந்தை போல உள்ளான். நட்சத்திரங்களைக் கொண்டு அவன் தன் புன்சிரிப்பை வெளிப்படுத்துகிறான்.

स यो व्यस्था॑द॒भि दक्ष॑द॒र्वीं प॒शुर्नैति॑ स्व॒युरगो॑पाः ।
अ॒ग्निः शो॒चिष्माँ॑ अत॒सान्यु॒ष्णन् कृ॒ष्णव्य॑थिरस्वदय॒न्न भूम॑ ॥ ७

ஸ யோ வ்யஸ்தாதபி தக்ஷதுர்வீம் பஶுர்நைதி ஸ்வயுரகோபா: ।
அக்நி: ஶோசிஷ்மாம் அதஸாந்யுஷ்ணந் க்ருஷ்ணவ்யதிரஸ்வதயந்ந
பூம ॥7 ॥

அவன் பெரும்பரப்புடைய உலகம் முழுவதையும் எரித்துக் கொண்டு, தன் பிரயாணத்தைத் தொடங்குகிறான். அவன் தன்னைக் கட்டிக்காப்பவன் ஒருவனும் இல்லாது, தன் விருப்பப்படி திரியும் ஒரு மிருகத்தைப் போல உலாவிக்கொண்டு இருக்கிறான். அக்நிதேவன் எரிகின்ற ஒளியினாலும், பொருள்களைக் கருகிப்போகுமாறு தான் வெப்பத்தால் துன்புறுத்துவதாலும், பெரும்பரப்பினைச் சுவைத்து அனுபவிப்பவனைப் போல, உலர்ந்த அடிமரத்தை அவன் தன் வெப்பத்தால் தாக்குகிறான்.

नू ते पूर्वस्यावसो अधीतौ तृतीये विदथे मन्म शंसि ।
अस्मे अग्ने संयद्वीरं बृहन्तं क्षुमन्तं वाजं स्वपत्यं रयिं दाः ॥ ८

நூ தே பூர்வஸ்யாவஸோ அதீதௌ த்ருதீயே விததே மந்ம ஶம்ஸி ।
அஸ்மே அக்நே ஸம்யத்வீரம் ப்ருஹந்தம் க்ஷுமந்தம் வாஜம் ஸ்வபத்யம் ரயிம் தா: ॥ 8 ॥

இப்பொழுது உன்னுடைய பழைய காவலுக்கு எங்கள் மனம் திரும்புகிறது. மூன்றாம் முறையால் நடைபெறும் ஞான வேள்வியில் எங்கள் எண்ணம் வெளியிடப்பட்டுள்ளது. ஓ அக்நீ! செல்வத்தை அதன் வழித்தோன்றல்(சந்ததி)களுடன் எங்களுக்கு அளிப்பாயாக. வீரர்கள் கூடுகின்ற பெரும்பரப்புடைய நிறைந்த செல்வத்தை எமக்கு அருளுவாயாக.

त्वया यथा गृत्समदासो अग्ने गुहा वन्वन्त उपराँ अभि ष्युः ।
सुवीरासो अभिमातिषाहः स्मत्सूरिभ्यो गृणते तद्वयो धाः ॥ ९

த்வயா யதா க்ருத்ஸமதாஸோ அக்நே குஹா வந்வந்த உபராந் அபி ஷ்யு: ।
ஸுவீராஸோ அபிமாதிஷாஹ: ஸ்மத்ஸூரிப்யோ க்ருணதே தத்வயோ தா: ॥ 9 ॥

ஓ அக்நீ! க்ருத்சமதர்கள் நல்ல வீரர்களுடைய வலிமையைப் பெற்றுப் பலசாலிகள் ஆகவேண்டும்; எதிர்ச்சக்திகளை அடக்கவேண்டும்; மேல்உலகங்களை அடைந்து, அங்கு உள்ள இரகசியமான இடங்களை வென்று தங்கள் வசமாக்க வேண்டும். நீ அறிவுவிளக்கம் பெற்ற சான்றோர்களுக்கும், உன்னைப் போற்றி வழிபடுபவர்களுக்கும், அவர்கள் விரிவான வளர்ச்சியைப் பெற அடிப்படையாய் நிற்பாயாக.

ஸூக்தம் 5

होता॑ जनिष्ट॒ चेत॑नः पि॒ता पि॒तृभ्य॑ ऊ॒तये॑ ।
प्र॒यक्ष॒ञ्जेन्यं॒ वसु॑ श॒केम॑ वा॒जिनो॒ यम॑म् ॥ १

ஹோதா ஜநிஷ்ட சேதந: பிதா பித்ருப்ய ஊதயே ।
ப்ரயக்ஷஞ்ஜேந்யம் வஸு ஶகேம வாஜிநோ யமம் ॥1॥

அக்நி, தேவர்களை வேள்விக்கும் அழைக்கும் புரோகிதனாக, நல்ல உணர்வு உடையோனாக, நமக்காகப் பிறந்துள்ளான். நம் தந்தைமார்களுக்கு ஒரு தந்தையாக, அவர்களைப் பாதுகாப்பதற்காகப் பிறந்துள்ளான். அவனது அருளால் நாம் வேள்விசெய்து வென்று, பெறவேண்டிய செல்வத்தைப் பெறுவதற்கும், விரைந்து ஓடும் குதிரையை அடக்குவதற்கும் ஆற்றல் பெறுவோம் ஆகுக.

आ यस्मि॑न्त्स॒प्त र॒श्मय॑स्तता य॒ज्ञस्य॑ ने॒तरि॑ ।
म॒नु॒ष्वद्दैव्य॑मष्ट॒मं पो॒ता विश्वं॒ तदि॑न्वति ॥ २

ஆ யஸ்மிந்த்ஸப்த ரஶ்மயஸ்ததா யக்ஞஸ்ய நேதரி ।
மநுஷ்வத்தைவ்யமஷ்டமம் போதா விஶ்வம் ததிந்வதி ॥2॥

வேள்வியை நடத்தச் செய்யும் அக்நியிடம் ஏழு கதிர்கள் பரவியுள்ளன. மனிதர்களின் தொடர்பை தன்னிடத்துக் கொண்டு, தெய்வத்தன்மை பொருந்திய எட்டாவது கதிரும் (கிரணம்) ஒன்று உள்ளது. அக்நி யாவற்றையும் தூய்மை உடையன ஆக்கும் புரோகிதனாய்(போதா), அவை அனைத்தையும் அடக்கி ஆள்கிறான்.

द॒धन्वे वा॒ यदी॒मनु॒ वोच॒द् ब्रह्मा॑णि॒ वेरु॒ तत् ।
परि॒ विश्वा॑नि॒ काव्या॑ ने॒मिश्च॒क्रमि॑वाभवत् ॥ ३

ததந்வே வா யதீமநு வோசத் ப்ரஹ்மாணி வேரு தத் ।
பரி விஶ்வாநி காவ்யா நேமிஶ்சக்ரமிவாபவத் ॥3 ॥

ஒருவன் இந்த அக்நியை உறுதியாக நிறுவும்போது, அக்நி அந்த மந்திரங்களைத் தானும் எதிர்ஒலியாகக் கூறிக்கொண்டு அதனை நெருங்கிச் சேர்கிறான். அஃது எவ்வாறு எனின், சக்கரத்தை விளிம்பு சூழ்ந்திருப்பது போல்வது ஆகும். அம்முறையிலே உண்மைகாண்போர் காணும் பொருள்கள் அனைத்தினையும் அவன் சூழ்ந்துகொள்கிறான்.

सा॒कं हि शुचि॑ना॒ शुचिः॑ प्रशा॒स्ता क्र॒तुना॑जनि ।
वि॒द्वाँ अ॑स्य व्र॒ता ध्रु॒वा व॒या इ॒वानु॑ रोहते ॥ ४

ஸாகம் ஹி ஶுசிநா ஶுசி: ப்ரஶாஸ்தா க்ரதுநாஜநி ।
வித்வாம் அஸ்ய வ்ரதா த்ருவா வயா இவாநு ரோஹதே ॥4॥

மந்திரங்களை வெளியிடுவதில் ஈடுபட்ட புரோகிதனாகவும், தூயவனாகவும், தூய விருப்பத்துடன் அக்நி பிறந்துள்ளான். அவன் பன்னெடுங்காலம் செய்யப்படவேண்டிய தன் உறுதியான செயல்களின் விதிமுறைகளை அறிந்தவன். கிளைகள்மேல் ஏறுவதைப் போல அவன் அவற்றின்மீது ஒவ்வொன்றாக ஏறுவான்.

ता अस्य वर्णमायुवो नेष्टुः सचन्त धेनवः ।
कुवित्तिसृभ्य आ वरं स्वसारो या इदं ययुः ॥ ५

தா அஸ்ய வர்ணமாயுவோ நேஷ்டு: ஸசந்த தேநவ: ।
குவித்திஸ்ருப்ய ஆ வரம் ஸ்வஸாரோ யா இதம் யயு: ॥5॥

பசுக்கள் வேள்விச்செயலைப் புனிதமாக விளங்கச்செய்யும் புரோகிதனுடைய ஒளிவகையின் நிறத்தை அடைந்து, அங்கு விருப்பம் கொண்டுள்ளன. அச்சகோதரிகள், மூன்று உலகங்களுக்கும் மேல் உள்ள அந்த நான்காவது உலகிற்கு முதலில் ஒருமுறை போய்விட்டு வந்து மறுபடியும் போயிருக்கிறார்கள்.

यदी मातुरुप स्वसा घृतं भरन्त्यस्थित ।
तासामध्वर्युरागतौ यवो वृष्टीव मोदते ॥ ६

யதீ மாதுருப ஸ்வஸா க்ருதம் பரந்த்யஸ்தித ।
தாஸாமத்வர்யுராகதௌ யவோ வ்ருஷ்டீவ மோததே ॥6॥

தனக்கு வழங்கப்பட்ட ஒளியை எடுத்துக்கொண்டு, தாயின் சகோதரி, வேள்வியின் புரோகிதன் பக்கம் வரும்போது, அப்புரோகிதன், யவம் என்னும் தானியம் விதைக்கப்பட்ட வயல் மழையைக் கண்டு மகிழ்வதைப் போல அவளது வருகையைக் கண்டு மகிழ்கிறான்.

स्वः स्वाय धायसे कृणुतामृत्विगृत्विजम् ।
स्तोमं यज्ञं चादरं वनेमा ररिमा वयम् ॥ ७

ஸ்வ: ஸ்வாய தாயஸே க்ருணுதாம்ருத்வி க்ருத்விஜம் ।
ஸ்தோமம் யக்ஞம் சாதரம் வநேமா ரரிமா வயம் ॥7॥

வேள்விச்செயலின் புரோகிதன் (ரித்விக்) தானாகவே தன் உறுதிப்பாட்டிற்காக ரித்விக்கை உண்டாக்கிக்கொள்வோன் ஆகுக. போற்றி வழிபடுவதிலும், வேள்வியை நிகழ்த்துவதிலும், நாம் இன்புறுவோமாக. அப்பொழுதுதான் நாம் அளித்துள்ள வேள்விப்பொருள்கள் நிறைவுபெறும். நாமும் மேலுலகம் சென்றனம் ஆவோம்.

यथा विद्वाँ अरं करद्विश्वेभ्यो यजतेभ्यः ।
अयमग्ने त्वे अपि यं यज्ञं चकृमा वयम् ॥ ८

யதா வித்வாந் அரம் கரத்விஶ்வேப்யோ யஜதேப்ய: ।
அயமக்நே த்வே அபி யம் யக்ஞம் சக்ருமா வயம் ॥8॥

அறிவுடன் செயற்படுவதால், இவனும் வேள்வித்தலைவர் அனைவருக்கும் வேள்விச்செயலைச் செய்து முடிப்பான் ஆகுக. ஓ அக்நீ! நாங்கள் செய்யும் வேள்வி உன்னிடத்திலேயே நிகழ்கிறது.

ஸூக்தம் 6

इमां मे अग्ने समिधमिमामुपसदं वनेः ।
इमा उ षु श्रुधी गिरः ॥ १

இமம் மே அக்நே ஸமிதமிமாமுபஸதம் வநே: ।
இமா உ ஷு ஶ்ருதீ கிர: ॥1॥

ஓ அக்நீ! நான் கொண்டுவந்து உனக்கு அளிக்கும் சமித்தில் நீ மகிழ்வாயாக. என் வேள்வி அமைப்பிலும் நீ மகிழ்வாயாக. என் மந்திரவார்த்தைகளை நீ நன்கு உன் காதுகளில் ஏற்பாயாக.

अया ते अग्ने विधेमोर्जो नपादश्वमिष्टे ।
एना सूक्तेन सुजात ॥ २

அயா தே அக்நே விதேமோர்ஜோ நபாதஶ்வமிஷ்டே ।
ஏநா ஸூக்தேந ஸுஜாத ॥2॥

ஓ அக்நீ! நிறைவான பிறப்பு உடையவனே! உறுதியான ஆற்றலினுடைய குழந்தையே! குதிரைகளைக் கட்டளை இடுகின்றவனே! வேள்வியில் உனக்கு அளிக்கும் இப்பொருள்களால் உன்னைத் தொழுகிறோம். நன்கு உச்சரிக்கப்படும் மந்திரச் சொற்களால் நாங்கள் உன்னைத் தொழுவோம் ஆகுக.

तं त्वा॑ गी॒र्भिर्गिर्वणसं द्रविण॒स्युं द्र॑विणोदः ।
स॒प॒र्येम॑ सप॒र्यवः॑ ॥ ३

தம் த்வா கீர்பிர்கிர்வணஸம் த்ரவிணஸ்யும் த்ரவிணோத: ।
ஸபர்யேம ஸபர்யவ: ॥3॥

மந்திரச்சொற்களால் நீ அடையும் ஆனந்தத்தை எதிர்பார்த்து, உன்னைப் போற்றுதலுடன் நாங்கள் காத்திருப்போம். வேண்டிய பொருள்களை அளிப்பவனே! பொருள்களைச் சம்பாதிக்கும் உன் பக்கத்தில் காத்திருப்போம். உன் செயலை விரும்பும் நாங்கள் எல்லோரும் உனக்குத் தொண்டுசெய்வோம் ஆகுக.

स बो॑धि सू॒रिर्म॒घवा॒ वसु॑पते॒ वसु॑दावन् ।
युयो॒ध्य१॒॑स्मद् द्वेषां॑सि ॥ ४

ஸ போதி ஸூரிர்மகவா வஸூபதே வஸூதாவந் ।
யுயோத்யஸ்மத் த்வேஷாம்ஸி ॥4॥

செல்வத்தின் தலைவனே! செல்வத்தை அனைவருக்கும் வழங்குபவனே! எல்லாப் பொருள்களையும் காணும் செல்வத்தின் தலைவனே! நீ கண்விழிப்பாய். எங்களிடம் பகைமை கொண்ட எல்லாவற்றையும் நீக்கி அருள்வாயாக.

स नो॑ वृ॒ष्टिं दि॒वस्परि॒ स नो॒ वाज॑मन॒र्वाण॑म् ।
स नः॑ सह॒स्रिणी॒रिषः॑ ॥ ५

ஸ நோ வ்ருஷ்டிம் திவஸ்பரி ஸ நோ வாஜமநர்வாணம் ।
ஸ ந: ஸஹஸ்ரிணீரிஷ: ॥5॥

ஓ அக்நீ! நீ எங்களுக்காக எங்களைச் சூழ்ந்திருக்கும் சுவர்க்க லோக மழை போல்வாய். எம்பொருட்டு நீ அசையாத செல்வமாக உள்ளாய். தங்கள் ஆயிரக்கணக்கான பொருள்களை எங்களுக்கு வழங்கும் மனத்தூண்டுதலாக உள்ளாய்.

ईळा॑नायाव॒स्यवे॒ यवि॑ष्ठ दूत नो गि॒रा ।
यजि॑ष्ठ होत॒रा ग॑हि ॥ ६

ஈளாநாயா வஸ்யவே யவிஷ்ட தூத நோ கிரா ।
யஜிஷ்ட ஹோதரா கஹி ॥6॥

ஓ தூதனே! வேள்விக்குத் தேவர்களை அழைக்கும் புரோகிதனே! வேள்வியை நிறைவேற்றுவதில் ஆற்றல் உடையவனே! ஆற்றல் மிக்க தேவரின் கடைசிக்கோடியில் உள்ள இளைஞனே! உன்னுடைய பாதுகாவலை வேண்டி, உன்னிடம் பெருவிருப்புக் கொண்டுள்ள எங்கள்பொருட்டு, எங்கள் மந்திரச்சொற்களின் வலிமையால் எங்களிடம் வருக.

अन्तर्ह्यग्न ईयसे विद्वान् जन्मोभया कवे ।
दूतो जन्येव मित्र्यः ॥ ७

அந்தர்ஹ்யக்ந ஈயஸே வித்வாந் ஜந்மோபயா கவே ।
தூதோ ஜந்யேவ மித்ர்ய: ॥7॥

ஓ அக்நீ! எல்லாவற்றையும் காண்பவனே! நீ இரு பிறப்புக்களை அறிந்து எங்கள் உள்ளத்தில் உலாவுகின்றாய். நண்பர்களாகிய மக்களிடமிருந்து உலகுக்கு எல்லாம் இனியனாகிய தூதன் நீ.

स विद्वाँ आ च पिप्रयो यक्षि चिकित्व आनुषक् ।
आ चास्मिन्त्सत्सि बर्हिषि ॥ ८

ஸ வித்வாந் ஆ ச பிப்ரயோ யக்ஷி சிகித்வ ஆநுஷக் ।
ஆ சாஸ்மிந்த்ஸத்ஸி பர்ஹிஷி ॥8॥

உணர்வு உடையவனே! அக்நீ! உன் முழுஞானத்தோடும் வந்து எங்களை நிறைவுபெறச் செய்வாய். எங்கள் வேள்வியை இடையறவுபடாமல், தொடர்ச்சியாக, ஒழுங்காக முடித்து அருள்வாயாக. மேடையில் தருப்பைப் புல்லால் ஆகிய இருக்கையில் (ஆசனம்) நீ அமர்ந்து அருளுவாயாக.

ஸூக்தம் 7

श्रेष्ठं यविष्ठ भारताऽग्ने द्युमन्तमा भर ।
वसो पुरुस्पृहं रयिम् ॥ १

ஶ்ரேஷ்டம் யவிஷ்ட பாரதாக்நே த்யுமந்தமா பர ।
வஸோ புருஸ்ப்ருஹம் ரயிம் ॥1॥

ஆற்றல் மிக்கவருள் கடைக்கோடியாக உள்ள இளைஞனே! அக்நீ! உன்னைக் கொணர்ந்து பாதுகாப்பவரின் புனித நெருப்பே! செல்வத்துக்கு அரசே! ஒளிமயமானதும், எங்களுடைய பலவகை விருப்பங்களையும் தன்னுள் அடக்கியுள்ளதும், மிகச் சிறந்ததும் ஆகிய ஒரு செல்வத்தை எமக்குத் தந்தருள்வாயாக.

मा नो अरातिरीशत देवस्य मर्त्यस्य च ।
पर्षि तस्या उत द्विषः ॥ २

மா நோ அராதிரீஶத தேவஸ்ய மர்த்யஸ்ய ச ।
பர்ஷி தஸ்யா உத த்விஷ: ॥2॥

எங்களிடம் பகைமை பூண்டு போர்புரியும் சக்தி, தேவனையும் மனிதனையும் அடக்கி ஆளுமாறு செய்யாதே. பகைமை நிறைந்த அந்தச் சக்தியைக் கடந்து எங்களை அழைத்துச்செல்.

विश्वा॑ उ॒त त्वया॑ व॒यं धारा॑ उद॒न्या॑ इव ।
अति॑ गाहेमहि॒ द्विषः॑ ॥ ३

விஶ்வா உத த்வயா வயம் தாரா உதந்யாஇவ ।
அதி காஹேமஹி த்விஷ: ॥3॥

ஆகையால், பழைமையான சக்திகள் எல்லாவற்றிலும், பாய்ந்து ஓடும் நீர்ப்பெருக்கு இடையில் உள்ள தடைகளைக் கடந்து உட்புகுந்து பாய்ந்து ஓடுவதுபோல, உன் உதவியால் உள்ளே புகுந்து பாய்ந்து நாங்கள் அவற்றைக் கடப்போமாக.

शुचिः॑ पावक॒ वन्द्योऽग्ने॑ बृ॒हद्वि रो॑चसे ।
त्वं घृ॒तेभि॒राहु॑तः ॥ ४

ஶுசி: பாவக வந்த்யோऽக்நே ப்ருஹத்வி ரோசஸே ।
த்வம் க்ருதேபிராஹுத: ॥4॥

எல்லாப்பொருள்களையும் விளக்கமுறச் செய்யும் அக்நீ! தூயவனாகிய நீ எங்களால் போற்றப்படுதலுக்கு உரியவனாக உள்ளாய். தெளிவான பொருள்களை உண்டு வளர்ந்த உன் ஒளியின் அழகு எங்கும் பரவியுள்ளது.

त्वं नो॑ असि भारताऽग्ने॑ व॒शाभि॑रु॒क्षभिः॑ ।
अ॒ष्टाप॑दीभि॒राहु॑तः ॥ ५

த்வம் நோ அஸி பாரதாக்நே வஶாபிருக்ஷபி: ।
அஷ்டாபதீபிராஹூத: ॥5॥

ஓ உன்னைக் கொணர்ந்து பாதுகாப்பவருக்கு உதவும் அக்நியே! உன்னை எம்முடைய காளைகளும், கன்றுகளும், எட்டுக்கால்களை உடைய வருடைஆடுகளும் அல்லது சினைப்பட்ட பசுக்கள், சினைப்படாத பசுக்கள் என்பனவும் அழைக்கின்றன.

दू॒तन्नः स॒र्पिरा॑सुतिः प्र॒त्नो होता॒ वरे॑ण्यः ।
सह॑सस्पु॒त्रो अद्भु॑तः ॥ ६

த்ர்வந்ந: ஸர்ப்பிராஸுதி: ப்ரத்நோ ஹோதா வரேண்ய: ।
ஸஹஸஸ்புத்ரோ அத்புத: ॥6॥

அக்நீ! மரத்தினை உண்ணுகின்றாய்; விரும்பத்தக்கவனாக உள்ளாய்; பழையவனாக உள்ளாய்; தேவர்களை வேள்விகளுக்கு அழைப்பதில் ஈடுபட்டுள்ளாய்; அற்புதமாக உள்ளாய்; ஆற்றலினுடைய புதல்வனாக உள்ளாய். உருகிஓடும் ஒளி பொருந்திய வெண்ணெயை உன்பொருட்டு ஊற்றுகிறோம்.

ஸூக்தம் 8

वा॒ज॒यन्नि॑व॒ नू रथा॒न् योगाँ॑ अ॒ग्नेरुप॑ स्तुहि ।
य॒शस्त॑मस्य मी॒ळ्हुषः॑ ॥ १

வாஜயந்நிவ நூ ரதாந்யோகாம் அக்நேருப ஸ்துஹி ।
யஶஸ்தமஸ்ய மீள்ஹுஷ: ॥1॥

அவனை முழுமையாக நிறைப்பதற்காக, அவன் நிறைவினை விரும்புபவனைப் போல, கொடைவள்ளலும் புகழ்பெற்றவனுமாகிய அவ்வக்கினியின் தேர்களையும் தேர்களின் நுகங்களையும் போற்றி வழிபடு.

यः सु॑नी॒थो द॑दा॒शुषे॑ऽजु॒र्यो ज॒रय॑न्न॒रिम् ।
चारु॑प्रतीक॒ आहु॑तः ॥ २

ய: ஸுநீதோ ததாஶுஷேऽஜுர்யோ ஜரயந்நரிம் ।
சாருப்ரதீக ஆஹுத: ॥2॥

தனக்குப் பொருள்களை அளித்துள்ள மனிதனை அவன் முழுமையாகத் தன் வழியில் நடக்க உதவுபவன். அவனுக்கு யாராலும் இழப்பு ஏற்படாது. அவன் பகைவர்களைப் புண்படுத்தித் தளரச்செய்வான். வேள்வியில் அளிக்கப்படுவனவற்றை உண்ட அவனுடைய முன்பக்கம் அழகாக உள்ளது.

य उ श्रिया दमेष्वा दोषोषसि प्रशस्यते ।
यस्य व्रतं न मीयते ॥ ३

ய உ ஶ்ரியா தமேஷ்வா தோஷோஷஸி ப்ரஶஸ்யதே ।
யஸ்ய வ்ரதம் ந மீயதே ॥3॥

எங்களுடைய வீடுகளில் அக்நி விடியற்காலையிலும், மாலை அந்திப்பொழுதிலும், தன்னுடைய அழகு பற்றியும், புகழ் பற்றியும் அவன் போற்றப்படுகிறான். அவனுடைய செயல்களின் விதிமுறை ஒருபோதும் தவறுவதில்லை.

आ यः स्वर्ण भानुना चित्रो विभात्यर्चिषा ।
अञ्जानो अजरैरभि ॥ ४

ஆ யः ஸ்வர்ண பாநுநா சித்ரோ விபாத்யர்சிஷா ।
அஞ்ஜாநோ அஜரைரபி ॥4॥

விளங்கச்செய்யும் பிரகாசத்தினால், அவன் சூரியமண்டலம் போலப் பலவகை ஒளிகளால் வளம்பெற்று விளங்குகிறான்; கிழத்தன்மை இல்லாத தன் நெருப்புக்களால் வெளிப்படும் ஒளியினை எங்கள்மீது பாய்ச்சிக்கொண்டு, தன் சுடர்களால் எங்கும் பரவிப் பிரகாசிக்கிறான்.

अत्रि॒मनु॑ स्व॒राज्य॑म॒ग्निमु॒क्थानि॑ वावृधुः ।
विश्वा॒ अधि॒ श्रियो॑ दधे ॥ ५

அத்ரிமநு ஸ்வராஜ்யமக்நிமுக்தாநி வாவ்ருது: ।
விஶ்வா அதி ஶ்ரியோ ததே ॥5॥

எம் சொற்கள் அக்நியை வளரச் செய்துள்ளன; பிரயாணியைத் தன்னரசு பெறும் வழியே வளருமாறு செய்துள்ளன. அக்நி எல்லாப் புகழினையும் அழகினையும் தன்னிடத்துக் கொண்டுள்ளான்.

अ॒ग्नेरिन्द्र॑स्य॒ सोम॑स्य दे॒वाना॑मू॒तिभि॑र्व॒यम् ।
अरि॑ष्यन्तः सचेमह्य॒भि ष्या॑म पृतन्य॒तः ॥ ६

அக்நேரிந்த்ரஸ்ய ஸோமஸ்ய தேவாநாமூதிபிர்வயம் ।
அரிஷ்யந்த: ஸசேமஹ்யபி ஷ்யாம ப்ருதந்யத: ॥6॥

அக்நி ஸோமன் இந்திரன் தேவர்கள்-இவர்கள் அனைவரும் நம்மைப் பாதுகாப்பார்கள் என்று உறுதியாக விரும்புவோமாக. அவர்களது உதவியால், நம்மை எதிர்த்துப் போரிடுவோர்களால் நமக்குத் தீங்கு வாராத வகையில் அவர்களை வெல்வோமாக.

ஸூக்தம் 9

नि होता॑ होतृषद॑ने॒ विदा॑नस्त्वे॒षो दी॑दि॒वाँ अ॑सदत्सु॒दक्षः॑ ।
अद॑ब्धव्रतप्रमति॒र्वसि॑ष्ठः सहस्रं॒भरः॒ शुचि॑जिह्वो अ॒ग्निः ॥ १

நி ஹோதா ஹோத்ருஷதநே விதாநஸ்த்வேஷோ தீதிவாம் அஸதத்ஸுதக்ஷ: ।
அதப்தவ்ரதப்ரமதிர்வஸிஷ்ட: ஸஹஸ்ரம்பர: ஶுசிஜிஹ்வோ அக்நி: ॥1 ॥

நம் சார்பில் தேவர்களை எல்லாம் வேள்விக்கு அழைக்கும் ஹோதா என்பான் தான் தொழில் புரியும் வீட்டில் தன் இருக்கையில் அமர்ந்திருக்கின்றான்; பிரகாசமாய் எரிகின்றான்; தன் கதிர்கள் பரவுதலால் தெளிவாக விளங்குகின்றான்; அவன் தீர்ப்பு வழங்குவதில் வல்லவன்; அறிவு மிகுந்த மனத்தினால் தன் செயல்களில் தோல்வியைக் காணாதவன்; பொருட் செல்வத்தில் சிறந்தவன்; தூய்மையான நாக்கு உடையவன். அந்த அக்நி ஆயிரக்கணக்கான பொருள்களை நமக்குக் கொண்டுவந்து அருள்செய்வான்.

त्वं दू॒तस्त्वमु॑ नः पर॒स्पास्त्वं वस्य॒ आ वृ॑षभ प्रणे॒ता ।
अग्ने॑ तो॒कस्य॑ न॒स्तने॑ त॒नूना॒मप्र॑युच्छन्दीद्य॒द्बोधि गो॒पाः ॥ २

த்வம் தூதஸ்த்வமு ந: பரஸ்பாஸ்த்வம் வஸ்ய ஆ வ்ருஷப ப்ரணேதா ।
அக்நே தோகஸ்ய நஸ்தநே தநூநாமப்ரயுச்சந்தீத்யத்போதி கோபா: ॥2 ॥

அக்நியே! நீ தூதன். எங்களைத் தீங்குகளுக்கு அப்புறம் கொண்டுசென்று காப்பாற்றுபவன் நீ. நீ பசுமந்தைகளின் நடுவில் காளை போன்று உள்ளாய். எங்களைப் பெருஞ்செல்வ உலகத்திற்கு வழிகாட்டி நடத்திச் செல்பவனும் நீயே. புதல்வனை நல்லபடியாக வளர்த்து ஆள்ஆக்குவதற்கும், எங்கள் உடல்களில் புதல்வன் எனப்படும் சந்ததியை உண்டாக்குவதற்கும், உன் பிரகாசத்தில் கண்விழித்து அருள்வாய். எங்களைக் காப்பவனே! உன் செயல்களிலிருந்து வேறுபக்கம் திரும்பாது இரு.

विधेम ते परमे जन्मन्नग्ने विधेम स्तोमैरवरे सधस्थे ।
यस्माद्योनेरुदारिथा यजे तं प्र त्वे हवींषि जुहुरे समिद्धे ॥ ३

விதேம தே பரமே ஜந்மந்நக்நே விதேம ஸ்தோமைரவரே ஸதஸ்தே ।
யஸ்மாத்யோநேருதாரிதா யஜே தம் ப்ர த்வே ஹவீம்ஷி ஜுஹுரே
ஸமித்தே ॥ 3 ॥

உன் மேம்பட்ட பிறப்பிலே உன்னை நாங்கள் தொழுவோமாக. ஓ அக்நீ! கீழ்உலகில் உன் சபை கூடும்போது, எம் போற்றுதல்களாலும், வழிபாட்டாலும் உன்னை நாங்கள் தொழுவோமாக. நீ புறப்பட்ட உன்னுடைய இயல்பான வீட்டினை நாங்கள் வேள்வியால் வழிபடுகிறோம். நீ தூண்டப்பட்டு எரியும்போது, உன்னிடத்தில் நாங்கள் வேள்வியில் அளிக்கும் பொருள்கள் இடப்படுகின்றன.

अग्ने यजस्व हविषा यजीयाञ्छ्रुष्टी देष्णमभि गृणीहि राधः ।
त्वं ह्यसि रयिपती रयीणां त्वं शुक्रस्य वचसो मनोता ॥ ४

அக்நே யஜஸ்வ ஹவிஷா யஜீயாஞ்ச்ருஷ்டீ தேஷ்ணமபி க்ருணீஹி
ராத: ।
த்வம் ஹ்யஸி ரயிபதீ ரயீணாம் த்வம் ஶுக்ரஸ்ய வசஸோ மநோதா ॥ 4 ।

ஓ அக்நீ! நீ வேள்வியில் திறமை உடையவனாய் இரு. என் ஹவிஸினால் வேள்வியை நிகழ்த்து. செல்வத்தை வழங்குவதில் ஈடுபட்ட என் எண்ணத்தை வாழ்த்து. செல்வத்தை அடக்கி ஆளும் செல்வத்தலைவன் நீயே. பிரகாசிக்கும் மந்திரவார்த்தைகளை மதித்துச் சிந்திப்பவன் நீ.

उभयं ते न क्षीयते वसव्यं दिवेदिवे जायमानस्य दस्म ।
कृधि क्षुमन्तं जरितारमग्ने कृधि पतिं स्वपत्यस्य रायः ॥ ५

உபயம் தே ந க்ஷீயதே வஸவ்யம் திவேதிவே ஜாயமாநஸ்ய தஸ்ம ।
க்ருதி க்ஷுமந்தம் ஜரிதாரமக்நே க்ருதி பதிம் ஸ்வபத்யஸ்ய ராய: ॥ 5 ॥

இருவகைச் செல்வங்களும் உன்னுடையனவே. ஓ ஆற்றல் மிக்க தெய்வமே! நீ நாள்தோறும் பிறப்பதனால் உன் செல்வங்களுள் ஒன்றும் குறையவும் குறையாது; அழியவும் அழியாது. ஓ அக்நீ! உன்னைப் போற்றி வணங்குபவனைப் பல உடைமைகளுக்கும் உரியவனாகச் செய். அவனது சந்ததி செழிக்கவும், அவன் வளங்கள் நிறைந்த செல்வத்தலைவனாகவும் அருள்செய்.

सैनानीकेन सुविदत्रो अस्मे यष्टा देवाँ आयजिष्ठः स्वस्ति ।
अदब्धो गोपा उत नः परस्पा अग्ने द्युमदुत रेवद्दिदीहि ॥ ६

ஸைநாநீகேந ஸுவிதத்ரோ அஸ்மே யஷ்டா தேவாந் அயஜிஷ்ட: ஸ்வஸ்தி ।
அதப்தோ கோபா உத ந: பரஸ்பா அக்நே த்யுமத்ருத ரேவத்திதீஹி ॥ 6 ॥

ஓ அக்நீ! நீ அறிவில் மேம்பட்டவன்; தேவர்களைத் தொழுபவன்; வேள்வி நிகழ்த்துவதில் திறமை உடையவன். நீ எங்களிடம் உன் முழுவலிமையுடன் விளங்கு. அதற்குமேல், நீ பகைவர்கள் எங்களைக் கொண்டுபோகாதபடி, வெல்லமுடியாதபடி, அப்புறம் கொண்டுசெல்லும் புரவலனும் பாதுகாப்பவனுமாக இரு. நீ உன் சுயம்பிரகாசத்துடனும் செழிப்புடனும் எம்மிடத்தில் கொழுந்துவிட்டு எரிவாயாக.

ஸூக்தம் 10

जोहूत्रो अग्निः प्रथमः पितेवेळस्पदे मनुषा यत्समिद्धः ।
श्रियं वसानो अमृतो विचेता मर्मृजेन्यः श्रवस्य१ः स वाजी ॥ १

ஜோஹூத்ரோ அக்நி: ப்ரதம: பிதேவேளஸ்பதே மநுஷா யத்ஸமித்த: ।
ஶ்ரியம் வஸாநோ அம்ருதோ விசேதா மர்ம்ருஜேந்ய: ஶ்ரவஸ்ய:
ஸ வாஜீ ॥1॥

அக்நி நமக்கு முதல்தந்தை போன்றவன். மனிதன் பெருவிருப்போடு அவனைத் தூண்டி எரியச்செய்யும்போது அவனை நோக்கி நாம் அழைப்போமாக. ஆடையை அணிவது போல, அவன் அழகையும் புகழையும் அணிந்துகொள்கிறான். நாம் நல்ல முறையில் குளிப்பாட்டிய, தெய்வசக்தி உள்புகுந்த (ஆவேசத்தோடு) வேகமாகச் செல்லும் குதிரையாக அவன் இருக்கிறான். அவன் விரிவான அறிவுடைய அழிவில்லாத தேவனாவான்.

श्रूया अग्निश्चित्रभानुर्हवं मे विश्वाभिर्गीर्भिरमृतो विचेताः ।
श्यावा रथं वहतो रोहिता वोतारुषाहं चक्रे विभृत्रः ॥ २

ஶ்ருயா அக்நிஶ்சித்ரபாநுர்ஹவம் மே விஶ்வாபிர்கீர்பிரம்ருதோ
விசேதா: ।
ஶ்யாவா ரதம் வஹதோ ரோஹிதா வோதாருஷாஹ சக்ரே
விப்ருத்ர: ॥2॥

பல்வேறு வகைப்பட்ட ஒளிகள் நிறைந்தவனும், பரந்த அறிவுடையவனும், என்றும் அழிவில்லாதவனும் ஆகிய அக்நி, பலவாறு வழிபடப்பட்டு, நாங்கள் போற்றி அழைப்பதனைத் தன் செவிகளில் ஏற்பான் ஆகுக. நன்கு கொழுத்துச் சிறந்த, மெழுகு பூசப்பட்டவை போல வழுவழுப்பான இரண்டு குதிரைகள் அவனைச் சுமக்கின்றன. எங்கும் பரவிச் சுமக்கப்படும் ஒருவன் நமக்காகப் படைக்கப்பட்டுள்ளான்.

उत्तानायामजनयन्त्सुषूतं भुवदग्निः पुरुपेशासु गर्भः ।
शिरिणायां चिदक्तुना महोभिरपरीवृतो वसति प्रचेताः ॥ ३

உத்தாநாயாமஜநயந்த்ஸுஷூதம் புவதக்நி: புருபேஶாஸு கர்ப: ।
ஶிரிணாயாம் சிதக்துநா மஹோபிரபரீவ்ருதோ வஸதி ப்ரசேதா: ॥ 3 ॥

அவர்கள் ஆகாயத்தைப் பார்த்தவாறே படுத்துக்கொண்டிருக்கிற ஒருத்தியிடம் அவனைப் பிறக்கச்செய்தனர். அவளும் நன்கு சுமந்து அவனைப் பெற்றாள். அக்நி பல வடிவங்கள் கொண்ட தாய்மார்களின் வளர்ப்புப்பிள்ளை ஆயினன். சிறந்த எண்ணங்களும் அறிவும் உடைய அக்நி, உலகைப் பாழாக்கும் இரவிலும், தன் ஒளிகளின் சிறப்பால் இருளானது தன்னைச் சூழாதபடி விளங்குகின்றான்.

जिघर्म्यग्निं हविषा घृतेन प्रतिक्षियन्तं भुवनानि विश्वा ।
पृथुं तिरश्चा वयसा बृहन्तं व्यचिष्ठमन्नै रभसं दृशानम् ॥ ४

ஜிகர்ம்யக்நிம் ஹவிஷா க்ருதேந ப்ரதிக்ஷியந்தம் புவநாநி விஶ்வா ।
ப்ருதும் திரஶ்சா வயஸா ப்ருஹந்தம் வ்யசிஷ்டமந்நை ரபஸம் த்ருஶாநம் ॥ 4 ॥

அக்நிபகவான் எல்லா உலகங்களையும் தனக்கு எதிர்த்தாற்போலப் பார்த்துக்கொண்டு நிற்கும்போது, நான் அவனைத் தேய்த்துக் குளிப்பாட்டுகின்றேன். குறுக்கு நெடுக்காய்ப் பரவியுள்ள அவன், மிகவும் வெளிப்படையாய்த் தனக்கு வழங்கப்பட்டவற்றை எல்லாம் உட்கொண்டு வெளிப்பட்டு, மிக்க ஆற்றல் உடையவனாய்க் காட்சியளிக்கிறான்.

आ विश्वतः प्रत्यञ्चं जिघर्म्यरक्षसा मनसा तज्जुषेत ।
मर्यश्रीः स्पृहयद्वर्णो अग्निर्नाभिमृशे तन्वा३ जर्भुराणः ॥ ५

ஆ விஶ்வத: ப்ரத்யஞ்சம் ஜிகர்ம்யரக்ஷஸா மநஸா தஜ்ஜுஷேத ।
மர்யஶ்ரீ: ஸ்ப்ருஹயத்வர்ணோ அக்நிர்நாபிம்ருஶே தந்வா ஜர்புராண:॥5॥

அக்நிதேவன் எல்லாப் பக்கங்களிலும், எல்லாப் பொருள்களையும், தான் தன் கண் முன்னே நேராக நோக்கி உலவும்போது, அவன் உலாவும் இடத்தில் அவனைத் தேய்த்துக் குளிப்பாட்டுகிறேன். செல்வங்களைப் பிறருக்குத் தாராளமாக வழங்கும் நல்ல உள்ளமுடைய அவன், நான் குளிப்பாட்டுதலில் மகிழ்வான் ஆகுக. பெருமையும் வலிமையும் வாய்ந்த அந்த அழகன், ஒளிநிறங்களை விரும்பி விளையாடும்போது, அவ்விடத்தில் அவன் உடம்பைத் தொடுவதற்கு ஒருவராலும் முடியாது.

ज्ञेया भागं सहसानो वरेण त्वादूतासो मनुवद्वदेम ।
अनूनमग्निं जुह्वा वचस्या मधुपृचं धनसा जोहवीमि ॥ ६

ஞேயா பாகம் ஸஹஸாநோ வரேண த்வாதூதாஸோ மநுவத்வதேம ।
அநூநமக்நிம் ஜுஹ்வா வசஸ்யா மதுப்ருசம் தநஸா ஜோஹவீமி ॥6॥

ஓ அக்நீ! உன்னுடைய சிறந்த சுடர்களைக்கொண்டு, உன் ஆற்றலை முன்னிட்டு, உன் பங்கு எது என்பதனை நீ அறிந்து கொள்வாயாக. உன்னைத் தூதாகக் கொண்டு, நாங்கள் அறிவுடைய மனிதனைப் போலப் பேசுவோமாக. நான் செல்வத்தை வென்று கைக்கொள்பவன் ஆவேன். என் மந்திரவார்த்தைகளின் ஆற்றலாலும், வேள்வியில் அவிசை அளிப்பதாலும் அக்நியை அழைக்கிறேன். எந்தக் குறைபாடும் இல்லாத அக்நி, மதுரஸத்தை நமக்குக் கொண்டுவந்து அந்த ரஸத்தால் நம்மை நிரப்புகின்றான் அல்லது இனிமையின் தொடு(ஸ்பரிச)உணர்ச்சியை நமக்கு நல்குகின்றான்.

***

பரத்வாஜர்

மண்டலம் - 6

ஸூக்தம் 1

त्वं ह्यग्ने प्रथमो मनोताऽस्या धियो अभवो दस्म होता ।
त्वं सीं वृषन्नकृणोर्दुष्टरीतु सहो विश्वस्मै सहसे सहध्यै ॥ १

த்வம் ஹ்யக்நே ப்ரதமோ மநோதாऽஸ்யா தியோ அபவோ தஸ்ம ஹோதா।
த்வம் ஸீம் வ்ருஷந்நக்ருணோர்துஷ்டரீது ஸஹோ விஶ்வஸ்மை
ஸஹஸே ஸஹத்யை ॥1॥

ஓ ஆற்றல் மிக்க அக்நீ! இந்த எண்ணத்தை முதலாக எண்ணியவன் நீ. நீ தேவர்களை வேள்விக்கு அழைத்தலாகிய தொண்டினைச் செய்யும் புரோகிதன். நீ ஆண்மகன் (காளை) யாரும் உன்னை வெல்லமுடியாதபடி ஒரு சக்தியை எங்கும் உன்னைச் சுற்றி இருக்குமாறு படைத்துள்ளாய்; அந்தச் சக்தியினால் மற்ற சக்திகள் எல்லாவற்றையும் அடக்கிவைக்கிறாய்.

अधा होता न्यसीदो यजीयानिळस्पद इषयन्नीड्यः सन् ।
तं त्वा नरः प्रथमं देवयन्तो महो राये चितयन्तो अनु ग्मन् ॥ २

அதா ஹோதா ந்யஸீதோ யஜீயாநிளஸ்பத இஷயந்நீட்ய: ஸந் ।
தம் த்வா நர: ப்ரதமம் தேவயந்தோ மஹோ ராயே சிதயந்தோ
அநு க்மந் ॥2॥

வேள்வியைச் சிறப்பாக நிறைவேற்றுபவன் நீ. இப்பொழுது நீ விருப்பம் நிரம்பி, நாங்கள் வேண்டிக்கொள்ளும் ஆசனத்தில் அமர்ந்து இருக்கிறாய். தெய்வங்களை அழைத்தற்கு உரிய ஒரு தெய்வப்புரோகிதன் நீ. நீ பெரிதும் விரும்பப்படுகிறாய். பிறரை ஏவல்கொள்ளும் வேகத்தைக் கொடுப்பவன் நீ. தலைவனும் முதல்வனும் ஆகிய உன்னை உள்ளவாறு உணர்ந்த மக்கள் தேவர்களை உண்டாக்கிக்கொண்டு, உயர்தரமான செல்வத்தின்பொருட்டு உன்னைப் பின்பற்றுகின்றனர்.

वृतेव यन्तं बहुभिर्वसव्यैस्त्वे रयिं जागृवांसो अनु ग्मन् ।
रूशन्तमग्निं दर्शतं बृहन्तं बपावन्तं विश्वहा दीदिवांसम् ॥ ३

வ்ருதேவ யந்தம் பஹுபிர்வஸவ்யைஸ்த்வே ரயிம் ஜாக்ருவாம்ஸோ அநு க்மந் ।
ருஶந்தமக்நிம் தர்ஶதம் ப்ருஹந்தம் வபாவந்தம் விஶ்வஹா தீதிவாம்ஸம் ॥ 3 ॥

அக்நியே! மக்கள் உன்னிடத்தில் அறிவு வளம்பெற்று விழிப்புறுகின்றனர். நீ எங்கும் எப்போதும் உன் ஒளியைப் பாய்ச்சுகிறாய். நீ எங்கும் பரவி விளங்கும் அரிய வடிவமுடைய உடம்பினைப் பெற்றுள்ளாய். உன்னை அணுகிவந்து மக்கள் பல செல்வங்களை எடுத்துக்கொண்டு, வழிநடப்பவனைப் பின் தொடர்ந்து செல்பவர்களைப் போல, உன் செல்வங்களைப் பின் தொடர்ந்து சென்றனர்.

पदं देवस्य नमसा व्यन्तः श्रवस्यवः श्रव आपन्नमृक्तम् ।
नामानि चिद् दधिरे यज्ञियानि भद्रायां ते रणयन्त संदृष्टौ ॥ ४

பதம் தேவஸ்ய நமஸா வ்யந்த: ஶ்ரவஸ்யவ: ஶ்ரவ ஆபந்நம்ருக்தம் ।
நாமாநி சித்ததிரே யக்ஞியாநி பத்ராயாம் தே ரணயந்த ஸந்த்ருஷ்டௌ ॥ 4 ॥

உன்னை அடைக்கலம் புகுந்து தெய்வஉலகங்களுக்குப் பிரயாணம் செய்யப் புறப்படுபவர்கள், உன் அருள் தம் உள்புகுதல்(ஆவேசம்) ஆகிய ஞானத்தைத் தேடிப் பெறுபவர்கள் ஆவர். அவர்கள் குறைபாடு இல்லாத அருள்ஞானத்தை விரும்பிப் பெற்றனர்; உன் வேள்வித் திருநாமங்களைத் தம் மனத்தினில் கொண்டு உன் மங்களகரமான காட்சியில் மகிழ்ந்தனர்.

त्वां वर्धन्ति क्षितयः पृथिव्यां त्वां रायं उभयासो जनानाम् ।
त्वं त्राता तरणे चेत्यो भूः पिता माता सदमिन्मानुषाणाम् ॥ ५

த்வாம் வர்தந்தி க்ஷிதய: ப்ருதிவ்யாம் த்வாம் ராய உபயாஸோ ஜநாநாம் ।
த்வம் த்ராதா தரணே சேத்யோ பூ: பிதா மாதா ஸதமிந்மாநுஷாணாம் ॥ 5 ॥

மக்கள் உன்னை இம்மண்ணுலகில் வளர்க்கிறார்கள். மனிதருடைய இருவகைச் செல்வங்களும் உன்னை வளர்க்கின்றன. ஓ அக்நீ! போரில் எம்மைப் பகைவரிடமிருந்து அப்புறப்படுத்திக் காப்பாற்றுவோன் நீயே. நாங்கள் அறிந்துகொள்ளவேண்டிய பாதுகாவலன் நீயே. எல்லாக் காலத்திலும் மனிதர்களுக்குத் தந்தையும் தாயும் நீயே.

सपर्येण्यः स प्रियो विक्ष्वग्निर्होता मन्द्रो नि षसादा यजीयान् ।
तं त्वा वयं दम आ दीदिवांसमुप ज्ञुबाधो नमसा सदेम ॥ ६

ஸபர்யேண்ய: ஸ ப்ரியோ விக்ஷ்வக்நிர்ஹோதா மந்த்ரோ நி ஷஸாதா யஜீயாந் ।
தம் த்வா வயம் தம ஆ தீதிவாம்ஸமுப க்ஞுபாதோ நமஸா ஸதேம ॥ 6 ॥

இந்த அக்நி மக்கள் என்றும் பணிவிடை செய்வதற்கு உரியவன்; அன்பார்ந்தவன்; மகிழ்ச்சியோடு அழைக்கும் புரோகிதன்; வேள்வி நிகழ்த்துவதில் திறமை வாய்ந்தவன். இவன் தனக்கு உரிய ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான். ஓ அக்நீ! நீ உன் இருப்பிடத்தில் கொழுந்துவிட்டு எரியும்போது, உன்னைச் சரணம் புகுந்து வணங்கி முழந்தாளை மண்டியிட்டு உன்னை நெருங்கி வழிபடுவோமாக.

तं त्वा॑ व॒यं सु॒ध्यो॒३॒॑ नव्य॑मग्ने सुम्ना॒यव॑ ईमहे देव॒यन्तः॑ ।
त्वं विशो॑ अनयो॒ दीद्या॑नो दि॒वो अ॑ग्ने बृह॒ता रो॑च॒नेन॑ ॥ ७

தம் த்வா வயம் ஸுத்யோ நவ்யமக்நே ஸும்நாயவ ஈமஹே தேவயந்த:।
த்வம் விஶோ அநயோ தீத்யாநோ திவோ அக்நே ப்ருஹதா ரோசநேந ॥ 7 ॥

ஓ அக்நீ! நாங்கள் நேர்மையாக எண்ணுபவர்கள்; இன்பத்தைத் தேடுபவர்கள்; தேவர்களை உண்டாக்குபவர்கள். நாங்கள் எங்கள் மந்திரவார்த்தைகளை உரத்த குரலில் எழுப்பி, விரும்பி வழிபடும் தெய்வம் நீ. ஓ அக்நீ! நீ உன் பிரகாசத்தின் பொலிவுடன் பெரும்பரப்பு உடையதாய் விளங்கும் விண்ணுலகின் வழியாக மக்களை நடத்துகிறாய்.

वि॒शां क॒विं वि॒श्पतिं॒ शश्व॑तीनां नि॒तोश॑नं वृष॒भं च॑र्षणी॒नाम् ।
प्रेती॑षणिमि॒षय॑न्तं पाव॒कं राज॑न्तम॒ग्निं य॑ज॒तं र॑यी॒णाम् ॥ ८

விஶாம் கவிம் விஶ்பதிம் ஶஶ்வதீநாம் நிதோஶநம் வ்ருஷபம் சர்ஷணீநாம் ।
ப்ரேதீஷணிமிஷயந்தம் பாவகம் ராஜந்தமக்நிம் யஜதம் ரயீணாம் ॥ 8 ॥

நீ உண்மையைக் காணும் கவி; எக்காலத்தும் நிலைபெற்ற தலைமுறைகளாக மக்களை ஆள்கின்ற தலைவன்; தவறு செய்தவர்களைத் தண்டிப்பவன்; காண்போருக்குக் காளை போன்று உள்ளாய்; தொலைதூரப் பிரயாணத்திற்கு எங்களைச் செலுத்திச் செயல்படச் செய்கிறாய். நீ எல்லாவற்றையும் தூய்மைப்படுத்தும் சுடராகவும், வேள்வியின் சக்தியாகவும், செல்வங்களின் அரசாகவும் உள்ளாய்.

सो अग्न ईजे शशमे च मर्तो यस्त आनट् समिधा हव्यदातिम् ।
य आहुतिं परि वेदा नमोभिर्विश्वेत्स वामा दधते त्वोतः ॥ ९

ஸோ அக்ந ஈஜே ஶஶமே ச மர்த்தோ யஸ்த ஆநட் ஸமிதா ஹவ்யதாதிம் ।
ய ஆஹுதிம் பரி வேதா நமோபிர்விஶ்வேத் ஸ வாமா தததே த்வோத: ॥ 9 ॥

ஓ அக்நீ! வேள்வியின் சமித்தினால் தான் அளிக்கும் நிவேதனத்தை நிறைவேற்றி, அதனால் அக்நியை வளர்த்து, அந்த அக்நியை அடைக்கலமாகப் பற்றி வணங்கி, அக்நிக்கு வழங்கப்படவேண்டிய நெறிமுறையை முழுமையாகக் கற்றவன், தன் உழைப்பைப் பயன்படுத்தி வேள்வியை நிறைவேற்றியவன் ஆவான். உன் பாதுகாவலில் இருப்பவன், தான் விரும்பத்தக்கன எல்லாவற்றையும் தன்னிடத்தில் தங்கச்செய்துவிடுவான்.

अस्मा उ ते महि महे विधेम नमोभिरग्ने समिधोत हव्यैः ।
वेदी सूनो सहसो गीर्भिरुक्थैरा ते भद्रायां सुमतौ यतेम ॥ १०

அஸ்மா உ தே மஹி மஹே விதேம நமோபிரக்நே ஸமிதோத ஹவ்யை: ।
வேதீ ஸூநோ ஸஹஸோ கீர்பிருக்தைரா தே பத்ராயாம் ஸுமதௌ யதேம ॥ 10 ॥

ஓ அக்நீ! சக்தியின் மகனே! நாங்கள் எங்களுடைய வணக்கங்களாலும், சமித்தாலும், நாங்கள் வழங்கும் பொருள்களாலும், வேள்விமேடையை அமைத்திருப்பதனாலும் தக்க மேம்பட்ட பொருள்களை உனக்கு அளிப்போமாக. உன் மங்களகரமான நோ்மையான எண்ணப்படி நாங்கள் செயற்பட முயல்வோம்.

आ यस्ततन्थ रोदसी वि भासा श्रवोभिश्च श्रवस्यस्तरुत्रः ।
बृहद्भिर्वाजैः स्थविरेभिरस्मे रेवद्भिरग्ने वितरं वि भाहि ॥ ११

ஆ யஸ்ததந்த ரோதஸீ வி பாஸா ஶ்ரவோபிஶ்ச ஶ்ரவஸ்யஸ்தருத்ர: ।
ப்ருஹத்பிர்வாஜை: ஸ்தவிரேபிரஸ்மே ரேவத்பிரக்நே விதரம் வி பாஹி ॥ 11 ॥

ஓ அக்நீ! நீ ஆவேசம் நிறைந்துள்ளாய்; தடைகளைக் கடக்கின்றாய். உன் ஒளியின் விரிவினாலும், ஆவேசத்தால் பெற்ற ஞானங்களாலும், நீ பூமி வானம் இரண்டிலும் பரவியுள்ளாய். உன்னுடைய அருமையான செல்வக்குவியல்கள் பெரியனவாகவும் கனமுடையனவாகவும் விளங்குகின்றன. அவற்றோடு நீ எம்மிடத்தில் விரிவாக விளங்குவாயாக.

नृवद्वसो सदमिद्धेह्यस्मे भूरि तोकाय तनयाय पश्वः ।
पूर्वीरिषो बृहतीरारेअघा अस्मे भद्रा सौश्रवसानि सन्तु ॥ १२

ந்ருவத்வஸோ ஸதமித்தேஹ்யஸ்மே பூரி தோகாய தநயாய பஶ்வ: ।
பூர்வீரிஷோ ப்ருஹதீராரேஅகா அஸ்மே பத்ரா ஸௌஶ்ரவஸாநி ஸந்து ॥ 12 ॥

செல்வத்துக்கு அரசே! தேவர்கள் உள்ள பொருள்களை எல்லாம் எம்மிடத்தில் எப்போதும் தங்கச்செய்வாயாக; பிறந்த மகனுக்காகப் பசுமந்தைகள் பலவற்றை எங்களிடத்தில் அமைப்பாயாக. தீங்குகள் அணுகாத பெரிய தூண்டுதல்களின் தொகுதிகளும், உண்மை ஆவேசங்களால் உண்டாகும் நன்மைகளும் எங்களிடம் நிலையாக இருப்பன ஆகுக.

पुरूण्यग्ने पुरुधा त्वाया वसूनि राजन्वसुता ते अश्याम् ।
पुरूणि हि त्वे पुरुवार सन्त्यग्ने वसु विधते राजनि त्वे ॥ १३

புரூண்யக்நே புருதா த்வாயா வஸூநி ராஜந்வஸுதா தே அஶ்யாம் ।
புரூணி ஹி த்வே புருவார ஸந்த்யக்நே வஸு விததே ராஜநி த்வே ॥ *13* ॥

ஓ அரசே! ஓ அக்நீ! உன்னாலும், நீ செல்வங்களுக்கு அரசனாக இருக்கும் உரிமையாலும், நான் செல்வங்கள் பலவற்றையும் பலவகைகளில் நுகர்வேன் ஆகுக. பலவாக வாழ்த்தப்படும் அக்நீ! ஓ அரசே! உன்னை வழிபடுபவனுக்குச் செல்வங்கள் பல உன்னிடத்தில் உள்ளன.

ஸூக்தம் 2

त्वं हि क्षैतवद्यशोऽग्ने मित्रो न पत्यसे ।
त्वं विचर्षणे श्रवो वसो पुष्टिं न पुष्यसि ॥ १

த்வம் ஹி க்ஷைதவத்யஶோऽக்நே மித்ரோ ந பத்யஸே ।
த்வம் விசர்ஷணே ஶ்ரவோ வஸோ புஷ்டிம் ந புஷ்யஸி ॥ *1* ॥

அக்நீ! ஒரு நண்பனைப் போல நீ எமது வீட்டை அடக்கியாளும் பெருமையை நோக்கிப் பிரயாணம் செய்கிறாய். ஓ விரிவான பரப்புடன் காணப்படும் செல்வத்தலைவனே! எம் தெய்வம் உட்புகுதலையும் (ஆவேசத்தையும்) வளர்ச்சியையும் நீ காத்து நிலைபெறச் செய்கிறாய்.

त्वां हि ष्मा चर्षणयो यज्ञेभिर्गीर्भिरीळते ।
त्वां वाजी यात्यवृको रजस्तूर्विश्वचर्षणिः ॥ २

த்வாம் ஹி ஷ்மா சர்ஷணயோ யக்ஞேபிர்கீர்பிரீளதே ।
த்வாம் வாஜீ யாத்யவ்ருகோ ரஜஸ்தூர்விஶ்வசர்ஷணி: ॥ 2 ॥

கண்களையுடைய மக்கள், தம் மந்திரச்சொற்களாலும், வேள்வியாலும் உன்னைத் தீவிரமாக வேண்டுகின்றனர். உன்னுடைய குதிரை ஒநாயால் துன்புறுத்தப்படாதது. அது நடு உலகைக் கடப்பது; எல்லாப் பொருள்களையும் காணக்கூடியது. அது உன்னிடம் நெருங்கி வருகிறது.

सजोषस्त्वा दिवो नरो यज्ञस्य केतुमिन्धते ।
यद्ध स्य मानुषो जनः सुम्नायुर्जुह्वे अध्वरे ॥ ३

ஸஜோஷஸ்த்வா திவோ நரோ யக்ஞஸ்ய கேதுமிந்ததே ।
யத்த ஸ்ய மாநுஷோ ஜந: ஸும்நாயுர்ஜுஹ்வே அத்வரே ॥ 3 ॥

இன்பத்தை விரும்பும் மனிதன் தான் வேள்வியில் வழங்குவனவற்றை அத்தீயில் இடுகிறான். தேவர்கள் மனக்களிப்போடு, உன்னை, வேள்வியை விளக்கும் உள்கண்ணாய் இருப்பதற்காக, உன் ஒளியை வெளிப்படுத்திக்கொண்டு வருமாறு அழைத்தனர்.

ऋध्यस्ते सुदानवे धिया मर्तः शशमते ।
ऊती ष बृहतो दिवो द्विषो अंहो न तरति ॥ ४

ருதத்யஸ்தே ஸுதாநவே தியா மர்த: ஶஶமதே ।
ஊதீ ஷ ப்ருஹதோ திவோ த்விஷோ அம்ஹோ ந தரதி ॥ 4 ॥

ஓ அக்நீ! நீ பெரிய கொடையாளி. உனக்காகத் தன் நல்லெண்ணத்தோடு வேள்விச்செயலைச் செய்து முடிக்கும் மனிதன், தன் செல்வத்தில் சிறந்து விளங்குதல் வேண்டும். அவனைப் பெரும்பரப்புடைய தேவர்உலகம் காத்துவருகிறது. அவன் பகைவர்களையும் அவர்கள் செய்யும் தீங்குகளையும் கடந்து அவர்களுக்கு வெளியே செல்கிறான்.

समिधा यस्त आहुतिं निशितिं मर्त्यो नशत्।
वयावन्तं स पुष्यति क्षयमग्ने शतायुषम् ॥ ५

ஸமிதா யஸ்த ஆஹுதிம் நிஶிதிம் மர்த்யோ நஶத் ।
வயாவந்தம் ஸ புஷ்யதி க்ஷயமக்நே ஶதாயுஷம் ॥ 5 ॥

ஓ அக்நீ! இறந்துபோகும் மனிதன், தீயைப் பாதுகாப்பதற்காகச் சமித்தை வழங்கும் வழியையும் உன் வலிமையின் கூர்மையையும் அடைகிறான்; அப்போது, பலகிளைகளாகப் படர்ந்து வளருவதும், நூறுவயது உடையதும் ஆகிய வீக்ஷிட்டினை வளரச்செய்கிறான்.

त्वेषस्ते धूम ऋण्वति दिवि षञ्छुक्र आततः ।
सूरो न हि द्युता त्वं कृपा पावक रोचसे ॥ ६

த்வேஷஸ்தே தூம ருண்வதி திவி ஷஞ்சுக்ர ஆதத: ।
ஸூரோ ந ஹி த்யுதா த்வம் க்ருபா பாவக ரோசஸே ॥ 6 ॥

எல்லாவற்றையும் தூய்மையாக்கும் அக்நியே! உன் பிரகாசத்திலிருந்து எழுகின்ற புகை மேலே பரவிப்பரவி விண்ணுலகில் வெண்மையாக ஒளி வீசுகின்றது. நீ சூரியனுடைய ஒளி போன்ற சுடருடன் விளங்குகின்றாய்.

अधा हि विक्ष्वीड्योऽसि प्रियो नो अतिथिः ।
रण्वः पुरीव जूर्यः सूनुर्न त्रययाय्यः ॥ ७

அதா ஹி விக்ஷ்வீட்யோऽஸி ப்ரியோ நோ அதிதி: ।
ரண்வ: புரீவ ஜூர்ய: ஸூநுர்ந த்ரயயாய்ய: ॥ 7 ॥

ஓ அக்நீ! நீ இப்போது மக்களிடம் மிகவும் விரும்பப்படுபவனாகவும், விருந்தினனாகவும் இருக்கிறாய். நீ இனியவனாய், நகரில் போற்றற்கு உரியவனாக உள்ளாய். நீ மூன்று உலகத்தும் பிரயாணம் செய்கிறாய்; எங்கள் புதல்வனைப் போல உள்ளாய்.

क्रत्वा हि द्रोणं अज्यसेऽग्ने वाजी न कृत्व्यः ।
परिज्मेव स्वधा गयोऽत्यो न ह्वार्यः शिशुः ॥ ८

க்ரத்வா ஹி த்ரோணே அஜ்யஸேऽக்நே வாஜீ ந க்ருத்வ்ய:।
பரிஜ்மேவ ஸ்வதா கயோऽத்யோ ந ஹ்வார்ய: ஶிஶு: ॥ 8 ॥

ஓ அக்நீ! வாசற்படியை உடைய எங்கள் வீட்டில், எங்கள் வேலைகளைச் செய்வதற்குப் பொருத்தமான குதிரையைப் போல, நீ எங்கள் விருப்பப்படி செலுத்தப்படுகிறாய். உன்னுடைய சுபாவத்தால் நீ பெரும்பரப்புடைய மாளிகை போலவும், வளைவான வழியிலே பாய்ந்து ஓடும் குதிரை போலவும், சிறிய குழந்தை போலவும் உள்ளாய்.

त्वं त्या चिदच्युताग्ने पशुर्न यवसे ।
धामा ह यत् ते अजर वना वृश्चन्ति शिक्वसः ॥ ९

த்வம் த்யா சிதச்யுதாऽக்நே பஶுர்ந யவஸே ।
தாமா ஹ யத்தே அஜர வநா வ்ருஶ்சந்தி ஶிக்வஸ: ॥ 9 ॥

ஓ அக்நீ! மிருகங்கள் மேய்வதற்கு உரிய காட்டில் நீ ஒரு மிருகம் போல உள்ளாய். கீழே விழாத பொருள்களையும் நீ விழுங்கி விடுகிறாய். உன்னுடைய பிரகாசிக்கும் ஒளிகள் காடுகளைத் துண்டுதுண்டாக வெட்டிவிடுகின்றன. நீ கிழத்தன்மை ஏற்படாத ஒளியாக உள்ளாய்.

वेषि ह्यध्वरीयतामग्ने होता दमे विशाम् ।
समृधो विश्पते कृणु जुषस्व हव्यमङ्गिरः ॥ १०

வேஷி ஹ்யத்வரீயதாமக்நே ஹோதா தமே விஶாம் ।
ஸம்ருதோ விஶ்பதே க்ருணு ஜுஷஸ்வ ஹவ்யமங்கிர: ॥ *10* ॥

ஓ அக்நீ! வேள்வியை நிகழ்த்துவோர்தம் வீட்டிற்குத் தேவர்களை அழைக்கும் புரோகிதனாக நீ வருகின்றாய். நீ மக்களின் தலைவன் ஆவாய். ஓ அங்கீரஸகுடராய்க் காண்பவனே! நாங்கள் வேள்வியில் அளிப்பனவற்றைக் கொண்டு மகிழ்ந்து, எங்களைச் செல்வத்தால் நிறைவுடையவர்களாகச் செய்வாயாக.

अच्छा नो मित्रमहो देव देवानग्ने वोचः सुमतिं रोदस्योः ।
वीहि स्वस्तिं सुक्षितिं दिवो नॄन् द्विषो अंहांसि दुरिता
तरेम ता तरेम तवावसा तरेम ॥ ११

அச்சா நோ மித்ரமஹோ தேவ தேவாநக்நே வோச: ஸுமதிம்
ரோதஸ்யோ: ।
வீஹி ஸ்வஸ்திம் ஸுக்ஷிதிம் திவோ ந்ரூந்த்விஷோ அம்ஹாம்ஸி துரிதா
தரேம தா தரேம தவாவஸா தரேம ॥ *11* ॥

ஓ அக்நீ! எங்களிடம் சிநேகம்கொண்ட ஒளியே! ஓ தெய்வமே! நீ தேவர்களின் பக்கமாகத் திரும்பி, எங்களுக்காக, இந்நிலவுலகம் தேவர்உலகம் என்ற இரண்டினுடைய உண்மை எண்ணத்தையும் எங்களிடம் கூறி அருளுவாயாக. நீ அமைதியையும், நன்மை தரும் இருப்பிடத்தையும், தேவர்களையும் நோக்கிச் செல்வாயாக. நாங்கள் பாவங்களையும் பகைமையையும் தோல்விகளையும் தாண்டி, நிம்மதியாய்ச் செல்வோமாக. உன் பாதுகாவலால் எங்கள் அச்சம் எல்லாம் நீங்குவன ஆகுக.

ஸூக்தம் 3

अग्ने॒ स क्षे॑षदृत॒पा ऋ॑ते॒जा उ॒रु त्योति॑र्नशते देव॒युष्टे॑ ।
यं त्वं मि॒त्रेण॒ वरु॑णः स॒जोषा॒ देव॒ पासि॒ त्यज॑सा मर्त॒मंहः॑ ॥ १

அக்நே ஸ க்ஷேஷத்ருதபா ருதேஜா உரு ஜ்யோதிர்நஶதே தேவயுஷ்டே ।
யம் த்வம் மித்ரேண வருண: ஸஜோஷா தேவ பாஸி த்யஜஸா மர்தமம்ஹ: ॥ 1 ॥

ஓ அக்நீ! தெய்வத்தை ஆசைப்படும் மனிதன் உன்னோடு தன் வீட்டை அமைத்துக்கொள்கிறான். அவன் சத்தியத்தில் பிறந்தவனாய், சத்தியத்தைக் காப்பவனாய், உன் விரிந்த ஒளியை நெருங்கிப் பக்கத்தில் வருகிறான். ஓ தேவனே! நீ வருணன் ஆதலால் மித்திரனோடு கூடிவந்து, எந்த மனிதனிடம் வேறுபாடு இல்லாத மனத்தோடு இன்புறுகின்றாயோ, அந்த மனிதனை வருத்தும் தீமைகளைப் போக்கி அவனைப் பாதுகாக்கின்றாய்.

ईजे य॒ज्ञेभिः॑ शश॒मे शमी॑भिर्ऋ॒धद्वा॑राया॒ग्नये॑ ददाश ।
ए॒वा च॒न तं य॒शसा॒मजु॑ष्टि॒र्नांहो॒ मर्तं॑ नशते॒ न प्रद॑र्सिः ॥ २

ஈஜே யக்ஞேபி: ஶஶமே ஶமீபிர்ருதத்வாராயாக்நயே ததாஶ ।
ஏவா சந தம் யஶஸாமஜுஷ்டிர்நாம்ஹோ மர்தம் நஶதே ந ப்ரத்ருப்தி: ॥ 2 ॥

அம்மனிதன் வேள்விகளால் தொழுதவன்; தன் உழைப்புக்களால் வேள்விச்செயல்களை எல்லாம் முடித்தவன். அவன் செல்வ வளர்ச்சியைத் தரும் வரங்களைத் தரும் அக்நிதேவனுக்கு வேள்வியில் பொருள்களை அளித்திருக்கிறான். ஆதலின், பெருமையுடைய தேவர்கள், அவனை நோக்காமல், மறுபக்கம் திரும்பிக்கொள்ளமாட்டார்கள். அவனுக்கு ஒரு தீங்கும் வாராது. பகைவர்களின் கர்வமும் அவனைத் தாக்காது.

सूरो॒ न यस्य॑ दृश॒तिररे॒पा भी॒मा यदेति॑ शुच॒तस्त॒ आ धीः ।
हेष॑स्वतः शुरुधो॒ नायम॒क्तोः कुत्रा॑ चिद्र॒ण्वो व॑स॒तिर्व॑ने॒जाः॥ ३

ஸூரோ ந யஸ்ய த்ருஶதிரரேபா பீமா யதேதி ஶுசதஸ்த ஆ தீ: ।
ஹேஷஸ்வத: ஶுருதோ நாயமக்தோ: குத்ரா சித்ரண்வோ வஸதிர்வநேஜா: ॥ 3 ॥

சூரியன் பார்ப்பது போல், உன் பார்வையும் குற்றமற்றது. நீ பிரகாசமாய்க் கொழுந்துவிட்டு எரிந்து, போர்க்களத்தில் ஏற்படும் சத்தத்தைப் போல உரத்த குரலோடு கனைக்கிறாய். அப்போது உன் அறிவின் போக்கு அச்சம் தருவதாய் உள்ளது. அக்நி இனிமையான காட்டில் பிறந்தவன். இரவில் ஏதாவது ஓர் இடத்தில் மகிழ்ச்சியாகத் தங்கியிருப்பவன்.

ति॒ग्मं चि॒देम॒ महि॒ वर्पो॑ अस्य॒ भस॒दश्वो॒ न य॑मसा॒न आ॒सा ।
वि॒जेह॑मानः पर॒शुर्न जि॒ह्वां द्र॒विर्न द्रा॑वयति॒ दारु॒ धक्ष॑त् ॥ ४

திக்மம் சிதேம மஹி வர்போ அஸ்ய பஸதஶ்வோ ந யமஸாந ஆஸா ।
விஜேஹமாந: பரஶுர்ந ஜிஹ்வாம் த்ரவிர்ந த்ராவயதி தாரு தக்ஷத் ॥ 4 ॥

அவனுடைய விரைந்த நடையில் சூடு பரக்கிறது. அவன் உடம்போ பெரியது. அவன் தன் வாயால் விரைவாக மென்று தின்னும் குதிரையைப் போன்றவன். அவன் தன் நாக்கினைக் கோடாரியைப் போல எல்லாப் பக்கங்களிலும் பரவவிடுகிறான்; உலோகங்களை உருக்குபவனைப் போலத் தான் எரிக்கின்ற மரக்கட்டையை உருக்குகின்றான்.

स इदस्तेव प्रति धादसिष्यञ्छिशीत तेजोऽयसो न धाराम् ।
चित्रध्रजतिररतिर्यो अक्तोर्वेर्न द्रुषद्वा रघुपत्मजंहाः ॥ ५

ஸ இதஸ்தேவ ப்ரதி தாதஸிஷ்யஞ்சிஶீத தேஜோऽயஸோ ந தாராம்।
சித்ரத்ரஜதிரரதிர்யோ அக்தோர்வோர்ந த்ருஷத்வா ரகுபத்மஜம்ஹா: ॥ 5 ॥

வில்ஏந்தியவன் தன் வில்லினை ஆயத்தம் செய்வது போல, அக்நி அம்பு எய்வதற்கு வில்லினை ஆயத்தம் செய்கிறான். எஃகின் முனையைப் போல, அவன் தன் ஒளியின் சக்திகளைத் தீட்டுகிறான். அவன் விரைந்த, வியக்கத்தக்க பெருநடையோடு இரவில் பிரயாணம் செய்பவன். அவன் தொடைகள் வேகமாய் அசைந்து செல்வதற்கு ஏற்ப அமைந்துள்ளன. அவன் மரத்தில் தங்கியிருக்கும் பறவையைப் போலவும் உள்ளான்.

स ईं रेभो न प्रति वस्त उस्राः शोचिषा रारपीति मित्रमहाः ।
नक्तं य ईमरुषो यो दिवा नृनमर्त्यो अरुषो यो दिवा नॄन् ॥ ६

ஸ ஈம் ரேபோ ந ப்ரதி வஸ்த உஸ்ரா: ஶோசிஷா ராரபீதி மித்ரமஹா:।
நக்தம் ய ஈமருஷோ யோ திவா ந்ரூநமர்த்யோ அருஷோ யோ திவா ந்ரூந் ॥ 6 ॥

இந்த நட்புடைய ஒளிவடிவினன் மந்திரம் ஓதுபவனைப் போல உள்ளான்; தன் கதிர்களை ஆடையைப் போல அணிகிறான்; தன் சுடர்களுடன் விருப்பம் போலக் கூச்சலிடுகிறான். இரவும் பகலும் தேவர்களை நோக்கி நடக்கும் ஒளியுடையவன் இவனே. பகலின் வழியாகத் தேவர்களை அடையச் செல்லும் ஒளிவீசும் அழிவற்றவன் இவனே.

दिवो न यस्य विधतो नवीनोद् वृषा रुक्ष ओषधीषु नूनोत् ।
घृणा न यो ध्रजसा पत्मना यन्ना रोदसी वसुना दं सुपत्नी ॥ ७

திவோ ந யஸ்ய விததோ நவீநோத்வ்ருஷா ருக்ஷ ஓஷதீஷு நூநோத் ।
க்ருணா ந யோ த்ரஜஸா பத்மநா யந்நா ரோதஸீ வஸுநா தம்
ஸுபத்நீ ॥ 7 ॥

அவனுடைய உரத்த குரல் கட்டளையிடும் சுவர்க்கலோக ஆணையைப் போன்று உள்ளது. காடுகளின் வளர்ச்சிகளில் உரத்த குரலில் உறுமும் காளை போன்றவன் அவன். பந்தயத்தில் ஓடுபவர்களைப் போல, அவன் தன் ஒளியுடன் ஓடிக்கொண்டு சென்று, பூமியையும் வான்உலகத்தையும் தனது செல்வத்தால் நிரப்புகிறான். கணவனிடத்தில் மனைவி இன்பம் நுகர்வது போல அவையும் இன்புறுகின்றன.

धायोभिर्वा यो युज्येभिरर्कैर्विद्युन्न दविद्योत् स्वेभिः शुष्मैः ।
शर्धो वा यो मरुतां ततक्ष ऋभुर्न त्वेषो रभसानो अद्यौत् ॥ ८

தாயோபிர்வா யோ யுஜ்யேபிரர்கைர்வித்யுந்ந தவித்யோத்ஸ்வேபி: ஶுஷ்மை: ।
ஶர்தோ வா யோ மருதாம் ததக்ஷ ருபுர்ந த்வேஷோ ரபஸாநோ
அத்யௌத் ॥ 8 ॥

அவன் தனக்கு உரிய வலிமையுடனும், நிலையாக உதவும் ஒளியுடனும், மின்னலைப் போல மின்னுகின்றான். அவன் வான் உலகத் தச்சனைப் போல (ரிபு) பிராணதேவதைகளின் படையை அணிவகுத்து, வெற்றியை நோக்கிச் செல்லும் விரைவுடன் கொழுந்துவிட்டு எரிந்தபடி விளங்குகின்றான்.

ஸூக்தம் 4

यथा॑ होत॒र्मनु॑षो दे॒वता॑ता य॒ज्ञेभिः॑ सूनो सहसो॒ यजा॑सि ।
ए॒वा नो॑ अद्य॒ स॑म॒ना स॑मा॒नानु॒शन्न॑ग्न उश॒तो य॑क्षि दे॒वान् ॥ १

யதா ஹோதர்மநுஷோ தேவதாதா யக்ஞேபி: ஸூநோ ஸஹஸோ யஜாஸி ।
ஏவா நோ அத்ய ஸமநா ஸமாநாநுஶந்நக்ந உஶதோ யக்ஷி தேவாந் ॥ 1 ॥

ஓ சக்தியின் மகனே! தேவர்களை வேள்விக்கு அழைக்கும் புரோகிதனே! தேவர்களுக்கு மனிதன் வடிவு அமைத்துக் கொள்ளும்போது, நீயும் அவனுடைய வேள்விகளுடன் வேள்வி புரிகின்றாய். அவ்வாறே, இன்று எங்களுக்காகத் தேவர்களுக்கு வேள்விப்பொருள்களை வழங்குவாயாக. ஓ அக்நீ! சமமான சக்திகளுக்கு எல்லாம் சமமாக உள்ள சக்தி நீ. உன்னை விரும்பும் தேவர்களை நீயும் விரும்புகிறாய்.

स नो॑ वि॒भावा॑ च॒क्षणि॒र्न वस्तो॑र॒ग्निर्व॒न्दारु॒ वेद्य॒श्चनो॑ धात् ।
वि॒श्वायु॒र्यो अ॒मृतो॒ मर्त्ये॑षू॒षर्भुद् भूद॑ति॒थिर्जा॒तवे॑दाः ॥ २

ஸ நோ விபாவா சக்ஷணிர்ந வஸ்தோரக்நிர்வந்தாரு வேத்யஶ்சநோ தாத் ।
விஶ்வாயுர்யோ அம்ருதோ மர்த்யேஷூஷர்புத்பூததிதிர்ஜாதவேதா: ॥ 2 ॥

பகல்பொழுதில் ஒளி எங்கும் பரந்து காணப்படுவது போல அக்நி ஒளிவிரிந்து காணப்படுகிறான்; வணங்கிப் புகழ்தற்கு உரிய இன்பத்தை நிலைநாட்டுகின்றான். நம் வாழ்நாள் முழுவதும் அவன் கையில் உள்ளது. இறந்துபோகும் மனிதர்களிடையே, அவன் என்றும் நிலைபெற்றிருக்கும் தேவன் ஆவான். விடியற்காலத்தில் அவன் கண்விழிக்கிறான். அவன் நம் விருந்தினன் ஆவான். அவன் நம் பிறப்புக்கள் அனைத்தையும் அறிந்த தெய்வமாவான்.

द्यावो न यस्य पनयन्त्यभ्वं भासांसि वस्ते सूर्यो न शुक्रः ।
वि य इनोत्यजरः पावकोऽश्वस्य चिच्छिश्नथत्पूर्व्याणि ॥ ३

த்யாவோ ந யஸ்ய பநயந்த்யப்வம் பாஸாம்ஸி வஸ்தே ஸூர்யோ ந ஶுக்ர: ।
வி ய இநோத்யஜர: பாவகோऽஶ்வஸ்ய சிச்சிஶ்நதத்பூர்வ்யாணி ॥ 3 ॥

அவனுடைய மிகப்பெரிய வலிமையை வான்உலகங்களும் வணங்கிப் புகழும்போலும். அவன் தன் பிரகாசத்தையே ஆடையாக அணிந்து, சூரியனைப் போல ஒளிவீசுகிறான். தூய்மையை வழங்கும் அக்நி கிழத்தன்மை என்பதே இல்லாமல் வெளிப்பட்டுச் செல்கிறான்; உலகப் பொருள்களை நுகர்பவனுடைய பழைய பொருள்களை வெட்டித்தள்ளுகிறான்.

वद्मा हि सूनो अस्यद्मसद्वा चक्रे अग्निर्जनुषाज्मान्नम् ।
स त्वं न ऊर्जसन ऊर्जं धा राजेव जेरवृके क्षेष्यन्तः ॥ ४

வத்மா ஹி ஸூநோ அஸ்யத்மஸத்வா சக்ரே அக்நிர்ஜநுஷாஜ்மாந்நம் ।
ஸ த்வம் ந ஊர்ஜஸந ஊர்ஜம் தா ராஜேவ ஜேரவ்ருகே க்ஷேஷ்யந்த: ॥ 4 ॥

ஓ மகனே! நீ எங்களிடம் பேசுகின்றவனாக இருக்கிறாய். உன் உணவே நீ தங்கும் இடமாக உள்ளது. அக்நிபகவான் தன் பிறப்பு முதல், தன் உணவினையே தான் விரைந்து உலாவும் நிலப்பரப்பாகக் கொண்டுள்ளான். ஓ வலிமையைத் தேடித் தொகுப்பவனே! எம்மிடத்தில் வலிமையை நிலைபெறச் செய்வாயாக. பொருள்களை அழிக்கின்றவன் ஒருவனும் இல்லாத இடமே உன் இருப்பிடமாக உள்ளது.

निर्तिक्ति यो वारणमन्नमत्ति वायुर्न राष्ट्र्यत्येत्यक्तून् ।
तुर्याम यस्त आदिशामरातीरत्यो न ह्रुतः पततः परिह्रुत् ॥ ५

நிதிக்தி யோ வாரணமந்நமத்தி வாயுர்ந ராஷ்ட்ர்யத்யேத்யக்தூந் ।
துர்யாம யஸ்த ஆதிஶாமராதீரத்யோ ந ஹ்ருத: பதத: பரிஹ்ருத் ॥ 5 ॥

அக்நி தன் உணவினை உண்டு, தீங்குகளை விலக்கும் வாளினைத் தீட்டிக்கொண்டிருக்கிறான். அவன் வாயுபகவானைப் போல அரசர்களுக்குத் தெய்வம்; இரவுகளைக் கடந்து செல்கிறான். ஓ அக்நீ! நாங்கள் பகைவர்களை அழித்து, பகைவர் நிலங்களை ஊடுருவி வெளியே செல்வோமாக. நீ பாய்ந்து ஓடும் குதிரையைப் போல, எங்களைத் தாக்கித் துன்புறுத்துபவர்களை நீயும் துன்புறுத்திக்கொண்டு, உன் ஏற்பாடுகளை எதிர்க்கும் எல்லாவற்றையும் உடைத்தெறிகின்றாய்.

आ सूर्यो न भानुमद्भिरर्कैरग्ने ततन्थ रोदसी वि भासा ।
चित्रो नयत्परि तमांस्यक्तः शोचिषा पत्मन्नौशिजो न दीयन् ॥ ६

ஆ ஸூர்யோ ந பாநுமத்பிரர்கைரக்நே ததந்த ரோதஸீ வி பாஸா ।
சித்ரோ நயத்பரி தமாம்ஸ்யக்த: ஶோசிஷா பத்மந்நௌஶிஜோ ந தீயந் ॥ 6 ॥

ஓ அக்நீ! உன் பிரகாசத்தால் பூமியிலும் வான்உலகத்திலும் விரிவாகப் பரவிக்கொண்டு, உன் தெய்விக ஒளிக்கதிர்களால் சூரியனைப் போல விளங்குகின்றாய். உன் ஒளியை நன்றாகத் தேய்த்துக் குளிப்பாட்டுவதால் புதுமெருகு ஊட்டப்பட்ட நீ, இருள்களை விரட்டிவிட்டு, தேவர்களின் விருப்பத்தால் தோன்றிய ஒரு மகனைப் போல, சப்தம்செய்துகொண்டு முன்னேறுகிறாய்.

त्वां हि मन्द्रतममर्कशोकैर्वृमहे महि नः श्रोष्यग्ने ।
इन्द्रं न त्वा शवसा देवता वायुं पृणन्ति राधसा नृतमाः ॥ ७

த்வாம் ஹி மந்த்ரதமமர்கஶோகைர்வவ்ருமஹே மஹி நः ஶ்ரோஷ்யக்நே।
இந்த்ரம் ந த்வா ஶவஸா தேவதா வாயும் ப்ருணந்தி ராதஸா ந்ருதமாः ॥ 7 ॥

பிரகாசம் மிகுந்த ஒளிகளால் பெரிதும் மகிழ்கின்ற உன்னை நாங்கள் தேர்ந்துஎடுத்து ஏற்றுக்கொண்டுள்ளோம். ஓ அக்நீ! பெருமையுடைய பொருள்களை எல்லாம் எம்பொருட்டுக் காதுகொடுத்துக் கேட்பாயாக. ஓ அக்நிதேவனே! வலிமை மிகுந்த தேவர்கள் உன்னை இந்திரனைப் போன்ற வலிமையாலும், வாயுபகவானைப் போன்ற செல்வத்தாலும் நிரப்புகின்றார்கள்.

नू नो अग्नेऽवृकेभिः स्वस्ति वेषि रायः पथिभिः पर्ष्यंहः ।
ता सूरिभ्यो गृणते रासि सुम्नं मदेम शतहिमाः सुवीराः ॥ ८

நூ நோ அக்நேऽவ்ருகேபிः ஸ்வஸ்தி வேஷி ராயः பதிபிः பர்ஷ்யம்ஹः।
தா ஸூரிப்யோ க்ருணதே ராஸி ஸும்நம் மதேம ஶதஹிமாः ஸுவீராः ॥ 8 ॥

ஓ அக்நீ! பகைவர் இல்லாத வழிகளில் நீ சுகமாகப் பிரயாணம் செய்கிறாய். எம்மையும் தீங்குகளைத் தாண்டி வெளியே கொண்டு செல்கிறாய். இந்த உயர்ந்த பொருள்களை அறிவுவிளக்கம் பெற்ற உண்மையான அறிவாளிக்கு அளிக்கின்றாய். நாங்கள் வீரர்களுக்கு உரிய வலிமையைப் பெற்று நூறுஆண்டுகள் வாழ்ந்து இன்பத்தில் மகிழ்வோமாக.

ஸூக்தம் 5

हुवे वः सूनुं सहसो युवानमद्रोघवाचं मतिभिर्यविष्ठम् ।
य इन्वति द्रविणानि प्रचेता विश्ववाराणि पुरुवारो अध्रुक् ॥ १

ஹுவே வ: ஸூநும் ஸஹஸோ யுவாநமத்ரோகவாசம் மதிபிர்யவிஷ்டம்।
ய இந்வதி த்ரவிணாநி ப்ரசேதா விஶ்வவாராணி புருவாரோ
அத்ருக் ॥ 1 ॥

ஓ அக்நீ! என் எண்ணங்களால் உன்னை அழைக்கிறேன். நீ வஞ்சனை இல்லாத சொற்களை உடையவன். நீ தேவர்களுள் கடைசியாக உள்ள இளைஞன். நீ சக்தியின் புதல்வன். அக்நி துன்பங்கள் எல்லாவற்றிலி ருந்தும் நீங்கிய ஞானமயமாக உள்ளான். அவன் பல கொடைகளை வழங்குபவன். அவன் செல்வங்களை நோக்கிப் பிரயாணம் செய்பவன். அச்செல்வத்தால் வரங்களை எல்லாம் வழங்குகிறான்.

त्वे वसूनि पुर्वणीक होतर्दोषा वस्तोरेरिरे यज्ञियासः ।
क्षामेव विश्वा भुवनानि यस्मिन् त्सं सौभगानि दधिरे पावके ॥ २

த்வே வஸூநி புர்வணீக ஹோதர்தோஷா வஸ்தோரேரிரே யக்ஞியாஸ:।
க்ஷாமேவ விஶ்வா புவநாநி யஸ்மிந்த்ஸம் ஸௌபகாநி ததிரே
பாவகே ॥ 2 ॥

தேவர்களை வேள்விக்கு அழைக்கும் புரோகிதனே! பலவகையான ஒளிவீசும் வடிவங்களை உடையவனே! இரவிலும் பகலிலும், வேள்வித்தலைவர்கள் உன்னிடத்தில் தம் செல்வங்களை வழங்குகின்றனர். இந்நிலவுலகிலேயே மற்ற எல்லா உலகங்களையும் நிலைநாட்டியது போல, எல்லாவற்றையும் தூய்மைப்படுத்தும் அக்நியாலே, நன்மைகளை எல்லாம் அவர்கள் நிலைநாட்டினர்.

त्वं विक्षु प्रदिवः सीद आसु क्रत्वा रथीरभवो वार्याणाम् ।
अत इनोषि विधते चिकित्वो व्यानुषग्जातवेदो वसूनि ॥ ३

த்வம் விக்ஷு ப்ரதிவ: ஸீத ஆஸு க்ரத்வா ரதீரபவோ வார்யாணாம் ।
அத இநோஷி விததே சிகித்வோ வ்யாநுஷக்ஜாதவேதோ வஸூநி ॥ 3 ॥

ஓ! அக்நியே! நீ பழங்காலத்தவன். மக்களுக்கு நடுவில், நீ உன் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறாய். நீ, உன்னுடைய விருப்பத்தால் மக்கள் விரும்புதற்கு ஏற்ற பொருள்களை எல்லாம் கொண்டு வருதற்கு, நீ அவர்களுடைய தேரோட்டியாக உள்ளாய். ஓ நல்ல உணர்வே வடிவெடுத்தவனே! நீ எல்லாப் பிறப்புக்களையும் அறிந்துள்ளாய். உன்னைத் தொழுபவனுக்கு வழங்குவதற்காக நீ விரிவாய்த் தொடர்ச்சி நீங்காமல் ஒழுங்குடன், செல்வங்களை நோக்கி நடந்துசெல்கிறாய்.

यो नः सनुत्यो अभिदासदग्ने यो अन्तरो मित्रमहो वनुष्यात् ।
तमजरेभिर्वृषभिस्तव स्वैस्तपा तपिष्ठ तपसा तपस्वान् ॥ ४

யோ ந: ஸநுத்யோ அபிதாஸதக்நே யோ அந்தரோ மித்ரமஹோ வநுஷ்யாத் ।
தமஜரேபிர்வ்ருஷபிஸ்தவ ஸ்வைஸ்தபா தபிஷ்ட தபஸா தபஸ்வாந் ॥ 4 ॥

ஓ அக்நீ! எல்லோரிடமும் சிநேகமாய் இருக்கும் ஜோதியே! எரிகின்ற சக்தியே! மறைவாக இருந்து எங்களை அழிக்கும் பகைவனையும் மிகுந்த வெப்பத்துடன் விரைந்து பாய்ந்து உன் சுடரால் துன்புறுத்துவாயாக. நீ, காளையைப் போன்ற ஆண்மையை உடையனவாய்க் கிழத்தன்மை அடையாத உன் நெருப்புக்களால் எங்கள் பகைகளை எரித்துவிடு.

यस्ते॑ य॒ज्ञेन॑ स॒मिधा॒ य उ॒क्थैर्र्के॒भिः सूनो सहसो॒ ददा॑शत् ।
स मर्त्ये॑ष्वमृत॒ प्रचे॑ता रा॒या द्यु॒म्नेन॒ श्रव॑सा॒ वि भा॑ति ॥ ५

யஸ்தே யக்ஞேந ஸமிதா ய உக்தைரர்கேபி: ஸூநோ ஸஹஸோ
ததாஶத் ।
ஸ மர்த்யேஷ்வம்ருத ப்ரசேதா ராயா த்யும்நேந ஶ்ரவஸா வி பாதி ॥ 5 ॥

மனிதன், தான் இயற்றும் வேள்வியாலும், வழங்கும் சமித்துக்களாலும், தான் உச்சரிக்கும் சொற்களால் விளக்கம் பெறும் மந்திரங்களாலும், உனக்கு உணவுகளை அளிக்கிறான். ஓ அழிவில்லாதவனே! சக்தியின் புதல்வனே! அவன் மனிதர்களுக்குள் அறிவுடைய மனமாகி, உன் செல்வத்துடனும் ஆவேசத்துடனும் ஒளியுடனும் விளங்குகிறான்.

स तत्कृ॑धीषि॒तस्तूय॑मग्ने॒ स्पृधो॑ बाधस्व॒ सह॑सा॒ सह॑स्वान् ।
यच्छ॒स्यसे॒ द्युभि॑र॒क्तो वचो॑भि॒स्तज्जु॑षस्व जरि॒तुर्घो॑षि॒ मन्म॑ ॥ ६

ஸ தத்க்ருதீஷிதஸ்தூயமக்நே ஸ்ப்ருதோ பாதஸ்வ ஸஹஸா
ஸஹஸ்வாந் ।
யச்சஸ்யஸே த்யுபிரக்தோ வசோபிஸ்தஜ்ஜுஷஸ்வ ஜரிதுர்கோஷி
மந்ம ॥ 6 ॥

ஓ அக்நீ! சக்தி உன்னுடையதே. நீ நாங்கள் வேண்டும் பொருள்களை விரைவில் படைத்து அளிப்பாயாக. எங்களை எதிர்ப்பவர்களை உன் சக்தியால் விலக்குவாயாக. உன் ஒளிகளால் நீ வெளிப்படும்போது, எங்கள் மந்திரச்சொற்களால் நீ வடிவம் பெறுகிறாய். உன்னை வழிபடுபவன், வெகுதூரம் கேட்கும்படி, மந்திரச்சொற்களோடு உன்னை எண்ணுகிறான். அவன் எண்ணத்தால் நீ இன்புறுவாயாக.

अ॒श्याम॒ तं काम॑मग्ने॒ तवो॒ती अ॒श्याम॑ र॒यिं र॑यिवः सु॒वीर॑म् ।
अ॒श्याम॒ वाज॑म॒भि वा॒जय॑न्तो॒ऽश्याम॑ द्यु॒म्नम॑जरा॒जरं॑ ते ॥ ७

அஶ்யாம தம் காமமக்நே தவோதீ அஶ்யாம ரயிம் ரயிவ: ஸுவீரம் ।
அஶ்யாம வாஜமபி வாஜயந்தோ ऽஶ்யாம த்யும்நமஜராஜரம் தே ॥ 7 ॥

ஓ அக்நீ! உன் பாதுகாவலில் நாங்கள் அந்த உயர்ந்த விருப்பத்தைப் பெறுவோமாக. ஓ செல்வத்தலைவனே! அச்செல்வத்தையும், அது வழங்கும் வீரர்களையும் பெறுவோமாக; உன்னை மறுபடியும் நிரம்பச்செய்து, உன்னுடைய முழுநிறைவையும் பெறுவோமாக; ஓ கிழத்தன்மை இல்லாத அக்நியே! உன்னுடைய கிழத்தன்மை இல்லாத ஒளியினைப் பெறுவோமாக.

ஸூக்தம் 6

प्र नव्य॑सा सह॑सः सू॒नुमच्छा॑ य॒ज्ञेन॑ गा॒तुमव॑ इ॒च्छमा॑नः ।
वृ॒श्चद्व॑नं कृ॒ष्णया॑मं॒ रुश॑न्तं वी॒ती होता॑रं दि॒व्यं जि॑गाति ॥ १

ப்ர நவ்யஸா ஸஹஸ: ஸூநுமச்சா யக்ஞேந காதுமவ இச்சமாந: ।
வ்ருஶ்சத்வநம் க்ருஷ்ணயாமம் ருஶந்தம் வீதீ ஹோதாரம் திவ்யம் ஜிகாதி ॥ 7 ॥2

மனிதன் பாதையையும் பாதுகாவலையும் வேண்டும்போது, புதியதொரு வேள்வியால் சக்திமகனாகிய அக்நியை நெருங்குகிறான். மனிதன் பிரயாணம்செய்துகொண்டு, தேவர்களை அழைப்பதில் ஈடுபட்ட தெய்விகப் புரோகிதனை அடைகிறான். அப்புரோகிதன் ஒளி சிறந்து விளங்குகின்றான். ஆனால் அவன் காடுகளை அழித்துக்கொண்டு செல்லும் செயல் கறுத்துள்ளது.

स श्वि॒तानस्त॑न्य॒तू रो॑चन॒स्था अ॒जरे॑भि॒र्नाद॒द्भि॒र्यवि॑ष्ठः ।
यः पा॑व॒कः पु॑रु॒तमः॑ पु॒रूणि॑ पृ॒थून्य॒ग्निर॑नु॒याति॒ भर्व॑न् ॥ २

ஸ ஶ்விதாநஸ்தந்யதூ ரோசநஸ்தா அஜரேபிர்நா நதத்பிர்யவிஷ்ட:।
ய: பாவக: புருதம: புரூணி ப்ருதூந்யக்நிரநுயாதி பர்வந் ॥ 2 ॥

அவன் இடி போல ஒலித்துக்கொண்டு வெண்மை வாய்ந்து ஒளி வீசும் உலகில் வளர்ந்து நிற்கின்றான். ஒலித்துக்கொண்டுள்ள அழியாத சுடர்களால் அவன் மிகவும் இளமை வாய்ந்து காணப்படுகிறான். இவன்தான் புனிதப்படுத்துபவன். இவன் தன் கூட்டங்கள் பல நிரம்பியுள்ளவன். இவன் உணவாக உட்கொள்ளும் பொழுதே, விரிவாக உள்ள பல பொருள்களையும் பின்தொடர்கின்றான்.

वि ते॒ विष्व॒ग्वात॑जूतासो अग्ने॒ भामा॑सः शुचे॒ शुच॑यश्चरन्ति ।
तु॒वि॒म्र॒क्षासो॑ दि॒व्या नव॑ग्वा॒ वना॑ वनन्ति धृष॒ता रु॒जन्तः॑ ॥ ३

வி தே விஷ்வக்வாதஜூதாஸோ அக்நே பாமாஸ: ஶுசே ஶுசயஶ்சரந்தி।
துவிம்ரக்ஷாஸோ திவ்யா நவக்வா வநா வநந்தி த்ருஷதா ருஜந்த: ॥ 3 ॥

ஓ அக்நீ! உன் ஒளிகள் காற்றால் தூண்டப்பட்டு எல்லாப் பக்கங்களிலும் பரவுகின்றன. நீயும் தூயவன். உன் ஒளிகளும் தூய்மையானவையே. அவை ஒன்பது கிரணங்களைக் கொண்ட ரிஷிகள் போல உள்ள தெய்விக ஜோதிகளாகும். அவை பல பொருள்களையும் தம்முடைய வேகத்தால் தள்ளிப் பிளந்து கொண்டு, தாம் சுவைத்து இன்புறுதற்கு உரிய காடுகளை நுகர்கின்றன.

ये ते॑ शु॒क्रासः॒ शुच॑यः शुचिष्मः॒ क्षां वप॑न्ति॒ विषि॑तासो॒ अश्वाः॑ ।
अध॑ भ्र॒मस्त॑ उर्वि॒या वि भा॑ति या॒तय॑मानो॒ अधि॒ सानु॒ पृश्नेः॑ ॥ ४

யே தே ஶுக்ராஸ: ஶுசய: ஶுசிஷ்ம: க்ஷாம் வபந்தி விஷிதாஸோ அஶ்வா: ।
அத ப்ரமஸ்த உர்வியா வி பாதி யாதயமாநோ அதி ஸாநு ப்ருஶ்நே: ॥ 4 ॥

தூய்மை விளங்கக் கொழுந்துவிட்டு எரியும் அக்நியே! உன் குதிரைகள் மாசின்றிப் பளபளப்பாய் ஒளிவீசுகின்றன. உன்னுடைய இந்தக் குதிரைகள் பாய்ந்து ஓடுமாறு கடிவாளம் தளர்த்தப்பட்டுப் பூமியை அழித்துத் தரைமட்டம் ஆக்கிவிடுகின்றன. அப்பொழுது உன்னுடைய இயக்கம் விரிவடைகிறது. உன் குதிரைகளைப் பல நிறங்களை உடைய தாயினுடைய உச்சிவரை ஓட்டும்போது, அந்தப் பிரகாசம் நெடுந்தொலைவு பரவி விளங்குகின்றது.

अध॑ जि॒ह्वा प॑पतीति॒ प्र वृष्णो॑ गोषु॒युधो॒ नाशनिः॑ सृजा॒ना ।
शूर॑स्येव॒ प्रसि॑तिः क्षा॒तिर॒ग्नेर्दु॒र्वर्तुर्भी॒मो द॑यते॒ वना॑नि ॥ ५

அத ஜிஹ்வா பாபதீதி ப்ர வ்ருஷ்ணோ கோஷுயுதோ நாஶநி: ஸ்ருஜாநா ।
ஶூரஸ்யேவ ப்ரஸிதி: க்ஷாதிரக்நேர் துர்வர்த்துர்பீமோ தயதே வநாநி ॥ 5 ॥

பிறகு, காளையின் நாக்கு, ஒளிமந்தைகளுக்காகப் போர்செய்யும் தேவன் செலுத்திய இடி போல, இடைவிடாமல் விரைந்து அசைகிறது. அக்நிதேவனுடைய அழித்தல்தொழில் ஒரு வீரன் நிகழ்த்தும் தாக்குதலைப் போன்றது. அக்நி பயங்கரமானவன். அவனை யாரும் தடுக்கமுடியாது. அவன் காடுகளில் மரங்கள் வேறுவேறு ஆகுமாறு துண்டித்து விடுகிறான்.

आ भानुना पार्थिवानि ज्रयांसि महस्तोदस्यं धृषता ततन्थ ।
स बाधस्वाप भया सहोभिः स्पृधो वनुष्यन् वनुषो नि जूर्व ॥ ६

ஆ பாநுநா பார்த்திவாநி ஜ்ரயாம்ஸி மஹஸ்தோதஸ்ய த்ருஷதா ததந்த।
ஸ பாதஸ்வாப பயா ஸஹோபி: ஸ்ப்ருதோ வநுஷ்யந்வநுஷோ நி ஜூர்வ ॥ 6 ॥

அக்நியே! உன் ஒளியாலும், உன் சாட்டையின் வேகத்தாலும் இவ்வுலகத்தில் உன் இயக்கத்தின் (சஞ்சாரத்தின்) விரைவைப் பரவச்செய்துள்ளாய். உன்னுடைய மேம்பட்ட ஆற்றல்களால் அபாயங்கள் எல்லாவற்றையும் போக்குவாயாக. எங்களை வெல்ல வரும் பகைவர்களை நீ வெல்லுவதற்குச் சென்று, அவர்களைச் சிதைத்து அழிப்பாயாக.

स चित्र चित्रं चितयन्तमस्मे चित्रक्षत्र चित्रतमं वयोधाम् ।
चन्द्रं रयिं पुरुवीरं बृहन्तं चन्द्रं चन्द्राभिर्गृणते युवस्व ॥ ७

ஸ சித்ர சித்ரம் சிதயந்தமஸ்மே சித்ரக்ஷத்ர சித்ரதமம் வயோதாம் ।
சந்த்ரம் ரயிம் புருவீரம் ப்ருஹந்தம் சந்த்ர சந்த்ராபிர்க்ருணதே யுவஸ்வ ॥ 7॥

ஒளி மிக்கோனே! பலவகை ஆற்றலுடன் விளங்கும் அக்நியே! மிகவும் நெருங்கிப் பலவகைப்பட்டனவும், எங்களை ஞானம் அடையச் செய்வனவும், எங்கள் வளர்ச்சியை நிலைநாட்டுவனவும் ஆகிய அந்த நிதிச்செல்வங்களை எங்களிடத்தில் உறுதியாக நிலைநாட்டுவாயாக. ஆனந்தமயமான தெய்வமே! இன்பம் தரும் சொற்களால் உன்னைப் போற்றி வழிபடுபவனுக்குப் பெரும்பரப்புடைய இன்பச்செல்வமும், அச்செல்வத்தையும் பாதுகாத்துக்கொடுக்கும். வீரம் மிக்க காப்பாளர் உதவியும் அமைவன ஆகுக.

ஸூக்தம் 7

मूर्धानं दिवो अरतिं पृथिव्या वैश्वानरमृत आ जातमग्निम् ।
कविं सम्राजमतिथिं जनानामासन्ना पात्रं जनयन्त देवाः ॥ १

மூர்தாநம் திவோ அரதிம் ப்ருதிவ்யா வைஶ்வாநரம்ருத ஆ ஜாதமக்நிம் ।
கவிம் ஸம்ராஜமதிதிம் ஜநாநாமாஸந்நா பாத்ரம் ஜநயந்த தேவா: ॥ 1 ॥

அக்நி சுவர்க்கத்துக்குத் தலை போன்றவன். அவன் இவ்வுலகில் யாத்திரை செய்பவன்; அவன் எங்கும் பரவியுள்ள ஆற்றலாவான். இத்தகைய அக்நி மக்களின் விருந்தினன்; உண்மையைக் காண்பவன்; எதனையும் தானே நிர்வகிக்கக்கூடிய அரசன். அத்தகையவன் உண்மைநிலையில் நமக்காகப் பிறந்துள்ளான். தேவர்கள் அந்த வைசுவாநரனுக்கு (எல்லாப் பொருள்களின் ஆற்றலும் உருவானவனுக்கு) அவனது வாயையே தேவர்களுக்கு வேள்வியில் அவி வழங்கும் பாத்திரம் ஆக்கினர்.

नाभिं यज्ञानां सदनं रयीणां महामाहावमभि सं नवन्त ।
वैश्वानरं रथ्यमध्वराणां यज्ञस्य केतुं जनयन्त देवाः ॥ २

நாபிம் யக்ஞாநாம் ஸதநம் ரயீணாம் மஹாமாஹாவமபி ஸம் நவந்த ।
வைஶ்வாநரம் ரத்யமத்வராணாம் யக்ஞஸ்ய கேதும் ஜநயந்த தேவா: ॥ 2 ॥

தேவர்கள் அனைவரும் வேள்விக்கு நடுமுடிச்சு (தொப்புள்) ஆகவும், செல்வங்களுக்கு இருப்பிடமாகவும், போரில் அழைப்பதற்கு ஆற்றல் வாய்ந்த இலக்காகவும் உள்ள அவன் அருகில் வருகின்றனர். வேள்வியில் தேரோட்டியும், வேள்வியின் உள்உணர்வாகிய கண்ணும் ஆகிய வைசுவாநர அக்கினிதேவனைத் தேவர்கள் படைத்தனர்.

त्वद्विप्रो जायते वाज्यग्ने त्वद्वीरासो अभिमातिषाहः ।
वैश्वानर त्वमस्मासु धेहि वसूनि राजन् त्स्पृहयाय्याणि ॥ ३

த்வத்விப்ரோ ஜாயதே வாஜ்யக்நே த்வத்வீராஸோ அபிமாதிஷாஹ: ।
வைஶ்வாநர த்வமஸ்மாஸு தேஹி வஸூநி ராஜந்த்ஸ்ப்ருஹயாய்யாணி ॥ 3 ॥

ஓ அக்நீ! உன்னிடமிருந்தே மெய்ப்பொருளைக் காண்பவன் பிறக்கிறான்; அவ்வாறே குதிரையும் பிறக்கிறது. பகைவரை வெல்லும் ஆற்றலுடைய வீரரும் உன்னிடமிருந்து தோன்றுகின்றனர். ஓ அரசே! வைசுவாநரனே! விரும்புதற்கு ஏற்ற செல்வங்களை நீ எங்களுக்கு நிலையாக வழங்குவாயாக.

त्वां विश्वे अमृत जायमानं शिशुं न देवा अभि सं नवन्ते ।
तव क्रतुभिरमृतत्वमायन् वैश्वानर यत् पित्रोरदीदेः ॥

த்வாம் விஶ்வே அம்ருத ஜாயமாநம் ஶிஶும் ந தேவா அபி ஸம் நவந்தே ।
தவ க்ரதுபிரம்ருதத்வமாயந்வைஶ்வாநர யத்பித்ரோரதீதே: ॥ 4 ॥

ஓ அழிவு இல்லாதவனே! புதிதாகப் பிறந்த குழந்தையைப் பார்க்க அதன் அருகில் வந்து கூடுபவர்களைப் போல, தேவர்கள் நீ பிறக்கும்போது உன் அருகில் வருகின்றனர். நீ உன் தாய் தந்தையரிடமிருந்து துள்ளிவரும்போது, உன் விருப்பப்படி நிகழ்த்தும் செயல்களால் அழிவில்லாத் தன்மைக்காகப் பிரயாணம் செய்கிறாய்.

वैश्वा॑नर॒ तव॒ तानि॑ व्र॒तानि॑ म॒हान्य॑ग्ने॒ नकि॒रा द॑धर्ष ।
यज्जाय॑मानः पि॒त्रोरु॒पस्थेऽवि॑न्दः के॒तुं व॒युने॒ष्वह्ना॑म् ॥ ५

வைஶ்வாநர தவ தாநி வ்ரதாநி மஹாந்யக்நே நகிரா ததர்ஷ ।
யஜ்ஜாயமாந: பித்ரோருபஸ்தேऽவிந்த: கேதும் வயுநேஷ்வஹ்நாம் ॥ 5 ॥

ஓ அக்நீ! வைசுவாநரனே! உன் ஆற்றல் வாய்ந்த செயல்களின் நெறிமுறைகளைக் கெடுப்பதற்கு ஒருவாலும் முடியாது. ஏனென்றால், நீ பிறந்து தாய்தந்தையரின் மடியில் இருந்தபோதே, வெளிப்பட்ட எல்லாவகை ஞானங்களிலும், பகல்களின் உள்உணர்வுஒளியை நீ கண்டுகொண்டாய்.

वै॒श्वा॒न॒रस्य॒ विमि॑तानि॒ चक्ष॑सा॒ सानू॑नि दि॒वो अ॒मृत॑स्य के॒तुना॑ ।
तस्येदु॒ विश्वा॒ भुव॒नाधि॑ मू॒र्धनि॑ व॒या इ॑व रुरुहुः स॒प्त वि॒स्रुहः॑ ॥ ६

வைஶ்வாநரஸ்ய விமிதாநி சக்ஷஸா ஸாநூநி திவோ அம்ருதஸ்ய கேதுநா ।
தஸ்யேது விஶ்வா புவநாதி மூர்தநி வயா இவ ருருஹு: ஸப்த விஸ்ருஹ: ॥ 6 ॥

விண்ணுலகச் சிகரங்கள் இந்த வைசுவாநரனின் பார்வையால் அளக்கப்பட்டு உருவாக்கப்பட்டன. அவை அழிவு இல்லாப் பொருள்களின் உள்உணர்வால் வடிவெடுத்தன. உலகங்கள் எல்லாம் அவனுடைய தலையில் உள்ளன. வெகுதூரம் ஓடிப் பாயும் ஏழு நதிகளும் அவனிடத்திலிருந்து கிளைகள் போலத் தோன்றி மேல்நோக்கி ஏறுகின்றன.

वि यो रजांस्यमिमीत सुक्रतुर्वैश्वानरो वि दिवो रोचना कविः ।
परि यो विश्वा भुवनानि पप्रथेऽदब्धो गोपा अमृतस्य रक्षिता ॥ ७

வி யோ ரஜாம்ஸ்யமிமீத ஸுக்ரதுர்வைஶ்வாநரோ வி திவோ ரோசநா கவி: ।
பரி யோ விஶ்வா புவநாநி பப்ரதேऽதப்தோ கோபா அம்ருதஸ்ய ரக்ஷிதா ॥ 7 ॥

உறுதியான விருப்பமுடைய வைசுவாநரன் நடுஉலகமாகிய அரசினை அளந்து உருவாக்கினான். உண்மையைக் காணும் கவியாகிய அவன் ஒளிவீசும் விண்ணுலகங்களுக்கு உருவத்தை வழங்கினான்; மக்களாகிய எங்களைச் சுற்றி இவ்வுலகங்களை எல்லாம் பரப்பினான். அவன் அழிவில்லாத தன்மையைக் காப்பவன்; யாரும் வெல்லமுடியாத அந்த அழிவில்லா அமுதத்தின் பாதுகாப்பாளன்.

ஸூக்தம் 8

पृक्षस्य वृष्णो अरुषस्य नू सहः प्र नु वोचं विदथा जातवेदसः ।
वैश्वानरायं मतिर्नव्यसी शुचिः सोम इव पवते चारुरग्नये ॥ १

ப்ருக்ஷஸ்ய வ்ருஷ்ணோ அருஷஸ்ய நூ ஸஹ: ப்ர நு வோசம் விததா ஜாதவேதஸ: ।
வைஶ்வாநராய மதிர்நவ்யஸீ ஶுசி: ஸோம இவ பவதே சாருரக்நயே ॥ 7 ॥

இப்பொழுது உலகம்முழுதையும் நிரப்பிச் செந்நிறஒளியைப் பரவச்செய்த காளையின் சக்தியை உரத்த குரலில் கூறிவிட்டேன். உலகில் உள்ள பொருள்கள் எல்லாவற்றையும் அறிந்த இறைவன் அவன். அவன் வழங்கிய ஞானத்தால் பார்த்தவற்றை எல்லாம் கூறிவிட்டேன். ஸோமரஸம் புனிதமானது. அதனைப் போலப் புதிய - தூய - அழகிய - எண்ணம் ஒன்று வைசுவாநரஅக்நியை நோக்கி ஓடுகிறது.

स जायमानः परमे व्योमनि व्रतान्यग्निर्व्रतपा अरक्षत ।
व्यन्तरिक्षममिमीत सुक्रतुर्वैश्वानरो महिना नाकमस्पृशत् ॥ २

ஸ ஜாயமாந: பரமே வ்யோமநி வ்ரதாந்யக்நிர்வ்ரதபா அரக்ஷத।
வ்யந்தரிக்ஷமமிமீத ஸுக்ரதுர்வைஶ்வாநரோ மஹிநா
நாகமஸ்ப்ருஶத் ॥ 2 ॥

எல்லாச் செயல்களின் நெறிமுறைகளுக்கும் அக்நியே காவலன். அவன் பிறந்த கணத்திலேயே மிக மேம்பட்ட ஆகாயத்திலே தன் சலனமான (உலாவுதலாம்) செயல்களின் விதிமுறைகளைப் பாதுகாத்து வைத்துள்ளான். உறுதியான விருப்பமுடைய வைசுவாநரன் நடுஉலகினை அளந்து உருவம் அமைத்துள்ளான். அதற்குமேல் தேவர்உலகையும் தன் பெருமையால் தொட்டுப் பார்த்திருக்கிறான்.

व्यस्तभ्नाद् रोदसी मित्रो अद्भुतोऽन्तर्वावदकृणोज्ज्योतिषा तमः ।
वि चर्मणीव धिषणे अवर्तयद्वैश्वानरो विश्वमधत्त वृष्ण्यम् ॥ ३

வ்யஸ்தப்நாத்ரோதஸீ மித்ரோ அத்புதோऽந்தர்வாவதக்ருணோஜ்-
ஜோதிஷா தம: ।
வி சர்மணீவ திஷணே அவர்தயத்வைஶ்வாநரோ விஶ்வமதத்த
வ்ருஷ்ண்யம் ॥ 3 ॥

வியக்கத்தக்கவன் ஆகிய அந்நண்பன் பூமியையும் வானத்தையும் முட்டுக்கொடுத்துத் தாங்கிக்கொண்டு, தன் ஒளியால் இருட்டை விரட்டியுள்ளான்; சுருட்டிவைத்த தோல்களை விரித்துக் காண்பது போல இரண்டு மனங்களையும் அவிழ்த்து விரித்துள்ளான். வைசுவாநரஅக்நி ஆண்மைவலிமை முழுவதையும் தன்னிடம் ஏற்றுக்கொண்டுள்ளான்.

अपामुपस्थे महिषा अगृभ्णत विशो राजानमुप तस्थुरुग्रियम् ।
आ दूतो अग्निमभरद्विवस्वतो वैश्वानरं मातरिश्वा परावतः ॥ ४

அபாமுபஸ்தே மஹிஷா அக்ருப்ணத விஶோ ராஜாநமுப தஸ்துர்ருக்மியம் ।
ஆ தூதோ அக்நிமபரத்விவஸ்வதோ வைஶ்வாநரம் மாதரிஶ்வா பராவத: ॥ 4 ॥

நீர்களின் மடியில் இருந்த அவனை மேம்பட்டவர்கள் கைப்பற்றி எடுத்துக்கொண்டனர். மக்களும் எல்லாவற்றிற்கும் விளக்கம் அளிக்கும் மந்திரவார்த்தையுடைய அந்த அரசனை நெருங்கி வந்தனர். ஒளிவீசும் சூரியனின் தூதனும் தாயினிடத்துத் தோன்றி மலர்ந்து விரியும் இயல்பினனும் ஆகிய வாயு, வைசுவாநர அக்நியை எல்லாம் கடந்த மேல்நிலையிலிருந்து கொண்டுவந்தான்.

युगेयुगे विदथ्यं गृणद्भ्योऽग्ने रयिं यशसं धेहि नव्यसीम् ।
पव्येव राजन्नघशंसमजर नीचा नि वृश्च वनिनं न तेजसा ॥ ५

யுகேயுகே விதத்யம் க்ருணத்ப்யோऽக்நே ரயிம் யஶஸம் தேஹி நவ்யஸீம் ।
பவ்யேவ ராஜந்நகஶம்ஸமஜர நீசா நி வ்ருஶ்ச வநிநம் ந தேஜஸா ॥ 5 ॥

ஓ அக்நீ! யுகம்யுகமாய் என்றும் புதுமையான மந்திரவார்த்தைகளால் உன்னை வழிபடும் மனிதர்களிடத்தில், உண்மைஅறிவைப் பொருந்தச் செய்யும் சொற்களை உடையவன் நீ. நீ அவர்களுடைய புகழ்பெற்ற செல்வத்தை நிலைநிறுத்துவாயாக. ஆனால், அழிவில்லாத அரசே! தீங்குகளை உண்டாக்கும் சொற்களைப் பேசுபவனை இரண்டு துண்டங்களாக வெட்டிவிடு. மரத்தை இடி கீழே தள்ளுவதைப் போல, உன் ஒளியால் அவனைக் கீழே தள்ளிவிடு.

अस्माकमग्ने मघवत्सु धारयाऽनामि क्षत्रमजरं सुवीर्यम् ।
वयं जयेम शतिनं सहस्रिणं वैश्वानर वाजमग्ने तवोतिभिः ॥ ६

ஆஸ்மாகமக்நே மகவத்ஸு தாரயாऽநாமி க்ஷத்ரமஜரம் ஸுவீர்யம் ।
வயம் ஜயேம ஶதிநம் ஸஹஸ்ரிணம் வைஶ்வாநர வாஜமக்நே
தவோதிபி: ॥ 6 ॥

ஓ அக்நீ! எங்கள் செல்வத்தலைவர்களிடத்தில், என்றைக்கும் கிழத்தன்மை பெறாத வீரவலிமையையும், தலைகுனியாத போர் ஆற்றலையும் நிலைத்திருக்கச்செய். ஓ வைசுவாநரஅக்நீ! உன் பாதுகாவலால், நாங்கள் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பொருள்களையும் வெற்றியால் பெற்று நிறைவு அடைவோம்.

अदब्धेभिस्तव गोपाभिरिष्टेऽस्माकं पाहि त्रिषधस्थ सूरीन् ।
रक्षा च नो ददुषां शर्धो अग्ने वैश्वानर प्र च तारीः स्तवानः ॥ ७

அதப்தேபிஸ்தவ கோபாபிரிஷ்டேऽஸ்மாகம் பாஹி த்ரிஷதஸ்த ஸூரீந் ।
ரக்ஷா ச நோ ததுஷாம் ஶர்தோ அக்நே வைஶ்வாநர ப்ர ச தாரீ:
ஸ்தவாந: ॥ 7 ॥

எம்மைத் தூண்டி வேள்வி செய்வோனே! கூடும் இடங்கள் மூன்றிலுமிருந்து எங்களைக் காப்பவனே! பிரகாசமாக எதனையும் காணும் எங்களுக்குப் பிறரால் வெல்லமுடியாதபடி காப்பாற்றும் உன் தீக்களால் பாதுகாவல் செய்வாயாக. ஓ வைசுவாநரனே! உனக்கு உணவு அளித்தவர்களின் படைகளைப் பாதுகாத்து, எம் வணக்கத்தில் செவிசாய்த்துக்கொண்டு, எங்கள் படைகளின் முற்போக்குக்கு அருள்செய்வாயாக.

ஸூக்தம் 9

अहश्च कृष्णमहरर्जुनं च वि वर्तेते रजसी वेद्याभिः ।
वैश्वानरो जायमानो न राजाऽवातिरज्ज्योतिषाग्निस्तमांसि ॥ १

அஹஶ்ச க்ருஷ்ணமஹரர்ஜுநம் ச விவர்த்தேதே ரஜஸீ வேத்யாபி: ।
வைஶ்வாநரோ ஜாயமாநோ ந ராஜாவாதிரஜ்ஜ்யோதிஷாக்நிஸ்தமாம்ஸி ॥ 1 ॥

இரண்டு உலகங்களிலும் கறுத்துள்ள நாள் ஒன்றும், வெள்ளி போன்ற பளபளப்புடைய நாள் ஒன்றுமாக உள்ளன. இரண்டு உலகங்களும் தம்முடைய வெவ்வேறு வழிகளில் வட்டமிட்டுச் சுழல்வதற்கு நாம் அறியவேண்டிய வெவ்வேறு சக்திகள் உதவுகின்றன. அரசன் ஒருவனைப் போல, தன் பிறப்பினை ஏற்றுக்கொள்ளும்போதே வைசுவாநர அக்நி தன் ஒளியினால் இருட்டினை அழிக்கின்றான்.

नाहं तन्तुं न वि जानाम्योतुं न यं वयन्ति समरेऽतमानाः ।
कस्य स्वित्पुत्र इह वक्त्वानि परो वदात्यवरेण पित्रा ॥ २

நாஹம் தந்தும் ந வி ஜாநாம்யோதும் ந யம் வயந்தி ஸமரேऽதமாநா: ।
கஸ்ய ஸ்வித்புத்ர இஹ வக்த்வாநி பரோ வதாத்யவரேண பித்ரா ॥ 2 ॥

நான் நெசவுக்கு உரிய நீளநூலாகிய பாவுநூலையும் அறியேன்; தார் என்னும் கருவி வாயிலாக இருபக்கமும் அலையும் குறுக்குநூலையும் அறியேன். அவர்கள் உலவிக்கொண்டு இழைக்குமிடத்து முன்னும் பின்னுமாக எதனை நெசவு செய்கின்றார்களோ, அந்த நெசவு இன்னது என்றும் அறியேன். சொல்லவேண்டிய மறைபொருளாகிய இரகசியங்கள் உள்ளன. யாரோ ஒருவருடைய மகனாய் எல்லாச் செயல்களுக்கும் சிறப்பாக உள்ள மேம்பட்டவன், தன்னைவிடத் தாழ்வாக உள்ள தந்தைவழியாக அதனைச் சொல்லுகிறான்.

स इत् तन्तुं स वि जानात्योतुं स वक्तवान्यृतुथा वदाति ।
य ईं चिकेतदमृतस्य गोपा अवश्चरन्परो अन्येन पश्यन् ॥ ३

ஸ இத்தந்தும் ஸ வி ஜாநாத்யோதும் ஸ வக்த்வாந்ய்ருதுதா வதாதி।
ய ஈம் சிகேததம்ருதஸ்ய கோபா அவஶ்சரந்பரோ அந்யேந பஶ்யந் ॥ 3 ॥

அவன் நெசவுக்கு உரிய நீளநூலையும் அறிவான்; குறுக்கு நூலையும் அறிவான்; அவ்வவற்றிற்கு ஏற்ற காலத்தில் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லுவான். இவ்வுலகில் கீழே உலவிக்கொண்டு மற்றொருவன் வழியாகப் பார்க்கின்ற அவன், எல்லாவற்றைக்காட்டிலும் சிறப்புடைய மேம்பட்ட பெருந்தேவன்.

अयं होता प्रथमः पश्यतेममिदं ज्योतिरमृतं मर्त्येषु ।
अयं स जज्ञे ध्रुव आ निषत्तोऽमर्त्यस्तन्वा३ वर्धमानः ॥ ४

அயம் ஹோதா ப்ரதம: பஶ்யதேமமிதம் ஜ்யோதிரம்ருதம் மர்த்யேஷு।
அயம் ஸ ஜக்ஞே த்ருவ ஆ நிஷத்தோऽமர்த்யஸ்தந்வா வர்தமாந: ॥ 4 ॥

இவன் தேவர்களை வேள்விக்கு அழைக்கும் புரோகிதன்; எல்லாருக்கும் முற்பட்டவன். இவனைப் பாருங்கள். இவன் இறந்துபோகும் மனிதர்களிடையே, அழிவே இல்லாத தெய்விக ஒளியாவான். இவன்தான் அவன். இவன் உடலோடு பிறந்து வளர்கின்றவன்; எப்பொழுதும் நிலையாக இருக்கும் அழிவில்லாதவன்.

ध्रुवं ज्योतिर्निहितं दृशये कं मनो जविष्ठं पतयत्स्वन्तः ।
विश्वे देवाः समनसः सकेता एकं क्रतुमभि वि यन्ति साधु ॥ ५

த்ருவம் ஜ்யோதிர்நிஹிதம் த்ருஶயே கம் மநோ ஜவிஷ்டம் பதயத்ஸ்வந்த: ।
விஶ்வே தேவா: ஸமநஸ: ஸகேதா ஏகம் க்ரதுமபி வி யந்தி ஸாது ॥ 5 ॥

ஓர் அழிவில்லாத ஜோதியாய், வேகத்தில் சிறந்த மனம், நல்ல வழியில் செல்லும் மனிதர்களிடம் அமைக்கப்பட்டுள்ளது. தேவர்கள் எல்லோரும் ஒரேவகைப்பட்ட மனம் உடையவராய், ஒரே உள்உணர்வு உடையவர்களாய், அந்த ஒரேவிருப்பத்தின் வழியே, தம்முடைய வெவ்வேறு வகைகளில் நேர்மையாய் உலவுகின்றனர்.

वि मे कर्णा पतयतो वि चक्षुर्वीदं ज्योतिर्हृदय आहितं यत् ।
वि मे मनश्चरति दूरआधीः किं स्विद्वक्ष्यामि किमु नू मनिष्ये ॥ ६

வி மே கர்ணா பதயதோ வி சக்ஷுர்வீதம் ஜ்யோதிர்ஹ்ருதய ஆஹிதம் யத் ।
வி மே மநஶ்சரதி தூரஆதீ: கிம் ஸ்வித்வக்ஷ்யாமி கிமு நூ மநிஷ்யே ॥ 6 ॥

கேட்பதற்கு என் காதுகள் விரிந்து நெருங்குகின்றன. இதயத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஒளியைக் காண்பதற்கு என் கண்களும் விரிந்து நெருங்குகின்றன. என் மனம் விரிந்து உலவுகிறது. என் உள்ளத்தை வெகுதூரம் செலுத்தினேன். நான் கூறுவதற்கு ஏதோ ஒன்று உள்ளது.

विश्वे॑ दे॒वा अ॑नमस्यन् भिया॒नास्त्वाम॑ग्ने॒ तम॑सि तस्थि॒वांस॑म् ।
वै॒श्वा॒न॒रोऽव॑तू॒तये॒ नोऽम॑र्त्योऽवतू॒तये॑ नः ॥ ७

விஶ்வே தேவா அநமஸ்யந்பியாநாஸ்த்வாமக்நே தமஸி தஸ்திவாம்ஸம் ॥
வைஶ்வாநரோऽவதூதயே நோऽமர்த்யோऽவதூதயே நः ॥ 7 ॥

ஓ அக்நீ! நீ இருளில் நின்றபோது தேவர்கள் எல்லோரும் பயந்துகொண்டு உன் முன்பு வந்து வணங்கினர். வைசுவாநரன் எங்களை ஆபத்து ஏற்படாமல் காப்பதற்கு, எங்களைத் தன்னிடம் அழைத்துக்கொள்வானாக. அழிவு இல்லாத அவன் எங்களை ஆபத்து இல்லாமல் காப்பதற்குத் தன்னிடம் அழைத்துக் கொள்வானாக.

ஸூக்தம் 10

पु॒रो वो॑ म॒न्द्रं दि॒व्यं सु॑वृ॒क्तिं प्र॑य॒ति य॒ज्ञे अ॒ग्निम॑ध्व॒रे द॑धिध्वम् ।
पु॒र उ॒क्थेभिः॒ स हि नो॑ वि॒भावा॑ स्वध्व॒रा क॑रति जा॒तवे॑दाः ॥ १

புரோ வோ மந்த்ரம் திவ்யம் ஸுவ்ருக்திம் ப்ரயதி யக்ஞே அக்நிமத்வரே ததித்வம் ।
புர உக்தேபிः ஸ ஹி நோ விபாவா ஸ்வத்வரா கரதி ஜாதவேதாः ॥ 7 ॥

வேள்வி தனக்குக் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறையே நடக்கும்போது, தெய்வத்தன்மை உடையவனாய் மகிழ்ச்சி அடையும் அக்நியை, தம் உணர்விலிருந்து அபாயகரமும் அழுக்குப் படிந்தனவும் ஆகிய பொருள்கள் அனைத்தையும் போக்கி, அவற்றிலிருந்து விடுதலை அளிக்கும் அந்த ஒளிவடிவினவனை உங்கள் மந்திரங்களால் நிலைபெறச் செய்யுங்கள். அவன் பிறந்துள்ள பொருள்கள் எல்லாவற்றையும் அறிந்தவன். அவன் பிரகாசம் விரிவாக விளங்குகிறது. வேள்வியின் முன்னேற்றங்களைச் சுலபமாக அவன் நமக்கு உண்டாக்கித் தருவான்.

तमु द्युमः पुर्वणीक होतरग्ने अग्निभिर्मनुष इधानः ।
स्तोमं यमस्मै ममतेव शूषं घृतं न शुचिं मतयः पवन्ते ॥ २

தமு த்யும: புர்வணீக ஹோதரக்நே அக்நிபிர்மநுஷ இதாந: ।
ஸ்தோமம் யமஸ்மை மமதேவ ஶூஷம் க்ருதம் ந ஶுசி மதய:
பவந்தே ॥ 2 ॥

ஓ அக்நீ! மனிதனுடைய நெருப்புக்களால் தூண்டப்பட்டு ஒளி வீசிக்கொண்டு வேள்விக்குத் தேவர்களை அழைக்கும் புரோகிதனே! பல கிரணங்களைப் படைகளாக உடைய புரோகிதனே! மமதா என்பாள் தெய்வத்திற்குத் தன் போற்றுதலாகிய சொற்களை மொழிந்தது போல, தூய்மையாக விளங்கும் உருக்கிய வெண்ணெயின் நிறத்தைப் போல அல்லது தூய்மையான பிரகாசத்தைப் போல, எம் சுத்தமான எண்ணங்கள், அழுக்கினைப் போக்கி வழங்கும் இந்த வழிபாட்டுச்சொற்களை உன் செவிகளில் ஏற்பாயாக.

पीपाय स श्रवसा मर्त्येषु यो अग्नये ददाश विप्र उक्थैः ।
चित्राभिस्तमूतिभिश्चित्रशोचिर्व्रजस्य साता गोमतो दधाति ॥ ३

பீபாய ஸ ஶ்ரவஸா மர்த்யேஷு யோ அக்நயே ததாஶ விப்ர உக்தை: ।
சித்ராபிஸ்தமூதிபிஶ்சித்ரஶோசிர்வ்ரஜஸ்ய ஸாதா கோமதோ
ததாதி ॥ 3 ॥

அறிவு விளக்கம் பெற்ற மனிதன் தன் மந்திரங்களால் அக்நிக்கு வேள்வியில் பொருள்களை அளிக்கின்றான். அவன் மனிதர்களிடையே, அக்நியின் அருள் உள்ளே புகுதலில் (ஆவேசத்தால்) நன்கு பாதுகாக்கப்படுகிறான். உண்மையைக் காணும் அவன் ஒளிமந்தைகளின் கொட்டிலை நன்கு பெறுவதற்கு அக்நி தன் விளக்கத்தால் பாதுகாவலைத் தருகின்றான்.

आ यः प्प्रौ जायमान उर्वी दूरेदृशा भासा कृष्णाध्वा ।
अध बहु चित्तम ऊर्म्यायास्तिरः शोचिषा ददृशे पावकः ॥ ४

ஆ ய: பப்ரௌ ஜயமாந உர்வீ தூரேத்ருஶா பாஸா க்ருஷ்ணாத்வா ।
அத பஹு சித்தம ஊர்ம்யாயாஸ்திர: ஶோசிஷா தத்ருஶே பாவக: ॥ 4 ॥

கறுத்த பாதையில் வரும் அக்நிபகவான், தான் பிறக்கும்போதே, இவ்வுலகையும் விண்உலகையும் வெகுதூரம் காண்கின்ற தன் பிரகாசத்தால் பரவி நிரப்பியுள்ளான். விளக்கம் அளிக்கும் அக்நி, அலைகள் போல நீங்காது உலவிக்கொண்டிருக்கும் இரவில், கரிய இருட்டுவழியாகவும்கூடத் தன் பிரகாசத்தால் இப்போது நம்மால் காணப்படுகிறான்.

नू नश्चित्रं पुरुवाजाभिरूती अग्ने रयिं मघवद्भ्यश्च धेहि ।
ये राधसा श्रवसा चात्यन्यान्त्सुवीर्येभिश्चाभि सन्ति जनान् ॥ ५

நூ நஶ்சித்ரம் புருவாஜாபிரூதீ அக்நே ரயிம் மகவத்ப்யஶ்ச தேஹி ।
யே ராதஸா ஶ்ரவஸா சாத்யந்யாந்த்ஸுவீர்யேபிஶ்சாபி ஸந்தி ஜநாந் ॥ 5 ॥

ஓ அக்நீ! எங்களுக்காகவும் செல்வத்தலைவர்களுக்காகவும் பலவகை நிறைவுகளை உள்ளடக்கிய உன் பாதுகாப்பினால், செழித்து விளங்கும் பலவகைச் செல்வங்களும் எங்களிடம் நிலைபெற்றிருக்குமாறு செய்வாயாக. ஏனென்றால், இச்செல்வத் தலைவர்கள், செழிப்பிலும் உன் அருள் தம் உள்ளத்து புகுதலிலும் (ஆவேசவுணர்விலும்) நல்ல வீரம் பொருந்திய வலிமையிலும், மற்ற மக்களைவிடச் சிறப்பாக உள்ளார்கள்.

इमं यज्ञं चनो धा अग्न उशन् यं त आसानो जुहुते हविष्मान् ।
भरद्वाजेषु दधिषे सुवृक्तिमवीर्वाजस्य गध्यस्य सातौ ॥ ६

இமம் யக்ஞம் சநோ தா அக்ந உஶந்யம் த ஆஸாநோ ஜுஹுதே ஹவிஷ்மாந் ।
பரத்வாஜேஷு ததிஷே ஸுவ்ருக்திமவீர்வாஜஸ்ய கத்யஸ்ய ஸாதௌ ॥ 6 ॥

ஓ அக்நீ! வேள்வியில் உனக்கு அவிசு அளிக்கப்படுகிறது. அதனை விரும்பி ஏற்றுக்கொள். உன் மகிழ்ச்சியை வேள்வியில் நிலைநிறுத்து. பரத்வாஜர்களிடத்தில் முழுமையாகத் தூய்மையை நிலைநிறுத்து. அவர்கள் விரும்பும் செல்வத்தைத் தேடும்போது, அவர்களைக் காப்பாற்றி அருள்செய்வாயாக.

वि द्वेषांसीनुहि वर्धयेळां मदेम शतहिमाः सुवीराः ॥ ७

வி த்வேஷாம்ஸீநுஹி வர்த்தயேளாம் மதேம ஶதஹிமா: ஸுவீரா: ॥ 7 ॥

எங்கள் பகை எல்லாவற்றையும் சிதறி ஓடச்செய். உன்னை வெளிப்படச் செய்யும் மந்திரவார்த்தைகளை வளரச்செய். நாங்கள் வீரருக்கு உரிய வலிமையைப் பெற்று நூறுஆண்டுகள் மகிழ்ச்சியில் இன்புறுவோமாக.

ஸூக்தம் 11

यज॑स्व होतरिषि॒तो यजी॑या॒नग्ने॒ बाधो॑ म॒रुतां॒ न प्रयु॑क्ति ।
आ नो॑ मि॒त्रावरु॑णा॒ नास॑त्या॒ द्यावा॑ हो॒त्राय॑ पृथि॒वी व॑वृत्याः ॥ १

யஜஸ்வ ஹோதரிஷிதோ யஜீயாநக்நே பாதோ மருதாம் ந ப்ரயுக்தி ।
ஆ நோ மித்ராவருணா நாஸத்யா த்யாவா ஹோத்ராய ப்ருதிவீ வவ்ருத்யா: ॥ 1 ॥

ஓ அக்நீ! தேவர்களை வேள்விகளுக்கு அழைக்கும் புரோகிதனே! வேள்வியை நிகழ்த்துவதில் வல்லவனாகிய நீ தூண்டப்பட்டு எங்களுக்கு வேள்வியை அளித்து அருள்செய்வாயாக. ஆயுள்தேவதைகள் வலிமையை எங்களுக்கு வழங்குவதைப் போல, எங்களை எதிர்க்கும் எல்லாவற்றையும் எங்களிடமிருந்து விரட்டிவிடு. மித்திரனும், வருணனும், பிரயாணத்தைத் தலைமைதாங்கி நடத்தும் இரட்டையர்களாகிய அசுவினி தேவர்களும், தேவர் உலகமும் இப்பூவுலகமும், நாங்கள் வேள்வியில் அளிக்கும் பொருள்களை நோக்கித் திரும்புமாறு அருள்புரிவாயாக.

त्वं होता॑ म॒न्द्रत॑मो नो अ॒ध्रुग॒न्तर्दे॒वो वि॒दथा॒ मर्त्ये॑षु ।
पा॒व॒कया॑ जुहा॒३॒॑ वह्नि॑रासाऽग्ने॒ यज॑स्व त॒न्वं॑१॒॑ तव॒ स्वाम् ॥ २

த்வம் ஹோதா மந்த்ரதமோ நோ அத்ருகந்தர்தேவோ விததா மர்த்யேஷு ।
பாவகயா ஜுஹ்வா வஹ்நிராஸாக்நே யஜஸ்வ தந்வம் தவ ஸ்வாம் ॥ 2 ॥

நீ தீங்கே செய்யாதவன்; முழுமையாய் மகிழ்பவன். மனிதர்கள் உள்ளத்தில் ஞானத்தைப் புகச்செய்யும் தெய்வம் நீ. எங்களுக்காகத் தெய்வங்களை வேண்டிக்கொள்ளும் புரோகிதன் நீ. ஓ அக்நீ! நீ எரிகின்ற வாயால், ஒளிவீசுகின்ற சுடரால் நிவேதனத்தைச் செலுத்துகின்றாய். வேள்வியால் உன் உடலையே நீ வழிபடு.

धन्या चिद्धि त्वे धिषणा वष्टि प्र देवाञ्जन्म गृणते यजध्यै ।
वेपिष्ठो अङ्गिरसां यद्ध विप्रो मधुच्छन्दो भनति रेभ इष्टौ ॥ ३

தந்யா சித்தி த்வே திஷணா வஷ்டி ப்ர தேவாஞ்ஜந்ம க்ருணதே யஜத்யை ।
வேபிஷ்டோ அங்கிரஸாம் யத்த விப்ரோ மது ச்சந்தோ பநதி ரேப இஷ்டௌ ॥ 3 ॥

உன்னிடத்தில் புத்திச்செல்வம் நிரம்பியுள்ளது. அது, அங்கிரஸர்களுக்குள் மிகச்சிறந்த அறிஞன்ஒருவன் தேன் போன்று இனிய வேதமந்திரங்களை வேள்விச்செயல்களில் ஓதும்போது, எங்கள் வணக்கத்தைச் சொல்வதற்கும், வேள்வியை முழுமையாக நிறைவேற்றுவதற்கும், தேவர்களையும் தெய்வப்பிறப்பு உடையோரையும் வேண்டுகிறது.

अदिद्युतत् स्वपाको विभावाऽग्ने यजस्व रोदसी उरूची ।
आयुं न यं नमसा रातहव्या अञ्जन्ति सुप्रयसं हञ्च जनाः ॥ ४

அதித்யுதத்ஸ்வபாகோ விபாவாऽக்நே யஜஸ்வ ரோதஸீ உரூசீ ।
ஆயும் ந யம் நமஸா ராதஹவ்யா அஞ்ஜந்தி ஸுப்ரயஸம் பஞ்ச ஜநா: ॥ 4 ॥

அறிவுடையவனாய் விரிந்த பிரகாசம் உடையவனாகிய அக்நி, தன் ஒளியை வீசி எங்கும் பரவியுள்ளான். ஓ அக்நீ! நீ பெரும்பரப்புடைய பூமி, தேவலோகம் இரண்டிற்கும் வேள்வி புரிவாயாக. ஐம்பெருமக்கள் அனைவரும், மனிதனைத் தேய்த்துக் குளிப்பாட்டுவது போல அக்நியைத் தேய்த்துக் குளிப்பாட்டி, அவனை அடைக்கலம் புகுந்து வணங்கி, அமைதியை வேண்டி, நிவேதனத்தைத் தாராளமாக அவனுக்கு அளிக்கின்றனர்.

वृञ्जे ह यन्नमसा बर्हिरग्नावयामि स्रुग्घृतवती सुवृक्तिः ।
अम्यक्षि सद्म सदने पृथिव्या अश्रायि यज्ञः सूर्ये न चक्षुः ॥ ५

வ்ருஞ்ஜே ஹ யந்நமஸா பர்ஹிரக்நாவயாமி ஸ்ருக்ருதவதீ ஸுவ்ருக்தி: ।
அப்யக்ஷி ஸத்ம ஸதநே ப்ருதிவ்யா அஶ்ராயி யக்ஞ: ஸூர்யே ந சக்ஷு: ॥ 5 ॥

புனிதமான தர்ப்பை அக்நியை அடைக்கலம் புகுந்து வணங்கி அந்த அக்நிக்காகப் பறிக்கப்பட்டபோது, அழுக்கை நீக்கும் அகப்பை நல்ல ஒளியுடன் தன் வேலையில் ஈடுபடுத்தப்பட்டபோது, இப்பூமியில் வீட்டில் வேள்விக்கு உரிய இடம் பெறப்பட்டபோது, வேள்வியும் சூரியனில் ஒரு கண்ணைப் போல நிலை நிறுத்தப்பட்டபோது,

दशस्या नः पुर्वणीक होतर्देवेभिरग्ने अग्निभिरिधानः ।
रायः सूनो सहसो वावसाना अति स्रसेम वृजनं नांहः ॥ ६

தஶஸ்யா ந: புர்வணீக ஹோதர்தேவேபிரக்நே அக்நிபிரிதாந: ।
ராய: ஸூநோ ஸஹஸோ வாவஸாநா அதி ஸ்ரஸேம வ்ருஜநம் நாம்ஹ: ॥ 6 ॥

ஓ சக்திமகனே! தேவர்களை வேள்விக்கு அழைக்கும் புரோகிதனே! பல ஒளிகளாகிய படையுடன் கூடிய புரோகிதனே! தேவர்களுடன் உன் அனல்களைத் தூண்டிவிட்டுக்கொண்டு செல்வங்களை எங்களுக்கு அளித்தருள். ஒளிமிக விளங்குவோராய், நாங்கள் கொடுமைகளையும் போராட்டத்தையும் தாண்டிப் பத்திரமான இடத்தைச் சேருவோமாக.

ஸூக்தம் 12

मध्ये॒ होता॑ दुरो॒णे ब॒र्हिषो॒ राळ॒ग्निस्तो॒दस्य॒ रोद॑सी॒ यज॑ध्यै ।
अ॒यं स सू॒नुः सह॑स ऋ॒तावा॑ दू॒रात्सूर्यो॒ न शो॒चिषा॑ ततान ॥ १

மத்யே ஹோதா துரோணே பர்ஹிஷோ ராளக்நிஸ்தோதஸ்ய ரோதஸீ
யஜத்யை ।
அயம் ஸ ஸூநு: ஸஹஸ ருதாவா தூராத்ஸூர்யோ ந ஶோசிஷா
ததாந ॥ 1 ॥

வாசற்படி உள்ள வீட்டின் நடுவில் இருந்து, தேவர்களை வேள்விக்கு அழைக்கும் புரோகிதனாகிய அக்நியே! தூய்மையான இருக்கையில் உள்ள அரசே! வானுலகிற்கும் நிலவுலகிற்கும் வேள்வியை விரைந்து செலுத்தும் சாட்டை போல்பவனே! இவனே உண்மையைத் தன்னிடத்துக் கொண்ட சக்தியின் மகன். இவன் சூரியனைப் போல வெகுதூரம் தன் ஒளியால் பரவுகிறான்.

आ यस्मि॒न् त्वे स्वपा॑के यजत्र॒ यक्षद्राजन्त्स॒र्वता॑तेव॒ नु द्यौः ।
त्रि॒षध॑स्थ॒स्तत॒रुषो॒ न जंहो॑ ह॒व्या म॒घानि॒ मानु॑षा॒ यज॑ध्यै ॥ २

ஆ யஸ்மிந்த்வே ஸ்வபாகே யஜத்ர யக்ஷத்ராஜந்த்ஸர்வதாதேவ
நு த்யௌ: ।
த்ரிஷதஸ்தஸ்ததருஷோ ந ஜம்ஹோ ஹவ்யா மகாநி மாநுஷா
யஜத்யை ॥ 2 ॥

ஓ அரசே! வேள்விக்குத் தலைவனே! மனிதன் உன்னிடத்தில் தன் வேள்வியை நடத்துகிறான். நீ எல்லாப் பொருள்களுக்கும் வடிவு அமைக்கும் உழைப்பில் ஈடுபட்டிருக்கும் தேவர்களைப் போல, நல்ல அறிவுடையவனாய்ச் செயற்படுகிறாய். உன்னிடத்தில் மனிதன் நல்ல முறையில் தன் வேள்விச்செயல்களைச் செய்யும்போது, நீ மூன்று வகையாகச் சபைகூடிக் கொலுவில் அமர்கிறாய். மனிதன் தன்னிடம் நிறைந்துள்ள பொருள்களை வழங்குதற்குரிய வேள்வியைப் பாதுகாப்பதற்கு நீ வரும்போது, உன் வேகம் தீங்குகளிலிருந்து மீட்டு விடுவிப்பவன் வேகம் போல உள்ளது.

तेजि॑ष्ठा यस्या॑रतिर्वने॒राट् तो॒दो अध्व॒न् न वृ॑धसा॒नो अ॑द्यौत् ।
अ॒द्रो॒घो न द्र॑वि॒ता चे॑तति॒ त्मन्नम॑र्त्योऽव॒र्त्र ओष॑धीषु ॥ ३

தேஜிஷ்டா யஸ்யாரதிர்வநேராட் தோதோ அத்வந்ந வ்ருதஸாநோ அத்யௌத் ।
அத்ரோகோ ந த்ரவிதா சேததி த்மந்நமர்த்யோऽவர்த்ர ஓஷதீஷு ॥ 3 ॥

நீ காட்டில் பெரிய ஒளியாக உள்ளாய். உன் பிரயாணத்தின் வேகம் மிகவும் வலிமை உடையதாய் ஒளிவீசுகிறது. நீ பாதையில் ஒரு சாட்டையைப் போல உள்ளாய். நீ வளர்கின்றாய். நீ எரிகின்றாய். சுத்தம் செய்வதற்கு உலோகங்களை உருக்குகின்றவனைப் போல, அக்நி யாருக்கும் தீங்கு செய்யமாட்டான். அவன் தானே அறிவில் கண்விழிக்கும் அழிவில்லாதவன். காட்டில் மூலிகைகளின் நடுவில் அவன் செல்லும் வழியிலிருந்து அவனை யாரும் விலக்கமுடியாது.

सास्माके॑भिरे॒तरी॒ न शू॒षैर॒ग्निः ष्टवे॒ दम॒ आ जा॒तवे॑दाः ।
द्र॒वन्नो व॒न्वन् क्रत्वा॒ नार्वो॒स्रः पि॒तेव॑ जारयायि य॒ज्ञैः ॥ ४

ஸாஸ்மாகேபிரேதரீ ந ஶூஷைரக்நி: ஷ்டவே தம ஆ ஜாதவேதா: ।
த்ருந்நோ வந்வந் க்ரத்வா நார்வோஸ்ர: பிதேவ ஜாரயாயி யக்ஞை: ॥ 4 ॥

அக்நி பிறவிகள் அனைத்தையும் அறிந்தவன். வழி நடப்பவனிடம் உள்ளனவற்றைப் போன்ற நன்றிப்பாடல்களால் அவன் எங்கள் வீட்டில் வாழ்த்திப் புகழப்படுகிறான். அவன் மரத்தை உண்டு எங்கள் விருப்பத்தை ஏற்றுக்கொண்டு, போர்க்குதிரை போல வெற்றி தருகிறான். ஒளிவீசும் இக்காளை போல்பவன், ஒரு தந்தையைப் போல, எங்களால் வேள்வித்தொழிலால் தொழப்படுகிறான்.

अधं स्मास्य पनयन्ति भासो वृथा यत्तक्षदनुयाति पृथ्वीम् ।
सद्यो यः स्पन्द्रो विषितो धवीयानृणो न तायुरति धन्वा राट् ॥ ५

அத ஸ்மாஸ்ய பநயந்தி பாஸோ வ்ருதா யத்தக்ஷதநுயாதி ப்ருத்வீம் ।
ஸத்யோ ய: ஸ்பந்த்ரோ விஷிதோ தவீயாந்ருணோ ந தாயுரதி
தந்வா ராட் ॥ 5 ॥

இப்பொழுது அவனுடைய கிரணங்கள் பெரிய குரலில் ஒலிக்கின்றன. அவன் சுலபமாக அழித்துக்கொண்டு, பெரும்பரப்புடைய இவ்வுலகம் எங்கும் உலாவுகின்றான். அவன் ஓட்டத்தில் விரைவு உடையவன். அவன் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, ஒரு நொடியில் விரைவாகப் பாய்கிறான்; ஒரு கள்வனைப் போல ஓடுகிறான். பாழ்நிலமாக உள்ள இடங்களைக் கடந்தும், அவன்ஒளி கண்ணுக்குத் தெரிகிறது.

स त्वं नो अर्वन्निदाया विश्वेभिरग्ने अग्निभिरिधानः ।
वेषि रायो वि यासि दुच्छुना मदेम शतहिमाः सुवीराः ॥ ६

ஸ த்வம் நோ அர்வந்நிதாயா விஶ்வேபிரக்நே அக்நிபிரிதாந:।
வேஷி ராயோ வி யாஸி துச்சுநா மதேம ஶதஹிமா: ஸுவீரா: ॥ 6 ॥

ஓ போர்க்களக் குதிரையே! உன் நெருப்புக்கள் எல்லாவற்றுடனும் எரிந்துகொண்டு எங்களுக்கு எல்லாம் பற்றுக்களிலிருந்து விடுதலை அளிப்பாயாக. நீ செல்வங்களுக்காகப் பிரயாணம் செய்கின்றாய்; தடங்கல்களையும் துன்பங்களையும் சிதறுமாறு விரட்டுகிறாய். நாங்கள் உன் அருளால் நூறுவருடங்கள் வாழ்ந்து மகிழ்ச்சியில் திளைப்போமாக.

ஸூக்தம் 13

त्वद् विश्वा सुभग सौभगान्यग्ने वि यन्ति वनिनो न वयाः।
श्रुष्टी रयिर्वाजो वृत्रतूर्ये दिवो वृष्टिरीड्यो रीतिरपाम् ॥ १

த்வத்விஶ்வா ஸுபக ஸௌபகாந்யக்நே வி யந்தி வநிநோ ந வயா: ।
ஶ்ருஷ்டீ ரயிர்வாஜோ வ்ருத்ரதூர்யே திவோ வ்ருஷ்டிரீட்யோ ரீதிரபாம் ॥1॥

மேம்பட்ட செல்வனாகிய அக்நியே! செல்வங்கள் நிறைந்த இன்பங்கள் எல்லாம் உன்னுடையன. அவை மரங்களிலிருந்து கிளைகள் தோன்றி வளர்வதுபோல, உன்னிடத்திலிருந்து தோன்றி விரிவாக வளர்கின்றன. பகைவனான விருத்திரனைத் தண்டித்து அடக்கிவைப்பதால், செல்வங்களும், விரும்பத்தக்க செல்வநிறைவும், தேவருலக மழையும், நீர்களின் ஓட்டமும் விரைந்து வருகின்றன.

त्वं भगो न आ हि रत्नमिषे परिज्मेव क्षयसि दस्मवर्चाः ।
अग्ने मित्रो न बृहत ऋतस्याऽसि क्षत्ता वामस्य देव भूरेः ॥ २

த்வம் பகோ ந ஆ ஹி ரத்நமிஷே பரிஜ்மேவ க்ஷயஸி தஸ்மவர்சா: ।
அக்நே மித்ரோ ந ப்ருஹத ருதஸ்யாऽஸி க்ஷத்தா வாமஸ்ய தேவ பூரே: ॥ 2 ॥

இன்பங்கள் நிறையும் பகன் நீ. நீ எங்களிடம் மகிழ்ச்சியை மிகுதியாக உண்டாக்குகிறாய். எங்களிடத்தில் நீ உன் வீட்டினை அமைத்துக்கொள்கிறாய். நீ எங்கும் பரவியுள்ளாய். நீ வலிமை மிக்க பெரிய பிரகாசமாக உள்ளாய். ஓ அக்நிதேவனே! மித்திரனுக்கு மேம்பட்ட சத்தியமும் மிகுந்த மகிழ்ச்சியும் அழகும் பொருந்தியுள்ளன. அவ்வாறே உனக்கும் அவை பொருந்தியுள்ளன.

स सत्पतिः शवसा हन्ति वृत्रमग्ने विप्रो वि पणेर्भर्ति वाजम् ।
यं त्वं प्रचेत ऋतजात राय सजोषा नप्त्रापां हिनोषि ॥ ३

ஸ ஸத்பதி: ஶவஸா ஹந்தி வ்ருத்ரமக்நே விப்ரோ வி பணேர்பர்தி வாஜம் ।
யம் த்வம் ப்ரசேதம் ருதஜாத ராயா ஸஜோஷா நப்த்ராபாம் ஹிநோஷி ॥ 3 ॥

ஓ அக்நீ! சத்தியத்தில் பிறந்தோனே! நன்கு சிந்தனை செய்யும் அறிஞனே! நீர்களின் குழந்தையுடன் மனம் இசைந்து, மனிதனிடம் விருப்பம் கொண்டு அவனைச் செல்வத்துடன் விரையச் செலுத்தும்போது, அவன் உயிருடைய பொருள்களுக்கெல்லாம் சொந்தக்காரன் ஆகின்றான்; தன் வலிமையால் பகைவனாகின்ற விருத்திரனைக் கொன்று, உட்கண்ணால் எதிர்கால நிகழ்ச்சிகளைப் பார்ப்பவன் ஆகின்றான். அவன் குகையில் குடியிருப்போனுடைய செல்வங்களை எல்லாம் எடுத்துச் செல்கிறான்.

यस्ते सूनो सहसो गीर्भिरुक्थैर्यज्ञैर्मर्तो निशितिं वेद्यानट् ।
विश्वं स देव प्रति वारमग्ने धत्ते धान्यं१ पत्यते वसव्यैः ॥ ४

யஸ்தே ஸூநோ ஸஹஸோ கீர்பிருக்தைர்யக்ஞைர்மர்தோ நிஶிதிம் வேத்யாநட் ।
விஶ்வம் ஸ தேவ ப்ரதி வாரமக்நே தத்தே தாந்யம் பத்யதே வஸவ்யை: ।4।

ஓ சக்தியின் மகனே! மந்திரவார்த்தைகளாலும், வேண்டுதலாலும், வேள்விமேடையை அமைத்தலாலும், வேள்வி செய்தலாலும், மனிதன் உன்னுடைய நெருங்கிய தொடர்பைப் பெறுகிறான். அத்தகைய மனிதன் எல்லாவகைச் செல்வங்களும் போதுமான அளவு தன் கைக்கு வரப்பெறுகிறான். ஓ அக்நிதேவனே! அவன் செல்வத்துடன் தான் செல்லும் நல்ல வழியிலே நடந்து செல்வான்.

ता नृभ्य आ सौश्रवसा सुवीराऽग्ने सूनो सहसः पुष्यसे धाः ।
कृणोषि यच्छवसा भूरि पश्वो वयो वृकायारये जसुरये ॥ ५

தா ந்ருப்ய ஆ ஸௌஶ்ரவஸா ஸுவீராऽக்நே ஸூநோ ஸஹஸ:
புஷ்யஸே தா: ।
க்ருணோஷி யச்சவஸா பூரி பஶ்வோ வயோ வ்ருகாயாரயே
ஜஸுரயே ।5।

ஓ அக்நீ! சக்தி மகனே! உன்னால் படைக்கப்பட்ட மந்தைகள் இப்பொழுது ஓநாய்க்கும், பகைவனுக்கும், அழிப்பவனுக்கும் இரையாகிவிட்டன. அம்மந்தைகளை, வீரம் செறிந்த காவலர்களின் வலிமையோடு, உன் அருள் உட்புகுதல்(ஆவேசம்)ஆகிய நல்ல செல்வங்களை, மனிதர்கள் வளர்வதற்காக அவர்களிடம் நிலையாக இருக்கச்செய்வாயாக.

वद्मा सूनो सहसो नो विहाया अग्ने तोकं तनयं वाजि नो दाः ।
विश्वाभिर्गीर्भिरभि पूर्तिमश्यां मदेम शतहिमाः सुवीराः ॥ ६

வத்மா ஸூநோ ஸஹஸோ நோ விஹாயா அக்நே தோகம் தநயம்
வாஜி நோ தா:।
விஶ்வாபிர்கீர்பிரபி பூர்திமஶ்யாம் மதேம ஶதஹிமா: ஸுவீரா: ।6।

ஓ சக்தி மகனே! நீ எம்மோடு கலந்து பேசும் பெரியவன் ஆகுக. நாங்கள் உண்டாக்கும் புதல்வனை எங்களுக்கு உதவும் வகையில் அளித்து அருளுக. நிறைவு பொருந்திய எல்லாப் பொருள்களையும் எங்களுக்கு வழங்குவாயாக. என் ஒவ்வொரு மந்திர வார்த்தையாலும் நான் முழுநிறைவைப் பெறுவேனாக. நாங்கள் நூறுஆண்டுகள் வாழ்ந்து, வீரர்களுக்கு உரிய வலிமையைப் பெற்று மகிழ்ச்சியில் இன்புறுவோமாக.

ஸூக்தம் 14

अग्ना यो मर्त्यो दुवो धियं जुजोष धीतिभिः ।
भसन्नु ष प्र पूर्व्य इषं वुरीतावसे ॥ १

அக்நா யோ மர்த்யோ துவோ தியம் ஜுஜோஷ தீதிபி: ।
பஸந்நு ஷ ப்ர பூர்வ்ய இஷம் வுரீதாவஸே ।1।

இறந்துபோகும் மனிதன் தன்னுடைய ஆழ்ந்த ஆலோசனைகளால் அக்நிக்குத் தொண்டு செய்வதிலும், அக்நியைத் தியானம் செய்வதிலும் மகிழ்ச்சி அடையும்போது, அம்மனிதன் ஒளியுடன் விளங்கிக்கொண்டு சிறந்தவன் ஆகின்றான். தான் பாதுகாவலாக இருக்கச்செய்யும் தூண்டுதல்களை அவன் பெறுகின்றான்.

अग्निरिद्धि प्रचेता अग्निर्वेधस्तम ऋषिः ।
अग्निं होतारमीळते यज्ञेषु मनुषो विशः ॥ २

அக்நிரித்தி ப்ரசேதா அக்நிர்வேதஸ்தம ருஷி: ।
அக்நிம் ஹோதாரமீளதே யக்ஞேஷு மநுஷோ விஶ: ।2।

அக்நியே நன்கு எதனையும் எண்ணுபவனும், அறிவாளியும், செயல்களை நன்கு செய்வதற்கு ஏற்பச் செயல்முறைகளைத் திட்டமிடும் மிக்க ஆற்றல் உடையவனும் ஆவான். அவன் ஒரு முனிவன். தமது வேண்டுகொள்கைகளை நிறைவேற்றும் அக்நியைப் புரோகிதனாகக்கொண்டு, மக்கள் விருப்பத்தோடு அவனது உதவியை வேண்டுகின்றனர்.

नाना ह्य१ग्नेऽवसे स्पर्धन्ते रायो अर्यः ।
तूर्वन्तो दस्युमायवो व्रतैः सीक्षन्तो अव्रतम् ॥ ३

நாநா ஹ்யக்நேऽவஸே ஸ்பர்தந்தே ராயோ அர்ய: ।
தூர்வந்தோ தஸ்யுமாயவோ வ்ரதை: ஸீக்ஷந்தோ அவ்ரதம் ।3।

அக்நியின் பாதுகாப்பினை வேண்டி, அவனுடைய செல்வங்களைப் பெறுவதற்காக, தீயைக் கொண்டு வழிபாடுசெய்து முயல்பவர் பலவகைப்படுவர். பொருள்களைப் பாழாக்கும் தஸ்யுவைச் சிதைத்து, அவனுடைய எல்லையற்ற வலிமையைத் தம் செயல்களின் முறையினால் அவர்கள் வெல்லப்பார்க்கின்றனர்.

अग्निरप्सामृतीषहं वीरं ददाति सत्पतिम् ।
यस्य त्रसन्ति शवसः संचक्षि शत्रवो भिया ॥ ४

அக்நிரப்ஸாம்ருதீஷஹம் வீரம் ததாதி ஸத்பதிம் ।
யஸ்ய த்ரஸந்தி ஶவஸ: ஸஞ்சக்ஷி ஶத்ரவோ பியா ।4।

அக்நிபகவான் பகைவனுடைய தாக்குதல்களைக் கீழ்ப்படுமாறு தள்ளி அழித்து, நீர்களைப் பெறுகின்ற போர்வீரன் ஒருவனை, உயிர்ப்பொருள்களின் தலைவன் ஒருவனை, மனிதனுக்கு அளிக்கின்றான். அவனைக் காணும்போதே பகைவர்கள் அஞ்சுகின்றனர்; அவனுடைய வலிமைச்செல்வத்தைக் கண்டு திடீரென்று பயந்து சிதறி ஓடுகின்றனர்.

अग्निर्हि विद्मना निदो देवो मर्तमुरुष्यति ।
सहावा यस्यावृतो रयिर्वाजेष्ववृतः ॥ ५

அக்நிர்ஹி வித்மநா நிதோ தேவோ மர்த்தமுருஷ்யதி ।
ஸஹாவா யஸ்யாவ்ருதோ ரயிர்வாஜேஷ்வவ்ருத: ।5।

இறந்துபோகும் மனிதனை அக்நி அவனைப் பிணித்திருப்பவனிடம் இருந்து அறிவினால் மீட்டுக் காக்கும் கடவுள் ஆவான். அக்நியினுடைய செல்வக்குவியல் சக்தி வாய்ந்த பொருளாகும். அவன் செல்வங்கள், எதிரிகளால் சூழ்ந்துகொண்டு முற்றுகையிடப்படாதன ஆகும்.

अच्छा नो मित्रमहो देव देवानग्ने वोचः सुमतिं रोदस्योः ।
वीहि स्वस्तिं सुक्षितिं दिवो नॄन् द्विषो अंहांसि दुरिता तरेम ता तरेम तवावसा तरेम ॥ ६

அச்சா நோ மித்ரமஹோ தேவ தேவாநக்நே வோச: ஸுமதிம் ரோதஸ்யோ: ।
வீஹி ஸ்வஸ்திம் ஸுக்ஷிதிம் திவோ ந்ரூந் த்விஷோ அம்ஹாம்ஸி துரிதா தரேம தா தரேம தவாவஸா தரேம ।6।

ஓ அக்நீ! எங்களிடம் நட்பாக இருக்கும் ஒளியே! ஓ தெய்வமே! தேவர்களின் பக்கம் திரும்புவாயாக. மண்ணுலகு விண்உலகு ஆகிய இரண்டு உலகங்களின் உண்மைச் சிந்தனைகளை எங்களுக்குக் கூறுவாயாக. நன்மை தரும் இருப்பிடத்திற்கும், தேவலோக மக்கள் இடத்திற்கும் அமைதியுடன் செல்வாயாக. நாங்கள் பகைவர்களையும் தீங்குகளையும் இடையூறுகளையும் அபாயம் இல்லாமல் தாண்டிச் செல்வோமாக. இவற்றை எல்லாம் எந்த ஆபத்தும் இல்லாமல், உன் பாதுகாவலால் தாண்டிச் செல்வோமாக.

ஸூக்தம் 15

इममू षु वो अतिथिमुषर्बुधं विश्वासां विशां पतिमृञ्जसे गिरा ।
वेतीद्दिवो जनुषा कच्चिदा शुचिर्ज्योक्चिदत्ति गर्भो यदच्युतम् ॥ १

இமமூ ஷு வோ அதிதிமுஷர்புதம் விஶ்வாஸாம் விஶாம் பதிம்ருஞ்ஜஸே கிரா ।
வேதீத்திவோ ஜநுஷா கச்சிதா ஶுசிர்ஜ்யோக் சிதத்தி கர்போ யதச்யுதம் ।1।

நீ தூக்கத்திலிருந்து விடியற்காலத்துடன் கண்விழிக்கும் விருந்தினனாய், தேவர்கள் எல்லோருக்கும் தலைவனாய் உள்ள அக்நியை, மந்திரவார்த்தைகளால் அழகு செய்யவேண்டும். அவன் பிறப்பிலேயே தூய்மையானவன்; தனக்கு விருப்பமான நேரத்தில் வானுலகிலிருந்து தவறாது வருவான். அவன் கர்ப்பத்திலிருந்து நெடுங்காலமாக வெளிவரும் குழந்தையாவான். கீழே விழாத பொருள்கள் அனைத்தையும் அவன் உண்பான்.

मित्रं न यं सुधितं भृगवो दधुर्वनस्पतावीड्यमूर्ध्वशोचिषम् ।
स त्वं सुप्रीतो वीतहव्ये अद्भुत प्रशस्तिभिर्महयसे दिवेदिवे ॥ २

மித்ரம் ந யம் ஸுதிதம் ப்ருகவோ ததுர்வநஸ்பதாவீட்யமூர்த்வஶோசிஷம் ।
ஸ த்வம் ஸுப்ரீதோ வீதஹவ்யே அத்புத ப்ரஶஸ்திபிர்மஹயஸே திவேதிவே ।2।

பிருகுக்கள், தம் இடத்தில் உறுதியாக நிலைத்திருக்கும் ஒரு நண்பனைப் போல அக்நியைக் கருதி, தாம் விரும்பி வேண்டும் அந்த அக்நியை, ஓங்கி உயர்ந்த பிரகாசத்தோடு மரத்தில் நிலைபெறச் செய்தனர். அவ்வாறு உள்ள வியக்கத்தக்கவனே! உனக்கு உணவு அளிக்கிறவனிடத்தில் நீ அன்பு கொண்டுள்ளாய். உன் ஆற்றலை வெளிப்படுத்தும் வழிபாட்டு மந்திரங்களால் நீ நாளுக்கு நாள் வளர்ச்சி பெறுகிறாய்.

स त्वं दक्षस्यावृको वृधो भूरर्यः परस्यान्तरस्य तरुषः ।
रायः सूनो सहसो मर्त्येष्वा छर्दिर्यच्छ वीतहव्याय सप्रथो भरद्वाजाय सप्रथः ॥ ३

ஸ த்வம் தக்ஷஸ்யாவ்ருகோ வ்ருதோ பூரர்ய: பரஸ்யாந்தரஸ்ய தருஷ:।
ராய: ஸூநோ ஸஹஸோ மர்த்யேஷ்வா சர்திர்யச்ச வீதஹவ்யாய
ஸப்ரதோ பரத்வாஜாய ஸப்ரத: ।3।

ஓ சக்தியின் மகனே! உன்னைக் கிழித்துத் துன்புறுத்த ஓநாயால் முடியாது. நீ எல்லோரிடையும் உண்மையாகக் காணும் அறிவினை வளரச்செய்கிறாய்; வெளியேயும் எமக்கு உள்ளேயும் இருக்கும் பகைவரிடமிருந்து, எங்களை அபாயமின்றித் தாண்டிச்செல்லச்செய்கிறாய். எங்கள் உள்ளே இருக்கும் வீரனை வளரச்செய்கிறாய். நீ எங்களிடம் இருந்துகொண்டு இவற்றை எல்லாம் செய்வாயாக. மனிதர்களிடத்தில் செல்வங்கள் வந்து சேருமாறு செய்வாயாக. உனக்கு உணவு அளிப்பவனுக்கு விரிவாய்ப் பரந்துள்ள உன்வீடு பொருந்துமாறு செய்வாயாக. பரத்துவாஜனுக்கு விரிவாய்ப் பரந்த உன் வீடு பொருந்துமாறு செய்வாயாக.

द्युतानं वो अतिथिं स्वर्णरमग्निं होतारं मनुषः स्वध्वरम् ।
विप्रं न द्युक्षवचसं सुवृक्तिभिर्हव्यवाहमरतिं देवमृञ्जसे ॥ ४

த்யுதாநம் வோ அதிதிம் ஸ்வர்ணரமக்நிம் ஹோதாரம் மநுஷ:
ஸ்வத்வரம்।
விப்ரம் ந த்யுக்ஷவசஸம் ஸுவ்ருக்திபிர்ஹவ்யவாஹமரதிம்
தேவம்ருஞ்ஜஸே ।4।

அக்நி ஒளிவீசி விளங்கும் விருந்தினன். சூரியஉலகத்து ஆண்மகன்; வேள்வியை நன்கு நிறைவேற்றித் தருபவன்; மனிதனுக்காகத் தேவர்களிடம் வேண்டுகோள் விடுக்கும் புரோகிதன். அவன் ஜோதியின் இருப்பிடத்தில் குடியிருந்து பேசும் உண்மையை நோக்குபவன்; தனக்கு வேள்வியில் உணவாக இடப்படுவனவற்றைத் தான் சுமந்துகொண்டு, உரிய தெய்வங்களிடம் சேர்ப்பிப்பவன். அத்தகைய அக்நிக்கு உன் புனிதச் செயல்களால் முடி சூட்டவேண்டும்.

पावकया यश्चितयन्त्या कृपा क्षामन् रुरुच उषसो न भानुना ।
तूर्वन् न यामन्नेतशस्य नू रण आ यो घृणे न ततृषाणो अजरः ॥ ५

பாவகயா யஶ்சிதயந்த்யா க்ருபா க்ஷாமந்நுருச உஷஸோ ந பாநுநா ।
தூர்வந்ந யாமந்நேதஶஸ்ய நூ ரண ஆ யோ க்ருணே ந தத்ருஷாணோ அஜர: ।5।

கிழத்தன்மை அடையாத அக்நி தூய்மைப்படுத்துவதாய், ஞானத்தில் கண்விழிப்பதாய் உள்ள ஒளியுடன் விளங்குகிறான்; உஷஸ் ஆகிய விடியற்காலத்தின் ஒளியோடு அழகு மிகுந்து விளங்குகின்றான்; ஒளிவீசுகின்ற குதிரை போரில் ஈடுபடும்போது, தன் பாதையைச் சீர்திருத்திக்கொண்டு செல்பவனைப் போல உள்ளான்; உலர்ந்துபோய், தாகத்தோடு பிரகாசமாய் எரிந்து கொண்டிருக்கிறான்.

अग्निमग्निं वः समिधा दुवस्यत प्रियंप्रियं वो अतिथिं गृणीषणिं ।
उप वो गीर्भिरमृतं विवासत देवो देवेषु वनते हि वार्यं देवो देवेषु वनते हि नो दुवः ॥ ६

அக்நிமக்நிம் வ: ஸமிதா துவஸ்யத ப்ரியம்ப்ரியம் வோ அதிதிம் க்ருணீஷணி ।
உப வோ கீர்பிரம்ருதம் விவாஸத தேவோ தேவேஷு வநதே ஹி வார்யம் தேவோ தேவேஷு வநதே ஹி நோ துவ: ।6।

மறுபடியும் மறுபடியும் அக்நியைச் சமித்தினால் தன் செயலில் ஈடுபடுமாறு வளரச்செய். அக்நி நம் மேம்பட்ட அன்புக்கு உரிய விருந்தினன். அவனை உன் மந்திரவார்த்தைகளால் போற்றி வழிபடு. அழிவில்லாத அக்நியை நெருங்கி உன் போற்றுதல்களால் ஒளிவீசச்செய். அவன் ஒரு தேவன். நாம் விரும்பத் தக்கனவற்றை அவன் தேவர்களிடத்தில் சுவைக்கிறான்; நம் செயல்களைத் தேவர்கள்மூலம் சுவைக்கிறான்.

समिद्धमग्निं समिधा गिरा गृणे शुचिं पावकं पुरो अध्वरे ध्रुवम् ।
विप्रं होतारं पुरुवारमद्रुहं कविं सुम्नैरीमहे जातवेदसम् ॥ ७

ஸமித்தமக்நிம் ஸமிதா கிரா க்ருணே ஊசிம் பாவகம் புரோ அத்வரே த்ருவம் ।
விப்ரம் ஹோதாரம் புருவாரமத்ருஹம் கவிம் ஸும்நைரீமஹே ஜாதவேதஸம் ।7।

அக்நி தூயவன்; நமக்குத் தூய்மையை அளிப்பவன். அவன் வழிபாட்டோடு இடப்படும் சமித்தினால் தூண்டப்பட்டவன். அவனை நான் போற்றி வழிபடுகிறேன். வேள்வியில் அவன் வழிகாட்டியாக முன்னே செல்பவன். அவன் எப்பொழுதும் நிலையாக இருப்பவன். அவனைப் புகழ்கிறேன். அவன் விளக்கம் பெற்றவன்; தேவர்களை வேள்விக்கு அழைக்கும் புரோகிதன்; தீங்குகள் செய்யாதவன்; பலரும் வாழ்த்தும் வாழ்த்துக்களாகிய செல்வத்தை உடையவன். உலகில் பிறந்த எல்லாவற்றையும் அறிந்த உட்கண் உடைய முனிவன் அவன். அவனை அவனுடைய வாழ்த்துக்களைக் கொண்டே நாம் விரும்புகிறோம்.

त्वां दूतमग्ने अमृतं युगेयुगे हव्यवाहं दधिरे पायुमीड्यम् ।
देवासश्च मर्तासश्च जागृविं विभुं विश्पतिं नमसा नि षेदिरे ॥ ८

த்வாம் தூதமக்நே அம்ருதம் யுகேயுகே ஹவ்யவாஹம் ததிரே பாயுமீட்யம் ।
தேவாஸஶ்ச மர்தாஸஶ்ச ஜாக்ருவிம் விபும் விஶ்பதிம் நமஸா நி ஷேதிரே ।8।

ஓ அக்நீ! நீ தூதன். நீ தலைமுறை தலைமுறையாக அழிவில்லாதவன்; தேவர்களுக்கு நாங்கள் அளிப்பனவற்றைச் சுமந்து செல்பவன்; மனிதனைக் காப்பவன். அவன் வேண்டுகின்ற தெய்வம் நீ. இப்பேர்ப்பட்ட உன்னை மனிதர்கள் வேள்வியில் தங்கச் செய்துள்ளனர். மக்களுக்குத் தலைவனும், எப்பொழுதும் கண்விழித்து இருப்பவனுமாகிய அக்நிபகவான் முன்னிலையில் தேவரும் மக்களும் கூடி வணக்கத்துடன் தங்கியிருக்கின்றனர்.

वि॒भूष॑न्नग्न उ॒भयाँ॒ अनु॑ व्र॒ता दू॒तो दे॒वानां॒ रज॑सी॒ समी॑यसे ।
यत् ते॑ धी॒तिं सु॑म॒तिमा॑वृणी॒महेऽध॑ स्मा नस्त्रि॒वरू॑थः शि॒वो भ॑व ॥ ९

விபூஷந்நக்ந உபயாந் அநு ப்ரதா தூதோ தேவாநாம் ரஜஸீ ஸமீயஸே।
யத்தே தீதிம் ஸுமதிமாவ்ருணீமஹேऽத ஸ்மா நஸ்த்ரிவரூத:
ஶிவோ பவ ।9।

ஓ அக்நீ! உன் செயல்களின் நடைமுறைகளுக்கு ஏற்ப, நீ மனிதரையும் தேவரையும் அடைந்து பரவுகின்றாய். நீ தேவருடைய தூதன்; இரண்டு உலகங்களிலும் பரவி உலவுகின்றாய். உன் எண்ணத்தையும், உன்னுடைய நேரான புத்தியையும் நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆதலின் நீ எங்களைப் பாதுகாக்கும் மூன்று கவசங்களாகவும், எங்களுக்கு உதவிபுரியும் நல்லவனாகவும் இருந்து அருளுவாயாக.

तं सु॒प्रती॑कं सु॒दृशं॒ स्वञ्च॒मवि॑द्वांसो वि॒दुष्टरं॑ सपेम ।
स य॑क्षद् विश्वा॑ व॒युना॑नि वि॒द्वान् प्र ह॒व्यम॒ग्निर॒मृते॑षु वोचत् ॥ १०

தம் ஸுப்ரதீகம் ஸுத்ருஶம் ஸ்வஞ்சமவித்வாம்ஸோ விதுஷ்டரம் ஸபேம।
ஸ யக்ஷத்விஶ்வா வயுநாநி வித்வாந் ப்ர ஹவ்யமக்நிரம்ருதேஷு
வோசத் ।10।

உண்மையான முன்பக்கமும், நேர்மையான நடையும், எதனையும் முழுமையாகக் காணும் நிறைந்த அறிவும் பெற்றுச் சிறந்துள்ள இந்த அறிஞனை உள்ளபடி அறியாத நாம், நம் கைகளால் தொட்டு, அவன் தொடர்பினைக் கொள்வோமாக. வெளிப்படும் எல்லா வகை ஞானங்களையும் அறிந்துள்ள அந்த அக்நி நம்முடைய சார்பில் வேள்வி புரிவோனாக. அழிவு இல்லாத தேவர்உலகில் நாம் வழங்கும் வேள்விப்பொருள்களை அறிவிப்பானாக.

तमग्ने पास्युत तं पिपर्षि यस्त आनट्कवये शूर धीतिम् ।
यज्ञस्य वा निशितिं वोदितिं वा तमित् पृणक्षि शवसोत राया ॥ ११

தமக்நே பாஸ்யுத தம் பிபர்ஷி யஸ்த ஆநட் கவயே ஶூர தீதிம் ।
யக்ஞஸ்ய வா நிஶிதிம் வோதிதிம் வா தமித்ப்ருணக்ஷி ஶவஸோத
ராயா ।11।

சூரனாகிய ஓ அக்நீ! நீ ரிஷி. உனக்காக உயர்ந்த புத்தியைப் பெற்று வேள்வியின் சிறப்பையோ மேம்பட்ட செயலையோ நிறைவேற்றிய மனிதனைப் பாதுகாத்து, உன் வலிமையாலும் செல்வத்தாலும் நிறைவு உடையவனாகச் செய்து, அவனை அக்கரையில் சேர்க்கின்றாய்.

त्वमग्ने वनुष्यतो नि पाहि त्वमु नः सहसावन्नवद्यात् ।
सं त्वा ध्वस्मन्वदभ्येतु पाथः सं रयिः स्पृहयाय्यः सहस्री ॥ १२

த்வமக்நே வநுஷ்யதோ நி பாஹி த்வமு நः ஸஹஸாவந்நவத்யாத் ।
ஸம் த்வா த்வஸ்மந்வதப்யேது பாதः ஸம் ரயிः ஸ்ப்ருஹயாய்யः
ஸஹஸ்ரீ ।12।

ஓ அக்நீ! சக்திமானே! எங்களிடம் குற்றம் நேராமல் காப்பாற்று. எங்களைக் கீழ்ப்படுத்தி அடக்குவதற்கு முயற்சிசெய்யும் எங்கள் பகைவரிடமிருந்து, எங்களைக் காப்பாற்றி அருளுவாயாக. அழிவு நிறைந்த பாதையில், ஆயிரக்கணக்கான சுவைக்கத்தக்க செல்வங்கள் உன்னை வந்து சேரட்டும்.

अग्निर्होता गृहपतिः स राजा विश्वा वेद जनिमा जातवेदाः ।
देवानामुत यो मर्त्यानां यजिष्ठः स प्र यजतामृतावा ॥ १३

அக்நிர்ஹோதா க்ருஹபதி: ஸ ராஜா விஶ்வா வேத ஜநிமா ஜாதவேதா: ।
தேவாநாமுத யோ மர்த்யாநாம் யஜிஷ்ட: ஸ ப்ர யஜதாம்ருதாவா ।13।

எங்களுக்காகத் தேவர்களை வேண்டும் புரோகிதனாகிய அக்நி ஓர் அரசன்; எம் வீட்டின் தலைவன்; எல்லாப் பிறப்புக்களையும் உலகில் தோன்றிய பொருள்கள் எல்லாவற்றையும் அறிபவன்; வேள்வி நிகழ்த்துவதில் திறமை உடையவன். அவனிடம் சத்தியம் உள்ளது. அவன் தேவர்களுக்காகவும் மனிதர்களுக்காகவும் வேள்வி புரிவானாக.

अग्ने यदद्य विशो अध्वरस्य होतः पावकशोचे वेष्ट्वं हि यज्वा ।
ऋता यजासि महिना वि यद्भूर्हव्या वह यविष्ठ या ते अद्य ॥ १४

அக்நே யதத்ய விஶோ அத்வரஸ்ய ஹோத: பாவகஶோசே வேஷ்ட்வம் ஹி யஜ்வா ।
ருதா யஜாஸி மஹிநா வி யத்பூர்ஹவ்யா வஹ யவிஷ்ட யா தே அத்ய ।14।

ஓ அக்நீ! நீ புனிதம் ஆக்கும் பேரொளி. நீ மனிதன் இயற்றும் வேள்வியில் தொண்டு செய்யும் புரோகிதன். இன்று நீ தொழுகின்ற செயலைச் செய்பவனாக வருகின்றாய்; இன்று உன் பெருமையால் எங்கும் பரவி வளர்ந்துள்ளாய். நீ வேள்விக்காக உண்மைப்பொருள்களை அளிக்கின்றாய். நீ எப்பொழுதும் இளமை வாய்ந்த ஒளியாக உள்ளாய். நாங்கள் அளிப்பன யாவும் உனக்கு உரிய சத்தியப்பொருள்களே. அவற்றையே நீ உன்னுடன் எடுத்துக்கொண்டு செல்வாய்.

अभि प्रयांसि सुधितानि हि ख्यो नि त्वां दधीत रोदसी यजध्यै ।
अवा नो मघवन् वाजसातावग्ने विश्वानि दुरिता तरेम ता तरेम तवावसा तरेम ॥ १५

அபி ப்ரயாம்ஸி ஸுதிதாநி ஹி க்யோ நி த்வா ததீத ரோதஸீ யஜத்யை।
அவா நோ மகவந்வாஜஸாதாவக்நே விஶ்வாநி துரிதா தரேம தா தரேம தவாவஸா தரேம ।15।

ஓ அக்நீ! உறுதியான அடிப்படையை உடைய, எங்களுக்கு விருப்பமாக உள்ள பொருள்களிடத்தில் உன் திருக்கண்பார்வை படவேண்டும். பூலோகம் தேவலோகம் என்ற இரண்டின் நன்மைக்காக வேள்விபுரிவதற்கு மனிதன் தன் உள்ளத்தே உன்னை அமைப்பானாக. ஓ செல்வத்து அரசே! செல்வக் குவியல்களை நாங்கள் பகைவர்களை வென்று பெறும்போது எங்களைக் காப்பாற்று. தடுமாறும் இடங்களிலெல்லாம் நாங்கள் ஆபத்து இல்லாமல் தாண்டிச்செல்வதற்கு உதவுவாயாக. உன் பாதுகாவலால் நாங்கள் இடையூறுகளை ஆபத்து இன்றித் தாண்டிச்செல்வோமாக.

अग्ने विश्वेभिः स्वनीक देवैरूर्णावन्तं प्रथमः सीद योनिम् ।
कुलायिनं घृतवन्तं सवित्रे यज्ञं नय यजमानाय साधु ॥ १६

அக்நே விஶ்வேபி: ஸ்வநீக தேவைரூர்ணாவந்தம் ப்ரதம: ஸீத யோநிம்।
குலாயிநம் க்ருதவந்தம் ஸவித்ரே யக்ஞம் நய யஜமாநாய ஸாது ।16।

ஓ அக்நீ! நீ தங்கும் குகை, பறவைக்கூடும் ஒளிஅமைப்பும் கம்பளிக்கற்றைகளும் கொண்டு விளங்குகிறது. அஃது உனக்குத் தங்குவதற்குத் தயாராக உள்ளது. அந்தக் குகைக்கு நீ உன் பலம் வாய்ந்த தீப்படைகளுடனும், தேவர்களுடனும் அவர்களுள் மேம்பட்டவனாக வந்து தங்குவாயாக. வேள்விச்செயல்களைச் செய்பவனுக்காகவும், ஸோமரஸம் பிழிந்து எடுப்பவனுக்காகவும் நீ வேள்வியை நேரான வழியில் நடத்தியருள்.

इमम् त्यमथर्ववदग्निं मन्थन्ति वेधसः ।
यमङ्कूयन्तमानयन्नमूरं श्याव्याभ्यः ॥ १७

இமமு த்யமதர்வவதக்நிம் மந்தந்தி வேதஸ: ।
யமங்கூயந்தமாநயந்நமூரம் ஶ்யாவ்யாப்ய: । 17 ।

பழைய அதர்வனைப் போலச் செயல்முறைகளை அமைப்பவர்கள் கடைகின்ற அக்நி இவனே. இவன் கலக்கம் உறாத ஆற்றல் உடையவன். மாலைநேரத்தை அடுத்த இரவுகளிலிருந்து அவனை அவனுடைய வளைவான நடையிலே அழைத்துச் செல்கின்றனர்.

जनिष्वा देववीतये सर्वताता स्वस्तये ।
आ देवान् वक्ष्यमृताँ ऋतावृधो यज्ञं देवेषु पिस्पृशः ॥ १८

ஜநிஷ்வா தேவவீதயே ஸர்வதாதா ஸ்வஸ்தயே ।
ஆ தேவாந்வக்ஷ்யம்ருதாம் ருதாவ்ருதோ யக்ஞம் தேவேஷு பிஸ்ப்ருஶ: । 18 ।

எங்களுடைய அமைதிக்காகத் தேவர்கள் வருதற்பொருட்டு எல்லாப் பொருள்களுக்கும் வடிவமைக்கும் எங்கள் உழைப்பிலே நீ எங்களிடம் தோன்றுவாயாக. வளர்கின்ற உண்மையை உருவாக்குகின்றவர்களும், என்றும் அழிவில்லாதவர்களுமாகிய தேவர்களை எங்களிடம் அழைத்துவருக. எங்கள் யாகத்திற்குத் தேவர்களுடைய தொடர்பினை உண்டாக்குவாயாக.

वयमु त्वा गृहपते जनानामग्ने अकर्म समिधा बृहन्तम् ।
अस्थूरि नो गार्हपत्यानि सन्तु तिग्मेन नस्तेजसा सं शिशाधि ॥ १९

வயமு த்வா க்ருஹபதே ஜநாநாமக்நே அகர்ம ஸமிதா ப்ருஹந்தம் ।
அஸ்தூரி நோ கார்ஹபத்யாநி ஸந்து திக்மேந நஸ்தேஜஸா ஸம் ஶிஶாதி ॥ 19 ॥

ஓ அக்நீ! மனிதனுடைய வீட்டுத்தலைவனே! சமித்தினால் உனக்கு உணவு அளித்து உன் வடிவத்தைப் பெருக்கினோம். வீட்டுத் தலைவனுடைய செயல்கள் இடையிடையே நிறுத்தப் பெறாமல் தொடர்ந்து நடைபெறுக. உன் கூர்மையான ஒளியினால் எங்களை முழுவதும் அறிவுடையவர்களாகச் செய்தருள்வாயாக.

ஸூக்தம் 16

त्वमग्ने यज्ञानां होता विश्वेषां हितः ।
देवेभिर्मानुषे जने ॥ १

த்வமக்நே யக்ஞாநாம் ஹோதா விஶ்வேஷாம் ஹித: ।
தேவேபிர்மாநுஷே ஜநே ।1।

ஓ அக்நீ! வேள்வியில் தேவர்களை அழைக்கும் புரோகிதனாக எல்லாச் செயலிலும் நீ ஈடுபடுத்தப்பட்டுள்ளாய். தேவர்களால் மனிதனிடத்தில் நீ ஈடுபடுத்தப்பட்டுள்ளாய்.

स नो॑ म॒न्द्राभि॑रध्व॒रे जि॒ह्वाभि॑र्यजा म॒हः ।
आ दे॒वान्व॑क्षि॒ यक्षि॑ च ॥ २

ஸ நோ மந்த்ராபிரத்வரே ஜிஹ்வாபிர்யஜா மஹ: ।
ஆ தேவாந்வக்ஷி யக்ஷி ச । 2 ।

வேள்வியில் பெரியோர்களுக்கு மகிழ்ச்சிகொண்ட நாக்குகளால் வழிபாடு புரிவாயாக. எமக்குத் தேவர்களைக் கொண்டுவருக. அவர்களுக்கு வேள்வியில் உணவு அளித்தருள்க.

वेत्था॒ हि वे॑धो॒ अध्व॑नः प॒थश्च॑ दे॒वाञ्ज॑सा ।
अग्ने॑ य॒ज्ञेषु॑ सु॒क्रतो ॥ ३

வேத்தா ஹி வேதோ அத்வந: பதஶ்ச தேவாஞ்ஜஸா ।
அக்நே யக்ஞேஷு ஸுக்ரதோ । 3 ।

ஓ செயல்களை முறைப்படுத்துபவனே! விருப்பத்தில் மிக்கவனே! உண்மையை விளங்கச் செய்யும் உன் ஒளியின் நேரான போக்கினால், வேள்வியில் தேவர்களின் காலடிகளையும் பெரிய பாதைகளையும் நீ அறிகின்றாய்.

त्वामी॑ळे॒ अध॑ द्वि॒ता भ॑र॒तो वा॒जिभिः॑ शु॒नम् ।
ई॒जे य॒ज्ञेषु॑ य॒ज्ञिय॑म् ॥ ४

த்வாமீளே அத த்விதா பரதோ வாஜிபி: ஶுநம் ।
ஈஜே யக்ஞேஷு யக்ஞியம் । 4 ।

இப்பொழுது செல்வத்தைக் கொண்டுவருபவன், வேகத்தில் சிறந்த குதிரைகளுடன் வந்து, இருவகை இன்பத்திற்காக உன்னை வேண்டுகின்றான். அவன் வேள்விவேந்தனுக்கு வேள்விகளில் அவியுணவு அளித்துள்ளான்.

त्वमि॒मा वार्या॑ पुरु दिवो॑दासाय सुन्व॒ते ।
भ॒रद्वा॑जाय दा॒शुषे॑ ॥ ५

த்வமிமா வார்யா புரு திவோதாஸாய ஸுந்வதே ।
பரத்வாஜாய தாஶுஷே । 5 ।

ஓ அக்நீ! ஸோமரஸத்தைப் பிழிந்து எடுப்பவனாகிய தேவருலகப் பணியாளனுக்கு உணவுப்பொருள்களை அளிக்கும் பரத்துவாஜனுக்கு, விரும்பத்தக்க இப்பொருட்குவியல் (கிட்டுவதாக)

त्वं दूतो अम॑र्त्य॒ आ व॑हा॒ दैव्यं॒ जन॑म् ।
शृण्वन् विप्र॑स्य सुष्टु॒तिम् ॥ ६

த்வம் தூதோ அமர்த்ய ஆ வஹா தைவ்யம் ஜநம் ।
ஶ்ருண்வந்விப்ரஸ்ய ஸுஷ்டுதிம் । 6 ।

நீ அழிவில்லாதவனாகிய தூதன். ரிஷியின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தருள்க. தெய்வத்தன்மை பொருந்திய மக்களைக் கொண்டுவந்து அருள்க.

त्वाम॑ग्ने स्वा॒ध्यो॒३॒ मर्ता॑सो दे॒ववी॑तये ।
य॒ज्ञेषु॑ दे॒वमी॑ळते ॥ ७

த்வாமக்நே ஸ்வாத்யோ மர்தாஸோ தேவவீதயே ।
யக்ஞேஷு தேவமீளதே । 7 ।

மனிதர்கள் ஆழ்ந்து தியானம்செய்துகொண்டு, தேவதைகள் தம்மிடம் வருமாறு வேண்டுகின்றனர். இறந்துபோகக்கூடிய மனிதர்கள் தெய்வத்தை வேள்வியில் வேண்டுகின்றனர்.

तव॒ प्र य॑क्षि स॒ंदृश॑मुत क्रतुं॑ सु॒दान॑वः ।
विश्वे॑ जुषन्त का॒मिनः॑ ॥ ८

தவ ப்ர யக்ஷி ஸம்த்ருஶமுத க்ரதும் ஸுதாநவ: ।
விஶ்வே ஜுஷந்த காமிந: । 8 ।

உன் முழுப்பார்வையையும் முழுவிருப்பத்தையும் வேள்விக்குக் கொண்டுவந்து அருள்க. உன் தாராளமான கொடைத் தொழில்கள் மேம்பட்டுள்ளன. உன்னை விரும்புபவர்களின் மகிழ்ச்சி உன்பக்கத்திலேயே உள்ளது.

त्वं होता॒ मनु॑र्हितो॒ वह्नि॑रासा वि॒दुष्ट॑रः ।
अग्ने॒ यक्षि॑ दि॒वो विशः॑ ॥ ९

த்வம் ஹோதா மநுர்ஹிதோ வஹ்நிராஸா விதுஷ்டர: ।
அக்நே யக்ஷி திவோ விஶ: । 9 ।

நீயே வேள்வியில் தேவர்களை அழைக்கும் புரோகிதனாக, இங்குச் சிந்தனை புரியும் மனிதனிடம் நிலைநிறுத்தப்பட்டுள்ளாய். நீ அவனைக்காட்டிலும் ஞானத்தில் சிறந்து தெளிவாக உள்ளாய். நீ உன் ஒளிகளாகிய வாயினால் மனிதனைச் சுமந்து செல்கிறாய். நீ தேவர்களுக்காக வேள்வி புரிகிறாய்.

अग्न॒ आ या॑हि वी॒तये॑ गृणा॒नो ह॒व्यदा॑तये ।
नि होता॑ सत्सि ब॒र्हिषि॑ ॥ १०

அக்ந ஆ யாஹி வீதயே க்ருணாநோ ஹவ்யதாதயே ।
நி ஹோதா ஸத்ஸி பர்ஹிஷி । *10* ।

ஓ அக்நீ! புதிய ஆரம்பத்துக்காக வருக. நீ மந்திரச்சொற்களால் வணங்கப்பட்டு, நாங்கள் வழங்கும் உணவுகளுக்கு வருக. நாங்கள் வேண்டியவற்றை வழங்கும் புரோகிதனே! நீ வேள்விமேடையில் புனிதமான தர்ப்பைப்புல்லில் அமர்ந்து அருள்செய்வாயாக.

तं त्वा॑ स॒मिद्भि॑रङ्गिरो घृ॒तेन वर्धयामसि ।
बृ॒हच्छो॑चा यविष्ठ्य ॥ ११

தம் த்வா ஸமித்பிரங்கிரோ க்ருதேந வர்தயாமஸி ।
ப்ருஹச்சோசா யவிஷ்ட்ய । *11* ।

ஓ அங்கீரஸே! நாங்கள் வழங்கும் சமித்தாலும் தெளிவாகிய ஒளி அமைப்பாலும் உன்னை வளரச்செய்கிறோம். பெரும்பரப்புடைய ஒளியாக நீ பிரகாசிப்பாயாக. ஓ அக்நீ! எல்லாக் காலமும் இளமை வாய்ந்தவனே!

स नः॑ पृ॒थु श्र॒वाय्य॒मच्छा॑ देव विवाससि ।
बृ॒हदग्ने॒ सु॒वीर्य॑म् ॥ १२

ஸ நः ப்ருது ஶ்ரவாய்யமச்சா தேவ விவாஸஸி ।
ப்ருஹதக்நே ஸுவீர்யம் । *12* ।

ஓ தேவனே! ஓ அக்நீ! நீ எம்மிடத்தில் விரிவான அருள் ஆவேசத்தின் ஞானப்பிரகாசத்தையும், நிறைந்த சக்திப் பரப்பினையும் விளங்கச்செய்கிறாய்.

त्वामग्ने पुष्करादध्यथर्वा निरमन्थत ।
मूर्ध्नो विश्वस्य वाघतः ॥ १३

த்வாமக்நே புஷ்கராதத்யதர்வா நிரமந்தத ।
மூர்த்நோ விஶ்வஸ்ய வாகத: । *13* ।

ஓ அக்நீ! அதர்வன் மந்திரம் ஓதும் ஒவ்வொரு ரிஷியின் தலையாகிய தாமரையிலிருந்தும் உன்னைக் கடைந்தெடுத்தான்.

तमु त्वा दध्यङ्ङृषिः पुत्र ईधे अथर्वणः ।
वृत्रहणं पुरंदरम् ॥ १४

தமு த்வா தத்யங்ருஷி: புத்ர ஈதே அதர்வண: ।
வ்ருத்ரஹணம் புரந்தரம் । *14* ।

அதர்வனுடைய மைந்தன் ரிஷி தத்யங் என்பான், பகைவனாகிய விருத்திரனை அழிப்போனும், அவனுடைய ஊர்களைத் தகர்த்து அழிப்போனும் ஆகிய உன்னைத் தீப்பற்றவைத்தான்.

तमु त्वा पाथ्यो वृषा समीधे दस्युहन्तमम् ।
धनंजयं रणेरणे ॥ १५

தமு த்வா பாத்யோ வ்ருஷா ஸமீதே தஸ்யுஹந்தமம் ।
தநம்ஜயம் ரணேரணே । *15* ।

நீ பாதைகளுக்கு உரிய காளை. நாட்டைப் பாழாக்கும் தஸ்யுக்களைக் கொல்லுவதற்கு ஆற்றல் மிக்கவனும், பல போர்களில் செல்வங்களை வெல்வோனும் ஆகிய உன்னை, அவன் முழுமையாக ஒளிவீசுவதற்கு அமைத்துள்ளான்.

एह्यू षु ब्रवाणि तेऽग्न इत्येतरा गिरः ।
एभिर्वर्धास इन्दुभिः ॥ १६

ஏஹ்யூ ஷு ப்ரவாணி தேऽக்ந இத்தேதரா கிர: ।
ஏபிர்வர்தாஸ இந்துபி: । *16* ।

ஓ அக்நீ! என் அருகில் வருக. பல்வேறு உண்மையான சொற்களை நான் உனக்குக் கூறவேண்டும். ஸோமரஸத்தின் சந்திர சக்திகளால் நீ வளர்கின்றாய்.

यत्र क्व च ते मनो दक्षं दधस उत्तरम् ।
तत्रा सदः कृणवसे ॥ १७

யத்ர க்வ ச தே மநோ தக்ஷம் ததஸ உத்தரம் ।
தத்ரா ஸத: க்ருணவஸே । *17* ।

உன் மனம் சென்று சிறந்து பகுத்துணரும் அறிவினை நாட்டுகின்ற அவ்விடத்தே உன் இருப்பிடத்தை அமைத்துக்கொள்கிறாய்.

नहि ते पूर्तमक्षिपद्भुवन्नेमानां वसो ।
अथा दुवो वनवसे ॥ १८

நஹி தே பூர்த்தமக்ஷிபத்புவந்நேமாநாம் வஸோ ।
அதா துவோ வநவஸே । *18* ।

பொருள்களுக்குத் தலைவனே! உன் செல்வங்களின் நிறைவு கண்ணுக்குப் புலப்படுவதில்லை. உன் செல்வங்களின் நிறைவு சிலர் கண்களுக்கே புலப்படுகிறது. நீ அப்படி இருக்காதே. நீ எம் செயல்களில் மகிழ்வாயாக.

आग्निरंगामि भारतो वृत्रहा पुरुचेतनः ।
दिवोदासस्य सत्पतिः ॥ १९

ஆக்நிரகாமி பாரதோ வ்ருத்ரஹா புருசேதந: ।
திவோதாஸஸ்ய ஸத்பதி: । 19 ।

உன்னைக் கொண்டுவந்து வழிபடுபவர்களின் அக்நியே! நீ பகைவனாகிய விருத்திரனை அழிப்பவன் மனத்திலே மேம்பட்ட ஞானம் பொருந்திய உணர்வை உடையவனாக நீ உள்ளாய். தேவர் உலகப் பணியாளனாகிய திவோதாஸனின் அக்நியே! நீ உயிர்ப் பொருள்களுக்குத் தலைவன். நீ எம்மால் நெருங்கி வரப்படுகிறாய்.

स हि विश्वाति पार्थिवा रयिं दाशन्महित्वना ।
वन्वन्नवातो अस्तृतः ॥ २०

ஸ ஹி விஶ்வாதி பார்திவா ரயிம் தாஶந்மஹித்வநா ।
வந்வந்நவாதோ அஸ்த்ருத: । 20 ।

அக்நி யாரிடமும் தோற்கமாட்டான்; யாராலும் அலட்சியப் படுத்தப்படமாட்டான். இவ்வுலகப்பொருள்கள் அனைத்தையும் தாண்டி மேம்பட்டுள்ள செல்வத்தைத் தன் பெருமையால் வென்று நமக்கு வழங்குபவன் இவனே.

स प्र॑त्न॒वन्नवी॑य॒साऽग्ने॑ द्यु॒म्नेन॑ सं॒यता॑ ।
बृ॒हत् त॑तन्थ भा॒नुना॑ ॥ २१

ஸ ப்ரத்நவந்நவீயஸாऽக்நே த்யும்நேந ஸம்யதா ।
ப்ருஹத்ததந்த பாநுநா । *21* ।

ஓ அக்நீ! பழையதைப் போலவே புதிய ஒளியால் அதனைச் சேர்த்து, உன் பிரகாசத்தால் பெரிய பரப்புடைய இடத்தை விரிவாக அமைக்கின்றாய்.

प्र वः॑ सखायो अ॒ग्नये॒ स्तोमं॑ य॒ज्ञं च॑ धृष्णु॒या ।
अर्च॒ गाय॑ च वे॒धसे॑ ॥ २२

ப்ர வ: ஸகாயோ அக்நயே ஸ்தோமம் யக்ஞம் ச த்ருஷ்ணுயா ।
அர்ச காய ச வேதஸே । *22* ।

தோழர்களே! அக்நியின் மேம்பட்ட வேகத்திற்கு உங்கள் வழிபாட்டினையும் வேள்வியையும் அளியுங்கள்; பிரகாசமான மந்திரத்தை ஓதுங்கள்; செயல்முறையை அமைப்பவனுக்காகவும் பாடுங்கள்.

स हि यो मानुषा युगा सीदद्धोता कविक्रतुः ।
दूतश्च हव्यवाहनः ॥ २३

ஸ ஹி யோ மாநுஷா யுகா ஸீதத்தோதா கவிக்ரது: ।
தூதஶ்ச ஹவ்யவாஹந: । 23 ।

மனிதர்களிடம் தலைமுறை தலைமுறையாகத் தான் தங்கி, அவர்களுக்கு அருள்செய்ய வேண்டியவன் இவனே. உண்மைப் பொருளைக் காணும் ஞானியின் விருப்பத்தை உடையவனாய்த் தேவர்களை வேள்விக்கு அழைக்கும் புரோகிதனும், தூதனும், வேள்வியில் அளிக்கும் பொருள்களைத் தான் கைக்கொண்டு உரிய தேவரிடம் செலுத்துபவனும், அக்நியே.

ता राजाना शुचिव्रताऽऽदित्यान्मारुतं गणम् ।
वसो यक्षीह रोदसी ॥ २४

தா ராஜாநா ஶுசிவ்ரதாऽऽதித்யாந்மாருதம் கணம் ।
வஸோ யக்ஷீஹ ரோதஸீ । 24 ।

ஓ செல்வத்தின் தலைவனே! தம் செயல்களில் தூயவராக இருக்கும் அரசர்கள் இருவருக்கும், பிரிக்கமுடியாத தாயாகிய அதிதியின் புதல்வர்களுக்கும், ஆயுள்தேவதைகளான மருத்கணத்திற்கும், இவ்வுலகிற்கும், தேவர்உலகிற்கும், வேள்வியினால் இங்கு வழிபடுதலைச் செய்.

वस्वी ते अग्ने संदृष्टिरिषयते मर्त्याय ।
ऊर्जो नपादमृतस्य ॥ २५

வஸ்வீ தே அக்நே ஸம்த்ருஷ்டிரிஷயதே மர்த்யாய ।
ஊர்ஜோ நபாதம்ருதஸ்ய । *25* ।

ஓ அக்நீ! ஊக்கத்தின் குழந்தையே! மனிதனின்பொருட்டு உன் வடிவம் செல்வம் செழித்துள்ளது. அஃது என்றும் அழிவில்லாத வடிவம். அது தன் தூண்டுதலை மனிதனுக்கு அளிக்கிறது.

क्रत्वा दा अस्तु श्रेष्ठोऽद्य त्वा वन्वन्त्सुरेक्णाः ।
मर्त आनाश सुवृक्तिम् ॥ २६

க்ரத்வா தா அஸ்து ஶ்ரேஷ்டோऽத்ய த்வா வந்வந்த்ஸுரேக்ணா: ।
மர்த ஆநாஶ ஸுவ்ருக்திம் । *26* ।

கொடுப்போன் தன் விருப்பத்தின் செயலால் சிறந்தவனாக இருப்பானாக. அவன் இன்று உன்னை அடைந்து செல்வப் பெருக்கினைப் பெறுவானாக. இறக்கக்கூடிய அவன் முழுவதும் குற்றம் நீங்கிய தூய்மையைச் சுவைப்பானாக.

ते ते॑ अग्ने॒ त्वोता॑ इ॒षय॑न्तो॒ विश्व॒मायुः॑ ।
तर॑न्तो अ॒र्यो अरा॑तीर्व॒न्वन्तो॑ अ॒र्यो अरा॑तीः ॥ २७

தே தே அக்நே த்வோதா இஷயந்தோ விஶ்வமாயு: ।
தரந்தோ அர்யோ அராதீர்வந்வந்தோ அர்யோ அராதீ: । 27।

இவர்கள் அனைவரும் உன்னால் காக்கப்பட வேண்டியவர்கள்; உன்னைச் சார்ந்து வாழும் மனிதர்கள். அவர்கள் உன் விரைவான ஆணையைப் பெற்று, மேம்பட்ட வயதைப் பெறச் செயற்படுகின்றனர். அவர்கள் தம்முடன் போரிடுகின்ற பகைவர்களின் படைகளை ஊடுருவிப் பாய்ந்து, பகைவர்களின் படைகளை வெல்லும் போராட்கள் ஆவர்.

अ॒ग्निस्ति॒ग्मेन॑ शो॒चिषा॒ यास॒द् विश्वं॒ न्य१॒त्रिण॑म् ।
अ॒ग्निर्नो॑ वनते र॒यिम् ॥ २८

அக்நிஸ்திக்மேந ஶோசிஷா யாஸத்விஶ்வம் ந்யத்ரிணம் ।
அக்நிர்நோ வநதே ரயிம் । 28 ।

அக்நிபகவான் தன் ஒளியின் மிக்க வலிமையால், போருக்கு அழைத்தலைச் செய்யும் ஒவ்வொருவனையும் வென்று அழித்து, நமக்குச் செல்வத்தை அளிக்கின்றவன்.

सुवीरं रयिमा भर जातवेदो विचर्षणे ।
जहि रक्षांसि सुक्रतो ॥ २९

ஸுவீரம் ரயிமா பர ஜாதவேதோ விசர்ஷணே ।
ஜஹி ரக்ஷாம்ஸி ஸுக்ரதோ । *29* ।

பார்வையை விரிவாக நாற்புறமும் செலுத்தும் ஓ அக்நீ! பிறவி எடுத்த எல்லாப் பொருள்களையும் அறிந்த கடவுளே! வீரர்களுடைய வலிமையுடன் கூடிய செல்வத்தை எங்களுக்குக் கொண்டுவந்து அளிப்பாயாக. எண்ணத்தால் ஆற்றல் மிக்கவனே! பூதங்களை வைத்திருப்பவர்களை அழிப்பாயாக.

त्वं नः पाह्यंहसो जातवेदो अघायतः ।
रक्षां णो ब्रह्मणस्कवे ॥ ३०

த்வம் நः பாஹ்யம்ஹஸோ ஜாதவேதோ அகாயதः ।
ரக்ஷா ணோ ப்ரஹ்மணஸ்கவே । *30* ।

எல்லாப் பிறவிகளையும் அறிந்த பகவானே! எங்களைத் தீவினைகளிலிருந்தும், ஆபத்தை உண்டாக்குபவன் செயல்களிலிருந்தும் காப்பாற்றுவாயாக. மந்திரத்தின் உட்பொருளைக் காண்பவனே! எங்களைக் காத்தருள்வாயாக.

यो नो॑ अग्ने दु॒रेव॒ आ मर्तो॑ व॒धाय॒ दाश॑ति ।
तस्मा॑न्नः पा॒ह्यंह॑सः ॥ ३१

யோ நோ அக்நே துரேவ ஆ மர்த்தோ வதாய தாஶதி ।
தஸ்மாந்ந: பாஹ்யம்ஹஸ: । *31* ।

ஓ அக்நீ! எங்களைத் துன்பத்தில் வருந்தச்செய்யும் தீய செயல்களை உடையவனுடைய தீமைகளிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக.

त्वं तं दे॑व जि॒ह्वया॒ परि॑ बाधस्व दु॒ष्कृत॑म् ।
मर्तो॒ यो नो॒ जिघां॑सति ॥ ३२

த்வம் தம் தேவ ஜிஹ்வயா பரி பாதஸ்வ துஷ்க்ருதம் ।
மர்த்தோ யோ நோ ஜிகாம்ஸதி । *32* ।

ஓ பகவானே! எங்களுக்குத் தீங்குகள் செய்யும் எம் பகைவனை, கொழுந்துவிட்டு எரியும் உன் நாக்கினால், எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு துன்புறுத்துவாயாக. எம்மைக் கொல்ல விரும்பும் அந்த அழியக்கூடியவனாகிய மனிதனைத் தாக்கி அழிப்பாயாக.

भ॒रद्वा॑जाय स॒प्रथः॒ शर्म॑ यच्छ सहन्त्य ।
अग्ने॒ वरे॑ण्यं॒ वसु॑ ॥ ३३

பரத்வாஜாய ஸப்ரத: ஶர்ம யச்ச ஸஹந்த்ய ।
அக்நே வரேண்யம் வஸு । *33* ।

போராற்றல் உடைய அக்நியே! பரத்துவாஜனுக்கு விரிந்து பரந்த பாதுகாவலான காப்பிடத்தை அளிப்பாயாக. விரும்பத்தக்க செல்வத்தை அவனுக்கு அளிப்பாயாக.

अग्निर्वृत्राणि जङ्घनद्द्रविणस्युर्विपन्यया ।
समिद्धः शुक्र आहुतः ॥ ३४

அக்நிர்வ்ருத்ராணி ஜங்கநத் த்ரவிணஸ்யுர்விபந்யயா
ஸமித்த: ஶுக்ர ஆஹுத: । *34* ।

செல்வத்தை நாடுவோனாகிய அக்நி, என் வேள்விப் பொருள்களால் தனக்கு உரிய உணவைப் பெற்றுப் பிரகாசமாகத் தீப்பற்றிக்கொண்டு, தன்னைச் சூழ்ந்து வரும் பகைவர்களைத் தன் கிரணங்களின் ஒளியால் கொல்வானாக.

गर्भे मातुः पितुष्पिता विदिद्युतानो अक्षरे ।
सीदन्नृतस्य योनिमा ॥ ३५

கர்பே மாது: பிதுஷ்பிதா விதித்யுதாநோ அக்ஷரே ।
ஸீதந்ந்ரதஸ்ய யோநிமா । *35* ।

தாயின் கர்ப்பத்தில் அவன்தந்தைக்குத் தந்தை ஆகுக. அவன் அழிவில்லாப் பொருள் ஆகிய அக்ஷரத்தில் மின்னல்களுக்காக மின்னுவான் ஆகுக. சத்தியத்தின் இயல்பான பிறப்பிடமாகும் இடத்தில் அவன் தன் இருப்பிடத்தை அமைத்துக்கொள்வான் ஆகுக.

ब्रह्मा प्रजावदा भर जातवेदो विचर्षणे ।
अग्ने यद्दीदयद् दिवि ॥ ३६

ப்ரஹ்ம ப்ரஜாவதா பர ஜாதவேதோ விசர்ஷணே ।
அக்நே யத்தீதயத்திவி । 36 ।

பெரும்பரப்பைக் காணும் ஆற்றலுடைய அக்நீ! பிறந்த பொருள்கள் அனைத்தையும் அறிந்துள்ள கடவுளே! எந்த மந்திரத்தின் ஒளி ஆகாயத்தில் பிரகாசிக்கிறதோ, அந்த மந்திரத்தை அதனோடு தொடர்புடைய பொருள்களோடு எங்களுக்குக் கொண்டுவந்து அருளுவாயாக.

उप त्वा रण्वसंदृशं प्रयस्वन्तः सहस्कृत ।
अग्ने ससृजमहे गिरः ॥ ३७

உப த்வா ரண்வஸம்த்ருஶம் ப்ரயஸ்வந்த: ஸஹஸ்க்ருத ।
அக்நே ஸஸ்ருஜ்மஹே கிர: । 37 ।

எம் ஆற்றலால் உண்டாக்கப்பட்ட அக்நியே! களிப்பு மிகும் பார்வையை உடைய உன் பக்கம், நாங்கள் எங்கள் மகிழ்வுக்காக எங்கள் வேள்வியில் அளிப்பனவற்றைக் கொணர்ந்து, எம்முடைய துதிகளாகிய மந்திரவார்த்தைகளை உன்வாயிலாகச் செலுத்துகின்றோம்.

उपच्छायामिव घृणेरगन्म शर्म ते वयम् ।
अग्ने हिरण्यसंदृशः ॥ ३८

உபச்சாயாமிவ க்ருணேரகந்ம ஶர்ம தே வயம் ।
அக்நே ஹிரண்ய ஸம்த்ருஶ: । *38* ।

ஓ அக்நீ! நிழலை அடுத்து அதனை அடைக்கலமாகப் பற்றும் மனிதர்களைப் போல, நாங்கள் ஒளிவீசி எரிந்து பொன் போலப் பொலிவுபெற்று விளங்கும் இடத்தில், உன் அமைதியில் அடைக்கலம் புக வந்துள்ளோம்.

य उग्र इव शर्यहा तिग्मशृङ्गो न वंसगः ।
अग्ने पुरो रुरोजिथ ॥ ३९

ய உக்ரஇவ ஶர்யஹா திக்மஶ்ருங்கோ ந வம்ஸக: ।
அக்நே புரோ ருரோஜித । *39* ।

நீ அம்பைச் செலுத்தும் பயங்கரமான போர்வீரன் போன்றவன்; கூர்மையான கொம்புகளை உடைய காளை போன்றவன். ஓ அக்நீ! நீ ஊர்களை அழிக்கின்றாய்.

आ यं हस्ते न खादिनं शिशुं जातं न बिभ्रति।
विशामग्निं स्वध्वरम् ॥ ४०

ஆ யம் ஹஸ்தே ந காதிநம் ஶிஶும் ஜாதம் ந பிப்ரதி ।
விஶாமக்நிம் ஸ்வத்வரம் । *40* ।

மக்களுக்காக வேள்வியை நடைபெறச்செய்யும் அக்நியை, இரையைத் தேடும் மிருகத்தைப் போலக் கொண்டுவருகின்றனர்; புதிதாகப் பிறந்த பச்சைக்குழந்தையைப் போலக் கையில் ஏந்திக்கொள்கின்றனர்.

प्र दे॒वं दे॒ववी॑तये॒ भर॑ता वसु॒वित्त॑मम् ।
आ स्वे योनौ॒ नि षी॑दतु ॥ ४१

ப்ர தேவம் தேவவீதயே பரதா வஸுவித்தமம் ।
ஆ ஸ்வே யோநௌ நி ஷீதது । 41 ।

செல்வத்தைக் கண்டுபிடிப்போருள் சிறந்தவனாகிய இவனை எங்களிடம் கொண்டுவருக. தேவர்கள் வருவதற்காக இத்தேவனைக் கொண்டுவருக. அவன் தன் பிறந்தவீட்டில் தங்கியிருப்பானாக.

आ जा॒तं जा॒तवे॑दसि प्रि॒यं शि॑शी॒ताति॑थिम् ।
स्यो॒न आ गृ॒हप॑तिम् ॥ ४२

ஆ ஜாதம் ஜாதவேதஸி ப்ரியம் ஶிஶீதாதிதிம்
ஸ்யோந ஆ க்ருஹபதிம் । 42 ।

எல்லாப் பிறப்புக்களையும் அறிந்த, நன்மை தருபவனாம் அக்நியிலே, உன் வீட்டுத் தலைவன் உனக்குப் பிறந்தனன். அன்பார்ந்த விருந்தினனைச் சிறப்பாக வரவேற்பாய்.

अग्ने॑ युक्ष्वा हि ये तवाऽश्वा॑सो देव सा॒धवः॑ ।
अरं॒ वह॑न्ति म॒न्यवे॑ ॥ ४३

அக்நே யுக்ஷ்வா ஹி யே தவாऽஶ்வாஸோ தேவ ஸாதவ: ।
அரம் வஹந்தி மந்யவே । *43* ।

ஓ அக்நிதேவனே! நன்கு பணிபுரிவனவும், எங்கள் உணர்வுகளுக்கு ஏற்றபடி உன்னைச் சுமக்கக் கூடியனவும் ஆகிய உன் குதிரைகளை உன் தேரில் இணைத்திடுவாயாக.

अच्छा॑ नो या॒ह्या व॑हा॒ऽभि प्रयां॑सि वी॒तये॑ ।
आ दे॒वान् त्सोम॑पीतये ॥ ४४

அச்சா நோ யாஹ்யா வஹாऽபி ப்ரயாம்ஸி வீதயே ।
ஆ தேவாந்த்ஸோமபீதயே । *44* ।

எம்மிடம் வருக. தேவர்கள் தங்களுக்கு விருப்பமான உணவுகளாக நாங்கள் அளிப்பனவற்றை உண்டு, நாங்கள் வழங்கும் ஸோமரஸத்தைப் பருகுமாறு, அவர்களை எங்கள்பக்கம் சுமந்து வருக.

उदग्ने भारत द्युमदजस्रेण दविद्युतत् ।
शोचा वि भाह्यजर ॥ ४५

உதக்நே பாரத த்யுமதஜஸ்ரேண தவித்யுதத் ।
ஶோசா வி பாஹ்யஜர । 45 ।

வயதுக்கணக்கைக் கடந்த அக்நியே! உன்னைக் கொண்டு வருபவர்களுக்கு உதவுகின்றவனே! இடையீடு இல்லாமல் கொழுந்துவிட்டுப் பிரகாசமாய் ஒளிவீசிக்கொண்டு மேல்நோக்கி எரிவாயாக. உன் ஒளியினைப் பரவச்செய்வாயாக.

वीती यो देवं मर्तो दुवस्येदग्निमीळीताध्वरे हविष्मान् ।
होतारं सत्ययजं रोदस्योरुत्तानहस्तो नमसा विवासेत् ॥ ४६

வீதீ யோ தேவம் மர்தோ துவஸ்யேதக்நிமீளீதாத்வரே ஹவிஷ்மாந் ।
ஹோதாரம் ஸத்யயஜம் ரோதஸ்யோருத்தாநஹஸ்தோ நமஸா விவாஸேத் । 46 ।

தேவன் வருகையில் அவனுக்குத் தன் செயல்களால் பணிவிடை செய்பவனாகிய மனிதன், வேள்வியால் அக்நிபகவானுக்குத் தன் அளிப்பினைக் கொணர்ந்து வேண்டுவானாக. பூமிக்கும் சுவர்க்கத்துக்கும் அழைப்பினை நிகழ்த்தும் புரோகிதனை அல்லது வேள்வியால் சத்தியத்தைத் தொழுபவனை அக்நி கைதூக்கிவிட்டு, அவன் அடைக்கலம் புகுதலையும் வணக்கத்தையும் ஏற்று, அவனைப் பிரகாசிக்கச் செய்வானாக.

आ ते॑ अग्न ऋ॒चा ह॒विर्हृ॒दा त॒ष्टं भ॑रामसि ।
ते ते॑ भवन्तू॒क्षण॑ ऋष॒भासो॑ व॒शा उ॒त ॥ ४७

ஆ தே அக்ந ருசா ஹவிர்ஹ்ருதா தஷ்டம் பராமஸி ।
யே தே பவந்தூக்ஷண ருஷபாஸோ வஶா உத । *47* ।

ஓ அக்நீ! இதயத்தால் உருவாக்கப்பட்ட பொருள்களை, விளக்கமான மந்திரவார்த்தைகளோடு உன்னிடம் கொண்டு வருகிறோம். அப்பொருள்களிலிருந்து உனக்குச் சொந்தமான பொலிகாளைகளும், உன் கன்றுகளும் பிறக்குமாக.

अ॒ग्निं दे॒वासो॑ अग्रि॒यमि॒न्धते॑ वृत्र॒हन्त॑मम् ।
येना॒ वसू॒न्याभृ॑ता तू॒ळ्हा रक्षां॑सि वा॒जिना॑ ॥ ४८

அக்நிம் தேவாஸோ அக்ரியமிந்ததே வ்ருத்ரஹந்தமம் ।
யேநா வஸூந்யாப்ருதா த்ருள்ஹா ரக்ஷாம்ஸி வாஜிநா । *48* ।

அக்நி, பகைவனான விருத்திரனைக் கொல்வோருள் சிறந்தவன்; செல்வங்களைக் கொண்டு வருபவன்; பூதங்களை வளர்ப்பவர்களைக் குத்தி எறியும் குதிரை போன்றவன். அந்த மேம்பட்ட அக்நியைத் தேவர்கள் தீப்பற்றவைக்கின்றனர்.

பராசரர்

மண்டலம் - 1

ஸூக்தம் 65

प॒श्वा न ता॒युं गुहा॒ चत॑न्तं॒ नमो॑ युजा॒नं नमो॒ वह॑न्तम् ।
स॒जोषा॒ धीराः॑ प॒दैरनु॑ ग्म॒न्नुप॑ त्वा सीद॒न् विश्वे॒ यज॑त्राः ॥ १

பஶ்வா ந தாயும் குஹா சதந்தம் நமோ யுஜாநம் நமோ வஹந்தம் ।
ஸஜோஷா தீரா: பதைரநு க்மந்நுப த்வா ஸீதந்விஶ்வே யஜத்ரா: ॥ 1 ॥

அவன் உண்மைத்தன்மையைக் காண்பதாகிய பசுவுடன், திருடனைப் போல, மறைவாய்க் குகையில் ஒளிந்துகொள்கிறான். நமது வணக்கத்தை ஏற்றுக்கொண்டு அங்கு நமது அடைக்கலப் பொருளைத் தன்னுடன் எடுத்துச் செல்கிறான். பேரறிஞர்கள் ஒரேமனமாய் அவனிடம் இன்பம் கொள்கின்றனர். அவன் காலடிகளை அறிந்து அவனைப் பின்பற்றுகின்றனர். ஓ சுடரே! வேள்வித்தலைவர்கள் அனைவரும் இரகசியமாய் உன்னை நெருங்குகின்றனர்.

ऋ॒तस्य॑ दे॒वा अनु॑ व्र॒ता गु॒र्भुव॒त्परि॑ष्टि॒र्द्यौर्न भूम॑ ।
वर्ध॑न्ती॒मापः॑ प॒न्वा सुशि॑श्विमृ॒तस्य॒ योना॒ गर्भे॒ सुजा॑तम् ॥ २

ருதஸ்ய தேவா அநு வ்ரதா குர்புவத்பரிஷ்டிர்த்யௌர்ந பூம ।
வர்தந்தீமாப: பந்வா ஸுஶிஶ்விம்ருதஸ்ய யோநா கர்பே ஸுஜாதம் ॥ 2 ॥

தேவர்கள் அவனை அடுத்துச் சத்தியத்தின் செயல்முறையைப் பின்பற்றுகின்றனர். வானம் பூமியைச் சூழ்ந்திருப்பது போல, அவன் எல்லாவற்றையும் சூழ்ந்து இருக்கிறான். நீர்கள், நகர்கின்ற கடலைப் போலச் சத்தியத்தின் அடித்தளத்தில் தம் கர்ப்பத்தில் நன்றாகப் பிறந்த சுடரை, உருவத்தில் பெரும்பரப்பு அடையுமாறு தம் உழைப்பால் வளரச்செய்கின்றன.

पुष्टिर्न रण्वा क्षितिर्न पृथ्वी गिरिर्न भुज्म क्षोदो न शंभु ।
अत्यो नाज्मन् त्सर्गप्रतक्तः सिन्धुर्न क्षोदः क ईं वराते ॥ ३

புஷ்டிர்ந ரண்வா க்ஷிதிர்ந ப்ருத்வீ கிரிர்ந புஜ்ம க்ஷோதோ நஶம்பு ।
அத்யோ நாஜ்மந்த்ஸர்கப்ரதக்த: ஸிந்துர்ந க்ஷோத: க ஈம் வராதே ॥ 3 ॥

அவன் இனிமையான கிளர்ச்சியை ஒத்து இருக்கின்றான். அவன் நமக்கு இவ்வுலகத்தைப் போல விரிவான இருப்பிடமாய் உள்ளான். அவன் ஒரு மலையைப் போல இன்பத்துக்கு உரியவன்; விரைந்து ஓடும் நீரைப் போல இன்பம் அளிப்பவன்; போரில் நன்கு தூண்டப்பட்டு நாலுகால் பாய்ச்சலில் விரைந்து ஓடும் குதிரையைப் போலவும், ஓடுகின்ற நதியைப் போலவும் உள்ளான். அவன் உலவுவதை யாரும் தடுக்கமுடியாது.

जामिः सिन्धूनां भ्रातेव स्वस्रामिभ्यान्न राजा वनान्यत्ति ।
यद् वातजूतो वना व्यस्थादग्निर्ह दाति रोमा पृथिव्याः ॥ ४

ஜாமி: ஸிந்தூநாம் ப்ராதேவ ஸ்வஸ்ராமிப்யாந்ந ராஜா வநாந்யத்தி ।
யத்வாதஜூதோ வநா வ்யஸ்தாதக்நிர்ஹ தாதி ரோமா ப்ருதிவ்யா: ॥ 4 ॥

அவன், சகோதரிகளுக்குச் சகோதரன் இருப்பது போல, நதிகளுக்கு நெருங்கிய தோழனாக உள்ளான். அவன் அரசன் ஒருவன் தன் பகைவர்களை அழிப்பது போல, உலகிலுள்ள காடுகளை விழுங்கிவிடுகிறான். பெருங்காற்று வீசிக் காடுகளைச் சூழ்ந்துகொள்ளும்போது, அந்தச் சுடர் பூமியின் உடம்பில் உள்ள உரோமங்களை வெட்டித்தள்ளுகிறது.

श्वसित्यप्सु हंसो न सीदन् क्रत्वा चेतिष्ठो विशामुषर्भुत् ।
सोमो न वेधा ऋतप्रजातः पशुर्न शिश्वा विभुर्दूरेभाः ॥ ५

ஶ்வஸித்யப்ஸு ஹம்ஸோ ந ஸீதந் க்ரத்வா சேதிஷ்டோ விஶாமுஷர்புத் ।
ஸோமோ ந வேதா ருதப்ரஜாத: பஶுர்ந ஶிஶ்வா விபுர்தூரேபா: ॥ 5 ॥

அவன் நீர்களில் அமர்ந்துள்ள அன்னப்பறவையைப் போல மூச்சு விடுகிறான். அதிகாலையில் கண்விழிக்கும் அவன், தன் செயல் விருப்பத்தால் மக்களுக்கு ஞானம் அளிக்கிறான். ஸோம தேவனைப் போல, அவன் சத்தியத்திலிருந்து பிறந்தவன்; பொருள்களை உண்டாக்குபவன்; புதிதாய்ப் பிறந்த கன்றுடன்கூடிய பசுவைப் போன்றவன். அவன் விரிவாய்ப் பரவுகின்றவன். அவனுடைய ஒளி வெகுதூரம் காணப்படுகிறது.

ஸூக்தம் 66

रयिर्न चित्रा सूरो न संदृगायुर्न प्राणो नित्यो न सूनुः ॥
तक्वा न भूर्णिर्वना सिषक्ति पयो न धेनुः शुचिर्विभावा ॥ १

ரயிர்ந சித்ரா ஸூரோ ந ஸந்த்ருகாயுர்ந ப்ராணோ நித்யோ ந ஸூநு: ।
தக்வா ந பூர்ணிர்வநா ஸிஷக்தி பயோ ந தேநு: ஶுசிர்விபாவா ॥ 1 ॥

அவன் பல வகைகளில் மேம்பட்ட செல்வத்தைப் போன்றவன்; சூரியனைப் போல எல்லாவற்றையும் பார்ப்பவன். அவன் நம் உயிர் வாழ்வதற்கு மூச்சுப் போலவும் வயது போலவும் உள்ளான். அவன் நம்முடைய அழிவில்லாத குழந்தை; நம்மைத் தம்மீது ஏற்றிக்கொண்டு பாய்ந்தோடும் குதிரையைப் போன்றவன். அவன் காடுகளில் விருப்பம் உடையவன்; பால் கொடுக்கும் பசுவினைப் போன்றவன்; தூயவனாக விளங்குகின்றான். அவன் பிரகாசமும் விரிவானது.

दा॒धार॒ क्षेम॒मोको॒ न र॒ण्वो यवो॒ न प॒क्वो जेता॒ जना॑नाम् ॥
ऋषि॒र्न स्तुभ्वा॑ वि॒क्षु प्र॑श॒स्तो वा॒जी न प्री॒तो वयो॑ दधाति ॥ २

தாதார க்ஷேமமோகோ ந ரண்வோ யவோ ந பக்வோ ஜேதா ஜநாநாம் ।
ருஷிர்ந ஸ்துப்வா விக்ஷு ப்ரஶஸ்தோ வாஜீ ந ப்ரீதோ வயோ ததாதி ॥ 2 ॥

அவன் இனிமையான வீட்டினைப் போல நம் நன்மைகள் அனைத்தையும் காப்பாற்றித் தருகிறான். அவன் உண்பதற்குப் பக்குவமான தானியம் போன்றவன். அவன் மக்களை வெற்றி கொள்பவன்; மந்திரம் ஓதும் முனிவனைப் போன்றவன். மக்கள் அவன் புகழைப் பேசுகின்றனர். தயாரிப்போடு விரைந்து ஓடும் போர்க்குதிரையைப் போன்றவன் அவன். அவன் நம் வளர்ச்சியைப் பாதுகாப்பவன்.

दु॒रोक॑शोचिः॒ क्रतु॒र्न नित्यो॑ जा॒येव॒ योना॒वर॒ विश्व॑स्मै ॥
चि॒त्रो यदभ्रा॑ट् छ्वे॒तो न वि॒क्षु रथो॒ न रु॒क्मी त्वे॒षः सम॒त्सु ॥ ३

துரோகஶோசி: க்ரதுர்ந நித்யோ ஜாயேவ யோநாவரம் விஶ்வஸ்மை ।
சித்ரோ யதப்ராட்ச்வேதோ ந விக்ஷு ரதோ ந ருக்மீ த்வேஷ: ஸமத்ஸு ॥ 3 ॥

குடியிருப்பதற்குச் சிரமமான வீட்டில் அவன் விளக்குப் போன்றவன்; விரைவில் தீப்பற்றவைக்க முடியாத ஒளி போன்றவன். நம்மிடத்தில் எப்பொழுதும் சுறுசுறுப்பாயுள்ள விருப்பு ஆற்றல் (இச்சாசக்தி) அவனே. அவன் நம் வீட்டில் மனைவியைப் போல இருப்பவன். ஒவ்வொருவனுக்கும் தேவையான அளவு அவன் இருக்கிறான். அவன் வியப்பு ஊட்டும் வகையில் எரியும்போது, மக்களுக்கு இடையே வெண்மை வாய்ந்த ஒருவனைப் போல உள்ளான். அவன் பொன்னாலாகிய தேர் போன்றவன். நம் போர்களில் அவன் மேம்பட்ட பிரகாசமாக உள்ளான்.

सेनेव सृष्टामं दधात्यस्तुर्न द्युत् त्वेषप्रतीका ॥
यमो ह जातो यमो जनित्वं जारः कनीनां पतिर्जनीनाम् ॥ ४

ஸேநேவ ஸ்ருஷ்டாமம் ததாத்யஸ்துர்ந தித்யுத்த்வேஷப்ரதீகா ।
யமோ ஹ ஜாதோ யமோ ஜநித்வம் ஜார: கநீநாம் பதிர்ஜநீநாம் ॥ 4 ॥

அவன் பகைவர்களை எதிர்த்துச் செல்லும் படையைப் போன்றவன்; நம்மிடம் வலிமையை நிலைபெறச் செய்கிறான். சூடு பரவிப் பற்றிஎரியும் கூர்மையான, வில்லினது அம்பு போன்றவன் அவன். இரட்டையாய்ப் பிறந்தவனும் அவன். இரட்டையாய்ப் பிறக்க உள்ளவனும் அவன். அவன் கன்னிப் பெண்களின் காதலன்; தாய்மார்களின் கணவன்.

तं वश्चराथा वयं वसत्यास्तं न गावो नक्षन्त इद्धम् ॥
सिन्धुर्न क्षोदः प्र नीचीरैनोन्नवन्त गावः स्वर्दृशीके ॥ ५

தம் வஶ்சராதா வயம் வஸத்யாஸ்தம் ந காவோ நக்ஷந்த இத்தம் ।
ஸிந்துர்ந க்ஷோத: ப்ர நீசீரைநோந்நவந்த காவ:
ஸ்வர்த்ருஶீகே ॥ 5 ॥

பசுக்கள் கொட்டிலுக்கு வீடு திரும்பும்போது, அவனுடைய ஒளி தூண்டப்படுகிறது. அப்பொழுது நாங்கள், உங்கள் நடையாலும் உங்கள் இருத்தலாலும் அவன் அருகு வந்து சேர்கிறோம். அவன் கால்வாயில் ஓடும் ஆற்றைப் போன்றவன். பள்ளத்தை நோக்கி ஓடும் தண்ணீர்களை அவன் தனக்கு முன்னர்ச் செல்லுமாறு அனுப்புகிறான். சூரியஉலகம் நம் கண்களுக்கு வெளிப்படும் போது, அவனுடைய கிரணங்களாகிய பசுக்கள் அவனிடம் வந்துசேர்கின்றன.

ஸூக்தம் 67

वनेषु जायुर्मर्तेषु मित्रो वृणीते श्रुष्टिं राजेवाजुर्यम् ॥
क्षेमो न साधुः क्रतुर्न भद्रो भुवत् स्वाधीर्होता हव्यवाट् ॥ १

வநேஷு ஜாயுர்மர்தேஷு மித்ரோ வ்ருணீதே ஶ்ருஷ்டிம் ராஜேவாஜுர்யம் ।
க்ஷேமோ ந ஸாது: க்ரதுர்ந பத்ரோ புவத்ஸ்வாதீர்ஹோதா ஹவ்யவாட் ॥ 1 ॥

காடுகளில் வெற்றி பெறுவோன் அவன். அவன் மனிதனுடைய நண்பன். வயதானாலும் உடலும் உள்ளமும் தளராத மந்திரியையே அரசன் பொறுக்கிஎடுத்துப் பதவியில் தொடரச் செய்வதுபோல, அவன் அருளால் உண்டாகும் உள்உணர்ச்சியைத் தேர்ந்தெடுக்கிறான். அவன் நம்மை நிறைவு உடையவர் ஆக்கும் நன்மையைப் போன்று உள்ளான்; நேர்மையான எண்ணத்தில் நன்மை தரும் மனஉறுதியைப் போல உள்ளான்; நமக்கு ஹோதா ஆகவும் நாம் அளிப்பனவற்றைச் சுமந்து செல்வோனாகவும் உள்ளான்.

हस्ते दधानो नृम्णा विश्वान्यमे देवान् धाद् गुहा निषीदन् ॥
विदन्तीमत्र नरो धियंधा हृदा यत् तष्टान् मन्त्राँ अशंसन् ॥ २

ஹஸ்தே ததாநோ ந்ரும்ணா விஶ்வாந்யமே தேவாந்தாத்குஹா நிஷீதந் ।
விதந்தீமத்ர நரோ தியந்தா ஹ்ருதா யத்தஷ்டாந்மந்த்ராந் அஶம்ஸந் ॥ 2 ॥

அவன் எல்லா ஆற்றல்களையும் தன் கையில் ஏந்தியிருக்கிறான். இரகசியமான குகையில் தங்கியவாறே, தன் வலிமையால் அவன் தேவர்களைப் பாதுகாக்கிறான். இவ்வலகில் மேம்பட்ட அறிவைத் தம் உள்ளத்துக் கொண்டுள்ள மனிதர்கள், தம் இதயத்தால் வடிவு அமைக்கப்பட்ட மந்திரங்களை ஒலிக்கும்போது, அவனை அறிகின்றனர்.

अजो न क्षां दाधार पृथिवीं तस्तम्भ द्यां मन्त्रेभिः सत्यैः ॥
प्रिया पदानि पश्वो नि पाहि विश्वायुरग्ने गुहा गुहं गाः ॥ ३

அஜோ ந க்ஷாம் தாதார ப்ருதிவீம் தஸ்தம்ப த்யாம் மந்த்ரேபி: ஸத்யை: ।
ப்ரியா பதாநி பஶ்வோ நி பாஹி விஶ்வாயுரக்நே குஹா குஹம் கா: ॥ 3 ॥

அவன் பிறப்பு இல்லாதவனாய், பெரும்பரப்புடைய பூமியைப் பாதுகாக்கின்றான். தூண்களைக் கொண்டு கட்டடம் கீழே விழாமல் தாங்குவது போல, அவன் சத்தியமான மந்திரங்களால் சுவர்க்கத்தைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறான். ஓ அக்நீ! உண்மைப்பொருளைக் காண்பதாகிய பசுவின் விரும்பத் தக்க காலடிச்சுவடுகளை நீ பாதுகாப்பாயாக. நீ எல்லாப் பொருள்களுக்கும் உயிராக உள்ளாய். மேம்பட்ட இரகசியங்களின் உள்ளும் நீ இரகசியமாகப் புகுவாய்.

य ईं चिकेत गुहा भवन्तमा यः ससाद धारामृतस्य ॥
वि ये चृतन्त्यृता सपन्त आदिद् वसूनि प्र ववाचास्मै ॥ ४

ய ஈம் சிகேத குஹா பவந்தமா ய: ஸஸாத தாராம்ருதஸ்ய ।
வி யே ச்ருதந்த்ய்ருதா ஸபந்த ஆதித்வஸூநி ப்ர வவாசாஸ்மை ॥ 4 ॥

அவன் மறைவான குகையில் இருக்கும்போது அவனைப் பார்த்தவனுக்கும், சத்தியத்தின் தொடர்ச்சியான நீர்ஒழுங்கினை அடைந்தவனுக்கும், சத்தியப்பொருள்களைத் தீண்டி (ஸ்பரிசித்து) அவனைத் தூண்டி எரியவிடுகின்றவர்களுக்கும், அவன் செல்வங்களைப் பற்றிய சொற்களைக் கூறுகின்றான்.

वि यो वीरुत्सु रोधन्महित्वोत प्रजा उत प्रसूष्वन्तः ॥
चित्तिरपां दमे विश्वायुः सद्मेव धीराः संमाय चक्रुः ॥ ५

வி யோ வீருத்ஸு ரோதந்மஹித்வோத ப்ரஜா உத ப்ரஸூஷ்வந்த: ।
சித்திரபாம் தமே விஶ்வாயு: ஸத்மேவ தீரா: ஸம்மாய சக்ரு: ॥ 5 ॥

அக்நி, பூமியின் வளர்கின்ற மூலிகைகளில் தன் பெருமைகளையும், தாய்மார்களுக்குப் பிறந்துள்ள குழந்தைகளையும், அவர்களுடைய வயிற்றில் உள்ள குழந்தைகளையும் ஒருசேரக் காப்பாற்றுகின்றான். அவன் நீர்களின் இருப்பிடத்தில் ஞானமாகவும், எல்லா வாழ்நாளாகவும் உள்ளான். பேரறிவாளர்கள் அவனை ஒருமாளிகை போல அளந்து வடிவு அமைத்துள்ளனர்.

ஸூக்தம் 68

श्रीणन्नुप स्थाद् दिवं भुरण्युः स्थातुश्चरथमक्तून् व्यूर्णोत् ।
परि यदेषामेको विश्वेषां भुवद् देवो देवानां महित्वा ॥ १

ஶ்ரீணந்நுப ஸ்தாத்திவம் புரண்யு: ஸ்தாதுஶ்சரதமக்தூந்வ்யூர்ணோத் ।
பரி யதேஷாமேகோ விஶ்வேஷாம் புவத்தேவோ தேவாநாம் மஹித்வா ॥ 1 ॥

அவன் பொருள்களைச் சுமப்பவனாய்ச் சுடரை வெளிப்படுத்திக் கொண்டு சுவர்க்கத்தை அடைகிறான்; சிக்கல்களைப் போக்கி இரவுகளை வெளிப்படுத்துகின்றான். அசையும் பொருள்களையும் அசையாப் பொருள்களையும், அவற்றை மூடிக்கொண்டிருக்கும் போர்வையை நீக்கி விளங்கச்செய்கிறான். இந்த ஒரு தேவனே எல்லாத் தேவர்களின் பெருமையையும் தனக்குள் வைத்துப் போர்த்துக் கொண்டிருக்கிறான்.

आदित् ते॒ विश्वे॒ क्रतुं॑ जुषन्त॒ शुष्का॒द् यद् दे॑व जी॒वो जनि॑ष्टाः ।
भज॑न्त॒ विश्वे॑ देव॒त्वं नाम॑ ऋ॒तं सप॑न्तो अ॒मृत॒मेवैः॑ ॥ २

ஆதித்தே விஶ்வே க்ரதும் ஜுஷந்த ஶுஷ்காத்யத்தேவ ஜீவோ ஜநிஷ்டா: ।
பஜந்த விஶ்வே தேவத்வம் நாம ருதம் ஸபந்தோ அம்ருதமேவை: ॥ 2 ॥

கடவுளே! உலர்ந்துபோன பொருள்களிலிருந்து நீ உயிருடைய பொருளாய்ப் பிறக்கும்போது, அனைவரும் உன்னுடைய விருப்பமான செயலில் மகிழ்ச்சி கொள்கின்றார்கள். அனைவரும் திருநாமத்தையும் தெய்வத்தையும் அனுபவித்து மகிழ்கிறார்கள். உன் அசைவுகளால், அவர்கள் உண்மையையும் அழியாத் தன்மையையும் தொட்டுப்பார்க்கின்றார்கள்.

ऋ॒तस्य॒ प्रेषा॑ ऋ॒तस्य॑ धी॒तिर्वि॒श्वायु॒र्विश्वे॒ अपां॑सि चक्रुः ।
यस्तुभ्यं॒ दाशा॒द् यो वा॑ ते॒ शिक्षा॒त् तस्मै॑ चिकि॒त्वान् र॒यिं द॑यस्व ॥ ३

ருதஸ்ய ப்ரேஷா ருதஸ்ய தீதிர்விஶ்வாயுர்விஶ்வே அபாம்ஸி சக்ரு: ।
யஸ்துப்யம் தாஶாத்யோ வா தே ஶிக்ஷாத்தஸ்மை சிகித்வாந்ரயிம் தயஸ்வ ॥ 3 ॥

அவன், சத்தியத்தின் தூண்டுதல்களும் எண்ணங்களும் ஆவான். எல்லாரும் தொழில் புரிவதற்கு உதவும் அந்த எல்லையற்ற பொருள்களின் உயிரும் அவனே. ஓ அக்நீ! உனக்கு அளிப்பவனுக்கும், உன்னிடமிருந்து கற்றுக்கொள்பவனுக்கும், எல்லாம் அறிகின்ற நீ செல்வத்தை அளிப்பாயாக.

होता॒ निष॑त्तो॒ मनो॒रप॑त्ये॒ स चि॒न्वासां॒ पती॑ रयी॒णाम् ।
इ॒च्छन्त॒ रेतो॑ मि॒थस्त॒नूषु॒ सं जा॑नत॒ स्वैर्दक्षै॒रमू॑राः ॥ ४

ஹோதா நிஷத்தோ மநோரபத்யே ஸ சிந்ந்வாஸாம் பதீ ரயீணாம் ।
இச்சந்த ரேதோ மிதஸ்தநூஷு ஸம் ஜாநத ஸ்வைர்தக்ஷைரமூரா:॥ 4 ॥

மனுவின் பரம்பரையாம் மனிதனிடத்தில், அக்நி அவனுடைய வேள்விப்புரோகிதனாக அமர்ந்திருக்கிறான். உண்மையிலேயே அவன்தான் இந்தச் செல்வங்களுக்கெல்லாம் தலைவன். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் பரிமாற்றமாகத் தங்கள் உடல்களில் வித்தினை விரும்புகின்றனர். அறிஞர்கள் உண்மைஅறிவினால் முழுதும் உணர்கிறார்கள்.

पि॒तुर्न पु॒त्राः क्रतुं॑ जुषन्त॒ श्रोष॒न् ये अ॑स्य॒ शासं॑ तु॒रासः॑ ।
वि राय॑ और्णो॒द् दुरः॑ पुरु॒क्षुः पि॒पेश॒ नाकं॒ स्तृभि॒र्दमू॑नाः ॥ ५

பிதுர்ந புத்ரா: க்ரதும் ஜுஷந்த ஶ்ரோஷந்யே அஸ்ய ஶாஸம் துராஸ: ।
வி ராய ஔர்ணோத்துர: புருக்ஷு: பிபேஶ நாகம் ஸ்த்ருபிர்தமூநா: ॥ 5 ॥

அவனுடைய அறிவுரைகளைக் கவனிக்கிறவர்களும், பிரயாணத்திற்கு விரைகின்றவர்களும், தந்தையின் விருப்பத்தைப் புதல்வர்கள் நிறைவேற்றுவது போல, அவன் விருப்பத்தை மகிழ்வுடன் செயற்படுத்துகிறார்கள். அவன் செல்வக்குவியலுக்கு இருப்பிடம். நீதிகள் அமைந்த மாளிகையின் கதவுகளை அவன் விரிவாகத் திறந்துவைக்கிறான். நட்சத்திரங்களையும் வானத்தையும் வடிவமைத்த அவன் நம் உள்ளத்தில் தங்கியிருப்பவன்.

ஸூக்தம் 69

शुक्रः शुशुक्वाँ उषो न जारः पप्रा समीची दिवो न ज्योतिः ।
परि प्रजातः क्रत्वा बभूथ भुवो देवानां पिता पुत्रः सन् ॥ १

ஶுக்ர: ஶுஶுக்வாம் உஷோ ந ஜார: பப்ரா ஸமீசீ திவோ ந ஜ்யோதி: ।
பரி ப்ரஜாத: க்ரத்வா பபூத புவோ தேவாநாம் பிதா புத்ர: ஸந் ॥ 1 ॥

நீ விடியற்காலைப்பொழுதில் காதலனாகிப் பொலிவுடன் எரிந்துகொண்டிருக்கிறாய். நீ வானத்தில் உள்ள பிரகாசத்தைப் போல, ஒன்றற்கு ஒன்று சமமான இரண்டு உலகங்களையும் ஜோதியால் நிரப்பிக்கொண்டு எம் விருப்பத்தால் பிறக்கிறாய்; எம்மைச் சுற்றிலும் உள்ள எல்லாப் பொருள்களுமாக உள்ளாய். நீ எங்களுக்குப் புதல்வனாக இருந்தும், தேவர்களுக்குத் தந்தையாக உள்ளாய்.

वेधा अदृप्तो अग्निर्विजानन्नूधर्न गोनां स्वाद्मा पितूनाम् ।
जने न शेव आहूर्यः सन् मध्ये निषत्तो रण्वो दुरोणे ॥ २

வேதா அத்ருப்தோ அக்நிர்விஜாநந்நூதர்ந கோநாம் ஸ்வாத்மா பிதூநாம் ।
ஜநே ந ஶேவ ஆஹூர்ய: ஸந்மத்யே நிஷத்தோ ரண்வோ துரோணே ॥ 2 ॥

அக்நி அறிவுடையவன்; கருவங்கொண்டு எதனையும் அவசரமாகச் செய்வதில் ஈடுபடாத படைப்பாளன்; ஒளியாகிய பசுக்களின் முலைக்கண்கள் போன்றவன்; ஸோமரஸத்தைச் சுவைக்கச் செய்பவனாய்த் தான் எல்லா உணவுகளையும் சுவைப்பான். அவன் மனிதனிடத்தில் மகிழ்ச்சி கொண்டவன் போல உள்ளான். அவன் நம்மால் தவறாமல் அழைக்கப்பட வேண்டியவன். அவன் வீட்டின் நடுவில் மகிழ்வோடு தங்கியுள்ளான்.

पुत्रो न जातो रण्वो दुरोणे वाजी न प्रीतो विशो वि तारीत् ।
विशो यदह्वे नृभिः सनीळा अग्निर्देवत्वा विश्वान्यश्याः ॥ ३

புத்ரோ ந ஜாதோ ரண்வோ துரோணே வாஜீ ந ப்ரீதோ விஶோ வி தாரீத் ।
விஶோ யதஹ்வே ந்ருபி: ஸநீளா அக்நிர்தேவத்வா விஶ்வாந்யஶ்யா: ॥ 3 ॥

அவன் நம் வீட்டில் இன்பம் தரும் மகனைப் போலப் பிறந்திருக்கிறான். அவன் மகிழ்ச்சியுடைய குதிரையைப் போல விரைந்து, போர்களில் மனிதர்களைச் சுமந்து, அபாயம் இல்லாதபடி போர்க்களத்தைத் தாண்டிச் செலுத்துகிறான். மனிதர்களோடு ஒரே இடத்தில் வசிப்பவர்களை நான் அழைக்கும்போது, அக்கினிபகவான் எல்லாத் தேவதைகளையும் அடைகின்றான்.

नकिष्ट एता व्रता मिनन्ति नृभ्यो यदेभ्यः श्रुष्टिं चकर्थ ।
तत् तु ते दंसो यदहन्त्समानैर्नृभिर्यद् युक्तो विवे रपांसि ॥ ४

நகிஷ்ட ஏதா வ்ரதா மிநந்தி ந்ருப்யோ யதேப்ய: ஶ்ருஷ்டிம் சகர்த ।
தத்து தே தம்ஸோ யதஹந்த்ஸமாநைர்ந்ருபிர்யத்யுக்தோ விவே ரபாம்ஸி ॥ 4 ॥

நீ இந்தத் தேவர்களுக்கு உன் அருளால் உள்புகுந்து ஞானத்தை வழங்கியுள்ளபோது, ஒருவரும் உன்னுடைய செயல்முறைகளைக் கெடுக்கமுடியாது. நீ உனக்குச் சமமான தேவர்களோடு இணைக்கப்பட்டவன் ஆகி, தீங்கு தரும் பொருள்களை அழிக்கின்றாய். அவற்றைச் சிதறஅடிப்பதே உன்னுடைய வேலையாகும்.

उषो न जारो विभावोस्रः संज्ञातरूपश्चिकेतदस्मै ।
त्मना वहन्तो दुरो व्यृण्वन् नवन्त विश्वे स्वर्दृशीके ॥ ५

உஷோ ந ஜாரோ விபாவோஸ்ர: ஸம்ஞாதரூபஶ்சிகேததஸ்மை ।
த்மநா வஹந்தோ துரோ வ்யருண்வந்நவந்த விஶ்வே.
ஸ்வர்த்ருஶீகே ॥ 5 ॥

அவன் விடியற்காலத்தின் காதலன் போலப் பளபளப்புடன் பிரகாசமாக உள்ளான். அவன் உருவம் நம்மால் நன்கு அறியப்படுவதாகுக. இந்த மனிதர்களின் பொருளுக்காக அவன் ஞானத்தில் கண்விழிப்பானாக. அனைவரும் அவனை நன்கு சுமந்துகொண்டு, வாசற்படிகளை விரிவாகத் திறந்து, சூரிய உலகைக் காண்பதற்குச் செல்வாராக.

ஸூக்தம் 70

वनेम पूर्वीर्यो मनीषा अग्निः सुशोको विश्वान्यश्याः ।
आ दैव्यानि व्रता चिकित्वाना मानुषस्य जनस्य जन्म ॥ १

வநேம பூர்வீரர்யோ மநீஷா அக்நி: ஸுஶோகோ விஶ்வாந்யஶ்யா: ।
ஆ தைவ்யாநி வ்ரதா சிகித்வாநா மாநுஷஸ்ய ஜநஸ்ய ஜந்ம ॥ 1 ॥

நாங்கள் செல்வங்கள் பலவற்றையும் சம்பாதித்துப் பெறுவோமாக. எதனையும் கூர்மையாக எண்ணும் புத்தியினால், தலைவனாகிய அக்நி, தன் பிரகாசத்துடன் உயர்ந்தோங்கிக் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டு, உலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் சொந்தக்காரன் ஆகுக. தெய்வச்செயல்களின் நெறிமுறைகளை அறியும் அவன், மனிதப்பிறப்பினையும் அறிவான்.

गर्भो॒ यो अ॒पां गर्भो॒ वना॑नां॒ गर्भ॑श्च स्था॒तां गर्भ॑श्च॒रथा॑म् ।
अद्रौ॑ चिदस्मा अ॒न्तर्दु॑रो॒णे वि॒शां न विश्वो॑ अ॒मृतः॑ स्वा॒धीः ॥ २

கர்போ யோ அபாம் கர்போ வநாநாம் கர்பஶ்ச ஸ்தாதாம் கர்பஶ்சரதாம் ।
அத்ரௌ சிதஸ்மா அந்தர்துரோணே விஶாம் ந விஶ்வோ அம்ருத: ஸ்வாதீ: ॥ 2 ॥

அவன், நீர்கள் - காடுகள் - அசையாப் பொருள்கள் - அசையும் பொருள்கள் - ஆகிய எல்லாவற்றிற்கும் குழந்தையாவான். அவன் மனிதருக்காகக் கல்லினும்கூட இருக்கிறான். அவன் தன் வீட்டின் நடுவில் இருக்கிறான். அவன் மக்கள் அனைவருக்கும் பொதுவானவன். அவன் அழிவில்லாதவன்; எதனையும் முழுமையாக ஆராய்ந்து அறிபவன்.

स हि क्षपावाँ॑ अ॒ग्नी र॑यी॒णां दाश॒द्यो अ॑स्मा॒ अरं॑ सू॒क्तैः ।
ए॒ता चि॑कित्वो॒ भूमा॒ नि पा॑हि दे॒वानां॒ जन्म॒ मर्ता॑श्च वि॒द्वान् ॥ ३

ஸ ஹி க்ஷபாவாம் அக்நீ ரயீணாம் தாஶத்யோ அஸ்மா அரம் ஸூக்தை: ।
ஏதா சிகித்வோ பூமா நி பாஹி தேவாநாம் ஜந்ம மர்தாம்ஶ்ச வித்வாந் ॥ 3 ॥

அக்நிபகவான் இரவுகளுக்கு ஒரு தலைவன். குறைவுபடாத முழுமையான மந்திரச்சொற்களால், வேள்வியைத் தனக்காகத் தயாரிப்பவனுக்கு, அவன் செல்வங்களை அள்ளி வழங்குகின்றான். ஓ அக்நீ! நீ அறிவுவடிவாக இருக்கின்றாய். நீ உண்மையை அறிந்தவனாய் இருந்து, இந்த உலகங்களையும் தேவர்களின் பிறப்புக்களையும் இறக்கும் மனிதர்களையும் காப்பாற்றி அருள்வாயாக.

वर्धान्यं पूर्वीः क्षपो विरूपाः स्थातुश्च रथमृतप्रवीतम् ।
अराधि होता स्वर्निषत्तः कृण्वन् विश्वान्यपांसि सत्या ॥ ४

வர்தாந்யம் பூர்வீ: க்ஷபோ விரூபா: ஸ்தாதுஶ்ச ரதம்ருதப்ரவீதம் ।
அராதி ஹோதா ஸ்வர்நிஷத்த: க்ருண்வந்விஶ்வாந்யபாம்ஸி
ஸத்யா ॥ 4 ॥

சத்தியத்திலிருந்து வெளிப்படுபவனும், அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகின்றவனும், அக்நிபகவானே. அவனை வெவ்வேறு வடிவம் கொண்ட பல இரவுகள் வளரச்செய்துள்ளன. சூரியனில் தங்கியிருப்பவனாய் அவன் நமக்காக உண்டாக்கப்பட்டுள்ளான்.

गोषु प्रशस्तिं वनेषु धिषे भरन्त विश्वे बलिं स्वर्णः ।
वि त्वा नरः पुरुत्रा संपर्यन् पितुर्न जिव्रेर्वि वेदो भरन्त ॥ ५

கோஷு ப்ரஶஸ்திம் வநேஷு திஷே பரந்த விஶ்வே பலிம் ஸ்வர்ண: ।
வி த்வா நர: புருத்ரா ஸபர்யந்பிதுர்ந ஜிவ்ரேர்வி வேதோ பரந்த ॥ 5 ॥

கிரணங்களாகிய பசுக்களிலும் காடுகளிலும் உன் மந்திரச் சொற்களை நிலைபெறச் செய்கிறாய். எல்லோரும் சூரிய உலகத்தை உனக்கு வழங்குவதற்காகக் கொண்டுவருவார் போலும். பலகாலம் வாழ்ந்த தகப்பனிடமிருந்து மகன் செல்வத்தைப் பெறுவது போல, மனிதர்கள் பல இடங்களில் உனக்குத் தொண்டுசெய்து, உன்னிடத்திலிருந்து ஞானத்தைச் சம்பாதிக்கின்றனர்.

साधुर्न गृध्नुरस्तेव शूरो यातेव भीमस्त्वेषः समत्सु ॥ ६

ஸாதுர்ந க்ருத்நுரஸ்தேவ ஶூரோ யாதேவ பீமஸ்த்வேஷ:
ஸமத்ஸு ॥ 6 ॥

அவன் தொழில்கள் செய்வதில் வல்லவன்; பிற பொருள்களைப் பற்றிக்கொள்வதற்குப் பசியுடையவன் போலத் தவிக்கின்றான். அம்பைச் செலுத்துவதில் வில்லாளியைப் போன்ற வீரனாக அவன் இருக்கிறான். பகைவர்களைத் தாக்குபவனைப் போல அவன் கொடியவனாகவும் உள்ளான். நம்முடைய போர்களில் அவன் சிறந்த பிரகாசமாக உள்ளான்.

ஸூக்தம் 71

उप प्र जिन्वन्नुशतीरुशन्तं पतिं न नित्यं जनयः सनीळाः ।
स्वसारः श्यावीमरुषीमजुष्रञ् चित्रमुच्छन्तीमुषसं न गावः ॥ १

உப ப்ர ஜிந்வந்நுஶதீருஶந்தம் பதிம் ந நித்யம் ஜந்ய: ஸநீளா: ।
ஸ்வஸார: ஶ்யாவீமருஷீமஜுஷ்ரஞ் சித்ரமுச்சந்தீமுஷஸம் ந
காவ: ॥ 7 ॥

ஒரேவீட்டில் வசிக்கும் தாய்மார்கள், தங்களை விரும்பும் அக்நியைத் தாமும் விரும்பிக் கொண்டுவந்து, தம்முடைய அழிவில்லாத கணவருக்கு இன்பம் அளிப்பது போல, அவனுக்கு இன்பம் அளித்தனர். மாலைஇருளின் நிறமும் செந்நிறமும் செறிந்து, வளமான நிறங்களால் ஒளிவீசும் அதிகாலைப் பொழுதில், கிரணங்களாகிய பசுக்கள் இன்புறுவது போல, சகோதரிகள் அவனிடம் இன்புறுகின்றனர்.

वी॒ळु चि॑द् दृ॒ळ्हा पि॒तरो॑ न उ॒क्थैरद्रिं॑ रुज॒न्नङ्गि॑रसो॒ रवे॑ण ।
च॒क्रुर्दि॒वो बृ॑ह॒तो गा॒तुम॒स्मे अह॒: स्व॑र्विदुः के॒तुमु॒स्राः ॥ २

வீளு சித்த்ருள்ஹா பிதரோ ந உக்தைரத்ரிம் ருஜந்நங்கிரஸோ ரவேண।
சக்ருர்திவோ ப்ருஹதோ காதுமஸ்மே அஹ: ஸ்வர்விவிது:
கேதுமுஸ்ரா: ॥ 2॥

நம்முடைய தந்தையர்கள் வலிமை பெற்று, உறுதியான இடங்களைத் தம் மந்திரமொழிகளால் தகர்த்து எறிந்தார்கள். அங்கிரஸ ரிஷிகள், தம் உரத்த குரலால், மலைப்பாறைகளைச் சிதற அடித்தார்கள். அவர்கள் நம்மிடத்தில் மாபெரும் சுவர்க்கத்திற்குப் பாதைகளை அமைத்தனர். அவர்கள் சூரியனையும் சூரியன் உலகினையும், உள் உணர்வுக் கதிரையும், பிரகாசிக்கும் மந்தைகளையும் கண்டுபிடித்தார்கள்.

दध॑न्नृ॒तं ध॒नय॑न्नस्य धी॒तिमादि॒दर्यो दि॑धि॒ष्वो३॑ विभृ॑त्राः ।
अतृ॑ष्यन्तीर॒पसो॑ य॒न्त्यच्छा॑ दे॒वाञ्जन्म॒ प्रय॑सा व॒र्धय॑न्तीः ॥ ३

ததந்ந்ருதம் தநயந்நஸ்ய தீதிமாதிதர்யோ திதிஷ்வோ விப்ருத்ரா: ।
அத்ருஷ்யந்தீரபஸோ யந்த்யச்சா தேவாஞ்ஜந்ம ப்ரயஸா வர்தயந்தீ: ॥ 3 ॥

அவர்கள் உண்மையை ஏற்று இந்த மனிதபுத்தியை வளம்பெறச் செய்தார்கள். அதன் பிறகே, விரிவடைந்து, பிரகாசத்தைத் தாங்கிச் செல்லும் புத்தியும் தகுதியும் அவர்களுக்கு உண்டாயின. வேலையில் ஈடுபட்டுள்ள சக்திகள், தேவர்களை நோக்கிச் சென்று மகிழ்ச்சியால் பிறப்பை வளர்க்கின்றன.

मथीद् यदी॑ विभृ॑तो मात॒रिश्वा॑ गृ॒हेगृ॑हे श्ये॒तो जेन्यो॒ भूत् ।
आदी॑ राज्ञे॒ न सही॑यसे॒ सचा॒ सन्ना दू॒त्यं१॒॑भृग॑वाणो विवाय ॥ ४

மதீத்யதீம் விப்ருதோ மாதரிஶ்வா க்ருஹேக்ருஹே ஶ்யேதோ ஜேந்யோ பூத் ।
ஆதீம் ராஞே ந ஸஹீயஸே ஸசா ஸந்நா தூத்யம் ப்ருகவாணோ விவாய ॥ 4 ॥

உள்ளே பரவித் தாங்கப்படும் வாயுபகவான்(உயிர்க்காற்று), வீடுவீடாக அவனைக் கடைந்தெடுக்கும்போது, வெண்ணிறம் அடைந்து, வெற்றிபெற்றவன் ஆகின்றான். அதன் பிறகே சுடர்விடும் ரிஷியாய், உண்மைப்பொருளைக் காண்பவனாய், நமக்குத் தோழனாக இருந்து, வலிய அரசனுக்குத் தூது செல்பவரைப் போல, நமக்காகத் தேவர்களிடம் தூது செல்கிறான்.

म॒हे यत् पि॒त्र ईं॒ रसं॑ दि॒वे करव॑ त्सरत् पृश॒न्य॑श्चिकि॒त्वान् ।
सृ॒जदस्ता॑ धृष॒ता दि॒द्युम॑स्मै॒ स्वायां॑ दे॒वो दु॑हि॒तरि॒ त्विषिं॑ धात् ॥ ५

மஹே யத்பித்ரம் ஈம் ரசம் திவே கரவ த்ஸரத்ப்ருஶந்யஶ்சிகித்வாந் ।
ஸ்ருஜதஸ்தா த்ருஷதா தித்யுமஸ்மை ஸ்வாயாம் தேவோ துஹிதரி த்விஷிம் தாத் ॥ 5 ॥

அவன் மாபெரும் சுவர்க்கத்தின்பொருட்டு இந்த ரஸத்தைச் செய்து முடித்தபோது, தொடுவதற்கு நெருக்கமாக ஞானமுடையவனாகக் கீழ்நோக்கி நழுவி வந்தான். வில்லை உடையவன் அவன்மீது மின்னலாகிய அம்பினைக் கடுமையாகத் தளர்த்திச் செலுத்தினான். ஆனால், அக்கடவுள் சுடர்விடும் ஆற்றலைத் தன் சொந்த மகளிடம் உண்டாக்கினான்.

स्व आ यस्तुभ्यं दम आ विभाति नमो वा दाशादुशतो अनु द्यून् ।
वर्धो अग्ने वयो अस्य द्विबर्हा यासद् राया सरथं यं जुनासि ॥ ६

ஸ்வ ஆ யஸ்துப்யாம் தம ஆ விபாதி நமோ வா தாஶாதுஶதோ அநு த்யூந் ।
வர்தோ அக்நே வயோ அஸ்ய த்விபர்ஹா யாஸத்ராயா ஸரதம் யம் ஜுநாஸி ॥ 6 ॥

உன் வீட்டில் உன்பொருட்டு விளக்கு ஏற்றுகின்றவன், உன்னை அடைக்கலம் புகுந்து உன்னிடம் தன் வணக்கத்தை நாள்தோறும் செலுத்துகின்றவன் - ஆகியவர்களிடத்தில் உனக்கும் விருப்பம் உள்ளது. அத்தகையவர் வளர்ச்சியை உன் இருவகை வளப்பத்தாலும் அதிகரிக்கச் செய்வாயாக. ஒரேதேரினில் உன்னால் ஏற்றிக்கொள்ளப்பட்டு விரைவுபடுத்தப்படுபவன், செல்வத்துடன் பிரயாணம் செய்வானாக.

अग्निं विश्वा अभि पृक्षः सचन्ते समुद्रं न स्रवतः सप्त यह्वीः ।
न जामिभिर्विचिकिते वयो नो विदा देवेषु प्रमतिं चिकित्वान् ॥ ७

அக்நிம் விஶ்வா அபி ப்ருக்ஷ: ஸசந்தே ஸமுத்ரம் ந ஸ்ரவத: ஸப்த யஹ்வீ: ।
ந ஜாமிபிர்வி சிகிதே வயோ நோ விதா தேவேஷு ப்ரமதிம் சிகித்வாந் ॥ 7 ॥

ஏழு பெரிய ஆறுகள் கடலில் ஒன்றுகூடிச் சேர்ந்து விடுவது போல, எல்லாவகை நிறைவுகளும் அக்நியைப் பற்றிக்கொள்கின்றன. நம்முடைய வளர்ச்சி உன் தோழர்களால் அறியப்படவில்லை. ஆனால் எல்லாவற்றையும் கண்டு அறிந்துள்ள நீ தேவர்களுக்கு உன் அறிவைக் கற்பிப்பாயாக. தேவர்களிடத்தில் எங்களுக்கு அறிவைத் தேடிக் கொடுப்பாயாக.

आ यदि॒षे नृ॒पतिं॒ तेज॒ आन॒ट् छुचि॒ रेतो॒ निषि॑क्तं॒ द्यौर॒भीके॑ ।
अ॒ग्निः शर्ध॑मनव॒द्यं युवा॑नं स्वा॒ध्यं॑ जनयत् सू॒दय॑च्च ॥ ८

ஆ யதிஷே ந்ருபதிம் தேஜ ஆநட் சுசி ரேதோ நிஷிக்தம் த்யௌரபீகே।
அக்நி: ஶர்தமநவத்யம் யுவாநம் ஸ்வாத்யம் ஜநயத்ஸூதயச்ச ॥ 8 ॥

வலிமையினுடைய இந்த ஒளி இந்த மனிதர்களுக்கு அரசனிடத்தில் தூண்டுதலைச் செய்வதற்காக வந்தபோது, அவர்கள் கூட்டத்தில் சுவர்க்கமே ஒரு மாசிலா விதையைப் போலப் போடப்பட்டது. அப்பொழுது அக்நிபகவான், இளமையும் குற்றமின்மையும் முழுமையான நல்ல புத்தியும் தன்னிடத்துக் கொண்டுள்ள ஆற்றலை, ஒரு கணத்தில் ஆயுள்தேவதையின் படையைத் தோற்றுவித்து, அதன்வழியே அதனை விரைந்து செல்லச் செய்தான்.

मनो॒ न योऽध्व॑नः स॒द्य एत्येकः॑ स॒त्रा सूरो॒ वस्व॑ ईशे ।
राजा॑ना मि॒त्रावरु॑णा सुपा॒णी गोषु॑ प्रि॒यम॒मृतं॒ रक्ष॑माणा ॥ ९

மநோ ந யோऽத்வந: ஸத்ய ஏத்யேக: ஸத்ரா ஸூரோ வஸ்வ ஈஶே।
ராஜாநா மித்ராவருணா ஸுபாணீ கோஷு ப்ரியமம்ருதம் ரக்ஷமாணா ॥ 9 ॥

பாதைகளிலெல்லாம் திடீரென்று மனத்தைப் போலப் பிரயாணம் செய்யும் சூரியன், எப்பொழுதும் தான் ஒப்பற்றவனாய் இருக்கும் செல்வத்தலைவன் ஆவான். அழகிய கைகளை உடைய மித்திரனும் வருணனும் சூரியனுடைய கிரணங்களாகிய பசுக்களில், அவனுடைய ஒளிமந்தைகளில் அமுதத்தையும் மகிழ்ச்சியையும் பாதுகாக்கின்றனர்.

मा नो॑ अग्ने स॒ख्या पित्र्या॑णि॒ प्रम॑र्षिष्ठा अ॒भि वि॒दुष्क॒विः सन् ।
नमो॒ न रू॒पं ज॑रि॒मा मि॑नाति पु॒रा तस्या॑ अ॒भिश॑स्ते॒रधी॑हि ॥ १०

மா நோ அக்நே ஸக்யா பித்ர்யாணி ப்ர மர்ஷிஷ்டா அபி விதுஷ்கவி: ஸந் ।
நபோ ந ரூபம் ஜரிமா மிநாதி புரா தஸ்யா அபிஶஸ்தேரதீஹி ॥ 10 ॥

ஓ அக்நீ! பழைய சிநேகிதங்களை நீ மறவாது, அசட்டை செய்யாது, நீக்கிவிடாது இருப்பாயாக. நீ உண்மைப் பொருளை அறிபவனாகவும் காண்பவனாகவும் எங்கள் பக்கம் திரும்பி இருக்கிறாய். மூடுபனி ஒரு வடிவத்தை மங்கலாக்குவது போல, வயது எங்கள் சக்தியைக் குறைக்கின்றது. அதன் தாக்குதல் எங்கள் மீது வருவதற்கும் முன்னமேயே நீ வந்து அருள்செய்வாயாக.

ஸூக்தம் 72

नि काव्या॑ वे॒धसः॒ शश्व॑तस्क॒र्हस्ते॒ दधा॑नो॒ नर्या॑ पु॒रूणि॑ ।
अ॒ग्निर्भु॑वद् रयि॒पती॑ रयी॒णां स॒त्रा च॑क्रा॒णो अ॒मृता॑नि॒ विश्वा॑ ॥ १

நி காவ்யா வேதஸ: ஶஶ்வதஸ்கர்ஹஸ்தே ததாநோ நர்யா புரூணி ।
அக்நிர்புவத்ரயிபதீ ரயீணாம் ஸத்ரா சக்ராணோ அம்ருதாநி விஶ்வா ॥ 1 ॥

அவன் தன் கைகளில் பல தேவதைகளின் ஆற்றல்களையும் வலிமைகளையும் ஏற்றுக்கொண்டு, என்றும் அழிவு இல்லாதவனாய், படைப்பவனுடைய உண்மையைக் காணும் அறிவுகளை நம்மிடையே வடிவமைக்கின்றான். அக்நிபகவான், அழிவு இல்லாத பொருள்கள் எல்லாவற்றையும் எப்பொழுதும் வடிவு அமைத்துக்கொண்டு, செல்வங்களுக்கு எல்லாம் தலைவன் ஆகுக.

अस्मे वत्सं परि षन्तं न विन्दन्निच्छन्तो विश्वे अमृता अमूराः ।
श्रमयुवः पदव्यो धियंधास्तस्थुः पदे परमे चार्वग्नेः ॥ २

அஸ்மே வத்ஸம் பரி ஷந்தம் ந விந்தந்நிச்சந்தோ விஶ்வே அம்ருதா அமூராः ।
ஶ்ரமயுவः பதவ்யோ தியம்தாஸ்தஸ்துः பதே பரமே சார்வக்நேः ॥ 2 ॥

அழிவில்லாத தேவர்கள் அனைவரும் அறிஞர்களும், எங்கும் பரவியுள்ள குழந்தையை விரும்பியபோதும், அதனை நம்மிடத்தில் காணமுடியவில்லை. அவர்கள் அவனுடைய காலடிச்சுவட்டின் வழியிலே திரும்பி, பெரிய அறிவினை அமைத்துக்கொண்டு, மேம்பட்ட உலகங்களில் நின்று, அக்நியின் அழகினை நெருங்கி அடைந்தனர்.

तिस्रो यदग्ने शरदस्त्वामिच्छुचिं घृतेन शुचयः सपर्यान् ।
नामानि चिद् दधिरे यज्ञियान्यसूदयन्त तन्वः सुजाताः ॥ ३

திஸ்ரோ யதக்நே ஶரதஸ்த்வாமிச்சுசிம் க்ருதேந ஶுசயः ஸபர்யாந் ।
நாமாநி சித்ததிரே யக்ஞியாந்யஸூதயந்த தந்வः ஸுஜாதாः ॥ 3 ॥

அவர்கள் தூயவர்களாய், தூயவனாகிய உன்னை மூன்று ஆண்டுகள் ஒளியின் தெளிவோடு தொழுதனர்; அப்பொழுது வேள்விக்கு உரிய மந்திரப்பெயர்களையும் மேற்கொண்டனர். அவர்களுடைய உடம்புகள் நிறைவான பெயர் எடுத்தன. அவற்றையும் அவர்கள் வழியில் விரைவாகச் செலுத்தினர்.

आ रोद॑सी बृह॒ती वेवि॑दाना॒ः प्र रु॒द्रिया॑ जभ्रिरे य॒ज्ञिया॑सः ।
वि॒दन्मर्तो॑ ने॒मधि॑ता चिकि॒त्वान॒ग्निं प॒दे प॑र॒मे त॑स्थि॒वांस॑म् ॥ ४

ஆ ரோதஸீ ப்ருஹதீ வேவிதாநா: ப்ர ருத்ரியா ஜப்ரிரே யச்ஞியாஸ: ।
விதந்மர்தோ நேமதிதா சிகித்வாநக்நிம் பதே பரமே தஸ்திவாம்ஸம் ॥ 4 ॥

வேள்வித்தலைவர்கள் பெரும்பரப்பு உடையனவாக விண்ணுலகையும் மண்ணுலகையும் கண்டுபிடித்து, தம் கடுமையான வலிமையால் அவற்றைச் சுமந்தனர். பின், மனிதன் அவற்றைக் கண்டறிந்து, மேலே உள்ள பாதியாய் இருக்கும் உலகத்தைத் தான் தாங்கிக்கொள்ளுதலால், அதற்கும் கடந்து அப்பால் உள்ள மிகச் சிறந்த உலகமாக இருக்கும் பரமபதத்தில் இருக்கும் அக்நியை அறிந்துகொண்டனன்.

स॑जा॒ना॒ना उप॑ सीदन्नभि॒ज्ञु पत्नी॑वन्तो नम॒स्यं॑ नमस्यन् ।
रि॒रि॒क्वांस॑स्त॒न्वः॑ कृण्वत॒ स्वाः सखा॒ सख्यु॑र्निमिषि॒ रक्ष॑माणाः ॥ ५

ஸம்ஜாநாநா உப ஸீதந்நபிஞ்யு பத்நீவந்தோ நமஸ்யம் நமஸ்யந் ।
ரிரிக்வாம்ஸஸ்தந்வ: க்ருண்வத ஸ்வா: ஸகா ஸக்யுர்நிமிஷி
ரக்ஷமாணா: ॥ 5 ॥

அவர்கள் அவனை முழுமையாக அறிந்து, தம் மனைவியருடன் வந்து, அவன் முன்பு முழந்தாளை மண்டியிட்டு வணங்கித் தொழுதனர். அவர்கள் தமக்கெனப் பொருள் எதுவும் இல்லாது ஒன்றும் இல்லாதவர்களாகி, நண்பனுடைய தயவிலே மற்றொரு நண்பன் இருப்பது போல, அவனது தயவினால் ஏற்பட்ட பாதுகாவலில், தம் உடம்பினை வடிவமைத்துக்கொண்டனர்.

त्रिः स॒प्त यद् गुह्या॑नि॒ त्वे इत्प॒दाविद॒न्निहि॑ता य॒ज्ञिया॑सः ।
तेभी॑ रक्षन्ते अ॒मृतं॑ स॒जोषाः॑ प॒शूश्च॑ स्था॒तॄश्च॒रथं॑ च पाहि ॥ ६

த்ரி: ஸப்த யத்குஹ்யாநி த்வே இத்பதாவிதந்நிஹிதா யச்ஞியாஸ: ।
தேபீ ரக்ஷந்தே அம்ருதம் ஸஜோஷா: பஶூஂஶ்ச ஸ்தாத்ரூஂஶ்சரதம் ச பாஹி ॥ 6 ॥

வேள்வித்தலைவர்கள் உனக்குள் ஒளிந்திருந்த மூவேழ் உலகங்களையும் கண்டுபிடித்தபோது, அவற்றால் அவர்கள் ஒரு மனப்பட்டு அவற்றை ஏற்றுக்கொண்டு, அமுதத்தைக் காக்கின்றனர். மந்தைகளையும், நிற்பனவற்றையும், அசைவனவற்றையும், பாதுகாத்து அருளுவாயாக.

वि॒द्वाँ अ॑ग्ने व॒युना॑नि क्षिती॒नां व्या॑नु॒षक् छ॒रुधो॑ जी॒वसे॑ धाः ।
अ॒न्त॒र्वि॒द्वाँ अध्व॑नो देव॒यानां॒ तन्द्रो॒ दूतो॒ अभवो हवि॒र्वाट् ॥ ७

வித்வாம் அக்நே வயுநாநி க்ஷிதீநாம் வ்யாநுஷக்சுருதோ ஜீவஸே தா: ।
அந்தர்வித்வாந் அத்வநோ தேவயாநாநதந்த்ரோ தூதோ அபவோ ஹவிர்வாட் ॥ 7 ॥

ஓ அக்நீ! நாங்கள் அறிந்த செய்திகளை எல்லாம் நீ அறிகின்றாய். மக்கள் உயிர்வாழ்ந்திருக்குமாறு, நடுவே விட்டுப் போகாத ஓர் ஆற்றல் வரிசையை அமைப்பாயாக. தேவர்களின் பிரயாணத்திற்கு உரிய பாதையை உள்ளத்தினுள்ளே நீ அறிந்து வைத்திருக்கிறாய். நீ உறக்கம் கொள்ளாத தூதன் ஆவாய். வேள்வியில் அளிக்கும் பொருள்களை நீ தேவரிடம் சுமந்து செல்கிறாய்.

स्वाध्यो दिव आ सप्त यह्वी रायो दुरो व्यृतज्ञा अजानन् ।
विदद् गव्यं सरमा दृळ्हमूर्वं येना नु कं मानुषी भोजते विट् ॥ ८

ஸ்வாத்யோ திவ ஆ ஸப்த யஹ்வீ ராயோ துரோ வ்யருதக்ஞா அஜாநந் ।
விதத்கவ்யம் ஸரமா த்ருள்ஹமூர்வம் யேநா நு கம் மாநுஷீ போஜதே விட் ॥ 8 ॥

சுவர்க்கத்திலிருந்து ஏழு பெரிய ஆறுகள் புறப்பட்டன. அவைகள் ஆழ்ந்து எண்ணுவன; உண்மையை அறிந்தன; செல்வமுடைய இருப்பிடத்தின் கதவுகளைத் திறக்கும் வழியைத் தெரிந்துகொண்டன. சரமா என்பவள் கிரணங்களாகிய பசுக்கூட்டத்தையும், உறுதியான இடத்தையும், அவ்விடத்தின் விரிந்த பரப்பினையும் கண்டு பிடித்தனள். அதனால் இப்பொழுது மனிதஇனம் இன்புறுகிறது.

आ ये विश्वा स्वपत्यानि तस्थुः कृण्वानासो अमृतत्वाय गातुम् ।
मह्ना महद्भिः पृथिवी वि तस्थे माता पुत्रैरदितिर्धायसे वेः ॥ ९

ஆ யே விஶ்வா ஸ்வபத்யாநி தஸ்து: க்ருண்வாநாஸோ அம்ருதத்வாய காதும் ।
மஹ்நா மஹத்பி: ப்ருதிவீ வி தஸ்தே மாதா புத்ரைரதிதிர்தாயஸே வே: ॥ 9 ॥

அழியாத இயல்பிற்காகப் பாதையை அமைத்துக்கொண்டு அழகிய சந்ததிகளாகிய வழித்தோன்றல்களை உடைய எல்லாப் பொருள்களிலும் தம் காலடிகளை வைத்தார்கள் இவர்களே. சான்றோர்களால் பூமி பெருமையில் விரிந்து நின்றாள். பிரிக்கமுடியாத தாய் அதிதி தன் புதல்வர்களுடன் அவளைச் சாயாமல் தாங்கிப் பிடித்துக்கொள்ள வந்தாள்.

अधि श्रियं नि दधुश्चारुमस्मिन् दिवो यदक्षी अमृता अकृण्वन् ।
अध क्षरन्ति सिन्धवो न सृष्टाः प्र नीचीरग्ने अरुषीरजानन् ॥ १०

அதி ஶ்ரியம் நி ததுஶ்சாருமஸ்மிந்திவோ யதக்ஷீ அம்ருதா அக்ருண்வந் ।
அத க்ஷரந்தி ஸிந்தவோ ந ஸ்ருஷ்டா: ப்ர நீசீரக்நே அருஷீரஜாநந் ॥ 10 ॥

அழிவில்லாத தேவர்கள் சுவர்க்கத்துக்கு இருகண்களை உண்டாக்கியபோது, அக்நியிடத்தில் ஒளியையும் அழகையும் அமைத்தனர். பின்னர் தடை நீக்கப்பட்ட நதிகள் தம் விருப்பப்படி ஓடுவது போல, அக்நியின் ஒளியும் அழகும் பெருக்கெடுத்துப் பாய்கின்றன. அவனுடைய செந்நிறப் பெண்குதிரைகள் கீழ்முகமாகப் பாய்கின்றன. ஓ அக்நீ! அவை அறிந்து கொண்டனவாம்.

ஸூக்தம் 73

रयिर्न यः पितृवित्तो वयोधाः सुप्रणीतिश्चिकितुषो न शासुः ।
स्योनशीरतिथिर्न प्रीणानो होतेव सद्म विधतो वि तारीत् ॥ १

ரயிர்ந ய: பித்ருவித்தோ வயோதா: ஸுப்ரணீதிஶ்சிகிதுஷோ ந ஶாஸு: ।
ஸ்யோநஶீரதிதிர்ந ப்ரீணாநோ ஹோதேவ ஸத்ம விததோ வி தாரீத் ॥ 1 ॥

அவன் நம் நிலைமையை உறுதிப்படுத்துகின்ற நம் முன்னோர் சேர்த்துவைத்த செல்வம் போன்றவன். செய்திகளை முறையாக அறிந்தவன் இடும் கட்டளையைப் போல, அவன் நம்மை நடத்திச்செல்லும் விதம் சிறப்பானது. நன்கு மனநிறைவு பெற்றுச் சுகமாகத் தூங்கும் விருந்தாளியினைப் போல அவன் இருக்கிறான். ஹோதாவைப் போல அவன் தன்னை வழிபடுபவனுடைய வீட்டினை வளரச்செய்கிறான்.

देवो न यः सविता सत्यमन्मा क्रत्वा निपाति वृजनानि विश्वा ।
पुरुप्रशस्तो अमतिर्न सत्य आत्मेव शेवो दिधिषाय्यो भूत् ॥ २

தேவோ ந ய: ஸவிதா ஸத்யமந்மா க்ரத்வா நிபாதி வ்ருஜநாநி விஶ்வா ।
புருப்ரஶஸ்தோ அமதிர்ந ஸத்ய ஆத்மேவ ஶேவோ திதிஷாய்யோ
பூத் ॥ 2 ॥

கடவுளாகிய சூரியனைப் போல அவன் எண்ணங்களில் உண்மை உடையவன். நம்முடைய உறுதியான இடங்கள் எல்லாவற்றையும் அவன் தன் விருப்பத்தால் பாதுகாக்கிறான்; பலவிதமாக வெளிப்படும் உண்மையான ஒளிவடிவத்தைப் போல இருக்கிறான். ஆனந்தமே வடிவமாக உள்ள ஆன்மாவைப் போல அவன் நமக்கு ஆனந்தம் தருவதால் அவன் நம்மால் தியானிக்கப்பட வேண்டியவன் ஆவான்.

देवो न यः पृथिवीं विश्वधाया उपक्षेति हितमित्रो न राजा ।
पुरःसदः शर्मसदो न वीरा अनवद्या पतिजुष्टेव नारी ॥ ३

தேவோ ந ய: ப்ருதிவீம் விஶ்வதாயா உபக்ஷேதி ஹிதமித்ரோ
ந ராஜா ।
புர:ஸத: ஶர்மஸதோ ந வீரா அநவத்யா பதிஜுஷ்டேவ நாரீ ॥ 3 ॥

அவன் உலகினைத் தாங்கும் ஒரு கடவுள் போன்றவன். எல்லாருக்கும் நன்மை செய்யும் நட்புத்தன்மை கொண்ட அரசனைப் போல அவன் பூமியில் வசிக்கிறான்; நம் முன்னிலையில் அன்புபூண்ட மாசற்ற மனைவியைப் போல உள்ளவன்.

तं त्वा॒ नरो॒ दम॒ आ नित्य॑मि॒द्धमग्ने॒ सच॑न्त क्षि॒तिषु॑ ध्रु॒वासु॑ ।
अधि॑ द्यु॒म्नं नि द॑धु॒र्भूर्य॑स्मि॒न् भवा॑ वि॒श्वायु॑र्ध॒रुणो॑ रयी॒णाम् ॥ ४

தம் த்வா நரோ தம ஆ நித்யமித்தமக்நே ஸசந்த க்ஷிதிஷு த்ருவாஸு ।
அதி த்யும்நம் நி ததுர்பூர்யஸ்மிந்பவா விஶ்வாயுர்தருணோ ரயீணாம் ॥ 4 ॥

நீ வசிக்கும் நிலையான உலகங்களில் வீட்டில் என்றும் அழிவில்லாது தீப்பற்றிக்கொண்டு இருக்கிற உன்னிடத்தில், மக்கள் பற்று வைத்துள்ளனர். ஓ அக்நீ! அத்தகையவன் நீ. அவர்கள் உன்மீது மிகப் பெரிய ஒளியைத் தம் உள்ளத்தே நிலைநாட்டியுள்ளார்கள். உலகங்களுக்கெல்லாம் உயிராய் நீ செல்வங்களைக் காப்பாற்றுவாயாக.

वि पृक्षो॑ अग्ने म॒घवा॑नो अश्युर्वि सू॒रयो॒ दद॑तो॒ विश्व॒मायुः॑ ।
स॒नेम॒ वाजं॑ समि॒थेष्व॒र्यो भा॒गं दे॒वेषु॒ श्रव॑से॒ दधा॑नाः ॥ ५

வி ப்ருக்ஷோ அக்நே மகவாநோ அஶ்யுர்வி ஸூரயோ தததோ விஶ்வமாயுः ।
ஸநேம வாஜம் ஸமிதேஷ்வர்யோ பாகம் தேவேஷு ஶ்ரவஸே ததாநாः ॥ 5 ॥

ஓ அக்நீ! தம் வாழ்நாள் முழுதையும் உனக்கு அளிப்பவரும், விளக்கம் பெற்ற அறிஞருமாகிய செல்வத்தலைவர்கள் உன் திருப்தியை நுகர்வார்களாக. அருள் உள்புகுதலாகிய ஞானத்தின்பொருட்டுத் தேவர்களிடத்தில் எங்களுக்கு உரிய பாகத்தைப் பெற்றுக்கொண்டு, போர்கள் நடக்கும்போது பகைவர்களிடமிருந்து பல நிறைவான பொருள்களை வென்று பெறுவோமாக.

ऋतस्य हि धेनवो वावशानाः स्मदूधीः पीपयन्त द्युभक्ताः ।
परावतः सुमतिं भिक्षमाणा वि सिन्धवः समया सस्रुरद्रिम् ॥ ६

ருதஸ்ய ஹி தேநவோ வாவஶாநா: ஸ்மதூத்நீ: பீபயந்த த்யுபக்தா: ।
பராவத: ஸுமதிம் பிக்ஷமாணா வி ஸிந்தவ: ஸமயா ஸஸ்ருரத்ரிம் ॥ 6 ॥

சுவர்க்கத்தில் அனுபவிக்கப்படுவனவும் பால் நிறைந்த மடிகளை உடையனவும் ஆகிய சத்தியத்தின் பசுக்கள், எங்களிடம் விருப்பம் கொண்டு, தங்கள் பாலை வழங்கி எங்களைப் பருகச் செய்தன. நேர்மையான எண்ணத்தை விரும்பி வேண்டிக்கொண்டு, நதிகள் தொலைதூரத்திலிருந்து மலைமீது பரவிப் பாய்ந்தன.

त्वे अग्ने सुमतिं भिक्षमाणा दिवि श्रवो दधिरे यज्ञियासः ।
नक्ता च चक्रुरुषसा विरूपे कृष्णं च वर्णमरुणं च सं धुः ॥ ७

த்வே அக்நே ஸுமதிம் பிக்ஷமாணா திவி ஶ்ரவோ ததிரே யஜ்ஞியாஸ: ।
நக்தா ச சக்ருருஷஸா விரூபே க்ருஷ்ணம் ச வர்ணமருணம் ச
ஸம் து: ॥ 7 ॥

ஓ அக்நீ! உன்னிடம் நேர்மையான எண்ணத்தை வேண்டிப் பெறும் வேள்வித்தலைவர்கள் அருள் உள்புகுதலாகிய ஞானத்தை விண்உலகில் நிலைநாட்டினர். அவர்கள் இரவையும் விடியற்காலத்தையும் வெவ்வேறு வடிவம் உடையனவாகச் செய்து, கருநிறத்தையும் செந்நிறத்தையும் ஒன்றுசேர்த்தனர்.

यान् रा॒ये मर्ता॒न्त्सुषू॑दो अग्ने॒ ते स्या॑म म॒घवा॑नो व॒यं च॑ ।
छा॒येव॒ विश्वं॒ भुव॑नं सिसक्ष्यापप्रि॒वान् रोद॑सी अ॒न्तरि॑क्षम् ॥ ८

யாந்ராயே மர்தாந்த்ஸுஷூதோ அக்நே தே ஸ்யாம மகவாநோ வயம் ச।
சாயேவ விஶ்வம் புவநம் ஸிஸக்ஷ்யாபப்ரிவாந் ரோதஸீ அந்தரிக்ஷம் ॥ 8 ॥

செல்வத்தின் பொருட்டு நீ மனிதர்களை விரைவுபடுத்துகிறாய். அவர்களிடையே நாங்களும் இருந்து செல்வத்தலைவர்கள் ஆவோமாக. பூமி, வானுலகம், இவற்றின் நடுவில் உள்ள இடைவெளி - இவற்றை முழுவதும் நிரப்பி, உலகம் முழுவதையும் நீ நிழலைப் போலக் கைப்பற்றியுள்ளாய்.

अर्व॑द्भिरग्ने॒ अर्व॑तो॒ नृभि॒र्नॄन् वी॒रैर्वी॒रान्व॑नुयामा॒ त्वोताः॑ ।
ई॒शा॒नासः॑ पितृवि॒त्तस्य॑ रा॒यो वि सू॒रयः॑ श॒तहि॑मा नो अश्युः ॥ ९

அர்வத்பிரக்நே அர்வதோ ந்ருபிர்ந்ரூந்வீரைர்வீராந்வநுயாமா த்வோதா:।
ஈஶாநாஸ: பித்ருவித்தஸ்ய ராயோ வி ஸூரய: ஶதஹிமா நோ அஶ்ய: ॥ 9 ॥

ஓ அக்நீ! நாங்கள் உன்னால் ஆதரிக்கப்பட்டுக் காக்கப்பட்டவர் ஆவோமாக. எம்முடைய போர்க்குதிரைகள், வலிய ஆட்கள், வீரர்கள் இவர்களால் பகைவர்களுடைய போர்க்குதிரைகளையும், வலிய ஆட்களையும் போர்வீரர்களையும் வெல்வோமாக. எம்முடைய அறிஞர்கள் தம் முன்னோர்கள் சேர்த்துவைத்த செல்வங்களுக்கெல்லாம் தலைவராகி, அவற்றைப் பெற்று நூறு ஆண்டுகள் வாழ்வாராக.

एता ते अग्न उचथानि वेधो जुष्टानि सन्तु मनसे हृदे च ।
शकेम रायः सुधुरो यमं तेऽधि श्रवो देवभक्तं दधानाः ॥ १०

ஏதா தே அக்ந உசதாநி வேதோ ஜுஷ்டாநி ஸந்து மநஸே ஹ்ருதே ச।
ஶகேம ராய: ஸுதுரோ யமம் தேऽதி ஶ்ரவோ தேவபக்தம் ததாநா: ॥ 10 ॥

ஓ அக்நீ! பொருள்கள் எல்லாவற்றையும் நெறிமுறைப் படுத்துபவனே! யாம் கூறும் இச்சொற்கள் எல்லாம் உனக்கும் உன் மனத்திற்கும் உன் இதயத்திற்கும் ஏற்பன ஆகுக. தேவர்களால் அனுபவிக்கப்பட்டு மற்றவருக்குப் பங்கிடப்பட்ட அருள் உள்புகுதலாகிய ஞானத்தை உன்னிடத்தில் பற்றிக்கொண்டு, நாங்கள் உன் செல்வங்களை உறுதியாய்ச் சுமந்து எங்களிடம் தேக்கி வைத்துக்கொள்வதற்கு ஏற்ற திறமை பெறுவோமாக.

பருச்சேபர்

மண்டலம் - 1

ஸூக்தம் 127

अ॒ग्निं होता॑रं मन्ये॒ दास्व॑न्तं॒ वसुं॑ सू॒नुं
सह॑सो जा॒तवे॑दसं॒ विप्रं॒ न जा॒तवे॑दसम् ।
य ऊ॒र्ध्वया॑ स्वध्व॒रो दे॒वो दे॒वाच्या॑ कृ॒पा ।
घृ॒तस्य॒ विभ्रा॑ष्टि॒मनु॑ वष्टि शो॒चिषा॒ऽऽजुह्वा॑नस्य स॒र्पिषः॑ ॥ १

அக்நிம் ஹோதாரம் மந்யே தாஸ்வந்தம்
வஸூம் ஸூநும் ஸஹஸோ ஜாதவேதஸம் விப்ரம் ந ஜாதவேதஸம் ।
ய ஊர்த்வயா ஸ்வத்வரோ தேவோ தேவாச்யா க்ருபா ।
க்ருதஸ்ய விப்ராஷ்டிமநு வஷ்டி ஶோசிஷா ऽऽஜுஹ்வாநஸ்ய ஸர்பிஷ: ॥ 1 ॥

அழைப்பு ஆற்றும் புரோகிதனும், பொருள் அளிப்பவனும், பிறந்தன எல்லாவற்றையும் அழிக்கும் சக்திமகனும் ஆகி, விளக்கமுற்ற ரிஷியைப் போல, பிறந்தன அனைத்தையும் அறிகின்ற அக்நிபகவானை நான் தியானம்செய்கின்றேன். உயர மேலோங்கிய விருப்பத்தோடு கூடிய கடவுளும் வேள்வியில் நிறைவு பெற்றவனும் ஆகிய அக்நி, தன்னிடம் அளிக்கப்படும் ஒளி கொழுந்துவிட்டு எரிவதற்காகவும், தன்மீது அளிக்கப்பட வேண்டிய உணவுகள் இடப்படுவதற்காகவும், பசியோடு தன் சுடருடன் தவிக்கிறான்.

यजि॑ष्ठं त्वा॒ यज॑माना हुवेम॒ ज्येष्ठ॒मङ्गि॑रसां
विप्र॒ मन्म॑भि॒र्विप्रे॑भिः शुक्र॒ मन्म॑भिः ।
परि॑ज्मानमिव॒ द्यां होता॑रं चर्षणी॒नाम् ।
शो॒चिष्के॑शं॒ वृष॑णं॒ यमि॒मा विशः॒ प्राव॑न्तु जू॒तये॒ विशः॑ ॥ २

யஜிஷ்டம் த்வா யஜமாநா ஹுவேம ஜ்யேஷ்டமங்கிரஸாம்
விப்ர மந்மபிர்விப்ரேபி: ஶுக்ர மந்மபி: ।
பரிஜ்மாநமிவ த்யாம் ஹோதாரம் சர்ஷணீநாம் ।
ஶோசிஷ்கேஶம் வ்ருஷணம் யமிமா விஶ: ப்ராவந்து ஜூதயே விஶ: ॥ 2 ॥

வேள்வியில் அளிப்பவர்களாகிய நாங்கள், வேள்விக்கு உரிய வலிமை சிறந்தவனும் அங்கிரஸர்களுள் மூத்தவனுமாகிய உன்னை எம் தியானங்களால் அழைப்போமாக. எம் தியானங்களால் ஒளிவீசும் ரிஷியாய் உள்ள அக்நியே! எல்லாவற்றையும் பெருவெளி போலச் சூழ்ந்து, அவன் ஏவலுக்காக மக்கள் பாராட்டும் நெருப்பின் ஒளியாகிய தலைமயிரைப் பெற்ற அந்த ஆண்மகனை - மக்களின் அழைப்பினைத் தேவர்களுக்கு அறிவிக்கும் அந்தப் புரோகிதனை - அழைப்போமாக.

स हि पुरू चिदोजसा विरुक्मता दीद्यानो
भवति द्रुहंतरः परशुर्न द्रुहंतरः ।
वीळु चिद् यस्य समृतौ श्रुवद्वनेव यत् स्थिरम् ।
निष्षहमाणो यमते नायते धन्वासहा नायते ॥ ३

ஸ ஹி புரூ சிதோஜஸா விருக்மதா
தீத்யானோ பவதி த்ருஹம்தர: பரஶுர்ந த்ருஹம்தர: ।
வீளு சித்யஸ்ய ஸம்ருதௌ ஶ்ருவத்வநேவ யத்ஸ்திரம் ।
நிஷ்ஷஹமாணோ யமதே நாயதே தந்வாஸஹா நாயதே ॥ 3 ॥

விரிவாக ஒளிவீசும் அவனுடைய ஆற்றலால் பல பொருள்களை விளக்கிக்கொண்டு, அவன் நமக்குத் தீங்கு செய்பவர்களைக் கோடாரியைப் போலப் பிளந்து செல்கிறான். அவன் செய்யும் அதிர்ச்சியால் வலிமை உடைய பொருள்களும், உறுதியாய் நிலைபெற்றுள்ளனவும் மரங்களைப் போல விழுகின்றன. வலிமை மிகுதியால் அவன் உழைக்கின்றான். வில் ஏந்திய வீரர்களைப் போல அவன் போர்களிலிருந்து பின்வாங்கமாட்டான்.

द॒ळ्हा चि॑दस्मा॒ अनु॑ दुर्यथा॑ वि॒दे
तेजि॑ष्ठाभिर॒रणि॑भिर्दा॒ष्ट्यव॑से॒ऽग्नये॑ दा॒ष्ट्यव॑से ।
प्र यः पु॒रूणि॒ गाह॑ते॒ तक्ष॒द्वने॑व शो॒चिषा॑ ।
स्थि॒रा चि॒दन्ना॒ नि रि॑णा॒त्योज॑सा॒ नि स्थि॒राणि॑ चि॒दोज॑सा ॥ ४

த்ருள்ஹா சிதஸ்மா அநு துர்யதா விதே
தேஜிஷ்டாபிரரணிபிர்தாஷ்ட்யவஸேऽக்நயே தாஷ்ட்யவஸே ।
ப்ர ய: புரூணி காஹதே தக்ஷத்வநேவ ஶோசிஷா ।
ஸ்திரா சிதந்நா நி ரிணாத்யோஜஸா நி ஸ்திராணி சிதோஜஸா ॥ 4 ॥

அறிஞன் ஒருவனுக்குக் கொடுப்பது போல, அவர்கள் உறுதியாக ஆக்கப்பட்ட பொருள்களைக்கூட அவனுக்குக் கொடுக்கின்றனர். அவனுடைய ஒளிவீசும் ஆற்றலை உடைய இயக்கங்களால் ஒருவன் தன்னைப் பாதுகாப்பதற்காக அக்நிக்குக் கொடுக்கிறான். அக்நி பல பொருள்களினுள்ளும் புகுபவன்; உறுதியான பொருள்களையும் தன் வலிமையால் தகர்த்துத் தனக்கு உணவாக்கிக் கொள்கிறான்.

तमस्य पृक्षमुपरासु धीमहि
नक्तं यः सुदर्शतरो दिवातरादप्रायुषे दिवातरात् ।
आदस्यायुर्ग्रभणवद् वीळु शर्म न सूनवे ।
भक्तमभक्तमवो व्यन्तो अजरा अग्नयो व्यन्तो अजराः ॥ ५

தமஸ்ய ப்ருக்ஷமுபராஸு தீமஹி நக்தம் ய:
ஸுதர்ஶதரோ திவாதராதப்ராயுஷே திவாதராத் ।
ஆதஸ்யாயுர்க்ரபணவத்வீளு ஶர்ம ந ஸூநவே ।
பக்தமபக்தமவோ வ்யந்தோ அஜரா அக்நயோ வ்யந்தோ அஜரா: ॥ 5 ॥

மேல்நிலை உலகங்களில் அவனுடைய காட்சியின் நிறைவினை நாங்கள் தாங்கிக்கொள்கிறோம். பகலிலும் சிறந்து, இரவிலும் தெய்வத்தன்மையோடு ஒளிவீசும் காட்சியை உடைய அவனுடைய உயிருக்காக, அந்த அக்நியின் நிறைவினைத் தியானம் செய்கிறோம். அப்பொழுதே அவனுடைய உயிர், மகன்ஒருவன் அடைக்கலம் புகுதற்கு ஏற்ற உறுதியான வீட்டைப் போல, நம்மைப் பற்றிக்கொண்டு பாதுகாக்கும். வயது கணக்கிடமுடியாத அனல்கள், நுகரப்பட்டதும் நுகரப்படாததுமாகிய இன்பத்தின் வழியிலே நகர்ந்து வருகின்றன.

स हि शर्धो न मारुतं तुविष्वणि
रप्सस्वतीषूर्वरास्विष्टनिरार्तनास्विष्टनिः ।
आदद्धव्यान्यादर्दिर्यज्ञस्य केतुरर्हणा ।
अध स्मास्य हर्षतो हृषीवतो विश्वे
जुषन्त पन्थां नरः शुभे न पन्थाम् ॥ ६

ஸ ஹி ஶர்தோ ந மாருதம் துவிஷ்வணி -
ரப்நஸ்வதீஷூர்வராஸ்விஷ்டநிரார்தநாஸ்விஷ்டநி: ।
ஆதத்தவ்யாந்யாததிர்யக்ஞஸ்ய கேதுரர்ஹணா ।
அத ஸ்மாஸ்ய ஹர்ஷதோ
ஹ்ருஷீவதோ விஶ்வே ஜுஷந்த பந்தாம் நர: ஶுபே ந பந்தாம் ॥6॥

நம் உழைப்பை மிகுதியாக ஏற்றுக்கொள்ளுவதற்கு, செழிப்புடைய நிலங்களிலும் தரிசுநிலங்களிலும் விரைவாகச் சென்றுகொண்டு மழையுடன் இயங்கும் ஆயுள்தேவதைகளைப் போல, பெரிய சத்தத்துடன் நாம் அளிப்பனவற்றை ஏற்று விழுங்குபவன் அவன்; வேள்விக்கு ஏற்ற காரியத்தில், அதன் உள்உணர்வுக்கு கண்ணாக இருப்பவன். ஆதலின், நன்மைக்குக் கொண்டு செல்லும் பாதையைப் போல, எல்லா மக்களும் மகிழ்ச்சியை மிகுவிக்கும் அக்நியின் பாதையைப் பின்பற்றுகின்றனர்.

द्विता यदीं कीस्तासो अभिद्यवो
नमस्यन्त उपवोचन्त भृगवो मथ्नन्तो दाशा भृगवः ।
अग्निरीशे वसूनां शुचिर्यो धर्णिरेषाम् ।
प्रियाँ अपिधीर्वनिषीष्ट मेधिर आ वनिषीष्ट मेधिरः ॥ ७

த்விதா யதீம் கீஸ்தாஸோ அபித்யவோ
நமஸ்யந்த உபவோசந்த ப்ருகவோ மத்நந்தோ தாஶா ப்ருகவ: ।
அக்நிரீஶே வஸூநாம் ஶுசிர்யோ தர்ணிரேஷாம் ।
ப்ரியாந் அபிதீர்வநிஷீஷ்ட மேதிர ஆ வநிஷீஷ்ட மேதிர: ॥7 ॥

இருவகை ஆற்றலும் பெற்ற அவனுக்கு விளக்கம் பெற்று வேதம் ஓதும் பிருகுக்கள் தம் வணக்கத்தைச் செலுத்தி மந்திரச் சொற்களைக் கூறி, அந்த ப்ருகு என்னும் ஒளியைக் கண்டவர்கள் தம் வழிபாட்டால் அவனைக் கடைந்தெடுக்கின்றனர். அப்பொழுது அக்நிபகவான் பொருள்களை அடக்கி ஆள்பவன் ஆகின்றான். அவனே தன்மீது இடப்பட்டவற்றை நுகர்கிறான். அவையும் அவனுக்கு இனிமையாக உள்ளன. தன் அறிவுச்சிறப்பால் அவன் அவற்றில் மகிழ்கிறான்.

विश्वा॑सां त्वा वि॒शां पतिं॑ हवामहे
सर्वा॑सां सम॒ानं दम्प॑तिं भु॒जे स॒त्यगि॑र्वाहसं भु॒जे ।
अति॑थिं॒ मानु॑षाणां पि॒तुर्न यस्या॑स॒या ।
अ॒मी च॒ विश्वे॑ अ॒मृता॑स॒ आ वयो॑ ह॒व्या दे॒वेष्वा वयः॑ ॥ ८

விஶ்வாஸாம் த்வா விஶாம் பதிம் ஹவாமஹே
ஸர்வாஸாம் ஸமாநம் தம்பதிம் புஜே ஸத்யகிர்வாஹஸம் புஜே ।
அதிதிம் மாநுஷாணாம் பிதுர்ந யஸ்யாஸயா ।
அமீ ச விஶ்வே அம்ருதாஸ ஆ வயோ ஹவ்யா தேவேஷ்வா வய: ॥ 8 ॥

மக்கள் அனைவருக்கும் தலைவனும் அவர்கள் எல்லோருக்கும் பொதுவான வீட்டுத்தலைவனுமாகிய உன்னை, உணவு உண்ண அழைக்கிறோம்; சத்தியமான சொற்களைக் கொண்டுள்ள அவனை உணவு உண்பதற்காக மக்களின் விருந்தினனாக அழைக்கின்றோம். தந்தையின் முன்னர் நிற்பது போல, அழிவில்லாத தேவர்கள் அக்நியின் முன்னர் நின்றுகொண்டு, நாங்கள் வேள்வியில் அளிப்பனவற்றை உணவாக்கிக்கொண்டு மகிழ்கின்றார்கள். தேவர்களிடத்தில் யாம் அளிப்பவை அவர்களுக்கு உணவாகின்றன.

त्वमग्ने सहसा सहन्तमः शुष्मिन्तमो
जायसे देवतातये रयिर्न देवतातये ।
शुष्मिन्तमो हि ते मदो द्युम्निन्तम उत क्रतुः ।
अध स्मा ते परि चरन्त्यजर श्रुष्टीवानो नाजर ॥ ९

த்வமக்நே ஸஹஸா ஸஹந்தம:
ஶுஷ்மிந்தமோ ஜாயஸே தேவதாதயே ரயிர்ந தேவதாதயே
ஶுஷ்மிந்தமோ ஹி தே மதோ த்யும்நிந்தம உத க்ரது: ।
அத ஸ்மா தே பரி சரந்த்யஜர ஶ்ருஷ்டீவாநோ நாஜர ॥ 9 ॥

ஓ அக்நீ! ஆற்றலில் சிறந்தவன் நீ. தேவர்கள் தங்கள் வடிவத்தைப் பெறுவதற்கு ஒரு செல்வம் போன்று நீ சக்தியுடன் பிறந்தாய். உன் மகிழ்ச்சி பேராற்றல் உடையது. உன் விருப்பம் மிகவும் பிரகாசமானது. கிழத்தன்மை இல்லாத அக்நியே! உன் சொற்களைக் கேட்பவர் யாவரும் உனக்குப் பணிசெய்கின்றனர்.

प्र वो॑ म॒हे सह॑सा सह॑स्वत
उष॒र्बुधे॑ पशु॒षे नाग्न॑ये॒ स्तोमो॑ बभूत्व॒ग्नये॑ ।
प्रति॒ यदी॑ ह॒विष्मा॒न् विश्वा॑सु॒ क्षासु॒ जोगु॑वे ।
अग्रे॑ रे॒भो न ज॑रत ऋषू॒णां जूर्णि॒र्होत॑ ऋषू॒णाम् ॥ १०

ப்ர வோ மஹே ஸஹஸா ஸஹஸ்வத
உஷர்புதே பஶூஷே நாக்நயே ஸ்தோமோ பபூத்வக்நயே ।
ப்ரதி யதீம் ஹவிஷ்மாந்விஶ்வாஸு க்ஷாஸு ஜோகுவே ।
அக்ரே ரேபோ ந ஜரத ருஷூணாம் ஜூர்ணிர்ஹோத ருஷூணாம் ॥ *10* ॥

அக்நி பெருமகன்; ஆற்றல்மிக்கவன்; உண்மையைக் காண்பவன். அவன் தொடர்பாக மந்திரச்சொற்கள் ஓதப்படுக. வேள்வியில் அவிஸை அளிக்கும் மனிதன், எல்லா உலகங்களிலும் அவனை நோக்கி உரத்த குரலில் பேசும்போது, அறிஞர்கள் முன்னிலையில் அவன் நம் வேண்டுகோளை வெளியிடுவான். அறிஞர்களின் ஹோதா ஆகிய அவன் நம் போற்றுதலை வெளியிடுவான்.

स नो नेदिष्ठं दद्दृशान आ भराग्ने देवेभिः
सचनाः सुचेतुना महो रायः सुचेतुना ।
महि शविष्ठ नस्कृधि संचक्षे भुजे अस्यै ।
महि स्तोतृभ्यो मघवन् त्सुवीर्यं मथीरुग्रो न शवसा ॥ ११

ஸ நோ நேதிஷ்டம் தத்ருஶாந ஆ பராக்நே தேவேபி:
ஸசநா: ஸுசேதுநா மஹோ ராய: ஸுசேதுநா ।
மஹி ஶவிஷ்ட நஸ்க்ருதி ஸம்சக்ஷே புஜே அஸ்யை ।
மஹி ஸ்தோத்ருப்யோ மகவந்த்ஸுவீர்யம் மதீருக்ரோ ந ஶவஸா ॥ 11 ॥

ஆதலால், ஓ அக்நீ! நீ எங்கள் கண்களுக்குப் புலப்படுபவனாய், எங்கள் அருகில் நெருங்கி நின்று, உன் முழுமையாகிய உணர்வால், எப்பொழுதும் தேவருடன் செல்லும் செல்வங்களைக் கொண்டுவந்து அருளுவாயாக. எங்களுக்கு முழுமையான செல்வங்களைக் கொணர்ந்து அருளுவாயாக. ஓ அக்நீ! மிகப் பெரிய வல்லவனே! காண்பதற்கும் நுகர்வதற்கும் உரிய பெரிய பொருளை எங்களுக்கு ஆக்கித் தருவாய். நிறைவுக்குத் தலைவனே! உன்னை வழிபட்டுப் போற்றிப் புகழ்வதற்காக, நீ சக்தியால் செழிப்புற்று, அரிய பெரிய வீரவலிமையினைக் கடைந்தெடுத்து அருளுவாயாக.

எமது தமிழ் பதிப்புகள்

1. ஸரஸ்வதி
   ஊக்க சக்தியின் ஆதி தேவதை

2. அக்நி மற்றும் இந்திரா சக்திகள்

3. ரிக்வேதத்தை ஏன் படிக்க வேண்டும்?

4. கிருஷ்ண யஜுர் வேத தைத்திரீய ஸம்ஹிதை
   தேவநாகரி மூலமும் - தமிழ் மொழியாக்கமும்

SAKSI PUBLICATIONS

I.	**On Vedas**	
1.	Rig Veda Mantra Samhita	540.00
2.	Secrets of Rig Veda	450.00
3.	Krishna Yajur Veda Taittiriya Samhita	
	Volume - I, Kanda 1& 2	375.00
	Volume - II, Kanda 3, 4 & 5	480.00
	Volume - III, Kanda 6 & 7	300.00
4.	Krishna Yajur Veda Taittiriya Samhita	
	Complete Text in Devanagari	200.00
5.	Internal Yajna	15.00
6.	Sarasvati - Goddess of Inspiration	10.00
7.	The Light of Veda	20.00
8.	How to Manifest Bliss	10.00
9.	Agni and Indra Powers	10.00
10.	Rudra Mantras	50.00
11.	Essentials of Atharva Veda	45.00
12.	Shanti Mantras	22.00
13.	Veda Upanishad & Tantra	20.00
14.	Divinizing Life: The Path of Atri Rishi	275.00
II.	**Others**	
15.	Pranayama with Postures	50.00
16.	Prayers	20.00
17.	Work, Enjoyment and Progress	75.00

1886 -1953

ஸ்ரீ தி. வி. கபாலி சாஸ்திரியர் நுண்மாண் நுழைபுலமுடைய அறிஞர். அவர் வடமொழி, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு என்ற நான்கு மொழிகளிலும் வரைந்துள்ள செய்திகள் யாவும் பன்னிரன்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

ரிக்வேதத்தின் முதல் அஷ்டகத்துக்கு அவர் வரைந்துள்ள உரையாகிய சித்தாஞ்சனம் என்ற பெரும்படைப்பு பழைய தெய்வீகப் பாசுரங்களின் புறக்கணிக்கப்பட்ட உளவியல் ஆன்மஇயல் தெடர்பான பல செய்திகள் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது.

பல்லாண்டு பல நூல்கள் வாசித்தும் தாம் பெற்ற அனுபவத்தைத் தம் சொந்த வாழ்க்கையின் உள்ளார்ந்த அனுபவத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து பாரததேசத்தின் பலதுறைஞானத்தால் உறுதிசெய்துகொண்டு 1945இல் தம் அறுபதாம் ஆண்டில் சாஸ்திரியார் ரிக்வேதத்துக்கு உரை எழுதத்தொடங்கினார்; அதன் முன்னுரையில் தாம் பழைய முனிவர்களாகிய யாஸ்கர் முதலானோர், இடைக்கால ஆசாரியர்களாகிய ஸ்ரீ அரவிந்தர் முதலானோர் கண்டுரைத்த உண்மைகளைக் கைக்கொண்டு தாம் ரிக்வேதத்திற்கு உரை எழுத அணுகிய முறையைக் குறிப்பிட்டுள்ளார். வேதகால முனிவர்களின் குறியீட்டு விளக்கங்களாக அவர்கள் கொண்ட கருத்துரைகளை அடியொற்றி இவர் இத்தகைய உளவியல் விளக்கங்களை ஒவ்வொரு தெய்வீகப் பாசுரத்துக்கும் வரைந்துள்ளார். வேதம் தந்திரம் இரண்டிற்கும் பொதுவான பழைய மூலம் ஒன்றே என்பது இவர் கண்ட முடிவாம். இவர் புராணங்களில் காணப்படும் கதைகளுடைய இரகசியங்களின் மூடுதிரைகளை விலக்கி உண்மைவிளக்கம் தந்துள்ளார்.

ஸ்ரீ அரவிந்தோ கபாலி சாஸ்த்ரி இன்ஸ்ட்யூட் ஆஃப் வேதிக் கல்சர்

ISBN 81-900979-4-6

ரூ.55/-